கொங்குநாடும் சமணமும்

புலவர் செ.இராசு

கொங்குநாடும் சமணமும்

ஆசிரியர்

புலவர் செ. இராசு பிஎச்.டி

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

நூலக நூல்கள்

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

வெளியீடு

கொங்கு ஆய்வு மையம்

64/5, டி.பி.ஜி. காம்ப்ளக்ஸ்,

புதிய ஆசிரியர் குடியிருப்பு அருகில்

ஈரோடு - 638 011

தொலைபேசி: 0424-5501554; 2262664

நூல் விவரம்

1.	நூல் தலைப்பு	: கொங்குநாடும் சமணமும்
2.	ஆசிரியர்	: புலவர் செ. இராசு பிஎச்.டி.,
3.	வெளியிட்டோர்	: கொங்கு ஆய்வு மையம் 64/5, டி.பி.ஜி. காம்ப்ளக்ஸ், புதிய ஆசிரியர் குடியிருப்பு அருகில் ஈரோடு - 638 011 தொலைபேசி: 0424-5501554; 2262664
4.	பதிப்பு ஆண்டு	: ஏப்ரல் 2005
5.	பதிப்பு விவரம்	: முதல் பதிப்பு
6.	உரிமை	: ஆசிரியருக்கு
7.	தாளின் தன்மை	: மேப் லித்தோ 18.6 Kg.
8.	நூலின் அளவு	: டெம்மி 1/8
9.	பக்கம்	: 359
10.	அச்சு எழுத்து	: 12 புள்ளி
11.	நூலின் விலை	: ரூ. 150/-
12.	பொருள்	: சமய வரலாறு
13.	படிகள்	: 1200
14.	அச்சிட்டோர்	: அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ், 9, அய்யா முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14.

வெளியீட்டு நாள்	: 22-4-05 மகாவீரர் ஜெயந்தி நாள்
வெளியீட்டு ஏற்பாடு	: மகாவீரர் அறக்கட்டளை, வந்தவாசி
முன் அட்டை	: வெள்ளோடு ஆதிநாதர்
பின் அட்டை	: விசயமங்கலம் கோயில் முன்கோபுரம்

பொருளடக்கம்

பக்கம்

அணிந்துரை 5

ஆசிரியர் உரை 9

நூல்முகம் 11

கொங்கு நாடு

1. கொங்கு நாடு 17
2. நாட்டுப் பிரிவுகள் 19
3. அரசர்கள் 21

சமண சமயம்

1. சமண சமயம் பெயர்க்காரணம் 29
2. சமணர் ஒழுக்கங்கள் 33
3. தீர்த்தங்கரர்கள் 38
4. இயக்கி, இயக்கர் 44

கொங்கு நாட்டில் சமணம்

1. கொங்கு நாட்டில் சமணம் பரவுதல் 53
2. சமணம் செழித்தல் 63
3. சமணர் மலைகள் 72
4. சமணக் கோயில்கள் 93
5. சமண உருவங்கள் 108
6. கல்வெட்டுகள் காட்டும் சமணத் தலங்கள் 113

கொங்குச் சமணரின் தமிழ்ப்பணி

1. தமிழ்ப்பணி 133
2. பெருங்கதை 137
3. சீவக சிந்தாமணி 146
4. நேமிநாதம் 158
5. வச்சணந்திமாலை 163
6. நன்னூல் 164
7. நன்னூல் மயிலைநாதர் உரை 176
8. அரும்பத உரையாசிரியர் உரை 179
9. அடியார்க்கு நல்லார் உரை 181
10. கொங்கு மண்டல சதகம் 185
11. கல்வியொழுக்கம் 187

கொங்குச் சமணம் - சின்னங்களும் செய்திகளும்

1. கொங்கு நாட்டில் இயக்கி, இயக்கர் வழிபாடு 209
2. சல்லேகனை 217
3. அஞ்சினான் புகலிடம் 221
4. மாற்றப்பட்ட சமணக் கோயில்கள் 223
5. கொங்கு ஆவணங்களில் கழுவேற்றம் 225
6. சமய ஒருமைப்பாடு 229
7. சமண சமயத் தாக்கம் 232
8. பேரூர்ச் சமணச் செப்பேடு 237
9. சமணக் கல்வெட்டுகள் 238
10. கல்வெட்டில் அரசர் அரசியல் பெயர்கள் 240
11. மக்கென்சி ஆவணங்களில் சமணம் 242
12. சமணர்களின் இன்றையநிலை 249

பின்னிணைப்பு

1. சமணக் கல்வெட்டுகள் (மூல பாடம்) 264
2. மக்கென்சி ஆவணங்கள் 279
3. ஒளிப்படங்கள் 287

அருட்செல்வர்
டாக்டர் நா. மகாலிங்கம்
தலைவர், சக்தி நிறுவனங்கள்

74, அண்ணா சாலை
கிண்டி
சென்னை - 32

அணிந்துரை

கொங்குநாட்டுத் தொல்லியல், கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி ஆய்வாளர் புலவர் செ. இராசு ஆய்வு செய்து தொகுத்து வெளியிட்டுள்ள 'கொங்குநாடும் சமணமும்' என்ற அரிய நூலைப் படிக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

ஈரோட்டில் பள்ளித் தமிழாசிரியராகப் பணியைத் தொடங்கிய அவர் கள ஆய்வுகள் மூலம் கொங்குநாட்டின் பல்வேறு பண்டைச் சிறப்புகளையும், பழம்பெருமைகளையும் கட்டுரைகள் வாயிலாகவும், நூல்கள் மூலமாகவும் வெளிப்படுத்தியுள்ளார். அவரால் வெளிப்பட்ட கொங்குநாட்டு வரலாற்றுச் செய்திகள் பற்பலவாகும்.

பள்ளிப் பருவத்திலும், தமிழாசிரியராகப் பணி தொடங்கிய காலத்திலும் கொங்குநாட்டுப் பெரும் புலவர் மகாவித்துவான் வே.ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் அவர்களோடு ஏற்பட்ட நெருக்கமான தொடர்பு புலவர் இராசுவின் ஆய்வு வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக இருந்தது.

பள்ளி ஆசிரியராக இருந்த இராசுவைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டு, தொல்லியல் துறையில் பணியில் அமர்த்தியவர் மொழியியல் அறிஞர் டாக்டர் வ.ஐ. சுப்பிரமணியம் அவர்கள், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியேற்ற இராசு இணைப்பேராசிரியர், பேராசிரியர் ஆகப் பதவி உயர்வு பெற்றுத் துறைத்தலைவராகவும் சிறப்புடன் விளங்கினார்.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியில் சேர்ந்தபின் இவரது ஆய்வு படிப்படியாகப் பரந்து, விரிந்தது. தஞ்சை மராட்டியர், இராமநாதபுரம் சேதுபதிகள், புதுக்கோட்டை - அறந்தாங்கித் தொண்டைமான்கள், சிவகங்கை மன்னர்கள், கொங்குச் சமுதாயம், பாளையக்காரர்கள் பற்றிய செப்பேடுகளையும் கல்வெட்டுகளையும் தொகுத்துப் பல நூல்களாக வெளியிட்டார். பல சுவடிப் பதிப்புகளையும் வெளியிட்டார்.

17,18,19ஆம் நூற்றாண்டு வரலாற்று முயற்சிகள் கிழக்கிந்தியக் கம்பெனி ஆவணங்களையே பெரும்பாலும் சார்ந்திருந்த நிலை மாறி, உள்நாட்டு ஆவணங்களின் முக்கியத்துவத்தைப் பெரிதும் பின்பற்றப் புலவர் இராசுவின் பல வெளியீடுகளே காரணமாக அமைந்தன.

அத்துடன் கொங்குநாட்டின் பல்வேறு ஊர்கள், கோயில்கள், குலங்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துப் பல நூல்களாக வெளியிட்டார். தம்முடைய பட்டறிவின் வாயிலாக மிக விரிவாக ஆய்வு செய்து இப்போது 'கொங்குநாடும் சமணமும்' என்ற நூலை வெளியிட்டுள்ளார்.

கி.மு. 3ஆம் நூற்றாண்டில் சந்திரகுப்தமௌரியன் காலத்தில் கர்நாடகம் வழியாகக் கொங்கு நாட்டில் சமண சமயம் புகுந்து தமிழகம் எங்கும் பரவியது. பின்னர் பல்லவநாட்டிலும், பாண்டிய நாட்டிலும் ஏற்பட்ட சமண எதிர்ப்பு அலையின் காரணமாக அங்கிருந்து வெளியேறிய சமணர்கள் சமணர்களான தலைக்காட்டுக் கங்கர்கள் ஆட்சி புரிந்த கொங்குநாட்டில் தஞ்சமடைந்தனர்.

கொங்குநாட்டில் உள்ள சமணர் தொடர்பான மலைகள், மலைக்குகைகள், சமணக் கோயில்கள், சமணச் சிற்பங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைப்பட்டயங்கள், கொங்குச்சமணரின் தமிழ்ப்பணிகள் முதலியவற்றை மிக விரிவாக ஆய்வுசெய்து தகுந்த ஆதாரங்களுடன் இந்நூலைப் புலவர் இராசு உருவாக்கியுள்ளார்.

கொல்லாமையையும், புலால் உண்ணாமையையும் உயர் கொள்கைகளாகக் கொண்டிருந்த சமணர்கள் கடுமையான விரதங்களை மேற்கொள்ள முடியாத காரணத்தால் பெண்கள் வீடுபேறு பெற முடியாது என்று கருதினர். இந்நூலில் இவைபோன்ற சமணக் கொள்கைகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

நன்னூல் ஆசிரியர் பவணந்திமுனிவர் தொண்டைநாட்டினரும் அல்லர், கங்க நாட்டினரும் அல்லர். கொங்குநாட்டுச் சீனாபுரத்தினரே என்று நிறுவியுள்ளார். நேமிநாதம், வச்சணந்திமாலை ஆகிய இலக்கணம் - பாட்டியல் நூலாசிரியர் குணவீரபண்டிதர் தொண்டைநாட்டுப் பொன் விளைந்த களத்தூர் அல்ல, பொள்ளாச்சி வட்டக் களந்தை என்பது இராசுவின் ஆய்வில் வெளிப்பட்ட உண்மையாகும்.

சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கதேவர் பெருவஞ்சியாகிய தாராபுரத்தைச் சேர்ந்தவர் என்பதும், அவரை ஆதரித்த 'பொய்யாமொழி' சத்யவாக்கிய கங்கமன்னன் என்பதையும் தக்க சான்றுகளுடன் நிறுவும் ஆசிரியர் பெருங்கதை, சிலப்பதிகார உரையாசிரியர் பற்றிப் பல புதிய செய்திகளைக் கூறியுள்ளார்.

வரலாற்று ஆசிரியர்கள் எவரும் மிகுதியாகப் பயன்படுத்தாத மக்கென்சி ஆவணங்களை ஆய்வு செய்த இந்நூலாசிரியர் கொங்குநாட்டுச் சமணக் கல்வெட்டுகள் 54ஐத் தேடித் தொகுத்துப் பிற்சேர்க்கையாக மூல பாடத்துடன் தந்துள்ள விதம் நூலுக்கு அணி சேர்க்கிறது.

அறுபதிற்கும் மேற்பட்ட ஒளிப்படங்களும், வரைபடங்களும் இந்நூலில் சேர்க்கப்பட்டிருப்பது மிகவும் சிறப்புக்குரியதாகும்.

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு கோவைகிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் கொங்குநாட்டுச் சமணம் பற்றிய ஆய்வினைத் தொடங்கிவைத்தார். அவர் கூறிய கருத்துக்களை அடிப்படையாக வைத்து மிகவும் விரிவான ஆய்வை மேற்கொண்டு சான்றுகளுடன் இந்நூலைப் புலவர் இராசு உருவாக்கியுள்ளார். கடந்த அறுபது ஆண்டுகால ஆய்வு வளர்ச்சியை இந்நூல் முழுமையாகப் பெற்றுள்ளது.

சமண சமய வரலாறு, கொங்குநாட்டு வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு ஆகியவற்றில் பல புதிய அத்தியாயங்களை இந்நூல் படைத்துள்ளது. குறிப்பாகத் கொங்குநாட்டுச் சமண வரலாறு குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிவீசுகிறது.

ஈரோட்டில் கொங்கு ஆய்வு மையம் அமைத்து வரலாற்றுப் பணி ஆற்றிவரும் புலவர் இராசுவின் பணிகட்கு இந்நூல் பெருமை சேர்க்கிறது.

சமணர்கள் மட்டும் இன்றித் தமிழ் ஆர்வலர்கள் அனைவருக்கும் இந்நூல் பெருவிருந்தாக அமையும் என்பது ஐயமில்லை. இந்த அரிய நூல் ஆங்கிலத்தில் வெளிவந்தால் உலகம் முழுவதும் கொங்குநாட்டின் பெருமை வெளிப்படும்.

இதுபோன்ற பல ஆய்வு நூல்களை இராசு வெளியிட்டுக் கொங்கு நாட்டிற்கும், கொங்கு சமுதாயத்திற்கும், தமிழுக்கும் மேன்மேலும் பணிபுரிய வாழ்த்துகின்றோம்.

அன்புள்ள,

சென்னை, நா. மகாலிங்கம்

23.3.05

ஆசிரியர் உரை

1955ஆம் ஆண்டு பள்ளியிறுதி வகுப்பில் ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியில் எனக்குத் தமிழாசிரியராக அமைந்தவர் கொங்குநாட்டுப் பெரும்புலவர் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர். ஓலைச்சுவடிகள் தேட அவருடன் சென்றபோது ஒருநாள் விசயமங்கலம் நெட்டைக்கோபுரம் (அப்பகுதிமக்கள் விசயமங்கலம் சமணக் கோயிலான வீரசங்காதப் பெரும்பள்ளியை இப்பெயரில்தான் இன்றும் அழைக்கின்றனர்) சென்றோம். கொங்குச் சமணம் பற்றி அவர்கள் கூறிய உயர்வான கருத்துக்கள் என்னுள் விதைபோல் அன்று பதிந்தது.

1955-59 திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரியில் புலவர் பட்டம் பெறத் தமிழ் பயின்றபோது தமிழ்மொழிக்குச் சமணர் செய்த அளப்பரிய பல்வகைத் தொண்டு பற்றி விரிவாக அறிய நேர்ந்தது.

1959இல் தமிழாசிரியப் பணியில் அமர்ந்தபோது கொங்குநாட்டுச் சமணத் தலங்களையெல்லாம் நேரில் காணும் வாய்ப்புக் கிடைத்தது. 1960ஆம் ஆண்டு நல்லறம் இதழ் வாயிலாக பெரியவர் ஜீவபந்து டி.எஸ்.ஸ்ரீபால் அவர்கள் தொடர்பு ஏற்பட்டது. கொங்குநாட்டுச் சமணத் தலங்கள் பலவற்றைக் காண அவர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களோடு என் அழைப்பை ஏற்று ஈரோட்டுப் பகுதிக்கு வந்தது என் ஆய்வுக்குப் பெரும் உந்து சக்தியாகத் திகழ்ந்தது.

கோவைகிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் இட்ட அடிச்சுவட்டில் வரலாற்றுப்பயணம் தொடர்ந்தது. இப்பணியை ஒரு வேள்வியாக - தவமாகக் கருதி கால் நூற்றாண்டு காலம் உழைத்து இந்நூலை உருவாக்கினேன். கொங்குநாட்டுச் சமணம் பற்றிய செய்திகளை அறிய விரும்புபவர்களுக்கு இந்நூல் மிகவும் பயனுடையதாக இருக்கும்.

தமிழ்ச் சமணப் பெரியார்கள் திருவாளர்கள் சொ. அனந்தராஜ், அ.பு.அறவாழி, ஏ. சின்னதுரை, நேமி. சாந்தகுமார் ஜெயின் ஆகியோர் கொங்குநாட்டுச் சீனாபுரத்திலும், விசயமங்கலத்திலும் எடுத்த சமண விழாக்கள் நூல் வெளியிடும் ஆர்வத்தைத் தூண்டியது.

தமிழ் இலக்கிய ஆர்வலர் ஜமீன் காளியாபுரம் அன்பர் முனைவர் நா. கணேசன் அவர்கள் (நாசா விண்வெளி நிலைய கணிப்பொறியாளர், ஹூஸ்டன், ஐக்கிய அமெரிக்க நாடுகள்) 'கொங்குநாடும் சமணமும்' நூல் விரைவில் வெளிவரவேண்டும் என்று விரும்பினார். அவரும் ஹூஸ்டன்

கொங்குநண்பர்களும் பதிப்புச் செலவு முழுவதையும் மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள். கல்வெட்டில் பொறிக்கத்தக்க அவர்கள் கொடை மிகவும் பாராட்டுதற்குரியது. அவர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி வட்டாரத்தில் சமணப் பெருமக்கள் பல ஊர்களில் சிறப்புடன் வாழ்ந்துவருகின்றனர். சமயம், இலக்கியம் தொடர்பான பல அமைப்புக்களையும் தோற்றுவித்து அரும்பணியாற்றி வருகின்றனர். சமணப் பெரியார்கள் சொ. அனந்தராஜ், அ.பு. அறவாழி ஆகியோரும். வந்தவாசி மகாவீரர் அறக்கட்டளையினரும் நூல் வெளியீட்டு விழாவை மிகச் சிறப்பாகச் செய்துள்ளனர். வர்த்தமான மகாவீரர் ஜெயந்திநாள் அன்று (22-4-2005) இந்நூலை வெளியிட எல்லா ஏற்பாடுகளையும் மிகச் சிறப்புடன் அவர்கள் செய்துள்ளார்கள். இந்நூல் வெளியீட்டுக்கு இதைவிடப் பொருத்தமான இடமும், நாளும் கிடைத்தல் அரிது. அவர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்.

என் மீதும், என் ஆய்வுமீதும் அன்பும் ஆர்வமும் கொண்ட அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் இந்நூலைப் பாராட்டி அணிந்துரையும் அருட்கொடையும் அளித்துள்ளார்கள். அதனைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

என் பல்வேறு ஆய்வுப் பணிகட்கு எப்பொழுதும் உறுதுணையாக இருந்து என்னை ஊக்கப்படுத்துவர் நண்பர் செவாலியர் டாக்டர் கொங்கு என். கொளந்தசாமி அவர்கள். இந்நூல் வெளிவருவதில் மிகவும் ஆர்வம் காட்டிய அவருக்கு என் மனமார்ந்த நன்றி உரியதாகுக. ஒளிப்படங்கள் சில உதவிய நாமகிரிப்பேட்டை புலவர். வெ. இரா. துரைசாமி, கரூர் நாக். கணேசன், தர்மபுரி செல்வராசு ஆகியோருக்கு நன் நன்றி உரியதாகுக.

ஆய்வுப் பணியை முழுநேரமாக நான் மேற்கொள்ளக் குடும்பப் பொறுப்பு முழுவதையும் ஏற்றுக் கொண்டு என் ஆய்வுக்கு உதவும் என் வாழ்க்கைத் துணைவியார் கௌரி அவர்கட்கும், ஆய்வுக்கு உறுதுணையாக இருக்கும் என் மக்கள் இரா. செயப்பிரகாசு, இரா. செந்தில்குமார், இரா. செயமோகன் ஆகியோருக்கும் என் நன்றி உரியதாகுக.

இந்நூலை உருவாக்குவதில் எல்லாப் பணிகளையும் சிறப்புடன் ஆற்றிய சென்னை அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ். துரை. இராமநாதன் அவர்கட்கு என் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

ஈரோடு, அன்புள்ள
4-4-2005 செ. இராசு

நூல் முகம்

வரலாற்று முயற்சிகள்

சமண சமயம் பற்றியும், தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் சமணம் பரவியது பற்றியும் சில நூல்கள் எழுதப்பட்டுள்ளன. கொங்கு நாட்டில் சமண சமயம் பரவி வாழ்ந்த வரலாற்றையும் ஒருசில நூல்கள் சுருக்கமாகக் கூறிச் சில தகவல்களைத் தருகின்றன.

'கொங்கு நாட்டு வரலாறு' எழுதிய கோவைகிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியாரும் (1954), கொங்கு நாட்டு வரலாற்றை ஆங்கிலத்தில் *"The Kongu Country"* என்ற பெயரில் எழுதிய எம். ஆரோக்கிய சாமியும் (1956) கொங்கு நாட்டில் சமண சமயம் இருந்ததைச் சுட்டிக் காட்டியுள்ளனர். விரிவான செய்திகள் அந்நூல்களில் காணப்பெறவில்லை.

தென்னிந்தியச் சமணம் பற்றி ஆங்கிலத்தில் சில நூல்கள் வெளி வந்துள்ளன. எம்.எஸ். இராமசாமி ஐயங்கார் எழுதிய *'Studies in South Indian Jainism'* என்ற நூலே அவ்வகையில் வெளிவந்த முதல் நூலாகும் (1922). பின்னரே பி.பி. தேசாய் *'Jainism in South India and Some Jaina Epigraphs'* என்ற நூலை எழுதினார் (1957).

அவரைத் தொடர்ந்து எஸ். கே. இராமச்சந்திரராவ் *'Jainism in South India'* என்ற நூலை (1970) எழுதினார். பி.எம். ஜோசப் அவர்கள் எழுதிய *'Jainism in south India'* என்ற விரிவான நூலைத் திருவனந்தபுரம் அனைத்துலக திராவிட மொழியியல் பள்ளி வெளியிட்டது (1997).

இந்நான்கு நூல்களும் கொங்கு நாட்டுச் சமணம் பற்றி மிகவும் சுருக்கமாக ஓரிரு பத்திகளே கூறுகின்றன. விசயமங்கலம் பற்றிய குறிப்பு மட்டும் இரண்டொரு இடங்களில் சுட்டிக் கூறப்படுகின்றன. அஸ்வின் குமார் சட்டர்ஜி எழுதிய *'A Comprehensive History of Jainism'* என்ற நூலில் (1978) தென்னிந்தியாவைப் பற்றிய பகுதியில் –

விசயமங்கலம் மட்டுமே சுட்டிக் காட்டப்படுகிறது. வேறு கொங்குச் சமணச் செய்திகள் எதுவும் இல்லை.

அர. சம்பகலட்சுமியின் *'Jainism in Tamilnadu'* என்னும் சென்னைப் பல்கலைக்கழக எம்.லிட். ஆய்வேட்டில் ஓரளவு செய்திகள் (1958) தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. விசயமங்கலம், சீனாபுரம், பூந்துறை ஆகிய இடங்கள் சுட்டிக் கூறப்பட்டுள்ளன. இரட்டர், கங்கர் காலத்திய சமண சமயச் செய்திகள் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

'Epigraphia Indica' என்னும் கல்வெட்டுப் பருவ இதழில் விசய மங்கலம், திங்களூரில் உள்ள இரண்டு சமணக் கல்வெட்டுகள் பற்றி கே.வி. சுப்பிரமணிய ஐயர் எழுதிய கட்டுரையில் சில செய்திகள் கூறப்பட்டுள்ளன.

மயிலை சீனி வேங்கடசாமி தமிழில் 'சமணமும் தமிழும்' (1954) என்ற நூலை எழுதினார். கொங்கு நாடு என்னும் தலைப்பில் சேலம், கோவை மாவட்டச் சமணத் தலங்கள் சிலவற்றைத் தொகுத்துக் கூறியுள்ளார். சேலம், பூந்துறை, விசயமங்கலம், ஆனைமலை, வெள்ளோடு, திங்களூர், திருமூர்த்திமலை, சீனாபுரம் ஆகிய ஊர்கள் தொடர்பான சமணச் செய்திகள் அந்நூலில் தொகுத்துச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.[1]

ஜீவபந்து டி.எஸ்.ஸ்ரீபால் 'தமிழகத்தில் சமணம்' (1975) என்னும் நூலை எழுதினார். அந்நூலில் சமண சமயத் தத்துவங்கள் அதிகம் கூறப்பட்டுள்ளன. ஆனால் வரலாற்றுச் செய்திகள் அதிகம் இல்லை. மேலும் இந்நூலில் மயிலை சீனி வேங்கடசாமியின் நூலில் உள்ள செய்திகள் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

கொங்கு நாட்டில் சமணம்

கொங்கு நாட்டில் சமண சமயம் பற்றிய விரிவான ஆய்வை முதலில் தொடங்கி வைத்தவர் கோவைகிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் ஆவார்.

பெங்களூரிலிருந்து வெளிவரும் *'Mythic Society Journal'* என்னும் ஆய்விதழில் 'கொங்கு நாட்டில் சமணம்' என்னும் ஆங்கிலக் கட்டுரையை முதலில் (1935) எழுதினார். கோவை 'கொங்கு மலரி'ல்

திருமூர்த்திமலை பற்றி ஒரு கட்டுரை (1943) வெளியிடப்பட்டது. விருதுநகரிலிருந்து வெளிவந்த 'தமிழ்த்தென்றல்' என்னும் இதழில் 'கல்லும் பேசுகிறது' என்னும் தலைப்பில் 'எங்கள் நாட்டில் சமணர்கள் இருந்தார்களா?' என்ற கேள்வியை எழுப்பினார். அதற்கு விடையாகச் சமணர் இருந்தார்கள் என்று எழுதினார் (1946).

இதனைக் கண்ட அ. சக்கிரவர்த்தி நயினார், டி.எஸ். ஸ்ரீபால் ஆகியோர் வேண்டிக் கொள்ளவே 1953ஆம் ஆண்டு 'கொங்கு நாடும் சமணமும்' என்ற தலைப்பில் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் தனி நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார்.

விசயமங்கலம், வெள்ளோடு, பூந்துறை, சீனாபுரம், திங்களூர் முதலிய சமணக் கோயில்களையும், அரசண்ணாமலை, ஆனைமலை, திருமூர்த்திமலை, ஐவர்மலை ஆகிய மலைகளையும் பற்றிய சில செய்திகளை அவர் கூறியுள்ளார். களந்தையிலும், தேவணம் பாளையத்திலும் சமணக் கோயில்கள் சைவக் கோயிலாக மாற்றப்பட்ட விவரத்தையும் சுட்டிக் காட்டுகின்றார்.

மேற்கண்ட நூல்கள் வெளிவந்த பின்னர் அறச்சலூர், அம்மன் கோயில்பட்டி, பர்கூர் ஈரெட்டிமலை, அய்யர்மலை போன்ற பல இடங்களில் புதிய தமிழிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆலத்தூரில் புதிய சமணக் கோயில் கண்டுபிடிக்கப்பட்டது. செந்நாக்குன்று, அர்த்தநாரிபாளையம் கரடு, குன்னமலை, பொன்சொரிமலை, பிள்ளைதின்னிக்கரடு, சித்தர்மலை, கனககிரி போன்ற பல இடங்களில் சமணர் படுக்கைகள் கண்டறியப்பட்டன. பொங்கலூர், பரன்சேர்பள்ளி, பொட்டனேரி, பருத்திப்பள்ளி, ஆறகளூர், பெரியபட்டி, தேவம்பாடிவலசு போன்ற இடங்களில் சமண உருவங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன.

பெரியமணலி, ஆலத்தூர், விசயமங்கலம், பூந்துறை போன்ற இடங்களில் பல புதிய சமணக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. டி.வி. மகாலிங்கம்,[2] ஐராவதம் மகாதேவன்,[3] மயிலை சீனிவேங்கடசாமி,[4] ஏ. ஏகாம்பரநாதன்[5] ஆகியோரின் நூல்கள் மூலம் பழைய கல்வெட்டுகள் பல புதிய விளக்கம் பெற்றன. க.ப. அறவாணன்,[6] கே.வி. ரமேஷ்[7] (ப.ஆ) போன்றோர் நூல்களால் பல சமண நூல்களைப் பற்றிய விளக்கங்கள் வெளியாயின. ஐராவதம் மகாதேவன் அண்மையில் வெளியிட்ட *Early Tamil Epigraphy* என்னும் நூலில் (2003) தமிழிக் கல்வெட்டுகள் புதுவிளக்கம் பெற்றன.

பல கருத்தரங்குகளில் கொங்கு நாட்டுச் சமணச் செய்திகள் பற்றிப் பேசப்பட்டன. சில கட்டுரைகளும் எழுதப்பட்டன. கள ஆய்வில் பல சமணச் செய்திகள் வெளிப்பட்டன. இந்நூலில் கொங்கு நாட்டுச் சமணம் பற்றிய விரிவான செய்திகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

கொங்கு நாட்டில் சமண சமயம் தொடர்பான எல்லா இடங்களுக்கும் நேரில் சென்று கள ஆய்வு செய்யப்பட்டது. சில இடங்களுக்குப் பலமுறை சென்று ஆய்வு நிகழ்த்தப்பட்டது. சில ஐயங்கள்தீர சமண சமய ஆய்வாளர்கள் சிலரை நேரில் கண்டு விவாதிக்கப்பட்டது. கொங்கு நாட்டுத் திகம்பர சமணக் குடும்பத்தாருடன் உரையாடிச் சில செய்திகள் பெறப்பட்டன.

கள ஆய்வில் விசயமங்கலம், பூந்துறை போன்ற இடங்களில் சில புதிய கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. சில கல்வெட்டுகள் பிழையற வாசிக்கப்பட்டு நல்ல பாடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

முதல் பகுதியில் கொங்கு நாட்டைப் பற்றிய விவரங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம் முதலிய காப்பியங்களிலும், சமய இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் ‘கொங்கு’, ‘கொங்கர்’ பயின்று வரும் இடங்கள் சுட்டிக் கூறப்பட்டுள்ளன. சேர சோழ பாண்டிய நாடுகள் போலக் கொங்கும் தனி நாடென எல்லைகள் கூறப்பட்டுள்ளன.

கொங்கு நாடு 24 நாட்டுப் பிரிவுகளும் பிற்காலப் பெருக்கமும் கொங்கு நாட்டைச் சங்க காலத்தை அடுத்து வரிசையாக ஆட்சிபுரிந்த அரசர் பரம்பரை பற்றிய செய்திகளும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதியில் சமணத் தத்துவம், பிரிவுகள், முக்கிய சமணக் கொள்கைகள் விளக்கப்பட்டதுடன் சமண இல்லறத்தார், துறவறத்தார் ஒழுகும் ஒழுக்க நெறிகள் கூறப்பட்டுள்ளன. தீர்த்தங்கரர் இருபத்து நால்வர், அவர்களுக்குரிய பஞ்ச கல்யாணங்கள், 34 அதிசயங்கள் ஆகியவை கூறப்பட்டுள்ளதோடு 24 தீர்த்தங்கரர்களின் சின்னங்களும் கூறப்பட்டுள்ளன. பிற்காலத்துச் சமண சமயத்துள் தோன்றிப் பெருகிய இயக்கி, இயக்கர் பற்றிய செய்திகளும் விளக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது பகுதியில் கருநாடக மாநிலம் வழியாகக் கொங்கு நாட்டில் சமணம் பரவி வளர்ந்த நிலை விரிவாக அளிக்கப்பட்டுள்ளது.

கொங்கு நாட்டில் உள்ள சமணர் மலைகள், சமணக் கோயில்கள், சமணத் தனி உருவங்கள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. சில இடங்களில் இன்று சமணச் சின்னங்கள் ஏதுமில்லை. ஆனால் அத்தலங்களின் சமணத் தொடர்பு கல்வெட்டுகள் மூலம் வெளிப்படுகின்றன. அத்தலங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

நான்காவது பகுதியில் சமணரின் பொதுவான தமிழ்ப்பணி பற்றிக் கூறப்படுவதுடன் கொங்கு நாட்டுச் சமண நூல்களான பெருங்கதை, சீவகசிந்தாமணி, நேமிநாதம், வச்சணந்திமாலை, நன்னூல், கொங்குமண்டல சதகம், கல்வியொழுக்கம் பற்றிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதர், சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர், சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் பற்றிய செய்திகளும் இவ்வியலில் இடம்பெற்றுள்ளன.

ஐந்தாவது பகுதியில் கொங்கு நாட்டில் இயக்கி, இயக்கர் வழிபாடு சிறந்துள்ள இடங்கள் கூறப்பட்டுள்ளன. உண்ணாநோன்போடு உயர்பதிப் பெயரும் சல்லேகனை விரதம் பற்றியும், நால்வகைத் தானங்களில் சிறந்ததான அபய தானத்தைக் குறிக்கும் ‘அஞ்சினான் புகலிடங்கள்’ பற்றியும் கூறப்பட்டுள்ளன.

சில இடங்களில் சமணக் கோயில்கள் சைவக் கோயில்களாக மாறிய விவரங்களும், முருகப்பெருமான் திருஞானசம்பந்தராக எழுந்தருளிச் சமணத்தை அழித்ததாகக் கொங்கு நாட்டார் நம்பிய ஆவண விவரங்களும் கூறப்பட்டுள்ளன. சமண சமயம் புறச்சமயம் என்று சைவர்கள் எண்ணினாலும் சமண சமயத்தை மதித்ததன் மூலம் சமய ஒருமைப்பாட்டு உள்ளம் கொங்கு நாட்டுச் சைவர்கட்கு இருந்த தன்மைகள் கூறப்பட்டுள்ளன. இன்றைய கொங்குச் சமுதாயத்தில் சமண சமயத்தின் தாக்கம் இருப்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கொங்கு நாட்டின் முதல் செப்பேடு பேரூர்க் கங்கர் செப்பேடு. அதன் சமணத் தொடர்பு விளக்கப்பட்டுள்ளது. சமணக் கல்வெட்டுகள் பற்றிய தொகுப்பான செய்தியும், மக்கென்சி ஆவணங்களில் கூறப்படும் சமணச் செய்திகளும் கூறப்பட்டுள்ளன. பல்கிப் பரவிச் செழித்து வளத்துடன் வாழ்வாங்கு வாழ்ந்த கொங்கு நாட்டுச் சமணர்களின் இன்றைய தேய்ந்து அருகிய நிலை பேசப்படுகிறது.

இறுதியில் கொங்கு நாட்டுச் சமணம் தொடர்பான வரைபடங்களும், ஒளிப்படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

பின்னிணைப்பில் கொங்குநாட்டுச் சமணக் கல்வெட்டுகளும், கொங்குநாட்டு மக்கென்சி ஆவணச் சமணப் பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

பொதுவாக இந்நூலைப் படிப்போர் கொங்கு நாட்டில் சமணம் புகுந்த தன்மை, பெருகி வாழ்ந்த நிலை, அவர்கள் உருவாக்கிய சமணப்பள்ளிகள், அவர்களின் தமிழ்ப்பணி, அவர்கள் நமக்கு விட்டுச் சென்றுள்ள கலைச் சின்னங்கள், இன்றைய நிலை ஆகியவற்றை ஓரளவு தெரிந்துகொள்ளலாம்.

குறிப்புகள்

1. இன்று கர்நாடக மாநிலத்துடன் இணைந்துள்ள பஸ்திபுரம், முடிகொண்டம், கொள்ளேகால் ஆகிய ஊர்களையும் அவர் குறித்துள்ளார்.
2. **Early South Indian Palaeography (1967)**
3. **The Corpus of the Tamil-Brahmi Inscriptions (1968).**
4. சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டுகள் (1981)
5. கல்வெட்டில் சமணம் (1979).
6. சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை (1974).
7. **Jainism in Tamil Literature (1974).**

1

கொங்கு நாடு

சங்க இலக்கியத்தில் கொங்கு

சங்ககாலத் தமிழ்நாட்டில் இருந்த சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு ஆகியவைபோலக் கொங்குநாடும் ஒரு தனிப்பகுதியாக விளங்கியது. சங்க இலக்கியங்களில் கொங்கு,[1] கொங்கர்,[2] கொங்கர்நாடு[3] பற்றிய சில குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. கொங்குநாட்டுப் பகுதியில் ஆட்சிபுரிந்த சில குறுநிலத் தலைவர்களும் சங்க இலக்கியங்களில் சுட்டிக் கூறப்பட்டுள்ளனர்.[4]

சிலப்பதிகாரத்தில் கொங்கு

சங்கம் மருவிய காலக் காப்பியம் என்று கருதப்படும் சிலப்பதிகாரத்தில் கண்ணகி 'கொங்கச்செல்வி' என்று பாராட்டப் பெறுகிறார்.[5] உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் அப்பகுதிக்குக் 'கொங்குநாட்டினை ஆளும் செல்வி' என்றே உரை எழுதியுள்ளார்.

செங்குட்டுவன் செய்த கொங்கர் செங்களப்போர் இரண்டு இடங்களில் சுட்டிக் கூறப்பட்டுள்ளன.[6] குடகக் கொங்கர்,[7] கொங்கிளங்கோசர்[8] ஆகியோரும் சிலப்பதிகாரத்தில் இடம்பெறுகின்றனர்.

சமய இலக்கியங்களில் கொங்கு

தேவாரத் திருமுறைகளில் கொங்கு, மீகொங்கு ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. அவற்றை ஒட்டித் திருத்தொண்டர் வரலாற்றைப் புராணமாகப் பாடிய சேக்கிழாரும் மீகொங்கு, குடகொங்கு, கொங்குநாடு எனக் குறிப்பிடுகிறார்.[10]

பெரியாழ்வார் தம் பாசுரம் ஒன்றில் 'கொங்கு' என்ற சொல்லைக் கையாளுகிறார்.[11] பரமத பங்கம் என்னும் வைணவ நூலிலும் 'வடகொங்கு' கூறப்படுகிறது.[12]

கல்வெட்டிலும் செப்பேட்டிலும் கொங்கு

வரலாற்றுச் சிறப்புமிக்க பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் 'கொங்கு நாடு' சேந்தங்கூற்றனின் அதிகாரத்திற்கு உட்பட்ட நாடுகளில் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது.[13] அக் கல்வெட்டு கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

முற்காலப் பாண்டியர்களின் செப்பேடுகள் 8,9ஆம் நூற்றாண்டுகளுக்குரியவை.[14] அச் செப்பேடுகளில் வேள்விக்குடிச் செப்பேடு,[15] சீவரமங்கலச் செப்பேடு,[16] தளவாய்புரச் செப்பேடு[17] ஆகியவைகளில் கொங்கு நாடும், கொங்கரும் சிறப்பாகக் குறிக்கப் பெறுவதைக் காணுகின்றோம். பிற்காலக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் பற்பல இடங்களில் கொங்குநாடு குறிக்கப்பட்டுள்ளது.[18]

தமிழகம் ஐந்து பகுதி

சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடுகளுடன் தொண்டைநாடு, கொங்குநாடு இரண்டையும் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்று கூறும் வழக்கம் பின்னர் ஏற்பட்டது.

சைவ சமயத்தின் தொன்மையான நூல்களில் ஒன்றாகிய திருமூலரின் திருமந்திரம் 'தமிழ் மண்டிலம் ஐந்து'[19] என்று கூறுகிறது. தமிழ் இலக்கண நூலுள் ஒன்றாகிய தண்டியலங்கார மேற்கோள் பாடல் 'வியன் தமிழ்நாடு ஐந்து'[20] என்று சுட்டுகிறது. சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டம் எருமைப்பட்டியில் காணப்படும் கல்வெட்டொன்றில் 'ஐவர்ராசாக்கள் ஆணை' என்ற தொடர் காணப்படுகிறது.[21]

கொங்குநாட்டு எல்லை

கொங்குநாட்டு எல்லைகளைக் குறிப்பிடும் ஆவணங்கள் சில கிடைத்துள்ளன.[22] அவற்றின் மூலம் கொங்கு நாட்டின் கிழக்கு எல்லையாகக் கோட்டைக்கரை, மதுக்கரை, குழித்தலை ஆகியவையும், தெற்கு எல்லையாகப் பழனிமலை, பன்றிமலை ஆகியவையும், மேற்கு எல்லையாக வெள்ளியங்கிரி, வாளையாறு, பாலக்காடு, மலையாளம் ஆகியவையும், வடக்கு எல்லையாகப் பாலமலை, பெரும்பாலை, தலைமலை ஆகியவையும் கூறப்பட்டுள்ளன.

கொங்கு தனி நாடு

சங்க காலம் தொடங்கிப் பிற்காலம் வரை இலக்கியங்களும், கல்வெட்டுகளும், செப்பேடுகளும், வரலாற்று ஆவணங்களும், நூல்களும் கொங்கு நாடு எனத் தனியாகத் தமிழ்நாட்டில் பெயர் பெற்று விளங்கியதைக் கூறுகின்றன. மக்கென்சியின் ஆவணங்களில் 'கொங்கதேச இராசாக்கள்' என்றே தனியாக ஒரு ஆவணம் உள்ளது.[23] இக் கொங்குநாட்டின் பன்முகச் சிறப்புக்களைத் தொகுத்துக் கார்மேகக் கவிஞர், வாலசுந்தரக் கவிராயர், கம்பநாத சுவாமிகள் ஆகிய மூவர் கொங்கு மண்டல சதகம் பாடியுள்ளனர்.[24]

கொங்கு நாட்டுப் பிரிவுகள்

நாற்பெரும் பிரிவுகள்

கொங்குநாடு நான்கு பெரும் பிரிவுகளைக் கொண்டிருந்தது. தென்கொங்கு, மேல்கொங்கு, வடகொங்கு, கீழ்கொங்கு என்பன அவை.[25] கீழ்கொங்கு மழகொங்கு அல்லது மழகொங்கம் எனப்பட்டது.[26] கோவை கிழார் கொங்கு 24 நாடுகளில் ஒன்றான கிழங்கு நாட்டுக்குப் பெயர்க் காரணம் கூறும் பொழுது 'கீழ்கொங்கு' நாடு 'கிழங்கு நாடு' என மருவியிருக்கலாம் என்று கூறுகிறார்.[27]

24 நாடுகள்

கொங்குநாடு 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. பழங் காலத்தில் தொண்டைநாடும் 24 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.[28]

1) பூந்துறைநாடு 2) தென்கரைநாடு 3) காங்கேயநாடு 4) பொன்கலூர்நாடு 5) ஆறைநாடு 6) வாரக்கநாடு 7) திருவாவினன் குடிநாடு 8) மணநாடு 9) தலையநாடு 10) தட்டயநாடு 11) பூவானிய நாடு 12) அரையநாடு 13) ஒடுவங்கநாடு 14) வடகரைநாடு 15) கிழங்கு நாடு 16) நல்லுருக்காநாடு 17) வாழவந்திநாடு 18) அண்டநாடு 19) வெங்காலநாடு 20) இராசிபுரநாடு 21) காவடிக்காநாடு 22) ஆனைமலைநாடு 23) காஞ்சிக்கோயில் நாடு 24) குறுப்புநாடு என்பன அவை.[29]

தென்கரை நாட்டை முதலாவதாகக் கொண்டு 24 நாடுகளையும் வரிசைப்படுத்தும் ஒரு முறையும் உண்டு. 24 நாடுகளையும் தொகுத்துக் கூறம் பழைய பாடல் ஒன்றும் உண்டு.

சொல்லஅரி தானபூந் துறைசைதென் கரைநாடு
தோன்றுகாங் கேயநாடு
தோலாத பொன்கலூர் நாடுதிகழ் ஆறையணி
தோய்ந்தவா ரக்கநாடு

வல்லமை செறிந்ததிரு வாவிநன் குடிநாடு
மணநாடு தலையநாடு
வரதட்டை பூவானி அரையநாடு ஒடுவங்கம்
வடகரை கிழங்குநாடு

நல்லுருக் காநாடு வாழவந் தியும்அண்ட
நாடுவெங் காலநாடு
நாவலர்கள் சொல்கா வடிக்காநா டாணைமலை
ராசிபுர நாடுநிதமும்

இல்லறம் வளர்ந்துதவி மல்குகாஞ் சிக்கோயில்
இயல்செறி குறுப்புநாடு
இனியபுகழ் சேர்கொங்கு மண்டலம் தனிலான
இருபத்து நான்குநாடே[30]

என்பது அப்பாடலாகும். பிற்காலத்தில் இந்நாடுகள் பெருகின.

பூந்துறைநாடு, அரையநாடு என்பன மேல்கரை, கீழ்க்கரை எனக் காவிரியை மையமாக வைத்து இரு பிரிவாகப் பிரிந்தன. ஆறைநாடு, கோவங்கநாடு, மன்னிநாடு, கவையநாடு, செம்பைநாடு, தணக்குநாடு, பழனநாடு என ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒடுவங்கநாட்டில் டணாயக்கன் கோட்டை நாடு, படிநாடு என்ற இருநாடுகள் பிரிந்தன.[31]

கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுக்குச் சில இணை நாடுகள் சேர்க்கப்பட்டன.[32]

பொங்கலூர்நாடு, பூவானியநாடு ஆகியவை வட, தென் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. மேற்கூறிய கொங்கு மண்டல சதக ஊர்த்தொகையை அடிப்படையாகக் கொண்ட பட்டியலில் இல்லாத சில நாட்டுப் பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

நாடுகள் பெருக்கம்

இராசராச வளநாடு, கரைவழிநாடு, கீட்பாநாடு, திருவாய்ப் பாடிநாடு, சேவூர்நாடு, நற்காவேரிநாடு, நாலூர்ப்பற்றுநாடு, நிரற்றூர் நாடு,

பருத்திப்பள்ளிநாடு, பல்லவரையர்நாடு, மூலைநாடு, பழனநாடு, வஞ்சிநாடு, வழையலூர் நாடு, வீரசோழவளநாடு என்பனவாம்.[33]

டணாயக்கன் கோட்டையைச் சுற்றியிருந்த சில நாடுகள் கோட்டை சூழ் நாடுகள் எனப்பட்டன.[34] சில பகுதிகள் அஞ்சுகரைநாடு, ஆறுகரைநாடு, எழுகரைநாடு, ஒன்பதுகரைநாடு என அழைக்கப்பட்டன.

இராமபத்திரன் பட்டயத்தில் கொங்கு 42 நாடு எனக் கூறப்பட்டுள்ளது. பூந்துறைநாட்டுக் கட்டளை என்னும் ஏட்டில் அதற்கு விளக்கம் காணப்படுகிறது. தாராபுரம் சூழ்ந்த நாடு 24, டணாயக்கன் கோட்டை சூழ்ந்த நாடு 6, குன்றத்தூர் துர்க்கம் வடகொங்கு 12 நாடு எனக் காணப்படுகிறது. அண்மையில் கிடைத்த மயிலாடுதுறை வி.சா. குருசாமி தேசிகர் வீட்டுச் செப்பேட்டில் கொங்கு 72 நாடு என்று கூறப்பட்டுள்ளது.[35]

கி.பி. 9ஆம் நூற்றாண்டிலேயே இந்நாட்டுப் பிரிவுகள் ஏற்படத்தொடங்கின. சுந்தரர் தேவாரத்தில் 'கொங்கில் குறும்பில் குரக்குத் தளியாய்'[36] எனக் காணப்படுகிறது. குறும்பு என்பது குறுப்பு நாட்டைக் குறிக்கும்.

கொங்கு அரசர்கள்

கொங்கு நாட்டில் சங்க காலத்தில் அதிகாரம் செலுத்திய குறுநிலத் தலைவர்களைப் பற்றிக் 'கொங்குநாடு' என்னும் தலைப்பில் கூறப்பட்டது. பிற்காலங்களில் ஆண்ட அரச மரபுகளைப் பற்றி இப்பகுதியில் கூறப்படுகிறது.

இரட்டர்[37]

கொங்கு தேச ராசாக்கள் என்னும் நூல் கொங்கு நாட்டை

ஸ்ரீ வீரராஜ சக்கரவர்த்தி

கோவிந்தராயர்

கிருஷ்ணராயர்

கலவல்லராயர்

கோவிந்தராயர்

சதுர்ப்புய கன்னரதேவ சக்கரவர்த்தி

திருவிக்கிரமதேவச் சக்கரவர்த்தி

என்ற இரட்ட குலத்தவர்கள் ஆட்சி புரிந்ததாகக் கூறுகிறது. சூரிய வம்சத்தைச் சேர்ந்த இவர்கள் ஸ்கந்தபுரத்திலிருந்து அரசு புரிந்தனர். முதல் ஆறு அரசர்கள் சமண சமயத்தைப் பின்பற்றியவர்கள். கடைசி அரசன் சைவன் ஆனான்.

கங்கர்கள்[38]

கொங்கு நாட்டை இரட்டரை அடுத்து ஆட்சிபுரிந்த முதல் கங்க மன்னன் கொங்கணிவர்மன். கொங்கணிவர்மன் கி.பி. 189இல் பட்டத்துக்கு வந்தான். அவனுக்குப் பின் 20 கங்க அரசர்கள் ஆட்சி புரிந்தனர். ஸ்கந்த புரத்திலும், தளவனபுரத்திலும் கங்கர் தலைமை இடங்களை அமைத்துக் கொண்டனர். கங்க மன்னருள் ஒருவனான துர்விநீதன் பிருகத்கதை இயற்றினான். கி.பி. 9ஆம் நூற்றாண்டில் கடைசி கங்க மன்னனைச் சோழர் அழித்தனர்.[39]

சோழர்கள்

சோழர்களில் ஆதித்த சோழன் கொங்கு நாட்டைக் கைப்பற்றினான். பராந்தகன், ஆதித்த கரிகாலன் கல்வெட்டுகள் கொங்கு நாட்டில் கிடைக்கின்றன. முதலாம் இராசராசன் காலத்தில் ஏறக்குறைய 1004ஆம் ஆண்டு கொங்குச் சோழ மரபு ஏற்பட்டது. கி.பி. 1303 வரை கொங்குச் சோழர் ஆட்சி நீடித்தது.

விக்கிரம சோழன்	1004-1045
குலோத்துங்க சோழன்	1149-1183
வீர சோழன்	1183-1206
வீரராசேந்திர சோழன்	1207-1255

ஆகியவர்கள் முக்கியமான கொங்குச் சோழ அரசர்கள்,[40] விஜயாலய மரபுத் தஞ்சைச் சோழர் போலவே கொங்குச் சோழரும் பெயர் வைத்துக் கொண்டனர். இவர்கள் தாராபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர்.

இவர்களில் விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன் முதலியோர் சமண சமயத்திற்கு ஆதரவு நல்கியுள்ளனர்.

பாண்டியர்

கொங்குச் சோழர்களின் இறுதிக் காலத்தில் மதுரைப் பாண்டியர்களின் பிரதிநிதிகளாக கொங்குப் பாண்டியர் கொங்கு நாட்டில் ஆட்சிக்கு வந்தனர்.

வீரபாண்டியன்	1265-1285
சுந்தரபாண்டியன்	1285-1300

இவர்கள் முக்கியமான பாண்டியர்கள். குலசேகர பாண்டியன் என்பவனும் சிறிது காலம் ஆட்சி செய்துள்ளான். வீரபாண்டியன் காலத்திய சமணக் கல்வெட்டுகள் உள்ளன.[41]

சேரர்

கி.பி. 9, 10ஆம் நூற்றாண்டு வாக்கில் கொங்கு நாட்டின் சில பகுதிகளில் சேரர் ஆட்சி புரிந்தனர். வெள்ளலூர், ஈரோட்டில் அவர்கள் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. கோரவிகோதை கல்வெட்டுகள் கொங்கு நாட்டில் கிடைக்கின்றன. அவற்றுள் ஒன்று சமண சமயம் சார்ந்தது.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் சேர அரசர்கள் சிலர் கொங்கின் மேற்குப் பகுதியில் ஆதிக்கம் செலுத்தினர்.

'கோதை நனியாண்டதொரு கொங்குவளநாடு'[42]
'சேரர் கொங்கு வைகாவூர்'[43]

எனச் சேரர் ஆதிக்கம் இலக்கியத்திலும் இடம்பெற்றுவிட்டது.

போசளர்

போசள மன்னர்களில் இரண்டாம் வல்லாளன், வீரசோமேசுவரன், மூன்றாம் வீரவல்லாளன் ஆகியோர் கல்வெட்டுகள் கொங்கு நாட்டில் கிடைக்கின்றன. ஆலத்தூரிலும், திங்களூரிலும் சமணக் கோயிலில் வீரவல்லாளன் கல்வெட்டுகள் கிடைக்கின்றன.[44]

விசயநகர அரசர்

விசயநகர மன்னன் கம்பண்ண உடையாரின் கல்வெட்டு கி.பி. 1368ஆம் ஆண்டைச் சேர்ந்தது கொங்கு நாட்டில் கிடைத்துள்ளது. சீரங்க ராயரின் 1667ஆம் ஆண்டுக் கல்வெட்டு இறுதிக் கல்வெட்டாகக்

கிடைத்துள்ளது. ஏறக்குறைய 300 ஆண்டுக்காலம் விசயநகர அரசர்கள் கொங்கு நாட்டை ஆட்சிபுரிந்துள்ளனர்.[45]

விசயமங்கலத்திலும்,[46] பூந்துறையிலும் சமணக் கோயில்களில் விசயநகர அரசர் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

கிருஷ்ணதேவராயன் (1509-1529), அச்சுதராயன் (1530-1542), சதாசிவராயன் (1542-1570) ஆகியோர் புகழ் வாய்ந்த சில விசயநகர அரசர்கள். விசயநகர அரசர்களில் சங்கம, சாளுவ, துளுவ, ஆறவீடு மரபு அரசர்கள் வரிசையாக ஆட்சி புரிந்தனர்.

உம்மத்தூர்த் தலைவர்கள்

விசயநகர அரசர்கள் ஆட்சி புரியும்போது அவர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து கொங்கு நாட்டின் சில பகுதிகளை உம்மத்தூர்த் தலைவர்கள் ஆட்சி புரிந்தனர். வீரநஞ்சராய உடையார் (1489-1500), வீரசிக்க ராயன் (1500-1512), வீரநஞ்சன்ன உடையார் (1507-1517) ஆகியோர் உம்மத்தூர்த் தலைவர்கள் ஆவர்.[47]

மதுரை நாயக்கர்

விசுவநாத நாயக்கன் மதுரை நாயக்கர் மரபின் முதல் தலைவன் ஆனான். திருமலை நாயக்கன் காலத்திற்குப் பிறகு வந்த நாயக்க அரசர்கள் வலிமையற்றவர்கள் ஆயினர். மதுரை நாயக்க அரசர்கள் கல்வெட்டுகள் சமணக் கோயில்களில் அதிகமாகக் கிடைக்கவில்லை. ஆனால் பிற சைவ, வைணவக் கோயில்களில் கிடைக்கின்றன. தளவாய், காரியத்துக்குக் கர்த்தர் போன்ற நாயக்க அதிகாரிகள் கொங்கு நாட்டில் அதிகாரம் செலுத்தினர்.

மைசூர் உடையார்கள்

மதுரை நாயக்கர் கொங்கு நாட்டில் அதிகாரம் செய்யும்போது வடக்குப் பகுதியில் மைசூர் உடையார்கள் கொங்கு நாட்டின் பல பகுதிகளைப் பிடித்தனர். பல செப்பேடுகளையும், கல்வெட்டுகளையும் பொறித்தனர்.

தலைக்கோட்டை யுத்தத்திற்குப் பின் இராஜஉடையார் சீரங்கப் பட்டணத்தின் தலைவராகி மைசூர் உடையார் மரபை நிறுவினார்.[48] கண்டீரவ நரச ராசா கொங்குப் பகுதியை வென்றான். தொட்டதேவன்,

சிக்கதேவன் போன்றவர்கள் புகழ் வாய்ந்த சில அரசர்கள். தொட்டதேவன் மதுரை நாயக்கரோடு கொங்கு மண்ணில் பெரும் போர் நடத்தினான். மைசூரார் வென்றனர்.

ஐதர், திப்பு

மைசூர் உடையாரிடம் பணிபுரிந்த ஐதர்அலி மைசூர்த் தலைவர் ஆனார். பின் அவர் மகன் திப்புசுல்தான் ஆட்சிக்கு வந்து கொங்கு நாட்டையும் ஆட்சி புரிந்தார். அப்போது கிழக்கிந்தியக் கம்பெனியார்கட்கும் திப்புவிற்கும் ஏற்பட்ட போர்களில் கொங்குநாடு அலைக்கழிக்கப்பட்டது. திப்புவின் வீழ்ச்சிக்குப்பின் 1799இல் கொங்குப்பகுதி கிழக்கிந்தியக் கம்பெனியார் வசமாயிற்று.[49]

குறிப்புகள்

1. மைந்தர் ஆடிய மயங்குபெரும் தானை
   கொங்கு புறம்பெற்ற கொற்றவேந்தே (புறம். 373:7-8)
2. கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
   வெண்கோட்டு யானை போஒர் கிழவன்
   பழையன் (நற். 10: 6-8)
   ஒளிறுவாள் கொங்கர் (குறுந். 393:6)
   ஈர்ம்படைக் கொங்கர் ஆபரந்தன்ன (பதி. 77:10-11)
   கட்டிப் புழுக்கில் கொங்கர்கோ (பதி. 90:25)
   நார்அரி நறவின் கொங்கர்கோ (பதி. 88:19)
   கொங்கர் படுமணி ஆயம் (அகம், 79:5-6)
   வாடாப் பூவின் கொங்கர் (அகம். 253:4)
   கொங்கர் மணிஅரை யாத்து
   மறுகின் ஆடும் உள்ளி விழவு (அகம். 368:16-18)
   கொங்கர் குடகடல் ஓட்டிய ஞான்றை (புறம். 130: 5)
3. ஆகெழு கொங்கர்நாடு (பதி. 22:15)
4. அத்தி, அதியமான், ஆய், இளங்கோசர், ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன், எழினி, ஏற்றை, ஓரி, கட்டி, கடியநெடு வேட்டுவன், குமணன், கொடுமுடி, தாமான் தோன்றிக்கோன், நன்னன் பழையன், புன்றுறை, பேகன், விச்சிக்கோ ஆகியோர் கொங்குப் பகுதியில் ஆட்சி செலுத்தியோர் ஆவர்.
5. *சிலப்பதிகாரம்* 2:12:47.

6. *மேலது* 3:25: 153-154; 3:29:1 (உரைப்பாட்டுமடை).
7. *மேலது* 3:30:159.
8. *மேலது* உரைபெறு கட்டுரை.
9. கொங்கில் குறும்பில் குரக்குத் தளியாய் - *சுந்தரர் தேவாரம்,* ஊர்த்தொகை 2.

கொங்கே புகினும் கூறைகொண் டாறலைப் பாரிலை - *சுந்தரர் தேவாரம்,* திருப்புக்கொளியூர் அவிநாசிப் பதிகம், 92:3.

மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப் பேரூர் பெருமான் - *சுந்தரர் தேவாரம்,* கோயிற் பதிகம் 90:10.

10. குலவு மீகொங்கில் காஞ்சிவாய்ப்பேரூர் - *பெரியபுராணம்,* ஏயர்கோன் கலிக்காம நாயனார் 88.

குடகொங்கு - *பெரியபுராணம்,* வெள்ளானைச் சருக்கம் 4. கொங்குநாடு கடந்துபோய்க் குலவுமலைநாட்டு எல்லையுற - *பெரியபுராணம்,* கழறிற்றறிவார் நாயனார் புராணம் 141.

11. *நாலாயிர திவ்வியப் பிரபந்தம்,* முதலாயிரம் 173.
12. மாதவனார் வடகொங்கில் வானியாற்றில் - *பரமத பங்கம்* எண் 53.
13. எ. சுப்பராயலு, 'பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகள்', *ஆவணம்* இதழ் 1, ப. 68.
14. *பாண்டியர் செப்பேடு பத்து,* தமிழ் வரலாற்றுக்கழகம், சென்னை, 1967.
15. 'கொங்கர் கோமான்', 'மழகொங்கம்', 'கொங்கர்கோன்' - *வேள்விக்குடிச் செப்பேடு* 70,81, 127.
16. 'குடகொங்கம்', 'கொங்கபூமி' - *சீவரமங்கலச் செப்பேடு* 31,34.
17. 'கொங்கு', 'குடகொங்கர்' - *தளவாய்புரச் செப்பேடு* 121.
18. 'கொங்கில் சோழனார்க்காய் ஸ்ரீகார்யம் ஆராய்கின்ற காரிநக்கனார்' - முதல் பராந்தகன் (கி.பி. 936) **S.I.I. XXIII - 258;** கொங்கு, கொங்குநாடு, கொங்கு மண்டலம், செ.இராசு, *தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்* 50, பக். 18, 53,105.
19. திருமூலர், *திருமந்திரம்* 1646.
20. *தண்டியலங்காரம்,* நூற்பா 75.
21. அ. கிருட்டிணன், *சேலம் நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள்,* எண் 84,
22. *இராமபத்திரன் பட்டயம், தென்கரைநாட்டுப் பட்டயம்:*

'கிழக்குக் கோட்டைக்கரையும், தெற்குப் பன்றிமலையும், மேற்கு வாளையாறும், வடக்குப் பாலமலையும்'

மதுக்கரைப் பட்டயம்: 'மதுக்கரைக்கு மேற்கு, மலையாளத்துக்கும் கிழக்கு, பாலமலைக்குத் தெற்கு, பழனிமலைக்கு வடக்கு'

அனுமன்பள்ளிச் செங்குந்தர் பட்டயம்: 'பாலைக்காட்டுக்குக் கிழக்கு, கோட்டைக்கரைக்கு மேற்கு, பன்றிமலைக்கு வடக்கு, பாலமலைக்குத் தெற்கு' - செ. இராசு, *கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள்* 2, 22, 42, 49.

வேணாவுடையார் வம்சாவளி, மக்கென்சி ஆவணம் டி 3036; பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, ப. 85: 'மதுக்கரைக்கு மேற்கு, வராக கிரிக்கு வடக்கு, வெள்ளிமலைக்குக் கிழக்கு, பாலமலைக்குத் தெற்கு'

சோழன் பூர்வ பட்டயம் பக்கம் 227:

'வடக்கெல்லை பாலமலை வைகாவூர் தெற்கு
குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று - கடற்பால்
கோட்டைக் கரையளவும் கொங்கநாட் டெல்லையென
நாட்டிவைத்தார் நல்லோர்க ளே'

கொங்குமண்டல சதகம், கார்மேகக் கவிஞர், எண் 4:

'மதிற்கரை கீட்டிசை தெற்குப் பழனி மதிகுடக்குக்
கதித்துள வெள்ளை மலைபெரும் பாலை கவின்வடக்கு
விதித்துள நான்கெல்லை சூழ வளமுற்று மேவிவிண்ணோர்
மதித்திட வாழ்வு தழைத்திடு நீள்கொங்கு மண்டலமே'

கொங்குமண்டல சதகம், மேற்கோள் பாடல் எண் 4:

'வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று - கிடக்கும்
களித்தண் டலைமேவு காவிரிசூழ் நாடு
குளித்தண் டலையளவு கொங்கு'

பெரும்பாலை என்பதற்குத் தனிப்பாடலில் 'தலைமலையாம்' என்ற பாடபேதம் உள்ளது.

தென்கரை நாட்டுப் பட்டயம்:

'நாற்பாங்கு எல்லைமானம் கிழக்குக் கோட்டைக்கரையும், தெற்குப் பன்றிமலையும், மேற்கு வாளையாறும், வடக்குப் பாலைமலையும்'

23. '*கொங்கதேச இராசாக்கள்*' (ப.ஆ.) சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை, 1950.

24. கார்மேகக் கவிஞரின் கொங்கு மண்டல சதகம் திருச்செங்கோடு முத்துசாமிக் கோனார் அவர்களால் 1923இல் வெளியிடப்பெற்றது. வாலசுந்தரக் கவிஞரின் கொங்கு மண்டல சதகம் வித்துவான் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களால் 1970ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது. ஏட்டுச்சுவடியாக இருந்த கம்பநாதசுவாமிகளின் கொங்கு மண்டல சதகத்தையும் சேர்த்து மூன்று சதகங்களையும் ஒன்றாகப் பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி வெளியீடாக 1986ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது.

25. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்கு நாட்டு வரலாறு*, ப. 27.
26. *பாண்டியர் செப்பேடு பத்து*, வேள்விக்குடிச் செப்பேடு, வரி 81.
27. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாட்டு வரலாறு*, ப. 29
28. சமணத் தீர்த்தங்கரர் 24 பேர். இரண்டிற்கும் தொடர்பு இருக்குமோ என்பது ஆய்வுக்குரியது.
29. செ. இராசு, *தென்முகம் வெள்ளோடு சாத்தந்தைகுல வரலாறு*, ப. 14.
30. செ. இராசு, *மு.கா. நூல்*, பக். 14–15.
31. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாட்டு வரலாறு*, பக். 34–37.
32. பருத்திப்பள்ளி, குன்றத்தூர், நாடாள்வார், சேலம், ஏழுர் நாடுகள்.
33. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாட்டு வரலாறு*, பக். 34–37; எ. சுப்பராயலு, நாட்டுப் பிரிவுகள், *ஆய்வுத்தேன்*, பக். 47–50.
34. ***ARE* 596 of 1905; *SITI* I 272.**
35. செ. இராசு, *கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள்*, முன்னுரை, ப. 17.
36. *சுந்தரர் தேவாரம்*, ஊர்த்தொகை 2.
37. இரட்டர் மரபுகளைப் பற்றிய விரிவான செய்திகள் மக்கென்சி ஆவணத்தில் சமணம் எனும் பகுதியில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.
38. இவர்களின் மரபுகளைப் பற்றிய விரிவான செய்திகள் மக்கென்சி ஆவணத்தில் சமணம் எனும் பகுதியில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.
39. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாட்டு வரலாறு*, ப. 92.
40. *மேலது*, ப. 167.
41. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாட்டு வரலாறு*, பக். 279, 283.
42. *பேரூர்ப் புராணம்*, நாட்டுப்படலம் 2.
43. *திருப்புகழ்*, பழனிப்பாடல் 104.
44. ***ARE* 216 of 1978; *SITI* I 258.**
45. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாட்டு வரலாறு*, ப. 320.
46. ***ARE* 596 of 1905; *SITI* I 272.**
47. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாட்டு வரலாறு*, பக். 325–330.
48. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாட்டு வரலாறு*, ப. 357.
49. *மேலது*, ப. 411.

2

சமண சமயம்

கொங்கு நாட்டில் புகுந்து, வளர்ந்து, வாழ்ந்து, மறைந்து கொண்டிருக்கும் சமண சமயம் பற்றி ஆராயத் தொடங்குமுன் சமண சமயம், அதன் தத்துவங்கள், சமணத் தெய்வங்களான தீர்த்தங்கரர்கள், சமண சமயத்தார் பற்றி ஓரளவு அறிவது அவசியம். எனவே இப்பகுதியில்

சமண சமயம்

சமண இல்லத்தார், துறவறத்தார் ஒழுகும் ஒழுக்கம்

வழிபாட்டுக்குரிய தீர்த்தங்கரர்கள்

பிற்காலத்தில் தோன்றிப் பெருகிய இயக்கர் - இயக்கி வழிபாடு

பற்றிக் கூறப்படுகின்றன.

சமண சமயம் - பெயர்க்காரணம்

'ஜினர்' என்றால் வென்றவர் என்பது பொருளாகும். பல பிறவிகளை உண்டாக்கித் துன்பங்களை அடைவதற்குக் காரணமாக விளங்கும், கர்மங்களையும், புலன்களைப் பற்றி எழும் காமம், வெகுளி, மயக்கங்களை வென்றவர் 'ஜினர்' எனப்பட்டனர்.

ஜினருடைய நல்லுபதேசங்களை மேற்கொள்பவர்கள் 'ஜைனர்' எனப்பட்டனர். ஜைன சமயம் தமிழில் சமண சமயம் எனப்படும். 'ச்ரமணர்' என்றால் முயற்சியாளன் என்று பொருள். மெய்யுணர்ந்து வேண்டுதல் வேண்டாமை நீங்கிச் சமநிலை அடைவதற்குத் தவத்தால் முயல்பவர் 'ச்ரமணர்' எனப்பட்டனர்.[1] 'ச்ரமணர் சமயம்' என்பது தமிழில் சமண சமயம் ஆயிற்று என்றும் கூறுவர்.

சமண சமயத்தை அமண சமயம்,[2] ஆருகத சமயம்,[3] நிகண்ட சமயம்,[4] அநேகாந்தவாத சமயம்[5] என்றும் குறிப்பிடுவர்.

சைவ சமயக் குரவர்களில் ஒருவராம் திருஞானசம்பந்தர் சமணரை ஆரம்பர்,[6] பிண்டியர்[7] என அழைப்பார்.

அக்காலத்தில் வைதிக சமயம் ஏற்படுத்தியிருந்த வேள்விகளையும் சடங்குகளையும் எதிர்த்து மக்களைத் தூய்மையான வாழ்வில் புகுத்தும் நோக்கத்தடன் சமண சமயம் பாடுபட்டது.[8]

பிரிவுகள்

சமண சமயம் மூன்று வகையான பெரும் பிரிவுகளை உடையது. அவை

1. திகம்பர சமணம்
2. சுவேதாம்பர சமணம்
3. தானகவாசி சமணம்

எனப்படும்.[9] வட இந்தியாவில் திகம்பரப் பிரிவில் தேராபந்தி, பீஸ்வந்தி என உட்பிரிவுகள் உள்ளன

திகம்பர சமணம்

ஆடையற்ற தெய்வங்களை வணங்கிய சமணர்கள் திகம்பர சமணர் எனப்பட்டனர். இவர்கள் தெய்வங்கட்குத் திக்குகளே ஆடை ஆயின. தெய்வங்கள் மட்டுமன்றித் தெய்வீக நிலைக்கு உயர்ந்த முனிவர்களுள் சிலரும் ஆடையின்றி இருந்தனர். அதனாலும் இச்சமயம் திகம்பர சமணம் என்று அழைக்கப்பட்டது.

சுவேதாம்பர சமணம்

சுவேதம் என்றால் வெண்மை என்று பொருள். அம்பரம் என்றால் ஆடை என்று பொருள். சுவேதம் + அம்பரம் = சுவேதாம்பரம் ஆயிற்று. அவர்கள் தீர்த்தங்கரர்கட்கு வெண்மையான ஆடை உடுத்துவர். தம் தெய்வங்களுக்கு ஆபரணங்கள் பூட்டுவர். வெண்ணிற ஆடை உடுத்த சமண சமயத்தவர் சுவேதாம்பர சமணர் என அழைக்கப்படுவர்.

தானகவாசி சமணம்

உருவ வழிபாட்டை ஏற்றுக் கொள்ளாமல் சமய நூல்களையே தெய்வமாக வழிபடும் சமணர் தானகவாசி சமணர் எனப்பட்டனர்.

சுவேதாம்பர சமணமும், தானகவாசி சமணமும் வட இந்தியாவில் மிகுதியாக உள்ளது. தென்னிந்தியாவில் தமிழ் நாட்டிலும் மற்ற பகுதிகளிலும் பரவிய சமணம் திகம்பர சமண சமயமேயாகும்.

சமணத் தத்துவங்கள் - ஒன்பது பொருள்கள்

சமண சமயத்தில் ஒன்பது பொருள்கள் கூறப்பட்டுள்ளன. இவைகளை 'நவ பதார்த்தங்கள்' என்பர். அவை உயிர், உயிர் அல்லது, புண்ணியம், பாவம், ஊற்று, செறிப்பு, உதிர்ப்பு, கட்டு, வீடு என்பனவாம்.[10]

(1) உயிர் (சீவன்)	-	உயிர்கள் எண்ணிறந்தன. அநாதியானவை. அழிவில்லாதவை. ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள உயிர்களில் ஐந்தாவது உயிர் மட்டும் பகுத்தறிவு உள்ளது - இல்லது என இருவகைப்படும். மனமுள்ளவை, மனமில்லவை எனவும் மொழிவதுண்டு
(2) உயிர் அல்லது (அசீவன்)	-	இதனைப் புத்கலம் என்றும் கூறுவர். புத்கலம் என்றால் சடப்பொருள். காலம், ஆகாயம் போல்வனவும் இவற்றுள் அடங்கும்.
(3) புண்ணியம்	-	நல்வினை.
(4) பாவம்	-	தீவினை
(5) ஊற்று (ஆஸ்ரவம்)	-	நல்வினைகளும், தீவினைகளும் உயிரில் சுரத்தல்.
(6) செறிப்பு (சம்வரை)	-	நல்வினை, தீவினை சுரக்கும் வழியை அடைத்தல்.
(7) உதிர்ப்பு (நிர்ஜரை)	-	வினைகளைக் களைதல்.
(8) கட்டு (பந்தம்)	-	வினைகள் உயிருடன் கலப்பது.
(9) வீடு (மோட்சம்)	-	துறக்கநிலை அல்லது சுவர்க்கம்.

இவ்வொன்பது பொருள்களையும் அறிவது நற்காட்சி எனப்படும். இவைகளை ஐயப்பாடின்றி உணர்தல் நல்ஞானம் எனப்படும். காட்சி, ஞானம் இவைகளை மனத்துள் கொண்டு ஒழுகுவது நல்லொழுக்கம் எனப்படும். இம்மூன்றையும் மும்மணிகள் (திரி ரத்தினங்கள் அல்லது இரத்தினத் திரையம்) என்பர். வீடுபேற்றிற்கு இவை அவசியம்.

சமண சமயக் கொள்கைகளிற் சில

சமண சமயத் தத்துவ நூல்களில் உயிருக்கு அப்பாற்பட்ட தனிக் கடவுளைப் பற்றிக் கூறவில்லை. பந்தத்தினின்றும் விடுபட்டுத் துறக்கநிலை அடைந்த உயிரே கடவுள்.

உலகம் முதலும் முடிவும் இல்லாதது. உலகம் எவராலும் படைக்கப் படவில்லை. அது அணுத்திரளால் ஆனது. உயிர்கள் நல்வினை, தீவினை ஆகிய இருவகைப் பயன்களைத் துய்க்கும் இடங்களாகச் சுவர்க்கமும் நரகமும் உள்ளன.

இல்லறத்தில் உள்ளவர்கள் வீடுபேறு அடைய முடியாது. இல்லறத்தார் முற்றத் துறப்பதன் மூலம் வீடு பெறலாம். மக்களில் வீடுபேறு ஆண்களுக்கு மட்டுமே உண்டு. பெண்களுக்கு வீடுபேறு கிடையாது.[11]

மக்களுள் சுவர்க்கம் அடையும் பேறு இல்லாதவர்களும் உள. அவர்கள் வேக வைத்தும் வேகாத பயிறு போன்றவர்கள். அனைத்து உயிர்களும் உபதேசம் கேட்பதனாலும், நோன்பு மேற்கொள்ளுவதாலும் வீடுபேறு பெறுதல் கூடும்.

ஒருவனுக்குப் பிறர் செய்த தீங்கு அவன் முன்செய்த வினைப்பயன் என்றே கருதுதல் வேண்டும். தனக்குத் தீமை செய்தவர்களுக்கு அவன் தீங்கு செய்யக்கூடாது.

உடம்பின் உருவத்திற்கு ஏற்றாற்போல உயிரானது பெரிதும் சிறிதுமாக அமையும்.[12]

அறுபத்து மூவர்

சமண சமயத் தத்துவத்துள் உறுதியும் உயர்வும் உடைய மகா புருடர்கள் 63 பேர் கூறப்பட்டுள்ளனர். அவர்கள்

தீர்த்தங்கரர்	24
சக்கரவர்த்திகள்	12
பலதேவர்	9
வாசுதேவர்	9
பிரதிவாசுதேவர்	9



எனப்படுவர்.[13] சுவத்திகச் சின்னம் மனிதப் பிறப்பின் 4 கதிகளைக் குறிக்கிறது. தீர்த்தங்கரர் காதிவினைகள் நான்கையும் வென்றதனால் அடைந்த, கடையிலா காட்சி, ஞானம், வீரியம், இன்பம் ஆகிய நான்கையும் (அனந்தநான்மைகள்) குறிப்பதாக, திரு. விமலநாத சாஸ்திரி அவர்கள் கூறுவர். ஆதாரம் - சுவஸ்திகம் ஓர் விளக்கம்.

பிறவிச் சக்கரம்

சமணர்கள் தங்கள் வீடுகளிலும், மடங்களிலும், சத்திரங்களிலும் மேற்கண்ட பிறவிச் சக்கரத்தை வரைந்திருப்பர். இவற்றைச் 'சுவத்திகம்' என்பர்.

புண்ணிய பாவங்களைச் செய்து அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களைத் துய்ப்பதற்கு உயிர் நரககதி, விலங்குகதி, மக்கள்கதி, தேவகதி என்னும் நான்கு கதிகளில் பிறந்து இறந்து திரிந்து சுழல்வதை மேலே உள்ள சுவத்திகம் காட்டுகிறது. இணைப்பு இடைக்கோடுகள் உடலையும் உயிரையும் குறிக்கின்றன.

துறக்க நிலைக்கு உயிரை இட்டுச் செல்லும் நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் என்ற மும்மணிகளை மூன்று புள்ளிகள் உணர்த்துகின்றன.

பிறைக்கோடு சித்தருலக அமைப்பு, திருப்பி வைக்கப்பட்ட ஒருகுடை போன்றது என்பது ஆகமத்துணிபு, சித்த சிலாதலத்தைக் குறிக்கிறது.

பிறைக்கு மேலே உள்ள புள்ளி உயிர் பெறும் வீடுபேற்றைக் குறிக்கிறது.[14]

தெய்வங்கள்

சமணர் தீர்த்தங்கரர்களையும், இயக்கர், இயக்கிகளையும், சேத்திரபாலர், கணதரர், இலக்குமி, சரசுவதி, நவக்கிரகங்கள், இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் முதலிய திக்கு பாலர்களையும் வணங்கி வருகின்றனர்.[15] தீர்த்தங்கரர் வழிபாட்டைத் தவிரப் பிற வழிபாடுகள் பிற்காலத்தில் ஏற்பட்டவை.

சமணர் ஒழுக்கங்கள்

இருவகை ஒழுக்கங்கள்

சமணர் வாழ்க்கையை இல்லறம், துறவறம் என்று இரண்டு பிரிவாகப் பிரித்தனர். இவ்விரண்டினையும் முறையே சிராவக தர்மம், யதி தர்மம் என்று கூறுவர். இல்லறம் எனப்படும் சிராவக தர்மம் மனைவி, மக்கள், சுற்றத்தாருடன் வாழும் இல்வாழ்க்கையின்போது ஒழுகும்

ஒழுக்கம். யதி தர்மம் என்பது உலகைத் துறந்து வீடுபேற்றினைக் கருதித் தவம் செய்யும் முனிவரது ஒழுக்கமாகும்.

இல்லறத்தார் ஒழுக்கங்கள் பத்து[16]

சமண இல்லறத்தார் பத்து விரதங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. கொல்லாமை[17]
2. பொய்யாமை
3. கள்ளாமை
4. பிறர்மனை நயவாமை
5. பொருள் வரைதல்
6. கள் உண்ணாமை
7. ஊன் உண்ணாமை
8. தேன் உண்ணாமை
9. இரவு உண்ணாமை
10. அருகர், சித்தர், ஆச்சாரியர், உபாத்தியாயர், சாதுக்கள்[18] முதலியவர்களையும் பெரியவர்களையும் வழிபடல்.

இல்லறத்தார் நிலைகள் பதினொன்று

இந்நிலைகள் சாதாரண நிலையிலுள்ள இல்லறத்தார் படிப்படியாக உயர்ந்து துறவுக்கு ஏற்ற பக்குவ நிலையை அடைவதைக் காட்டும்.

1. சமண சமயத்தில் நம்பிக்கை கொண்டு, சமணக் கொள்கைகளை அறிந்து கொள்ளல்.
2. 5 அணுவிரதம், 3 குணவிரதம், 4 சிட்சாவிரதம் ஆகியவைகளைப் பின்பற்றல். தேன், கள், மாமிசம், பால்மரத்துக் காய்கள் ஆகியவைகளை உண்ணாதிருத்தல்.
3. நாள்தோறும் மூன்று அல்லது நான்கு முறை தியானம் செய்தல். இதைச் சாமாயிகம் என்பர்.
4. வாரத்திற்கு ஒருநாள் பட்டினி இருத்தல்.
5. பச்சைக் காய்கறிகளையும், பழுக்காத பழங்களையும் உண்ணாதிருத்தல். (பச்சைக் காய்கறிகளை வேக வைத்து உண்பர். அதிகமாகக் கனிந்த பழங்களையும் உண்ண மாட்டார்கள்.)

6. இரவு உண்ணாமை.
7. இல்லற வாழ்க்கையைத் துறத்தல்.
8. எவ்விதமான செயல்களிலும் ஈடுபடாதிருத்தல்.
9. பற்றை அடியோடு நீக்குதல்.
10. உள்ளத்திற்கு இதமல்லாத செய்திகட்குத் தம் அனுமதியைத் தராதிருத்தல். (இப்பத்து நிகழ்ச்சிகளை இல்லறத்தார் வீட்டில் செய்யலாம்.)
11. கோவணதாரியாய் முற்றும் துறந்த முனிவர்களோடு சேர்ந்து தவமியற்றல். (கடைசி இப்பதினோராம் நிலையில் இல்லறத்தார் வீட்டில் இருக்கக் கூடாது.)

இல்லறத்தார் அருகதேவர்க்குப் பூசை செய்ய வேண்டும்.[19]

பெரியோர்களையும், குருக்களையும் பக்தியுடன் வணங்க வேண்டும். அவர்கட்குத் தம்மால் இயன்ற தொண்டுகள் அனைத்தையும் தவறாமல் செய்ய வேண்டும்.[20]

நூல்களை வாசித்தல், கேட்டல், நினைத்தல், சுத்தமாக உச்சரித்தல், பிறர்க்கு உரைத்தல் ஆகிய செயல்களில் இல்லறத்தார் ஈடுபடவேண்டும்.[21]

அன்னதானம், ஔசததானம்,[22] அபயதானம்,[23] சாத்திர தானம்[24] முதலிய தானங்களைச் செய்ய வேண்டும்.

துறவிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய உணவு, நீர், பழம், கமண்டலம், மருந்து, உடை, ஆசனம் முதலிய 14 வகைப் பொருள்களை முன்கூட்டி வருகையைத் தெரிவிக்காமலும், விருப்பத்தைத் தெரிவிக்காமலும் வரும் துறவிகட்கு அளிக்கவேண்டும்.

எட்டுத் திக்குகளிலும் ஒரு வரையறை செய்து கொண்டு பயணம் செய்தல் வேண்டும்.[25] கடற்பயணம் கூடாது. பிறர்க்குத் தீங்கு நினைக்கவோ, செய்யவோ கூடாது.[26] ஆயுதங்கள் வைத்துக் கொள்ளக் கூடாது. போகப் பொருள்களில் குறிப்பிட்டவற்றைத் துய்ப்பதில்லை என்ற கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்.[27]

இல்லறத்தில் வாழும் பிரமச்சாரிகள் (ஆடவரும் பெண்டிரும்) கோரைப் பாயை மட்டும் பயன்படுத்துவர். தலையணை வைக்கக் கூடாது.

அவர்கள் உபயோகிக்கும் பாயைப் பிறர் உபயோகிக்க மாட்டார்கள். (துறவிகட்குக் கோரைப்பாயும் கிடையாது.)

துறவிகள் ஒழுக்கங்கள்

சமண சமயத்தில் துறவுக்கு மிகவும் உயரிய இடம் உண்டு. துறவிகள் மட்டுமே வீடுபேறு அடைய முடியும் என்பது சமணர் கொள்கை. இல்லறத்தார் கடமைகளுள் மிக முக்கியமானது துறவிகளைப் பேணி உபசரித்தல் ஆகும்.

பிறவியை நீக்கி வீடுபேறு பெறுவதை நோக்கமாகக் கொண்டு, உலகத்தைத் துறக்கும் சமண முனிவர்கள் தமது துறவற வாழ்க்கையில் மேற்கொண்டு ஒழுகவேண்டிய செயல்கள் 28 எனச் சமணர்கள் வகுத்துள்ளனர். இவைகளை மூலகுணங்கள் என்பர். அவை

மகாவிரதங்கள்	5
சமிதிகள்[28]	5
பொறி அடக்கம்	5
ஆவசியகம்[29]	6
ஒழுக்கங்கள்	7

என இருபத்தெட்டாக வகுக்கப்படும்.[30]

ஐந்து மகாவிரதங்கள்

இல்லறத்தார் மேற்கொள்ள வேண்டிய அணுவிரதம் ஐந்தையும் துறவியர் மேற்கொண்டால் அவை மகாவிரதங்கள் எனப்படும். அவை

1. அகிம்சை[31]
2. வாய்மை[32]
3. கள்ளாமை
4. துறவு
5. அவாவறுத்தல்

என்பனவாம்.

ஐந்து சமிதிகள்

1) *ஈர்யா சமிதி:* நடக்கும்போது மூன்று முழதூரம் முன் பார்த்துப் புழு, பூச்சி, ஈ, எறும்புகள் இருந்தால் அவற்றை மிதியாமல்

நடக்கவேண்டும். அவை இருப்பின் அவற்றைத் துன்பமின்றி அப்புறப்படுத்தக் கையில் மயிற்பீலி வைத்திருத்தல்.

2) *பாசா சமிதி:* நாவடக்கம் கொள்ளல், பழி, புகழ், கோபம், கடுமை நீக்கி எந்நிலையிலும் இன்சொல்லே பேசுதல்.

3) *ஏசனா சமிதி:* 46 வகையான குற்றங்கள் இல்லாத உணவை இரு கையாலும் வாய் பேசாது யாசித்துப் பெற்று நின்று அளவாக உண்ணல் (பெண் துறவிகள் அமர்ந்து உண்ணலாம்).

4) *ஆதான நிட்சேபனா சமிதி:* சமண சமய நூல், மயிற் பீலி, கமண்டலம் ஆகியவைகளை எடுக்கும்போதும் வைக்கும்போதும் சிற்றுயிர்கள் இறக்காவண்ணம் பார்த்துக் கொள்ளல்.

5) *உத்சர்க்க சமிதி:* மலம் மூர்த்திரம் கழிக்கும்போது ஊருக்கு அப்பால் மணற்பாங்கான இடம் சென்று அங்கு ஒருவரும் இல்லாதபோது கழித்தல்.

ஐம்பொறி அடக்கம்

மெய், வாய், க்ண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகள் புலன்கள் மேற் செல்லாமல் அடக்குதல்.

ஐம்பொறிகளின் வாயிலாகவே நல்வினை, தீவினைகள் உயிரைப் பற்றிப் பிணித்து அதனைப் பிறப்பு இறப்புக்களில் செலுத்துவதால் ஐம்பொறிகளைக் காக்க வேண்டியது துறவிகளின் கடமை ஆகிறது.

ஆறு ஆவசியகம்[33]

1) *சாமாயிகம்* - இன்பம் துன்பம், உயர்வு தாழ்வு, நன்மை தீமை ஆகியவைகளைச் சமமாக மதித்தல்.

2) *துதி* - தீர்த்தங்கரர்களையும், ஐம்பெருங் குரவர்களையும் துதித்தல்.

3) *வணக்கம்* - அருகர், தீர்த்தங்கரார், சித்தர், தவசிகள், தீட்சை கொடுத்த குருக்கள், பெரியோர்கள் ஆகியவர்களை மனம், வாக்கு, காயங்களால் வணங்குதல். (காலை, பகல், மாலை ஆகிய 3 சந்தி வேளைகளில் வணங்குவர்.)

4) *பிரதிகிரமணம்* - மனம், வாக்கு, காயங்களால் பாவத்திற்குக் காரணமானவைகள் சேராமல் காத்தல்.

5) *கழுவாய்* - குற்றம் ஏதாவது நேர்ந்தால் உணர்ந்து மனம் வருந்திக் குற்றங்களைக் கழுவுதல்.

6) *வித்சர்க்கம்* - தவம் செய்யும்போது வரும் துன்பம் கண்டு அஞ்சாமல் பொறுத்தல்.

ஏழு ஒழுக்கங்கள்[34]

1) தம் தலைமயிரைப் பறித்துத் தலையை மொட்டையாக்கல்[35]
2) ஆடையின்றி இருத்தல்[36]
3) நீராடாமை
4) தரையில் படுத்தல்
5) பல் தேய்க்காமை
6) நின்று உண்ணல்
7) ஒருவேளை உணவு உண்ணல்[37]

இல்லறத்தாரிடம் வந்து ஊருக்குள் வாய்திறந்து கேட்காமல் அவர்கள் இடும் ஆகாரத்தை இருகையிலும் ஏற்று உண்டு மக்கள் அதிகம் வாராத ஒதுக்குப்புறங்களில் உள்ள இயற்கைக் குகைத் தளங்களில் தம் சீடர்கட்கும், பொது மக்களுக்கும் உபதேசம் செய்து கொண்டு சமணத் துறவிகள் வாழ்வர்.

தீர்த்தங்கரர்கள்

தீர்த்தங்கரர் என்றால் 'உலக மக்கள் தங்களுடைய பிறவியாகிய கடலைக் கடந்து வீடுபேறு என்னும் கரை ஏறும் நெறிமுறைகளை விளக்கமாகக் காட்ட உதவும் பாலத்தைக் கட்டுகிறவர்கள்' என்பது பொருளாகும். இவர்கள் தம் முற்பிறவியில் எய்திய தீர்த்தங்கரர் நாம புண்ணிய கர்மத்தினாலும், உலக உயிர்களுக்கு அருளறத்தை இடைவிடாது எடுத்துரைக்க வேண்டும், நன்னெறிப்படுத்த வேண்டும் என்னும் உயர்ந்த உணர்வாலும் இம் மண்ணுலகில் தீர்த்தங்கரர்களாக அவதரித்தவர்கள். அவர்கள்

1. விருசபர் (ரிஷபர்)
2. அசிதநாதர்

13. விமலநாதர்
14. அநந்தநாதர்

3. சம்பவநாதர்	15. தருமநாதர்
4. அபிநந்தனர்	16. சாந்திநாதர்
5. சுமதிநாதர்	17. குந்துநாதர்
6. பதுமநாபர்	18. அரநாதர்
7. சுபார்சுவநாதர்	19. மல்லிநாதர்
8. சந்திரப்பிரபர்	20. முனிசுவர்த்தர்
9. புட்பதந்தர்	21. நமிநாதர்
10. சீதளநாதர்	22. நேமிநாதர்
11. சிரேயாம்சநாதர்	23. பார்சுவநாதர்
12. வாசுபூச்யர்	24. மகாவீரர்

என இருபத்துநான்கு பேர்.[38] முதல் தீர்த்தங்கரர் ஆன விருசபதேவரை 'ஆதிநாதர்' என்றும் இருபத்துநான்காம் தீர்த்தங்கரர் ஆன மகாவீரரை 'வர்த்தமானர்' என்றும் கூறுவர்.

இறந்த காலத்தில் தோன்றி அறம் விளக்கிய இவர்களைப் போல் எதிர்காலத்திலும் 24 தீர்த்தங்கரர்கள் தோன்றுவர் என்பது சமணர் நம்பிக்கை. 22ஆம் தீர்த்தங்கரராகிய நேமிநாதரின் அண்ணன் வாசுதேவன் என்பாரின் மகன் கண்ணபிரான் இனி உலகத்திலே தோன்றப் போகிற சமண தீர்த்தங்கரர்களில் முதல் தீர்த்தங்கரராகத் தோன்றிச் சமண சமயத்தைப் பரவச் செய்யப் போகிறார் என்பது சமணரின் நம்பிக்கை.

தீர்த்தங்கரர்கள் அனைவரும் தம் வாழ்க்கையில் ஐந்துவகைச் சிறப்புக்களைப் பெறுவர். அவை பஞ்ச கல்யாணம் எனப்படும். இங்குக் 'கல்யாணம்' என்பதற்குச் 'சிறப்பு' என்பது பொருள். இவை ஐந்து சமயங்களில் அமரர்கள் தீர்த்தங்கரர்களுக்குச் செய்யும் சிறப்புக்களாகும்.

தீர்த்தங்கரர்களால் இனி அற அமிர்தம் ஆறாகப் பெருகப் போகிறது. உலக உயிர்கள் உய்யப் போகின்றன என்பதைக் கூறுவது பஞ்ச கல்யாணம் என்பர். அவை

1. கர்ப்ப கல்யாணம்
2. சென்ம கல்யாணம்
3. தீட்சா கல்யாணம்
4. கேவலஞான கல்யாணம்
5. பரிநிர்வாண கல்யாணம்

என ஐந்து வகைப்படும்.[39] எல்லாத் தீர்த்தங்கரர்களுக்கும் பஞ்ச கல்யாணமும் இனிக் கூறப்போகின்ற அதிசயங்களும் பொதுவாகும்.

1) கர்ப்ப கல்யாணம்

தீர்த்தங்கரர்களைக் கருவிலுறுதல். தீர்த்தங்கரர்களைப் பெறும் சைனமாதா மற்ற உலகிற் பெண்கள் போன்று கருவுற்றதற்கு அடையாளமாகிய வயிறு பெருத்தல், முலைக்கண் கருத்தல், பசலை நிறமடைதல், மசக்கை, தளர்நடை ஆகியவை இன்றிக் காணப்படுவர். தீர்த்தங்கரர் 9 மாதமே கருவில் இருப்பர். அப்போது அமரர்கள் பூமாரி பொன்மாரி பொழிவர். கருவுறுவதற்குமுன், சைனமாதா 16 வகைக் கனவுகளைக் காண்பர்.

2) சென்ம கல்யாணம்

தீர்த்தங்கரர் குழந்தையாகப் பிறத்தல். மதி, சுருத, அவதி என்ற மூவகை ஞானத்துடன் பிறப்பர்.[40] குழந்தையை அமரர்கள் எடுத்துக் கொண்டு சென்று மேரு பர்வதத்தின் மீது அமரச்செய்து பாற்கடல் நீரால் அபிடேகம் செய்து அணிகலன்கள் பூட்டி அலங்கரித்துக் கொணர்வர்.

3) தீட்சா கல்யாணம்

தீர்த்தங்கரர்கள் இல்லறத்தை நீத்துத் துறவறத்தை மேற்கொள்ளப் பல்லக்கில் அமர்த்தித் தேவர்களும் மனிதர்களும் சுமந்து வனத்திற்குக் கொண்டு செல்வர். அங்குத் தீட்சை ஏற்பதன் அடையாளமாக மயிர் களையப்படும்.

4) கேவலஞான கல்யாணம்

தீட்சைமேற்கொண்டு கடுந்தவம் செய்யும் தீர்த்தங்கரருக்குக் கேவலஞானம் (வால் அறிவு) தோன்றும். அமரேந்திரன் கற்பனைக் கெட்டாத எழில்பொருந்திய 'சமவசரணம்' என்னும் அறநிலையம் அமைப்பான். அவர் உபதேசத்தை உலகு அனைத்தும் கேட்கும்.

5) பரிநிர்வாண கல்யாணம்

அறப்பயணம் மேற்கொண்டு தர்ம உபதேசம் செய்த தீர்த்தங்கரர் வீடுபேறு அடைந்து சித்தநிலை எய்துதல். உடல் கற்பூரம் போல் கரையும். அப்போது தேவர்கள் பூசை செய்வர்.

தீர்த்தங்கரர்கள் மற்றவர்களைப் போல் குழந்தையாக இருக்கும் போது தாய்ப்பால் அருந்துதல் இல்லை. மற்ற உணவு வகைகளையும் உட்கொள்ளுவது இல்லை. முகத்தில் மயிர் முளைப்பதில்லை. நகம் வளர்வதில்லை. அமரர்கள் அவர்கள் பராமரிப்பை மேற்கொள்வர்.

தீர்த்தங்கரர்கள் வாழ்வில் 34 அதிசயங்கள் தோன்றும். அவைகளில் 10 அதிசயங்கள் அவர்களிடம் இயல்பாகவே உள்ள அதிசயங்கள். கேவல ஞானம் தோன்றியவுடன் 10 அதிசயங்கள் வந்து தோன்றுகின்றன. இறுதியாகச் சமவசரணச் சிறப்பில் 14 அதிசயங்கள் தோன்றுகின்றன.[41] இயல்பாகவே உள்ள 10 அதிசயங்கள் வருமாறு:

1. வியர்வை இன்மை
2. மலசலம் இன்மை
3. இரத்தம் வெண்ணிறமாய் இருத்தல்
4. இனிய சொற்களையே எப்பொழுதும் பேசல்
5. கற்பனைக்கு எட்டாத பேரழகு
6. திருமேனியில் நறுமணம் கமழுதல்
7. உடலில் 1008 நல் இலக்கணங்கள் அமைதல்
8. இணையற்ற வலிமை
9. எத்தகைய ஆயுதங்களாலும் யாராலும் சேதிக்க முடியாத உடல் அமைப்பு
10. நாற்புறமும் ஒத்த அழகில் தோன்றுதல்[42]

கேவல ஞானம் தோன்றும்போது வரும் 10 அதிசயங்கள்:

1. நிழல் இன்மை
2. உணவின்மை
3. துன்பம் இன்மை
4. இமைத்தல் இன்மை
5. உயிர்க்கொலை இன்மை
6. இருக்கும் தேசத்தில் பஞ்சம் இன்மை
7. அவரைத் தியானித்தவுடன் எல்லா ஞானமும் வருதல்
8. நகம் மயிர் வளராமை
9. விண்ணகத்தே இயங்குதல்
10. திசை நான்கினும் நான்கு வடிவுடன் விளங்குதல்[43]

சமவசரணச் சிறப்பில் வந்து சேரும் 14 அதிசயங்கள்:

1. எல்லோரும் புரிந்து கொள்ளும் வண்ணம் அவரவர் மொழியில் பேசுதல்
2. மாறுபட்ட பருவங்களில் மலரும் மலர்கள் ஒருங்கே மலர்தல்
3. எல்லோரிடமும் நட்புரிமை கொண்டிருத்தல்
4. அவர்கள் இருக்கும் நாட்டில் கூன், குருடு முதலியவை நீங்கி நலம் பெறல்
5. அவர்கள் இருக்கும் இடம் பளிங்கு போல் திகழ்தல்
6. குளிர்ந்த மணமிக்க தென்றல் எப்போதும் வீசுதல்
7. வாயு குமாரன் தூசு நீக்கித் தூய்மை செய்தல்
8. மேக குமாரன் மணமும் குளிர்ச்சியும் மிக்க நீரைத் தெளித்தல்
9. தேவர்களும் மக்களும் மனம், மொழி, மெய்களால் துதித்தல்
10. தானியங்கள் குறைவின்றி நிறைய வளர்தல்
11. விண்ணும் திசைகளும் தூய்மையுடன் விளங்குதல்
12. எங்கும் எண்வகை மங்கலங்கள் நிறைதல்
13. அரியணை மேலுள்ள கமலத்தின்முன் 7000 மலர்களும் பின் 7000 மலர்களும் இருத்தல்
14. இரத்தினங்களால் ஆன சக்கரங்கள் திசை நான்கினும் அமைந்திருத்தல்[44]

இந்திரனால் ஆக்கப்பெற்ற 8 அற்புதங்கள் தீர்த்தங்கரரை வந்தடைகின்றன.[45]

1. பூம்பிண்டி[46]
2. முக்குடை [47]
3. வெண்கவரி [48]
4. ஒளிவட்டம்
5. மலர்மழை
6. துந்துபி
7. திவதொனி[49]
8. அரியணை

சமண சமயக் கொள்கைகளை அவ்வப்போது உலகத்தில் பரவச் செய்வதன் பொருட்டுத் தீர்த்தங்கரர்கள் அவ்வப்போது உலகில் தோன்றுகிறார்கள்.

இவர்கள் அனைவரும் உயர் அரசர் குடியில் தோன்றி இல்வாழ்வில் சிலகாலம் வாழ்ந்து பின் துறவு மேற்கொண்டு தீர்த்தங்கரர் ஆனவர்கள்.

முதல் 22 தீர்த்தங்கரர்கள் அதிக உயரம் உடையவர்களாகவும் அதிகக் காலம் வாழ்ந்தவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். பார்சுவ நாதரும், மகாவீரரும் வரலாற்றுக் காலத்திற்கு உட்பட்டவர்கள். பார்சுவ நாதர் கி.மு. 817 முதல் 717 வரை வாழ்ந்தவர். மகாவீரர் கி.மு. 599 முதல் 527 வரை வாழ்ந்தவர் என்பர்.

தீர்த்தங்கரர் உருவங்கள்

மூன்று திங்கள் மண்டலங்களை ஒன்றன்மேல் ஒன்றாக வைத்தாற் போன்று அமைந்துள்ள முக்குடைகளின்கீழ்ச் சிவந்த ஞாயிற்றினுடைய ஒளியைக் காட்டிலும் சிறந்து அசோக நிழற்கீழ்த் தியானத்தில் அமர்ந்தவண்ணம் தீர்த்தங்கரர் சிற்பம் அமைக்கப்படும். இதனைச் சிலப்பதிகாரம்

"திங்கள் மூன்றடுக்கிய திருமுக் குடைக்கீழ்
செங்கதிர் ஞாயிற்றுத் திகழ்ஒளி சிறந்து
கோதைதாழ் பிண்டிக் கொழுநிழல் இருந்த
ஆதியில் தோற்றத்து அறிவன்" [50]

என்று கூறும். நின்றநிலையில் உருவங்களை அமைப்பதும் உண்டு. உருவங்களைக் கற்களிலும், உலோகத்திலும் அமைப்பதுண்டு.

தீர்த்தங்கரர் சின்னங்கள்

இருபத்துநான்கு தீர்த்தங்கரர் உருவங்களும் ஏறக்குறைய ஒரே தன்மையாகக் காட்சியளிக்கும். தீர்த்தங்கரர் உருவங்கள் நின்ற நிலையிலோ அமர்ந்த நிலையிலோ அமைக்கப்பட்டிருக்கும். முக்குடையின்கீழ்ச் சாமரம் வீசும் சாமரேந்திரர் புடைசூழத் தீர்த்தங்கரர் நிற்பர் அல்லது அமர்ந்திருப்பர்.

ஒரே மாதிரிக் காட்சியளிக்கும் தீர்த்தங்கரர்களை யார் யார் என்று அறிந்து கொள்ள அவர் நிற்கும் அல்லது அமர்ந்திருக்கும் பீடத்தின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள சின்னங்கள் உதவுகிறது. 24 தீர்த்தங்கரர்களுக்கும் உரிய சின்னங்களைக் கீழே காணலாம்.[51]

1. எருது
2. யானை
3. குதிரை
4. குரங்கு
5. சக்கரவாகம்
6. தாமரை

7. சுவத்திகம்
8. இளம்பிறை
9. முதலை (மகரம்)
10. கற்பகமரம் அல்லது மலர்
11. காண்டாமிருகம்
12. எருமை
13. வராகம்
14. முள்ளம்பன்றி அல்லது பருந்து
15. வச்சிரதண்டம்
16. மான்
17. ஆடு
18. மீன்
19. கலசம்
20. ஆமை
21. நீலத்தாமரை
22. சங்கு
23. பாம்பு
24. சிங்கம்

இயக்கி, இயக்கர்

இயக்கி, இயக்கர் வழிபாடு

சமண சமயத்தில் உருவ வழிபாடு தோன்றி வளர்ந்தபின் தீர்த்தங்கரர்கட்குச் சேவை செய்யும் பல பரிவார தெய்வங்களும், அத் தெய்வத்தின் உருவங்களும் பல்வேறாகக் கூறப்பட்டுள்ளன. அவை சமணப் பள்ளிகளில் இடம்பெற்றுச் சமண சமய மக்களால் பெரிதும் விரும்பி வழிபடப்பட்டன.

தீர்த்தங்கரர் உருவங்கள் 'மூல நாயகர்' என்றழைக்கப்பட்டன. மூல நாயகராகிய தீர்த்தங்கரர்கட்குப் பரிவாரத் தெய்வங்களான இயக்கர் இயக்கியர் சாசன தெய்வங்கள் எனப்படுவர்.[52]

சாசன தெய்வங்களாக இயக்கர், இயக்கியர் மூலநாயகர்களான தீர்த்தங்கரர்கட்குப் பணிவிடை செய்பவர்கள் ஆவர்.[53]

தீர்த்தங்கரர்கட்குச் சாசன தெய்வம் என்னும் பணிமகளாக விளங்கிய சமணப் பெண் தெய்வம் 'யட்சி' என்றும், ஆண் தெய்வம் 'யட்சன்' என்று அழைக்கப்பட்டனர். தமிழில் இச்சொல் இயக்கி, இயக்கர் என்று குறிப்பிடப்பெறும். ஒவ்வொரு தீர்த்தங்கரர்கட்கும் ஓர் இயக்கியும், ஓர் இயக்கனும் இருப்பர். இவர்களைப் படைத்தவன் இந்திரன் ஆவான்.[54]

	இயக்கி	இயக்கர்
1.	சக்கரேசுவரி	கோமுகன்
2.	ரோகிணி	மகாஇயக்கன்
3.	பிரஞ்ஞப்தி	திரிமுகன்

4. வச்ரசிரிங்கலா	இயட்சேசுவரன்
5. புருசதத்தா	தும்புரு
6. மனோவேகா	குசுமன்
7. காளி	வரநந்தி
8. சுவாலாமாலினி	விசயன்
9. மகாகாளி	அசிதன்
10. மாநவி	பிரம்மன்
11. கௌரி	ஈசுவரன்
12. காந்தாரி	குமாரன்
13. வைரோடி	சண்முகன்
14. அனந்தமதி	பாதளன்
15. மாநசி	கின்னரன்
16. மகாமாநசி	கருடன்
17. சயா	கந்தர்வன்
18. விசயா	மகேந்திரன்
19. அபராசிதா	குபேரன்
20. பகுரூபிணி	புருசவரன்
21. சாமுண்டி	வித்யுத்பிரபன்
22. கூசுமாண்டினி	சர்வாணன்
23. பத்மாவதி	தரணேந்திரன்
24. சித்தாயிகா	மாதங்கன்

இவ் இயக்கி, இயக்கர்கள் திகம்பர சமணர்க்குரியவை. சுவேதாம்பரர் இவ் இயக்க இயக்கியர்களில் சிலரை வேறு பெயரிட்டழைப்பர். பெரும்பாலும் இயக்கர் - இயக்கிகள் கணவன் - மனைவி என்று கருதப்படுவர்.

வட இந்தியாவில் குசானர் காலத்திலும், குப்தர் காலத்திலும் முறையாக இயக்கி, இயக்கர் வழிபாடு வளரத் தொடங்கியது. சமண சமயத்தில் இருபத்திரண்டாம் தீர்த்தங்கரரான நேமிநாதருக்குரிய கூசுமாண்டினி என்னும் அம்பிகா இயக்கியும், இருபத்துமூன்றாம் தீர்த்தங்கரரான பார்சுவ நாதருக்குரிய பத்மாவதி இயக்கியும், முதல் தீர்த்தங்கரரான ஆதிநாதர்க்குரிய சக்கரேசுவரி இயக்கியும், 24ஆம்

தீர்த்தங்கரரான மகாவீரர்க்குரிய சித்தாயிகா இயக்கியும் பிறரும் படிப்படியாகத் தோன்றினர். கி.பி. 9ஆம் நூற்றாண்டளவில் இருபத்துநான்கு தீர்த்தங்கரர்கட்கும் இயக்கி, இயக்கர் உருவங்கள் முழுமையாக அமைக்கப்பட்டன.[55]

'இயக்கன்' என்ற சொல் புறநானூற்றுப் பாடலொன்றில் காணப்படுகிறது. இப்பெயர் பூதப்பாண்டியனின் நண்பர்களுள் ஒருவராக விளங்கிய ஒரு சிற்றரசனைக் குறிக்கிறது.[56] தெய்வம் என்ற பெயரில் குறிக்கப்பெறவில்லை. மீனாட்சிபுரத்திலுள்ள கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழிக் கல்வெட்டிலும், அழகர்மலையின் அதேகாலத்துக் கல்வெட்டிலும் முறையே இயக்கன், வியக்கன் என்ற தொடர்கள் காணப்படுகின்றன. பின்னிரண்டு பெயர்களும் சமண சமயத்தைச் சார்ந்தன என்பதில் ஐயமில்லை.[57] இவற்றிலிருந்து இயக்கன் பெயரை மக்கள் வைத்துக் கொண்ட விவரம் தெரிகிறது.

தமிழ் நாட்டில் இயக்கர் வழிபாட்டைக் காட்டிலும் இயக்கியர் வழிபாடே மிகவும் சிறந்து விளங்கியது. இதற்குக் காரணம் தமிழ்நாடு பெண் தெய்வ வழிபாட்டிற்குத் தொன்றுதொட்டு அளித்துவந்த சிறப்பும், பழந்தமிழ் இலக்கியக் காலத்திலிருந்தே இயக்கி வழிபாட்டின் ஒத்த கூறுகள் பெற்ற பெண் தெய்வங்கள் தமிழ்நாட்டில் இருப்பதும் ஆகும். சமணப் பெண் குழந்தைகள் பலருக்கும் இயக்கிகளின் பெயர்கள் வைக்கப்பட்டிருந்தன. பத்மாவதியக்கா, ஜக்கிசுந்தரி என்பன சில சமணப் பெண் துறவியர் பெயர்களாகும்.[58]

பழந்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தில் 'பூங்கண் இயக்கி' பற்றிய குறிப்பு வருகிறது.[59] இக் குறிப்பே தென்னிந்தியாவில் கிடைக்கும் இயக்கி வழிபாட்டைப் பற்றிய முதல் குறிப்பாகும். காலப்போக்கில் வளர்ந்த இயக்கி வழிபாட்டைத் தமிழ்நாட்டுச் சமண சமயமே தென்னிந்தியாவில் அறிமுகப் படுத்தியது எனலாம்.[60]

கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்க் கருநாடகப் பகுதியிலிரந்து தமிழ்நாட்டில் இரண்டாவதாகப் புகுந்த திகம்பர சமணத்தின் அலையும், தமிழக அரசர்கள் சமணர்களான கங்கர்களோடு கொண்டிருந்த நெருங்கிய தொடர்பும், பல்லவர் - முற்காலப் பண்டியர் காலத்தில் தோன்றிய பக்தி இயக்கமும் இயக்கி வழிபாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன.

24 தீர்த்தங்கரர்கட்கும் 24 இயக்கிகள் இருந்தாலும் எல்லா இயக்கிகளின் வழிபாடும் சிறப்பாக வளர்ச்சி பெறவில்லை. பத்மாவதி, சித்தாயிகா, கூசு மாண்டினி, சுவாலாமாலினி போன்ற சில இயக்கிகளின் வழிபாடே மிகவும் பெருகியது.

கங்க மரபு தோன்றுவதற்குக் காரணமாக இருந்த சிம்மநந்தி பத்மாவதி வழிபாட்டையும்,[61] பஞ்சபாண்டவ மலையில் வாழ்ந்த நாகநந்தி சித்தாயிகா வழிபாட்டையும்,[62] அகளங்கர் கூசுமாண்டினி வழிபாட்டையும்,[63] ஏலாச்சாரியார் சுவாலாமாலினி வழிபாட்டையும் சிறப்புடன் தோற்றுவித்து வளர்த்தனர்.[64]

சைவ-வைணவ சமயங்களின் பக்தி இயக்க அலைகளால் ஏற்கெனவே தமிழ்நாட்டில் காலூன்றிச் செழித்து வளர்ந்து வந்த சமண சமயத்தின் செல்வாக்குப் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஊர்கள்தோறும் சென்று திருப்பாடல்கள் பாடிப் பரவிப் பக்தி இயக்கத்தை வளர்த்தனர்.

இழந்த செல்வாக்கை மீண்டும் பெறச் சமணர்கள் பல உத்திகளைக் கையாண்டனர். தமிழ்நாட்டில் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து வாழ்ந்து வந்த தங்கள் குகைத் தளங்களில் உருவ வழிபாட்டை ஏற்படுத்தினர். அங்குச் சமண சமயத் தெய்வங்களைப் படைத்துத் திருக்கோயிலாக்கி அவற்றிற்கு நாள் வழிபாடும், சிறப்புப் பூசனையும் இயற்றச் செய்தனர்.[65]

கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு சைவ வைணவக் குடைவரைக் கோயில்களிலும், கட்டிடக் கோயில்களிலும் இடம்பெற்றுச் சிறப்புடன் வளரத் தொடங்கிய பெண் தெய்வ வழிபாட்டுக்குப் போட்டியாகத் தங்கள் சமயத்தில் ஏற்கெனவே தோன்றியிருந்த இயக்கி வழிபாட்டைச் சமணர்கள் தமிழக மக்களிடையே மேலும் அதிகமாகப் பரப்பினர்.

கொற்றவை, மகிசாசுரமர்த்தனி, துர்க்கை, சேட்டை, சத்தகன்னியர், சத்தகன்னியர், சத்த மாதர் போன்ற வைதிக சமயத்தார்க்குரிய பெண் தெய்வ வழிபாட்டுக்குப் போட்டியாகத் தங்கள் இயக்கிகளாக கூசுமாண்டினி (அம்பிகா), பத்மாவதி, சித்தாயிகா, சக்கரேசுவரி, சுவாலாமாலினி போன்றோர் வழிபாட்டைத் தமிழ்நாட்டில் சமணர் பரப்பினர். இயக்கி வழிபாடு 7,8 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் பரவத் தொடங்கியது.[66]

எளிய மக்கள் தீர்த்தங்கரர் போன்று அனைத்தையும் துறந்த பற்றற்ற நிலையை அடைந்தவர்களிடம் தங்களது விருப்பங்களையும், வேண்டுகோள்களையும் வெளியிட்டு அவைகளைப் பெற முடியாத நிலை இருந்தது. குறைகளைப் போக்க வேண்டிக்கொள்ளவும் முடியாமல் இருந்தது.

இக்குறையைப் போக்கி நினைத்ததைச் செய்து முடிக்கவும், வேண்டியதைக் கேட்டுப் பெறவும் முடியும் என்ற நம்பிக்கையை இப் பெண் தெய்வங்களான இயக்கியர் வழிபாடு அளித்தது. எனவே சமண சமயத்தார் தங்கள் சமய வளர்ச்சி கருதி இயக்கி வழிபாட்டை ஏற்றுக் கொண்டனர். இதனை அறிந்த தமிழ்நாட்டிலிருந்த சமணத் துறவியர் வைதிக சமயத்துப் பெண் தெய்வங்களோடு போட்டியிட்டுக் கொண்டு சமண சமயம் வளர இவ்வழிபாட்டைத் தீவிரமாகப் பரப்பினர்.[67]

திருத்தக்கதேவர் போன்ற சமண சமயப் பெரும் புலவர்கள் இயற்றிய சீவகசிந்தாமணி போன்ற சமயப் பெருங்காப்பியங்களில் இயக்கியின் ஆற்றலும், பெருமையும், அழகும், எதனையும் செய்யும் மந்திர வலிமையும், மந்திரத்தை ஓதினால் வேண்டியவற்றைச் செய்துதர வந்து நிற்கும் அவளது தன்மையும் எடுத்துரைக்கப்பட்டன.[68] சிலப்பதிகாரத்தில் காடுகாண் காதையில் வரும் வனசாரினி இவ்வகையான இயக்கியேயாவாள்.[69]

தீர்த்தங்கரர் உருவத்தின் கீழ்ப்பகுதியில் இடப்பக்கம் இயக்கியையும், வலப்பக்கம் இயக்கரையும் அமைக்கும் வழக்கம் இருந்தது. கி.பி. 8ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு இயக்கியர்க்கு மட்டும் சிறப்பளிக்கும் வகையில் தனித்த நிலையிலும் சிற்பங்கள் உருவாக்கப்பட்டன.[70]

கி.பி. 12,13ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்ச் சிவன் கோயில்களிலும், வைணவக் கோயிகளிலும் அம்மனுக்கும், நாச்சியார்க்கும் தனித்தனியே கோயில்கள் எடுக்கப் பெற்றன. 13,14ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் அம்மனுக்கு மதிப்பளிக்கும் வகையில் தமிழ்நாட்டில் சக்தி வழிபாடு பெருகியது. சைவ, வைணவ சமயத்தில் ஏற்பட்ட அம்மன் கோயில்களின் பெருக்கத்தால் இயக்கி வழிபாட்டின் செல்வாக்குத் தமிழகத்தில் படிப்படியாகக் குறையத் தொடங்கின.[71]

விசயநகர ஆட்சியிலும், நாயக்க மன்னர்கள் ஆட்சியிலும் ஒருசில இடங்களைத் தவிரப் பெரும்பாலும் வைதிக மதத்திற்கே முழுமையாக அரச ஆதரவு இருந்தது. அரசு ஆதரவு இல்லாத நிலையில் மக்கள்

படிப்படியாகச் சமண சமயத்திற்கு அளித்து வந்த ஆதரவு குறைந்தது. இதனால் இயக்கி வழிபாட்டின் செல்வாக்கு மேலும் குறையத் தொடங்கியது.

இறுதியில் தமிழக நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டோடு இயக்கி வழிபாடு இரண்டறக் கலந்தது. பொன்னியம்மன், அவ்வையாரம்மன், பகவதி, பேச்சி, ராக்காயி, இசக்கியம்மன் போன்ற பெண் தெய்வ வழிபாடுகளில் இயக்கி வழிபாட்டின் தன்மைகளையும் அதனோடு ஒத்த கூறுகளையும் காண முடிகிறது.[72]

குறிப்புகள்

1. மயிலை சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும், ப.1.
   சமணர் என்ற சொல் பிராகிருதத்தில் 'ச்ரமணர்' என்று ஒலிக்கப்படும். அப் பிராகிருதச் சொல்லுக்குத் துறவிகள் என்பது பொருள். சமணன் என்பது ஆணைக் குறிக்கும். பெண்பாற் சொல் சமணி என்பதாகும். நேர்காணலின்போது தஞ்சை, கரந்தை இராஜலட்சுமி அம்மையார் கூறியது, 14-07-1994.
2. தமிழகத்தில் பரவிய திகம்பர சமணத் துறவியருள் உயர்நிலை ஒழுக்கத்தை கைக்கொண்டிருந்த துறவியர் சிலர் நிர்வாணமான இருந்தனர். சமண சமயத்தாரின் தெய்வப் படிமங்களும் ஆடையின்றி இருந்தன. அதனால் அவற்றைப் பார்த்தோர் அம்மண சமயம் > 'அமண சமயம்' என்றனர். தமிழில் அகரமும் சகரமும் போலியாக வரும். அதியன் - சதியன்; உப்பு- சுப்பு என்பன காண்க. அதனாலும் சமண சமயம் அமண சமயம் என ஆகியிருக்கலாம்.
3. தீர்த்தங்கரர்கட்கு 'அருகன்' என்ற பெயரும் உண்டு. அருகனைத் தெய்வமாக உடையவர்கள் ஆருகதர் எனப்பட்டனர். (நேமிநாதம், எழுத்து 10)
4. 'நிர்க்கந்தர்' என்றால் பற்றற்றவர் என்பது பொருள். சமணர் எனின் பற்றற்றவர் என்பதைச் சுட்டுவதால் அவர்கள் சமணம் நிகண்ட சமயம் ஆயிற்று.
5. பொருளின்பல தன்மைகளுள் ஒன்றையோ சிலவற்றையோ ஏற்று அவற்றையே பொருளாக நம்புவது ஏகாந்தவாதம். பொருள்களின் சொல்லப்படும் தன்மை தவிர, சொல்லப்படாத தன்மைகளும் உள என்று நம்புவது அனேகாந்தவாதம்
6. அணுத்திரளின் கூட்டத்தால் உலகம் உண்டாகும் என்ற ஆரம்பவாதக் கொள்கையைச் சமணர் கொண்டிருப்பதால் அவர்கள் 'ஆரம்பர்' எனப்பட்டனர்.

7. பிண்டி என்றால் அசோக மரம், அதன்கீழ் இருக்கும் அருக தேவனை அவர்கள் வணங்கியதால் சமணர் 'பிண்டியர்' எனப்பட்டனர்.
8. நேர்காணலின்போது தஞ்சை, கரந்தை, இராஜலட்சுமி அம்மையார் கூறியது 14-07-1994.
9. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்,* ப.7.
   தானகவாசி சமணம் சுவேதாம்பர சமணத்திலிருந்து பிரிந்தது.
10. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா. நூல்,* பக். 8-15;
   மேரு மந்திர புராணம், வைஜயந்தன் முத்திச் சருக்கம், 68.
11. சமண சமயத்தில் பெண்பால் துறவிகளும் உளர். அவர்கள் துறவிருப்பது மறுமையில் ஆடவராகப் பிறப்பதற்கேயாகும். - மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா. நூல்,* ப. 187.
12. 'பெரியதன் ஆவி பெரிது' என்பது சமணர் கொள்கை. யானைக்குப் பெரிய உயிரும், எறும்பிற்குச் சிறிய உயிரும் உண்டு. குடத்துள் உள்ள விளக்கு குடத்துள் மட்டும் ஒளிதரும். அறையிலுள்ள விளக்கு அறை முழுதும் வெளிச்சம் தரும் என்பதை உவமையாகக் காட்டுவர். - மயிலை சீனிவேங்கடசாமி, *மு.கா.நூல்,* பக்.9-10.
13. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்,* ப.94.
   சைவப் பன்னிரு திருமுறைகளில் ஒன்றான பெரியபுராணத்தில் 63 நாயன்மார் வரலாறு கூறப்படுவதுடன் இதனையும் ஒப்பிட வாய்ப்புள்ளது.
14. *மேருமந்தர புராணம்,* வைஜயந்தன் முத்திச் சருக்கம் 71.
15. தீர்த்தங்கரர்களைத் தவிரப் பிற தெய்வங்கள் இந்து மதத்தில் காணப்பெறும் தெய்வங்களுடன் ஒப்பிட்டு அறிதற்குரியவை.
16. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா. நூல்,* பக். 28-29.
17. மனோவாக்குக் காயத்தால் பிற உயிர்கட்குத் துன்பம் செய்யவும், செய்விக்கவும், உடன்படவும் கூடாது என்னும் கொல்லாமையை முதன்மையான ஒழுக்கமாகச் சமணர் கொள்வர். 'ஒன்றாக நல்லது கொல்லாமை' (குறள்)
18. இவர்களில் அருகரும் சித்தரும் கடவுள் தன்மை அடைந்தவர். எஞ்சியவர்கள் கடவுள் தன்மை அடையும் வழியில் இருப்பவர்கள்.
19. இதனைத் 'தேவபூசை' என்பர்.
20. இதனைக் 'குருபாஸ்தி' என்பர்.
21. இதனைச் 'சுவாத்தியாயம்' என்பர்.
22. ஔசதம் - மருந்து.
23. இதற்கு அஞ்சினான் புகலிடம், அடைக்கலம், ரக்ஷை, அபயம், ஆசிரயம் என்று பெயர்.
24. சாத்திரம் - கல்வி.
25. இதனைத் 'திசை வரைதல்' என்பர்.
26. இதனைத் 'தண்டம் வரைதல்' என்பர்.

27. இதனைப் 'போகம் வரைதல்' என்பர்.
28. சமிதி- வாழ்க்கையில் அன்றாடம் கைக்கொள்ளவேண்டிய நெறிமுறைகள்.
29. ஆவசியகம்- துறவு வாழ்க்கையில் முழுவதும் உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள்.
30. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா. நூல்*, பக். 17-26.
31. அகிம்சையே சமணர்களின் அடிப்படை ஒழுக்கமாகும். 'அகிம்சா பரமோ தர்ம:' என்பர் சமணர்.
32. வாய்மை என்பது பொய்யாமை. அது பிற உயிர்கட்குத் தீங்கு பயக்கும் சொற்களைக் கூறாதொழிதல். கொல்லாமையையும் அடிப்படையாகக் கொண்டது.
33. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்*, பக். 22-23.
34. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்*, பக். 23.
35. இதனை 'உலோச்சு' என்பர். உலோச்சனார் என்ற பெயரில் சங்கப் புலவர் ஒருவர் இருந்துள்ளார். அவர் பாடியனவாக நற்றிணையில் இருபது பாடல்கள், குறுந்தொகையில் நான்கு பாடல்கள், அகநானூற்றில் எட்டுப் பாடல்கள், புறநானூற்றில் மூன்று பாடல்கள் என மொத்தம் 35 பாடல்கள் உள்ளன. இவருடைய பெயர் கொண்டு இவரைச் சமணர் என்பர்.
36. எல்லாத் துறவிகளுமே ஆடையின்றி இருப்பதில்லை. தவம் மேற்பட்ட உயர்ந்த சான்றோருட் சிலரே இவ்வாறு ஆடையின்றி இருப்பர்.
37. இதனை 'ஏகபுக்தம்' என்பர். சிலர் ஒருநாள், இருநாள், மூன்று நாள் உண்ணாவிரதம் இருப்பர். இன்னும் சிலர் எட்டு நாட்களுக்கு ஒருமுறை உணவு உண்பர். அவர்களை 'அட்டோபவாசிகள்' என்பர். பட்டினிக் குரத்தியார் என்பது சமணசமயப் பெண்பால் துறவி ஒருவர் பெயர்.
38. சிம்ம சந்திர ஜைன், *சமண நெறியும் வழிபாட்டு முறையும்*, பக். 45-46; மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்*, பக். 3-4.
39. *தீர்த்தங்கரர் அறிமுகம்*, ஆசாரியர் குந்தகுந்தர் கல்வி நிறுவனம், ப. 10.
40. *மதிஞானம்* - இயற்கை அறிவு; *சுருதஞானம்* - சகல சாத்திர உணர்ச்சி; *அவதிஞானம்* - முற்காலத்திலும், தூரத்திலும் நடந்ததை அறியும் அறிவு.
41. *தீர்த்தங்கரர் அறிமுகம்*, ப.11.
42. இவைகளைச் 'சுபாவ அதிசயம்' என்பர்.
43. இவைகளைக் 'கர்மக்ஷய அதிசயம்' என்பர்.
44. இவற்றைத் 'தெய்வீக அதிசயம்' என்பர். 34 அதிசயங்களும் *ஸ்ரீ புராணத்தில்* கூறப்பட்டுள்ளன (பக். 503-504)
45. இவை 'அட்டமகா பிராதிகாரியம்' எனப்படும்.
46. பிண்டி - அசோகு

47. முக்குடை - சந்திர ஆதித்யம், சகல பாசனம்., நித்தியவிநோதம் என்னும் முக்குடை, தீர்த்தங்கரர் மூன்று உலகிற்கும் தலைவர் என்ற பொருளில் தலைக்குமேல் முக்குடைச்சின்னம் அளிக்கப்பட்டது.
48. வெண்கவரி - சாமரம். வலப்பக்கம் சௌதமேந்திரனும் இடப்பாக்கம் ஈசானேந்திரனும் நின்று கவரி வீசுவர்.
49. இது திவ்யத் தொனி எனப்படும். பகவானிடம் தோன்றும் திருமொழி; இதை விளக்கிக் கூறும் ஆற்றல் பெற்ற நல்வினையாளர் கணதரர் ஆவார்.
50. *சிலப்பதிகாரம்* 11-1-4.
சில உருவங்களில் மேலே சாமரம் வீசுவோருடனும் கீழே இயக்கர், இயக்கியரை அமைப்பதும் உண்டு.
51. ஏ. ஏகாம்பரநாதன், *கல்வெட்டில் சமணம்*, ப. 60.
52. வெ. வேதாசலம், *இயக்கி வழிபாடு*, ப. 36.
53. ஏ. ஏகாம்பரநாதன், *மு.கா.நூல்*, ப.100.
54. **Ramendra Nath Nandi, *Religious Institutions and Cults in the Deccan*, p. 147.**
55. **R.S. Gupta, *Iconography of the Hindus, Buddhists and Jains*, pp. 175-176.**
56. *புறநானூறு* 71.
57. ARE **245 of 1964; Iravatham Mahadevan, *Corpus of the Tamil-Brahmi Inscriptions* No. 34.**
58. ***Mysore Archaeological Report*, 1926, p.42.**
59. *சிலப்பதிகாரம்* 2: 15:116-117; பாண்டிய நாட்டிலும் இயக்கி குறிக்கப்படுகிறது 2:11:111 உரை காண்க.
60. **P.B. Desai, Jainism in South India, p. 13.**
61. **Rice, *Mysore Gazetteer*, Vol. I, p. 309.**
62. **P.B. Desai, *op.cit.*, p. 40.**
63. **E.C. VIII NR 35; Es II intr. p. 84.**
64. **P.B. Desai, op.cit., p. 47.**
65. வெ. வேதாசலம், *மு.கா.நூல்*, ப. 46.
66. **Ramendra Nath Nandi, op.cit., p. 149.**
67. **Ibid., p. 47.**
68. *சீவக சிந்தாமணி* 1570, 1600, 1658.
69. *சிலப்பதிகாரம்* 2:11:198.
70. **ARE 19 of 1890.**
71. வெ. வேதாசலம், *மு.கா.நூல்*, பக். 53-54.
72. வெ. வேதாசலம், *மு.கா.நூல்*, ப. 100.

3

கொங்குநாட்டில் சமணம் பரவுதல்

கொங்கு நாட்டுக்குச் சமண சமயம் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் சமண சமயத் தலைவர் பத்திரபாகு முனிவர் (கி.மு. 327-297), மௌரியப் பேரரசன் சந்திரகுப்தன் (கி.மு. 322-298) ஆகியோர் காலத்தில் கரு நாடக மாநிலம் சிரவணபௌகொளா வழியாகப் பரவியிருக்க வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர்.[1] கொங்கு நாட்டிற்கு வந்த சமணம் பின் தொண்டை நாடு, சோழநாடு, பாண்டியநாடு ஆகிய பகுதிகளிலும் பரவியது என்பதும் சிலர் கருத்தாகும்.[2]

பத்திரபாகு முனிவர் சிரவணபௌகொளா வருதல்

தென்னகச் சமணத்தின் தந்தை என்று பலராலும் போற்றப்படுபவர் பத்திரபாகு முனிவர்.[3] வர்த்தமான மகாவீரர் (கி.மு. 599-527) தம் 72ஆம் வயதில் நிர்வாணகதி அடைந்தபின் எட்டாவது சமண சமயத் தலைவராகவும், இறுதிச் சுருதகேவலியாகவும் விளங்கியவர் பத்திரபாகு முனிவர். [4]

சோமசர்மன் என்னும் அந்தண அர்ச்சகருக்கு மகனாகத் தோன்றிய பத்திரபாகு அக்ஷ சிராவகசுவாமி என்னும் ஆசிரியரிடம் சமண சமயக் கோட்பாடுகளைக் கற்று, இலக்கண இலக்கியக் கல்வியிலும் தேர்ந்து சமணத் துறவியாகத் தீட்சை பெற்றார். பின் சமண சமயத் தலைவரானார். கடுந்தவம் புரிந்து அளவற்ற பேரறிவையும், முக்காலத்தை உணரும் ஆற்றலையும் பெற்றார்.[5]

உச்சையினியில் வாழ்ந்த பத்திரபாகு பாடலிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு மகத நாட்டை ஆட்சிபுரிந்து வந்த மௌரிய வம்சத்தைத் தோற்றுவித்த முதல் மௌரிய மன்னன் சந்திரகுப்தனுக்குக் குருவாகவும் விளங்கினார்.[6]

ஒருநாள் இரவு சந்திரகுப்தன் பதினாறு கனவுகள் கண்டான். பதினாறாவது கனவில் பன்னிருதலை நாகப்பாம்பைக் கண்டான். அடுத்த

நாள் அரசவைக்கு வந்த தன்குரு பத்திரபாகுவிடம் தான் கண்ட கனவுகளை விவரித்தான்.[7]

அதைக் கேட்ட பத்திரபாகு மகத நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் பேராபத்துகளும், பஞ்சமும் வரும் என்றுரைத்தார். அதைக் கேள்விப்பட்ட சந்திரகுப்தன் பத்திரபாகுவிடம் தீட்சை பெற்றுத் துறவியானான். பின்னர்ப் பத்திரபாகுவும், சமண சங்கத்தைச் சேர்ந்த 12000 சமணத் துறவிகளும் விந்திய மலைக்கு அப்பால் 'தட்சிணபதம்' என்று அக்காலத்து வழங்கிய தென்னிந்தியாவை நோக்கிப் புறப்பட்டனர். சந்திரகுப்தனும் அவர்களுடன் சேர்ந்து தென்னிந்தியா வந்தான்.[8]

அவ்வாறு வந்தவர்கள் மிகுந்த வளமுடையதும், மக்கள் தொகைப் பெருக்கம் உள்ளதும், பொன்னும், மணியும், தானியமும், கால்நடைச் செல்வங்களும் மிகுந்த பகுதியுமான 'காடவபுரம்' என்னும் பகுதியை அடைந்தனர்.[9]

அங்கு வந்தவுடன் தனக்கு இறுதிநாள் வருவதை உணர்ந்த பத்திரபாகு விசாக முனிவருக்கு உபதேசம் செய்து அவரைத் தலைவராக்கித் தொடர்ந்து தென்திசை நோக்கிப் பயணம் செய்து புன்னாட தேசத்திலும், சோழநாடு, பாண்டியநாடு உள்ளிட்ட தமிழ்நாட்டிலும் சமண சமயப் பிரச்சாரம் செய்யுமாறு அனுப்பி வைத்துத் தான் சல்லேகனை விரதமிருந்து உயிர்விட எண்ணினார்.[10]

சந்திரகுப்த மௌரியன் மட்டும் வயோதிகக் குருவிற்குப் பணிவிடை செய்யவும், இறுதிச் சடங்குகள் செய்யவும் பத்திரபாகுவுடன் காடவபுரத்திலேயே தங்கியிருக்க அனுமதி பெற்றார்.

சிக்கபெட்டா என வழங்கும் சிறியமலையில் உள்ள ஒரு குகையில் பத்திரபாகு சல்லேகனை விரதமிருந்து நிர்வாண கதி அடைந்தார். பன்னிரண்டு ஆண்டுகள் அங்கேயே வாழ்ந்து குருவின் திருவடிகளை வணங்கிப் பின் சந்திரகுப்தனும் பத்திரபாகு போலவே சல்லேகனை விரதமிருந்து அச் சிறிய மலையிலேயே உயிர் துறந்தார்.[11]

அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற விசாக முனிவரைத் தலைவராகக் கொண்ட சமண சங்கத்தார் கொங்கு நாட்டை அடைந்து, பின் தமிழ்நாட்டின் மற்றப் பகுதிகளுக்கும் சென்றனர். சிலர் மகதநாட்டில் வளம் ஏற்பட்டதைக் கேள்விப்பட்டுத் திரும்பிச் சென்றனர்.[12]

கொங்கு நாட்டிலும், தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலும் சமண சமயம் பரவக் காடவபுரமே காரணமாக இருந்தது. காடவபுரத்தில் சிறிய மலைக்கும், பெரியமலை எனப்படும் விந்தியகிரிக்கும் இடைப்பட்ட பகுதி அங்குள்ள குளத்தின் பெயரால் சிரவணபௌகொளா என்று பெயர் பெற்றது.[13]

தென்னகத்தில் சமணம் பரவவும், வளரவும் காரணமாக இருந்த சிரவணபௌகொளாவுடன் தமிழ்நாட்டுச் சமணர்கள் பிற்காலம்வரை நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். தமிழகச் சமணர்கள் தஞ்சாவூர், கும்பகோணம், மன்னார்கோயில், தச்சூர், காஞ்சிபுரம் ஆகிய ஊர்களிலிருந்து சென்று சிரவண பௌகொளாவில் பல திருப்பணிகள் செய்து கொடை அளித்துள்ளனர். கிரந்த எழுத்துக்கள் கலந்த தமிழ்க் கல்வெட்டுகளும், தமிழ்க் கல்வெட்டுகளும் அங்குள்ளன.[14]

தமிழ்நாட்டில் இன்று ஒரு திகம்பரசமண மடமாகத் திகழும் விழுப்புரம் மாவட்டம், மேல்சித்தாமூர் ஜினகாஞ்சி மடத்திற்கும் சிரவண பௌகொளாவிற்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன.[15]

தமிழகச் சமணர்களிடம் சமண சமயக் கல்வி பெறச் சிரவணபௌ கொளா செல்லும் வழக்கமுள்ளது. 'பரதேச யாத்திரை' எனவும் கூறுவர். என்ற சடங்கு இந்துக்களின் திருமணத்தில் நடைபெறும் காசி யாத்திரைச் சடங்கு போன்றது எனலாம்.[16] இதனைப் பரதேசயாத்திரை என்றும் கூறுவர்.

சிவரணபௌகொளாவில் சான்றுகள்

சிரவணபௌகொளாவிற்குப் பத்திரபாகு, சந்திரகுப்தன் ஆகியோர் வந்ததற்கும், அங்கு அவர்கள் தங்கிச் சல்லேகனை விரதமிருந்து உயிர் நீத்ததற்கும், விசாக முனிவர் அங்கிருந்து தமிழ்நாடு வந்தமைக்கும் அவர்களின் சமகாலத்துக்குரிய கல்வெட்டுச் சான்றுகளோ இலக்கியச் சான்றுகளோ எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால் பிற்காலத்துச் சான்றுகள் சில சமணப் பெரியார்களான பத்திரபாகு, சந்திரகுப்தன் ஆகியோர் சிரவணபௌகொளா வருகை புரிந்த நிகழ்ச்சிகள் உண்மை என்று நம்பும் வகையில் அங்கு அமைந்துள்ளன.

1. சிக்கபெட்டா எனப்படும் சிறியமலை 'சந்திரகிரி' என அழைக்கப்படுகிறது. அப்பெயர் சந்திரகுப்தன் பெயரால் ஏற்பட்டது என்பர்.[17]

2. சந்திரகிரியில் உள்ள ஒரு குகை 'பத்திரபாகு குகை' எனக் கூறப்படுகிறது. அங்குப் பத்திரபாகுவின் திருவடிகள் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. அங்குதான் பத்திரபாகு சல்லேகனை விரதமிருந்து உயிர் நீத்தார் என்பர். அதைக் குறிக்கும் பிற்காலக் கல்வெட்டுகளும் உள்ளன.[18]

3. சந்திரகிரி மலையில் 'சந்திரகுப்த பசதி' என்ற சமணப்பள்ளி உள்ளது. அது சந்திரகுப்தன் உயிர்நீத்த இடத்தில் கட்டப்பட்ட நினைவுப்பள்ளி ஆகும்.[19]

4. பத்திரபாகு, சந்திரகுப்தன் ஆகியோர் மகத நாட்டிலிருந்து சிரவணபெளகொளா வருகை புரிந்த வரலாற்று நிகழ்ச்சிகள் 90 கற்சிற்பங்களாகத் தொடர்ந்து வெட்டப்பட்டுள்ளன.[20]

5. சந்திரகிரியில் உள்ள பார்சுவநாத பசதியின் வலப்புறப் பாறையில் பிரபசந்திர முனிவர் என்பவர் சல்லேகனை விரத மிருந்து உயிர் நீத்ததைக் குறிக்கும் பழங்கன்னடக் கல்வெட்டின் முற்பகுதியில் பத்திரபாகு முனிவர் சிரவணபெளகொளா வந்த செய்தி விவரமாகக் கூறப்பட்டுள்ளது.[21] அங்குள்ள வேறு சில பிற்காலக் கல்வெட்டுகளும் மேற்கண்ட நிகழ்ச்சியைச் சுட்டிக் கூறுகின்றன. பல இடங்களில் பத்திரபாகு, சந்திரகுப்தன் பெயர்கள் இணைந்து காணப்படுகின்றன. [22]

6. அரிசேனரின் 'பிருகத்கதாகோசம்', யதி விருசபரின் 'திலோத பண்ணத்தி', இரத்தினநந்தியின் 'பத்திரபாகு சரிதம்', சித்தானந்தகவியின் 'முனிவம்சாப்யுதம்', தேவ சந்திராவின் 'இராஜாவளி சரிதம்' போன்ற பல பிற்கால இலக்கியங்களில் பத்திரபாகு, சந்திரகுப்தன் ஆகியோரின் சிரவணபெளகொளா வருகை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.[23]

மேற்கண்டவை அனைத்தும் பிற்காலச் சான்றுகளே ஆயினும் அவ்விரு சமணப் பெரியார்களின் சிரவணபெளகொளா வருகையைச் சுட்டப் போதுமான ஆதாரங்களாக உள்ளன என்றே வரலாற்றுப் பேராசிரியர்கள் எண்ணுகின்றனர்.[24]

கொடுமணல் தொல்பொருளும் இலங்கைக் கல்வெட்டும்

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் நொய்யல் ஆற்றின் வடகரையில் கொடுமணல் என்னும் ஊர் உள்ளது. பதிற்றுப்பத்தில் கொடுமணம் என்று புகழப்பட்ட ஊர். அங்குத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கல்வெட்டுத் துறையினர் நான்கு பருவங்களில் அகழாய்வு நடத்திப் பல அரிய தொல்பொருள்களை வெளிக்கொணர்த்துள்ளனர்.

அங்கு அகழாய்வு செய்யப்பட்ட பெருங்கற்படைப் புதைகுழி ஒன்றில் கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த பானை ஓடு ஒன்று கிடைத்துள்ளது.[25] அதில் 'விஸாகி' என்ற புதிய முறையில் எழுதப்பட்டுள்ளது. கி எழுத்தைக் கொண்டு அதனை விஸாகா எனப் படிப்பதற்கும் வாய்ப்புள்ளது.[26]

தமிழ்நாட்டைவிட இலங்கையில் பிராமி எழுத்துப் பொறிப்புகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. அங்கு விசாகன் என்னும் தமிழ் வணிகன் பௌத்த முனிவர்கட்குக் குகையும் படிகளும் அமைத்துக் கொடுத்ததாக இரண்டு கல்வெட்டுகள் கூறுகின்றன. இக்கல்வெட்டும் கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்ததே.[27]

கொங்கு நாட்டில் கி.மு. முதல் நூற்றாண்டில் விஸாகி - விஸாகா என்ற பெயர் கிடைத்திருப்பதும், இலங்கையில் அதே நூற்றாண்டில் ஒரு தமிழ் வணிகன் பெயர் 'விசாகன்' என உள்ளதும் ஆய்வுக்குரியவை. விசாக முனிவர் பெயர் கொங்கு நாட்டில் ஏற்படுத்திய தாக்கத்தை இதன் மூலம் அறியலாம்.

விசாக நட்சத்திரத்தில் பிறந்தவன் விசாகி, விசாகா, விசாகன் எனப் பெயர் பெறும் வாய்ப்புள்ளது. இருப்பினும் இப்பெயரமைப்பு பாலி, பிராகிருத மொழியின் தாக்கம் என்பதை மறுப்பதற்கில்லை.

சங்க கால மோரியர்

விசாக முனிவருடன் கொங்கு நாட்டுக்கும் தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் சென்று மலைக்குகைகளில் தங்கித் தவம் இயற்றிய சமண முனிவர்களில் பெரும்பாலோர் மௌரியர் ஆட்சிபுரிந்த மகதநாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

சங்க இலக்கியத்தில் சில இடங்களில் மோரியர். தமிழகம் வந்த செய்தி குறிக்கப்படுகிறது. புதியவர்களான மோரியர்கள் மொழிபெயர்

தேயத்தைச் சேர்ந்த பிறநாட்டு வடுகருடனும், துளுநாட்டுக் கோசருடனும் தமிழ்நாடு வந்தனர். வடுகரும், கோசரும் மோரியரின் தூசிப்படையாக வந்துள்ளனர். அவர்களின் வருகையால் பாறைகள் அறுக்கப்பட்டுப் புதிய வழிகள் உருவாயின. மிகுதியான தொகை கொண்ட அவர்கள் தேர்களில் வந்தனர்.[28]

வரலாற்றாசிரியர்கள் சங்க கால மோரியர் வருகை சந்திர குப்தன் அல்லது அவன் மகன் பிந்துசாரன் ஆகியோரின் படையெடுப்பைக் குறிப்பதாக இருக்கலாம் என்று கருதுவர்.[29]

புறநானூற்றின் பழைய உரைகாரர் மோரியர் தேர்ச் சக்கரம் இயங்குதற்குக் குறைக்கப்பட்ட மலை 'வெள்ளிமலை' என்பார். கொங்கு நாட்டின் மேற்கு எல்லையாகக் குறிக்கப்பட்ட மலை வெள்ளிமலை,[30] வெள்ளிப் பொருப்பு,[31] வெள்ளைமலை,[32] வெள்ளிக்குன்று[33] என்றே பல ஆவணங்களில் அழைக்கப்பட்டுள்ளது.

சமணரின் ஸ்ரீபுராணத்தில் மோரியர் தமிழகம் வருகையை ஒத்த வரலாறு மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.[34] அசோகன் பாறைச் சாசனங்களில் சேரர், சோழர், பாண்டியர், அதியமான் ஆகியோர் குறிக்கப்படுகின்றனர்.[35]

இவைகளையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்பொழுது மோரியர் வருகையைச் சமணர்களின் வருகையைக் குறிப்பதாகவும் கொள்ள வாய்ப்புள்ளது.

தென்னகச் சமணத்தின் தொன்மை

பத்திரபாகு முனிவர் சீடர்களோடு சிரவணபௌகொளா வந்ததும், விசாக முனிவர் கொங்கு நாடு வழியாகத் தங்கள் சமயம் பரப்ப வந்ததும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்.

ஆனால் அவர்களின் தென்னகம் வருகைக்கு முன்னரே தென்னிந்தியாவில் தமிழ்நாடு உள்ளிட்ட பல பகுதிகளிலும், இலங்கையிலும் சமண சமயம் பரவியிருந்தது என்பதற்குப் பல காரணங்கள் காட்டப்படுகின்றன. அவற்றுள் சில ஊகங்களாக அமைபவை; சில மறுக்க இயலாத காரணங்களாக அமைந்துள்ளன.

1. பத்திரபாகுவும், சந்திரகுப்தனும் சிரவணபெளகொளாப் பகுதிக்கு வருவதற்குக் காரணமே அங்குச் சமணர்கள் அப்போது வாழ்ந்ததே காரணம்.[36]

2. வர்த்தமான மகாவீரர் (கி.மு. 599-527) கலிங்க நாட்டுக்கும், அதன் தெற்கே அருகில் உள்ள ஆந்திரப்பகுதிக்கும் சமயப் பிரச்சாரத்தின் பொருட்டு வந்துள்ளார். சந்திரசூடாமணி என்னும் நூல் இதனைக் குறிக்கிறது.[37]

3. முதல் தீர்த்தங்கரர் ரிஷபதேவர் யாத்திரையில் பல தென்னக இளவரசர்கள் கலந்து கொண்டு பயணம் செய்தனர். செளராட்டிரத்தில் உள்ள பாலிடானாவில் அவர்கள் விடை பெற்றனர்.[38]

4. இராமர் தென்னகம் வந்தபோது சமண முனிவர்களைச் சந்தித்தார்.[39]

5. 'படிமையோன்' என்ற சொல் தொல்காப்பியப் பாயிரத்தில் வருதல் கொண்டும், உயிர்வகைகளின் அறுவகைப் பகுப்புக் கொண்டும் தொல்காப்பியத்தில் சமணக் கருத்து உள்ளது என்பர்.[40]

6. அகத்தியர் தென்திசை வந்தபோது துவாரகை சென்று கண்ணன் வழிவந்த அரசர் பதினெட்டுப் பேரையும், பதினெண்குடி வேளிரையும், அருவாளரையும் அழைத்துக் கொண்டுவந்து காட்டை அழித்து நாடாக்கிக் குடியேற்றினார் என்று நச்சினார்க்கினியர் தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரையில் குறித்துள்ளார்.[41] கண்ணன் சமண சமயத்தின் 22ஆம் தீர்த்தங்கரராகிய நேமிநாதரின் சிற்றப்பன் மகன், சமண சமயம் சார்ந்தவர் என்பது சமணர் கருத்தாகும்.[42] அருவாளரையும் சமணர் என்பர்.[43]

மேற்கண்ட செய்திகளைக் கூறும் சில நூல்கள் காலம் நிர்ணயம் செய்யப் பெறாதவை. சில பிற்கால நூல்கள். அவை செவிவழிச் செய்திகளையோ, வழிவழியாக வந்த புனைகதைகளையோ வைத்துக் கூறியிருக்கலாம். அவை வரலாற்றுச் சான்றுகள் ஆகா.

ஆனால் வேறு சில மறுக்க இயலாத காரணங்களும் உள்ளன:

1. பத்திரபாகு முனிவரும், சந்திரகுப்தனும் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் வருகை புரிந்ததாகக் கூறப்படும் சிரவண பெளகொளாவில் முதல்

சமணக் கல்வெட்டே கி.பி. 7ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் வெட்டப்பட்டது.[44] அக்காலத்துக்கு முற்பட்ட சமணச் சின்னங்களோ, கல்வெட்டுக்களோ சிரவணபெளகொளாவில் எதுவுமில்லை.

ஆனால் தமிழகத்தில் கொங்குநாடு உள்ளிட்ட பல நாடுகளில் கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணக் குகைக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.[45] தமிழ்நாட்டில் சமணர்கள் மிகவும் செல்வாக்குடன் வாழ்ந்துள்ளனர். அதற்கும் ஓரிரு நூற்றாண்டுகள் முன்னராவது சமணம் தமிழ்நாட்டில் பரவியிருக்க வேண்டும். எனவே சிரவணபெளகொளாவில் சமணம் பரவுமுன் தமிழ்நாட்டிலும் குறிப்பாகக் கொங்கு நாட்டிலும் சமணம் பரவியிருந்தது என்பது தெரிகிறது.

2. இலங்கை வரலாறு கூறும் மகாவம்சத்தில் பாண்டுகாயபன் (கி.மு. 377-307) என்னும் இலங்கையரசன் அனுராதபுரத்தில் சமண முனிவர்களுக்காகப் பள்ளியும், வீடுகளும் கட்ட ஆணையிட்டான் என்று கூறப்படுகிறது.[46] சமண முனிவர்கள் பெயர் நிகண்டகிரி, நிகண்ட ஜோதிய என்றும், சமணப் பள்ளியின் பெயர் நிகண்ட கும்பண்ட என்றும் கூறப்படுகிறது.

3. தீபவம்சம் என்னும் இலங்கை வரலாற்று நூலிலும் இச்செய்தி கூறப்படுகிறது. நிகண்ட சாதுக்களுக்குப் பள்ளி கட்டிய செய்தியும் கூறப்படுகிறது.[47]

நீண்ட கடற்பயணம் செய்யக்கூடாது என்பது சமணர் கொள்கை. அதனால் தமிழ்நாடு மூலமாகவே இலங்கைக்குச் சமணம் சென்றிருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர்.[48]

ஒத்த நிகழ்ச்சி

மகத நாட்டில் பஞ்சம் காரணமாக மக்கள் நாட்டைவிட்டு வெளியேறித் தென்னிந்தியா வந்து தங்கிப் பஞ்சம் நீங்கியவுடன் மீண்டும் சமணர்கள் பலர் தம் தாயகம் திரும்பினர்.

தமிழ்நாட்டில் இச் செய்தியை நினைவூட்டும் வகையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி சுட்டிக் கூறப்படுகின்றது. அதன்மூலம் மகதநாட்டுச் சமணர்கள் குடிபெயர்ந்த நிகழ்ச்சி தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிந்திருந்தது என எண்ணலாம்.

நாலடியார் வரலாறு

வடநாட்டில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தின் காரணமாக 8000 சமண முனிவர்கள் பாண்டி நாட்டை அடைந்தனர்.[49] பாண்டிய மன்னன் அவர்களை ஆதரித்து உபசரித்தான். சமண முனிவர்கள் தம் நாட்டில் மழை பெய்து வளம் ஏற்பட்டவுடன் மீண்டும் தம் நாடு செல்ல விரும்பினர். பாண்டிய மன்னனுக்குச் சமண முனிவர்களை அனுப்ப மனமில்லை.

ஒருநாள் இரவு 8000 சமணர்களும் ஆளுக்கொரு பாடலை எழுதி வைத்துவிட்டு அரசனிடம் சொல்லாமல் புறப்பட்டனர்.

காலையில் சமண முனிவர்களைக் காணாது திகைத்த அரசன் அவர்கள் பாடல் எழுதி வைத்த ஓலைகளை ஆற்றில் எறிய ஆணையிட்டான். நீரை எதிர்த்துச் சென்ற 400 ஓலைகளைப் பதுமனார் 'நாலடியார்' என்ற பெயரில் தொகுத்தார்.[50]

புன்னாட நாடு

பத்திரபாகுவின் சீடரான விசாக முனிவர் சமணம் பரப்பிய இடங்களில் புன்னாட நாடு என்பது ஒன்று. புன்னாட நாடு எது என வரலாற்று ஆசிரியர்கள் சரியான விளக்கம் தரவில்லை.

புன்னாட நாட்டைப் 'பொன்னாட நாடு' என்று கொண்டு கொங்கு 24 நாடுகளில் ஒன்றான பொன்கலூர் நாட்டைப் புன்னாட நாடு என்பர்.[51] பொன்கலூர் நாடு பொன்னாடு என்று குறிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டு அளவுகள்கூடப் 'பொன்னாடு நாழி', 'பொன்னாடு கால்' என அழைக்கப்பட்டன.[52]

ஆனால் சமணர்கள் சென்ற பகுதி 'புன்னாடு' எனக் கூறப்பட்டுள்ளதே யன்றிப் 'பொன்னாடு' என்றழைக்கப்பெறவில்லை. சமணர்களில் 'புன்னாட சங்கம்' என ஒரு பிரிவு உண்டு.[53] சிவமாறன் என்னும் கங்க அரசன் தன்னைப் புன்னாட நாட்டின் மன்னன் என்று கூறிக் கொள்ளுகிறான்.[54]

'புன்னாடு 6000' என்றும், புன்னாடு கங்கநாட்டைச் சேர்ந்தது என்றும் கூறப்படுகிறது.[55] சில கல்வெட்டுகளில் கொங்குநாடு, புன்னாடு இரண்டும் வெவ்வேறு நாடுகள் எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.[56] எனவே புன்னாடு எனப்படும் பொன்கலூர் நாடு புன்னாடாக இருக்க

இயலாது. பொன்கலூர் நாடு கங்கநாட்டிலிருந்து நெடுந்தூரம் தள்ளிக் கொங்கு நாட்டின் தென் எல்லையில் உள்ளது.

சத்தியமங்கலம் அருகே நல்லூரில் கிடைத்த கோரவிகோதையின் வட்டெழுத்துக் கல்வெட்டில் 'புந்நாடு' என்ற நாட்டுப் பெயர் சமணப் பள்ளியுடன் இணைத்துப் பேசப்படுகிறது.[57]

எனவே புன்னாடு கங்கநாட்டின் தென் எல்லையில், கொங்கு நாட்டு எல்லையருகே இருக்க வேண்டும்.

கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கு முன்பே சமணம் கொங்கு நாட்டிலும், தமிழ்நாட்டிலும் பரவியிருந்தது. விசாக முனிவரும் 3ஆம் நூற்றாண்டில் சமணம் பரப்ப வந்தார். அவர் பெயரும், வரலாறும் தமிழகத்திலும் கொங்கு நாட்டுப் பகுதியிலும் மக்களுக்குத் தெரிந்த நிகழ்ச்சியாக இருந்தது என்பது தெரிகிறது.

சமணம் செழித்தல்

தவப்பள்ளிகள்

கி.மு. 3ஆம் நூற்றாண்டில் கருநாடகப் பகுதியிலிருந்து அதன் அண்டை நாடான கொங்கு நாட்டில் சமண சமயம் பரவியது. சிரவணபௌகொளாவில் நிர்வாணகதி அடைந்த பத்திரபாகு முனிவரின் சீடராகிய விசாகாச்சாரியாருடன் கொங்கு நாட்டுக்கு வந்த சமண முனிவர்களும், அவர்களுக்குப் பின் வந்த சமண முனிவர்களும் பல குன்றுகளில் உறைந்தனர்.[58] ஊருக்குப் புறம்பாய் இருந்த இயற்கைக் குகைத் தளங்களில் இருக்கைகளை அமைத்துக் கொண்டு அச் சமயப் பெரியார்கள் வாழ்ந்தனர்.

இத்தகைய மலைகளில் சமணப் பெரியார்களின் நினைவாக அரசர்களும், அவர்களின் உயர் அலுவலர்களும், பொதுமக்களும் அமைத்துக் கொடுத்த கல் படுக்கைகளைக் காணலாம்.[59] அவைகளில் சிலவற்றில் யார் யாருக்காக அப்படுக்கைகளை எவர் அமைத்தார்கள் என்ற விவரங்கள் பழந்தமிழ்க் கல்வெட்டுகளில் வெட்டப்பட்டிருக்கும்.[60]

இத்தகைய தவப்பள்ளிகளில் வாழ்ந்த சமணப் பெரியார்கள் மக்களுக்கும், அவர்களுக்குக் கீழிருந்த மாணாக்கர்களுக்கும், துறவிகளுக்கும் அறம் உரைத்து வாழ்ந்திருக்கிறார்கள். சமணப்

பெரியார்களில் ஆண், பெண் இருபாலாரும் இருந்தனர். ஆண்பாலார், குரவர், குரவடிகள் என்றும், பெண்பாலார் குரத்தி, குரத்தியார் என்றும் அழைக்கப்பட்டனர்.[61]

இத் தவப்பள்ளிகளில் பின்னாளில் சமணப் பெரியார்களிடம் அன்பு கொண்ட பலரும் செய்வித்த தீர்த்தங்கரர் உருவங்களைக் காணலாம். அவைகள் 'தரிசன பிம்பங்கள்' எனப்பட்டன. அவைகட்குச் செய்யப்பட்ட வழிபாடுகள், அளிக்கப்பட்ட கொடைகள், நடைபெற்ற விழாக்கள் ஆகியவைகளை இங்குள்ள கல்வெட்டுகள் மூலம் அறிகின்றோம். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து சமணப் பெருமக்கள் அங்கு வந்து வழிபட்ட விவரமும் அக் கல்வெட்டுகளால் பெறப்படுகிறது.

பொது மக்களுக்கும் இத் தவப்பள்ளிகளில் வாழ்ந்த சமண சமயப் பெரியார்கட்கும் அதிகமான தொடர்பு இருந்ததையும், இவர்கள் வாழ்ந்த பள்ளிகட்கு மக்கள் பலர் நாடி வந்தார்கள் என்பதையும் அறிகிறோம்.

கோயில்கள் ஏற்படல்

காலம் செல்லச் செல்ல ஊர்ப்புறங்களில் மக்கள் சமண சமய நெறியைப் பின்பற்றத் தொடங்கினர். மக்கள் வணங்க ஊர்ப்புறங்களில் பாறைகளிலும், தனியாகவும் சமண சமயத் தீர்த்தங்கரர் உருவங்கள் செய்விக்கப்பட்டன. இயக்கர், இயக்கியர் உருவங்களும் ஏற்பட்டன. விழாக் காலங்களில் திருவீதியில் உலாவரச் செப்புப் படிமங்களும் உருவாயின. அச் சிற்பங்களுக்குக் காலம் செல்லச் செல்லக் கட்டுமானக் கோயில்களும் கட்டப்பட்டன. சமணச் சிற்பங்கள் பல செதுக்கப்பட்டன. பிற்காலத்தில் சமணக் கோயில்கள் விரிவுபடுத்தப்பட்டன. வழிபாடும் விழாக்களும் பெருகின.

சமணத் திருவுருவங்கள்

பொதுவாக அமர்ந்த நிலையிலுள்ள புத்தர் சிற்பங்களும், யோக நிலையிலுள்ள சமணத் தீர்த்தங்கரர் திருவுருவங்களும் ஒத்த அமைப்புகள் சிலவற்றைக் கொண்டவைகளாக இருப்பதால் அவைகள் எந்தச் சமயத்தைச் சார்ந்தவை என்று பொதுமக்கள் எளிதில் அறிய முடிவதில்லை. படித்தவர்கள் பலருக்கும் இந்த ஐயப்பாடு உண்டு.

திகம்பர சமண சமய தீர்த்தங்கரர் சிற்பங்களில் ஆடை இடம் பெறுவதில்லை. ஆனால் புத்தர் சிற்பங்களில் சங்காதி என்னும் ஆடை

இடது தோள் வழியாகச் செல்லுவதைக் காணலாம். தீர்த்தங்கரர் உருவங்களில் தலைமுடி அமைப்பு இருக்காது. புத்தர் சிற்பங்களில் தலைமுடி வட்ட வடிவாகக் காணப்படும். புத்தர் சிற்பங்களில் தலையின் நடுப்பகுதியில் ஞானத்தைக் குறிக்கும் சுவாலை (நெருப்பு) போன்ற அமைப்பு இடம்பெறும். தீர்த்தங்கரர் உருவங்களில் இத்தகைய அமைப்புக் காணப்படுவதில்லை. புத்தர் உருவங்கள் உபதேச முத்திரையில் இருக்கும். தீர்த்தங்கரர் சிற்பங்கள் அவ்வாறு இருப்பதில்லை. தீர்த்தங்கரர்களுக்குரிய பீடத்தில் அவர்களுக்குரிய சின்ன உருவங்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.[62]

மூன்று உலகங்களுக்கும் தலைவர் என்பதை அறிவிக்கும் சந்திராதித்யம், சகல பாசனம், நித்திய விநோதம் என்னும் முக்குடை தீர்த்தங்கரர்கள் தலைக்கு மேல் இருக்கும்.

'மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை'

'முத்தொடு மணிதயங்கும் முக்குடை'

'முழுமதி புரையும் முக்குடை'

என்றெல்லாம் முக்குடை புகழப் பெறுகிறது.

தீர்த்தங்கரரின் இருபுறமும் சாமரேந்திரர் சாமரம் வீசுவர்.[64] அவர்களுக்குக் கீழே தீர்த்தங்கரர்கட்குரிய இயக்கர் இயக்கி உருவங்களைப் பொறிப்பதும் உண்டு.

சாமரேந்திரர், இயக்கர், இயக்கியர் ஆடை, அணிகலன்களோடு காணப்படுவர். தீர்த்தங்கரர்க்கு ஆடை, ஆபரணம் எதுவும் இருக்காது.[65] பீடம் சிம்மாசனமாகக் காட்டப்பட்டிருக்கும். அதனை

'சிங்கம் சுமந்துயர்ந்த ஆசனம்'

'அரிமருவிய மருவணை'

என இலக்கியம் புகழும்.[66] தலையின் பின்னர் ஒளிவட்டம் காட்டப் பெற்றிருக்கும். அருகில் அல்லது மேல்பகுதியில் பிண்டி என்னும் அசோகு மரவடிவம் காட்டப்படுவதும் உண்டு.

'போதார் நறும் பிண்டி'

'அணிநிழல் அசோகு'

'தண்டளிர்ப் பூம் பிண்டி'

என அசோகு புகழப்பெறுகிறது.[67]

தீர்த்தங்கரர் உருவங்கள் பெரும்பாலும் யோகநிலையில் அமர்ந்த நிலையில் அல்லது நின்றநிலையில் கைகளைத் தொங்கவிட்டு இருக்கும்.

சமணம் பரவக் காரணம்

கொங்கு நாடெங்கும் சமண சமயம் பரவியிருந்தது மட்டுமல்ல நிலைபெற்ற செல்வாக்குப் பெற்றுச் செழித்து வளர்ந்துமிருந்தது. சமண சமயம் கொங்கு நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வேரூன்றித் தழைத்துச் செழித்திருந்ததை மலைக்குகைகளும், கல்வெட்டுகளும், செப்பேடுகளும், நாடெங்கும் அழிந்தும் அழியாமலும் இருக்கின்ற சமணக் கோயில்களும், காடுகளிலும் மேடுகளிலும் ஆங்காங்கே காணப்படுகின்ற சமண சமயத் தீர்த்தங்கரர் உருவச்சிலைகளும் சான்று பகர்கின்றன.

பிறப்பினால் உயர்வு தாழ்வு காணும் குறுகிய மனப்பான்மை சமண சமயத்தில் இல்லை. எக்குலத்தவராயினும் சமயக் கொள்கைகளை உணர்ந்து பின்பற்றுபவர்களைச் சமண சமயத்தார் போற்றினர். சமணர்களின் 'அருங்கலச் செப்பு' என்னும் நூல்

'பறையன் மகன்எனினும் காட்சி யுடையான்
இறைவன் எனஉணரற் பாற்று'

என்று கூறுகிறது.[68] 'பிறப்பொக்கும்' என்று பாடிய குறளின்படிப் பிறப்பால் சாதி வேறுபாடு காட்டாத தமிழ்நாட்டில் சமண சமயம் அன்று எளிதில் பரவியது.

உணவு, அடைக்கலம், மருந்து, கல்வி முதலிய நால்வகைத் தானங்களைச் செய்வதைச் சமணர்கள் தங்கள் பேரறமாகக் கொண்டிருந்தனர். இந்த நான்கினையும் அன்னதானம், அபயதானம், ஔடததானம், சாத்திர தானம் என்று கூறுவர். சமணர்கள் உணவு இல்லாத ஏழை மக்களுக்கு உணவு கொடுத்துப் பசி நோயைப் போக்குவதைத் தம் அறமாகக் கொண்டிருந்தனர். அச்சங்கொண்டு அடைக்கலம் என்று புகல் அடைந்தவர்களுக்கு அஞ்சினான் புகலிடங்களை அமைத்தனர்.[69] சமணப் பெரியார்கள் மருத்துவம் பயின்று நோயாளிகட்கு மருந்து கொடுத்து நோயைத் தீர்த்து வந்தனர். தம் பள்ளிகளிலேயே ஊர்ச் சிறுவர்கட்குக் கல்வி கற்பித்தனர்.[70] இத்தகு செயல்களால் சமண சமயத்திற்குக் கொங்கு நாட்டில் ஆதரவு பெருகியது.

சமணம் செழித்துப் பரவி வளர்ந்ததற்கு மற்றொரு காரணம் அவர்கள் மேற்கொண்ட தாய்மொழிப் பிரச்சாரமும் ஒரு காரணமாக அமைந்தது. சமணர்கள் எந்தெந்த நாடுகட்குப் போனார்களோ அந்தந்த நாடுகளில் வழங்குகிற தாய்மொழியைக் கற்றுப் பேசினர். நூல்களை எழுதினர், கல்வெட்டுகளைப் பொறித்தனர்.

சமணம் செழித்ததற்கு மற்றொரு காரணம் சமணத் துறவியர் ஆவர். அவர்கள் ஊர் ஊராய்ச் சென்று தம் சமயக் கொள்கைகளைப் போதிப்பதை மிகச் சிறந்த கடமையாகக் கொண்டிருந்தனர். கொங்கு நாட்டில் பல சமணத் துறவியர் வாழ்ந்தனர்.

இவ்விதமாகப் பல்வேறு காணங்களால் கொங்கு நாட்டில் சமண சமயம் செழித்து வளர்ந்தது.

வணிகர்கள் ஆதரவு

சமணர்கள் வணிகர்களைப் போற்றினர். வணிகர்களும் சமண சமயப் புரவலர்களாக விளங்கினர். சமண சமயத்தை வணிக மதம் என்றே கூறுவர். தீர்த்தங்கரர்கள் சிலர் மழைக் காலங்களில் வணிகர் இல்லங்களில் தங்கியிருந்தனர். வணிகர்கள் குழுக்கள் செல்லும் பெருவழிகளில் சமணப் பெரியார்கள் பயணம் செய்தமையால் பண்டைய சமணச் சின்னங்கள் பெரும்பாலும் பண்டையப் பெருவழிகளின் அருகிலேயே உள்ளன. அவ்வழிகளில் பயணம் செய்த வணிகர்களும் சமணர்கட்குக் கொடைகள் பலவற்றை வழங்கினர்.

தமிழிக் கல்வெட்டுக்களின் சமணப் பெரியார்கட்குக் கொடை கொடுத்தவர்களாகப் பொன்வாணிகன், அறுவை வாணிகன், கொழு வாணிகன், உப்பு வாணிகன், இலை வாணிகன், பணித வாணிகன் ஆகியோர் குறிப்பிடப் பெறுகின்றனர்.[71] நிகமம் என்பது சமணர்கட்கு ஆதரவளித்த ஒரு வணிகக் குழுவின் பெயர். பொள்ளாச்சி அருகில் உள்ள நெகமம் என்ற ஊர்ப்பெயர் அக்குழுவால் ஏற்பட்டதாகும்.[72] சிலவிடங்களில் நிகமம்-நியமம் எனப்பட்டது. கொடுமணல் அகழாய்வு எழுத்துப் பொறிப்புகளில் 'நிகம' என்ற சொல் பொறிக்கப்பட்ட ஓடு கிடைத்துள்ளது. திங்களூர்க் கல்வெட்டில் அறத்துளான் முத்தன் பொன்னனான மாணிக்கச் செட்டியும்,[73] நல்லூரில் வணிகர்களின் காவல் படையினரான அத்திகோசத்தாரும் கொடை அளித்த விவரத்தைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

அசர்கள் ஆதரவு

கொங்கு நாட்டில் ஆட்சிபுரிந்த பல அரச மரபினரும் சமய வேறுபாடு இன்றிச் சமண சமயத்திற்கு ஆதரவளித்தனர்.

சங்க காலத்தில் அடுத்துக் கி.பி. 250 முதல் கி.பி. 406 வரை கொங்கு நாட்டை ஆட்சி புரிந்தவர்கள் இரட்டர்கள் என்னும் இராட்டிர கூடர்கள் ஆவர். அவர்கள் சமண சமயம் சார்ந்தவர்கள். இரட்டர் மரபில் ஏழாவது கடைசி அரசரான திருவிக்கிரமன் சமண சமயத்தை விட்டுச் சைவ சமயத்தைத் தழுவினார்.[74]

இரட்டர்களை அடுத்துக் கங்கர்கள் கொங்கு நாட்டில் ஆட்சிக்கு வந்தனர். சமண சமயத்தைப் பரப்புவதற்கென்றே கங்க அரச மரபு தோன்றியது. கங்கப் பேரூரில் சிம்மநந்தி என்ற சமணப் பெரியார் ஆதரவில்தான் மாதவ கொங்கணிவர்மன் கங்க மரபைத் தோற்றுவித்தான். கங்கர்களின் தலைநகராகிய தலைக்காட்டுப் பகுதி கொங்கு நாட்டுக்கு மிக அண்மையிலிருந்தது. மிக எளிமையாக வடகொங்கு நாட்டைப் பிடித்த கங்கர்கள் தாராபுரம் வரை தம் ஆட்சியைப் பரப்பினர்.[75]

கொங்கு நாட்டில் ஆட்சிபுரிந்த கங்கர்கள் இங்கு சமண சமயம் வளரப் பல பணிகளைச் செய்தனர். தொடக்க காலத்திலிருந்தே சமண சமய ஆச்சாரியர்களைத் தம் குலகுருக்களாகக் கொண்டிருந்த கங்க அரசர்கள் அவர்கள் சொற்படி சமணப்பள்ளிகள் பலவற்றைக் கட்டிப் பல தானதர்மங்களையும் செய்தனர்.[76] அவர்கள் செயலால் கொங்கு நாட்டில் ஏற்கெனவே பரவியிருந்த சமண சமயம் மேலும் செழித்தோங்கியது.

சங்க காலச் சேர அரசர்களில் ஒருபிரிவினர் கரூர் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். அவர்கள் சமண சமயத்தின் மீதும், சமணப் பெரியார்கள் மீதும் கொண்டிருந்த பற்றை ஆறுநாட்டார்மலைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[77] அவர்கள் காலத்திய பொது மக்கள் பலரும் சமண சமயம் செழிக்கப் பல பணிகளைச் செய்தனர். பிற்காலச் சேர மன்னன் கோ ரவிகோதை காலத்தில் சமண சமயத்திற்கு அளிக்கப்பட்ட ஆதரவை நல்லூர்க் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[78]

பாண்டிய மன்னர்களும் கொங்கு நாட்டுச் சமணம் வளரப் பல பணிகள் செய்தனர். ஐவர்மலையிலும், விசயமங்கலத்திலும் வரகுண பாண்டியன், வீரபாண்டியன் கல்வெட்டுகள் சமணக் குறிப்போடு காணப்படுகின்றன.[79]

திங்களூர், ஆலத்தூர், விசயமங்கலம் கல்வெட்டுகள் கொங்குச் சோழர்களின் சமணத் தொடர்பை விளக்குகின்றன.[80] சோழர் காலத்தில் பல சமணக் கோயில்களில் கட்டப்பட்டன. பல விழாக்கள் எடுக்கப்பட்டுச் சமணக் கோயில்களில் மிகவும் சிறப்புடன் விளங்கின.

ஆலத்தூரிலும், திங்களூரிலும் போசள மன்னன் வீரவல்லாளன் கல்வெட்டுகள் உள்ளன.[81] இசுலாமியப் படையெடுப்பால் சேதமான பல சைவக் கோயில்களைத் திருப்பணி செய்த வீரவல்லாளன் சமண சமயத்திற்கும் சிறப்பான முறையில் ஆதரவளித்துள்ளான்.

விசயநகர மன்னர்கள் காலத்தில் சமணக் கல்வெட்டுகள் விசய மங்கலத்திலும் பூந்துறையிலும் உள்ளன.[82] விசயநகர மன்னர் காலத்துக்குப் பின் சமண சமயத்திற்கு ஆதரவான கல்வெட்டுகள் பெரும்பாலும் கிடைக்கவில்லை.

தேவார மூவரும் சமணர்களும்

7-9 ஆம் நூற்றாண்டுகளில் பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்துச் சமணம், பௌத்தம் ஆகிய சமணங்களை எதிர்த்துச் சைவ சமயப் பணிபுரிந்த தேவாரம் பாடிய மூவர் முதலிகளான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் கொங்கு நாட்டுக்கு வந்து ஏழு தலங்களைப் பாடினர்.

தேவாரப் பதிகங்களில்

'உடுக்கை இன்றி ஊர்நடுவே திரிவார்'

'கையில் உண்ணும் கையர்'

'நின்று உண்ணும் கள்ளர்'

'ஊத்தைவாய் அறிவில் சிந்தை ஆரம்பர் குண்டர்'

'மாசு மெய்யர்'

'தலை பறிக்கும் சமண் கையர்'

என்ற தொடர்களைக் காணுகிறோம்.[83] தமிழர் வாழ்க்கை நடைமுறையில் பழக்கமில்லாத

'ஆடை இல்லாமல் இருத்தல்'

'கையில் உணவைப் பெறுதல்'

'பெற்ற உணவை நின்றுண்ணல்'

'பல் துலக்காமை'

'குளிக்காமை'

'தலைமயிரைப் பறித்தல்'

போன்ற செயல்கள் புதுமையாய்த் தோன்றின. இவை உயர்ந்த நிலையடைந்த சில துறவியர் செயல்கள். இவை வெளிப்படையான ஒழுக்கமும் செயல்களுமாகும். சாதாரண மக்களுக்குக் கொள்கை கோட்பாட்டைவிட அன்றாடம் வெளிப்படையாகச் செய்யும் சடங்குகளே பெரிதாகத் தோன்றும். இக் காரணத்தாலேயே சமண எதிர்ப்புத் தோன்றியது எனலாம்.

தேவாரம் பாடிய மூவரின் வருகையால் கொங்கு நாட்டில் சமண சமயம் முற்றிலும் ஒழிக்கப்படவில்லை என்பதையே பிற்காலச் சான்றுகள் விளக்குகின்றன. பெரும்பாலும் கொங்கு நாட்டிலுள்ள எல்லாச் சமணக் கோயில்களும் கி.பி. 9ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்க் கட்டப்பட்டவைகளே. பெரும்பான்மையான கொங்கு நாட்டுச் சமண நூல்கள் கி.பி. 9ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்த் தோன்றிய நூல்களேயாகும். இந் நூற்றாண்டிற்குப் பின்னர் தோன்றிய சமணக் கல்வெட்டுகள் பல உள்ளன.

பிற நாட்டுச் சமணர்கள் தொடர்பு

பல்லவ நாட்டில் திருநாவுக்கரசரும், பாண்டிய நாட்டில் திருஞானசம்பந்தரும் செய்த சமயப் போரால் தோல்வியடைந்த சமணர்கள் சமணரான தலைக்காட்டுக் கங்கர்கள் ஆட்சிபுரிந்த கொங்கு நாட்டுக்கு வந்தனர் என்பதைச் சில குறிப்புகள் உணர்த்துகின்றன.

திங்களூர்க் கல்வெட்டில் தொண்டை நாட்டுச் சமணத் தலமான அறையணிநல்லூர் குறிக்கப்பட்டுள்ளது.[84] ஐவர்மலைக் கல்வெட்டில் பாண்டிய நாட்டுப் பகுதியான வெண்புநாடு குறிக்கப் பெறுகிறது.[85]

கொங்குநாடு - சமணர் மலைகள் சமணக் கோயில்கள்



கொங்குநாடு — சமணத் தலங்கள்



மக்கென்சி ஆவணம் ஒன்றில் பாண்டிய நாட்டிலிருந்து வஞ்சன், குறோதன், நீலன் முதலிய சமணர்கள் வெஞ்சமாங் கூடலூருக்கு ஓடி வந்ததும் அங்கு அதிகாரம் செலுத்தியதும் கூறப்படுகிறது.[86]

கங்கநாட்டுத் தளபதியான சாமுண்டராயன் தங்கை புளிஅப்பை விசயமங்கலத்தில் சல்லேகனை விரதமிருந்து உயிர் துறந்துள்ளாள்.[87] இவைகளால் பிற நாட்டுச் சமணர்கள் கொங்கு நாட்டோடு கொண்டிருந்த தொடர்பு புலப்படுகிறது.

சமண ஆலயங்கள்

கொங்கு நாட்டில் பழங்காலத்தில் 72 சமண ஆலயங்கள் இருந்தன என்று கூறுகிறார்கள்.[88] (அக்கோயில்களில் பல இன்று இல்லை.) கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 15ஆம் நூற்றாண்டுவரை கொங்கு நாட்டில் சமண சமயம் மிகவும் செழித்து வளர்ந்துள்ளமையை நன்கு அறிகிறோம்.

சமணர் மலைகள்

சமண முனிவர்களாம் அறவோர்கள் பெரும்பாலும் ஊருக்கு ஒதுக்குப் புறங்களில் உள்ள குன்றுகளிலும் அங்குள்ள இயற்கைக் குகைத்தளங்களிலுமே தங்கினர்.[89] ஊர்ப்புறங்களில் பிச்சையேற்று உண்டபின்னர்த் தங்கள் சீடர்களுக்கும், பிற முனிவர்கட்கும், பக்குவம் வாய்ந்த பொது மக்களுக்கும் அறிவுரை பகர்ந்து வாழ்ந்தனர். சாதுர் மாதம் எனப்படும் மழைக் காலங்களில் அக்குகைத் தளங்களையே இருப்பிடமாகக் கொண்டனர்.

பெரும்பாலும் அம்மலைகளில் உள்ள குகைத்தளங்களில் அரசர்களும், உயர் அலுவலர்களும், வணிகர்களும், பொது மக்களும், முனிவர்கள் சிலரும் கற்படுக்கைகளை வெட்டித் தந்தனர். அங்குத் தம் பெயர்களையும் பொறித்தனர். சில மலைகளில் சமணப்பள்ளிகள் எழுப்பப்பட்டன. சில மலைகளில் தீர்த்தங்கரர் உருவங்களையும், இயக்கி உருவங்களையும் அமைத்தனர்.

கொங்கு நாட்டில்

1. அய்யர் மலை
2. அரசண்ணாமலை

11. குண்டாங்கல்பாறை
12. கொல்லிமலை

3. அர்த்தநாரிபாளையம்கரடு
4. அறச்சலூர்மலை
5. ஆறுநாட்டார்மலை
6. ஆனைமலை
7. ஈரெட்டிமலை
8. ஐவர்மலை
9. கனககிரி
10. குன்னமலை
13. சித்தர்மலை
14. சுக்காலியூர்க்கரடு
15. செந்நாக்குன்று
16. திருச்செங்கோடு
17. திருமூர்த்தி மலை
18. தொம்பர்மலை
19. பிள்ளைதின்னிக்கரடு
20. பொன்சொரிமலை

ஆகியமலைகளில் சமண சமயச் சின்னங்கள் உள்ளன.

அய்யர் மலை

குளித்தலை அருகேயுள்ள மாணிக்கமலை, இரத்தினகிரி என்று பெயர்பெற்ற அய்யர்மலையில் மேல்குகையொன்றில் பனைதுறை வேஸன் அதிட்டானம் என்ற தமிழிக்கம்வெட்டு உள்ளது. பிற்கால தீர்த்தங்கரர் சிலையும் அருகில் உள்ளது.

அரசண்ணாமலை

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம் விசயமங்கலத்திற்குத் தெற்கே 4 கிலோ மீட்டர்த் தொலைவில் அரசண்ணாமலை உள்ளது. சுமார் 100 மீட்டர் உயரமுள்ள இரட்டைக் குன்றாக அம்மலை அமைந்துள்ளது. மேற்கே உள்ள மலை சற்று உயரம் அதிகமாகவும் கிழக்கே உள்ள மலை சற்றுக் குறைவான உயரத்துடனும் காணப்படுகிறது. ஏறுவதற்குப் பழமையான படிக்கட்டுகள் உள்ளன. இரு மலைகளில் மேற்கேயுள்ள பெரியமலைமீதுதான் முன்பு நேமிநாதர் கோயிலும், இயக்கி கூசுமாண்டினி கோயிலும் சிறப்புடன் விளங்கின.

இம் மலைமீது இருந்த நேமிநாதர் கோயில் வாயிலும் விசய மங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் வாயிலும் எதிர் எதிரே நோக்கிக் கொண்டிருந்தன. அரசண்ணாமலைக் கோயில் வடக்குப் பார்த்திருந்தது. மேற்குப்புற மலையின் உச்சியில் நேமிநாதர் கோயில் மேல் புறம் சற்றுக் கீழே கூசுமாண்டினி கோயிலும் இருந்தது.

நெடுங்காலமாகப் பழுது பார்க்காத காரணத்தால் படிகள் இப்போது பெரும்பாலும் சிதைந்து காணப்படுகின்றன. மலையடிவாரத்தில்

கொங்கம்பாளையம் என்ற ஊர் இருக்கிறது. அங்கிருந்து மலையடிவாரத்திற்குப் பாதை செல்லுகிறது.

மலையேறிச் சென்றால் உச்சியில் முப்பது சதுரமீட்டர் சமவெளி காணப்படுகிறது. அங்கிருந்த நேமிநாதர் கோயிலை அப்புறப்படுத்திவிட்டுச் சைவச் சந்நியாசி ஒருவர் 70 ஆண்டுகட்குமுன் சிறுகோயில் கட்டிச் சிவலிங்கப் பிரதிட்டை செய்துள்ளார். இயக்கி கூசுமாண்டினி கோயில் இருக்கிறது. ஆனால் நேமிநாதர் சிலையையும் கூசுமாண்டினி சிலையையும் விசயமங்கலம் சமணக் கோயிலில் கொண்டு போய் வைத்துவிட்டார்கள்.[90]

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலுள்ள ஆவணம் ஒன்று அரசண்ணாமலையை அதிசயாமலை என்று குறிக்கிறது. அங்குள்ள நேமிநாதர் இயக்கி கூசுமாண்டினி இயக்கியைப் புகழ்ந்து ஒரு பாடலும் காணப்படுகிறது.[91]

அரசண்ணாமலையில் உள்ள இயக்கி கூசுமாண்டினியைக் கொங்கம்பாளையத்து மக்களும், அருகிலுள்ள ஊர்மக்களும் 'அரசாத்தாள்' என்று அழைக்கின்றனர். கொங்கம்பாளையத்து மக்கள் தங்கள் பெண் குழந்தைகட்கு அரசாத்தாள் என்று பெயர் வைக்கின்றனர். மலை மேல் சிவலிங்கப் பிரதிட்டை செய்திருந்தாலும் சுற்று வட்டார மக்கள் மலைமேல் இன்றும் அரசாத்தாள் குடிகொண்டிருப்பதாகவே கூறுகின்றனர்.

தீர்த்தங்கரர் அனைவரும் உயர் அரச குடும்பத்தில் பிறந்தவர்கள். கூசுமாண்டினியை 'அரசாத்தாள்' என அழைப்பது போல் தீர்த்தங்கரர் நேமிநாதரை 'அரசண்ணல்' என அழைத்திருக்கலாம். அரசண்ணல்மலை அரசண்ணாமலை என மருவியிருக்கலாம்.

'கொங்கு தேச ராசாக்கள்' நூலில் கஙக மன்னர்கள் கொங்கு நாட்டில் அரிஷ்டணன் என்ற சமணருக்குக் கொடுத்த கொடை பேசப் படுகிறது. அரிஷ்டணன்மலை அரசண்ணாமலை எனவும் மாற்றம் பெற்றிருக்கலாம்.

நேமிநாதருக்கு 'அரிஷ்டநேமி' என்ற பெயரும் உண்டு. நேமிநாதர் – அரிஷ்டநேமி கோயில் கொண்டுள்ள காரணத்தால் அரிஷ்ட நேமிமலை என்ற பெயர் அரசண்ணாமலை என்று மருவியிருக்கலாம். உண்மைக் காரணம் தெரியவில்லை.

கோவை கிழார் தான் கண்ட அம் மலைக் காட்சியைப் பின்வருமாறு வருணித்துள்ளார்.[92]

'முன் புகைவண்டியில் செல்லும்போதெல்லாம் விசய மங்கலம் நிலையம் அணுக அணுக அம்மலை மீதிருந்த ஜைன ஆலயம் வெள்ளை வெளேரென்று காட்சி தந்து கொண்டிருந்தது. தற்போது அக்காட்சி தருவதில்லை. பச்சை மலைமீது வெள்ளைச் சிகரம் ஒரு சிறந்த காட்சியை அளிக்குமல்லவா? பழைய கோயில் அழிந்ததும் அவ்வழகிய காட்சி மறைந்தது'

அர்த்தநாரிபாளையம்கரடு

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் பரமத்தி வேலூர் – திருச்செங்கோடு சாலையில் 10 கி.மீ. தொலைவில் அர்த்தநாரி பாளையம் என்ற ஊர் உள்ளது. அவ்வூரின் கிழக்கேயுள்ள காட்டுப் பகுதியில் தெற்கு வடக்காக 30 மீட்டர் நீளமும் 10 மீட்டர் அகலமும் கொண்ட பெரிய பாறைத்தொடர் காணப்படுகிறது. அப்பாறைத் தொடரின் உயரமான மையப்பகுதியில் மேல்புறம் 5 சமண முனிவர் கல் படுக்கைகள் உள்ளன. ஆழமாகப் பாறையைக் குடைந்து ஆக்கப்பட்டுள்ளது.[93] 2½ மீட்டர் நீளத்திற்குப் படுக்கையில் தண்ணீர் வழிந்தோடிய அறிகுறிகள் காணப்படுகின்றன. கற்படுக்கைகள் தலையணை கொண்ட அமைப்புடன் காணப்படுகின்றன.

முன்பு படுக்கையின் முன்பு பந்தல் அமைக்கப்பட்டிருந்ததன் அறி குறியாக வரிசையாக ஆழமான குழிகள் பல காணப்படுகின்றன. விளக்குகள் வைப்பதற்குரிய மாடங்களும் அருகில் வெட்டப்பட்டுள்ளன. அருகில் இயற்கைச் சுனை ஒன்றுள்ளது. அது ஐவர் சுனை என அழைக்கப்படுகிறது.

அப்பாறையைத் 'தெய்வப் பாறை' என்றும், படுக்கைகளைப் 'பஞ்ச பாண்டவர் படுக்கை' என்றும் உள்ளூர் மக்கள் அழைக்கின்றனர். அப்பகுதி மக்கள் செருப்பணிந்து கொண்டு அப்பாறையின் மேல் செல்லுவதில்லை. சில ஆண்டுகட்கு முன்பு வரை அப்பாறைக்கு வந்து மக்கள் வழிபட்டுச் சென்றதாகக் கூறுகிறார்கள். இப்போது யாரும் வழிபட வருவதில்லை என்கின்றனர்.

அறச்சலூர்மலை

ஈரோடு மாவட்டம் ஈரோடு வட்டத்தில் அறச்சலூர் என்னும் ஊர் உள்ளது. ஊரின் வடக்கு எல்லையில் கிழக்கு மேற்காகச் செல்லும் ஒரு மலைத்தொடர் காணப்படுகிறது. அதற்கு அறச்சலூர்மலை என்று பெயர். நாகமலை என்றும் அழைப்பர்.

அறச்சாலையூர் என்பதே அவ்வூரின் பழம்பெயர். ஊரினுள் எழுந்தருளியுள்ள அம்மனுக்கு அறச்சாலை அம்மன் என்று பெயர் வழங்குகிறது.

அக்கோயிலுக்குரிய மக்கள் அறச்சாலைச் செட்டி, அறச்சாலையம்மாள் என்று அம்மன் பெயரைத் தங்கள் பெயராக வைத்துக் கொண்டுள்ளனர்.

அறம்-அறச்சாலை என்ற பெயரே இவ்வூரின் சமணத் தொடர்பை விளக்குகிறது. (இன்று இவ்வூரின் பெயர் அரச்சலூர் என்று பிழையாக எழுதப்படுகிறது.)

அறச்சலூர் மலையின் வடசரிவில் நிலமட்டத்திலிருந்து சுமார் 30 மீட்டர் உயரத்தில் ஆண்டிப்பாறை என்னும் இயற்கைக் குகைத்தளம் ஒன்று மேற்கு நோக்கியுள்ளது. அங்கு மூன்று கல் படுக்கைகள் வெட்டப்பட்டுள்ளன. ஒரு படுக்கையின் விளிம்பில்,

எழுத்தும் புணருத்தான் மணிய
வண்ணக்கன் தேவன் சாத்தன் [94]

என்று பொறிக்கப்பட்டுள்ளது. (மலைய என்றும் படித்துள்ளனர்)

மற்ற இரண்டு படுக்கைகளின் அருகே கீழ்வருமாறு இரு தொகுதிகளாக எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன.

த	தை	தா	தை	த
தை	தா	தே	தா	தை
தா	தே	தை	தே	தா
தை	தா	தே	தா	தை
த	தை	தா	தை	த [95]

கை	த	தை	த	கை
த	கை	த	கை	த

தை த கை த தை
த கை த கை த
கை த தை த கை[96]

இவ்விரண்டு கல்வெட்டுக்களையும் இடமிருந்த வலமாகப் படித்தாலும், மேலிருந்து கீழாகப் படித்தாலும் ஒரே மாதிரியாக அமைந்துள்ளன. இவை இசைத்துறையிலும், கூத்துத்துறையிலும் பாடவல்ல இசை எழுத்துக்களைக் குறிக்கின்றன.

முதல் கல்வெட்டில் உள்ள புணருத்தான் என்ற சொல் மிகவும் சிறப்பானதாகும். ஆய்வாளர்களால் அச்சொல் சரியாக அறியப்பெற வில்லை. எனவேதான் பண்வித்தான், பூணதத்தான் என்று பலவிதமாக இதனைப் படித்துள்ளனர். புணருத்தான் என்பது புணர்த்தான் என்ற சொல்லின் திரிபேயாகும். ரகரம் ருகரமாகத் திரிவது வழக்கில் இயல்பே.

புணர்த்தான் என்பது தொகுத்தான், சேர்த்தான் என்று பொருள் படும். முக்கியமாக எழுத்துக்களைத் தொகுத்தல் அல்லது சேர்த்தலைப் புணர்த்தல் என்பது தமிழ் மரபு.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் 'புணரியல்' என்று ஓர் இயல் உள்ளது. இசைத்துறையில் எழுத்துக்கள் வகுத்ததும், உயிர் அளவு கடந்து இசைத்ததும் தொல்காப்பியச் சூத்திரங்களிலிருந்து தெளிவுறும்.

இதனினின்றும் வழக்கிலும், செய்யுளிலும் உள்ள எழுத்துக்களைப் போல இசை எழுத்துக்களைத் தொகுத்தலும் இசை நூல்களில் உள்ளது என்பது பெறப்படுகிறது. சிலப்பதிகார அரங்கேற்று காதையில் குழலோன் அமைதி கூறுமிடத்து இளங்கோவடிகள்,

'சொல்லிய இயல்பினிற் சித்திர வஞ்சனை
புல்லிய அறிந்து புணர்ப்போன் பண்பின்'

என்று கூறுகிறார்.

இதற்கு அரும்பத உரையாசிரியர்,

'சித்திரப் புணர்ப்பாவது இசை கொள்ளும் எழுத்துக்களின்மேல் பண்ணீர்மை நிறுத்தல்; வஞ்சனைப் புணர்ப்பாவது இசை கொள்ளா எழுத்தின் மேல் வல்லொற்று வந்துழி மெல்லொற்றுப் போல் நெகிழ்த்துப் புணர்த்தல்; புணர்ப்போன் பண்பின் புணர்க்கத்தக்க பாடலாசிரியனை ஒத்த அறிவினை உடையவன்' எனக் குறிக்கின்றார்.[97]

இதனால் இசைக்கும் தாளத்திற்கும் ஏற்ப எழுத்துக்களைப் புணர்ப்பது சிலப்பதிகாரக் காலத்தில் தமிழகத்தில் வழங்கிய பண்பு என்பது தெளிவாகும்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே இசை எழுத்துக்களைத் தொகுத்துக் கல்லில் பொறித்த பெருமை மணியன் வண்ணக்கன் தேவன் சாத்தனையே சாரும்.

சிலப்பதிகாரம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அறச்சலூர்க் கல்வெட்டு சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலத்தில் தோன்றியது என்பது ஒரு சிறப்பாகும்.

இந்தக் கல்வெட்டு கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. இதிலுள்ள மகரம், னகரம் முதலிய எழுத்துகள் வட்டெழுத்தின் தொடக்கத்தைக் காட்டுகின்றன.[98]

மணிய வண்ணக்கன் என்ற பெயரைச் சில ஆய்வாளர்கள் மணி(ய்) வண்ணக்கன் என்று படித்துள்ளனர். வண்ணக்கன் என்பதை மணி பரிசோதகன் என்றும்,[99] வர்ணக்கன் என்று பொருள் கொண்டு வர்ணம் பூசுபவன் என்றும் பொருள் கொண்டுள்ளனர்.[100] டி.வி. மகாலிங்கம் வண்ணக்கன் என்பதற்கு நாணயப் பரிசோதகன் என்று பொருள் கொள்ளுகிறார்.[101] சங்க இலக்கியத்தில் வடமன் + வண்ணக்கன் = வடம வண்ணக்கன் (தாமோதரனார்) என்று பயின்று வருவதால் இவைகளை இயற்பெயராகவும் கருதலாம். மணியன் + வண்ணக்கன் - மணிய வண்ணக்கன் என ஆகியிருக்கலாம்.[102] புதுக்கயத்து வண்ணக்கன் சம்பூர் கிழான், வண்ணக்கன் சோமருங் குமரனார் என்ற பெயரில் சில புலவர்களும் சங்க காலத்தில் இருந்துள்ளனர்.

இங்குள்ள கற்படுக்கைகள் கிழக்கு மேற்காக ஒன்றரை மீட்டர் நீளமும் அரை மீட்டர் அகலமும் கொண்டு விளங்குகின்றன.

படுக்கையின் அருகில் சூலம் போன்ற குறி ஒன்றுள்ளது.

இது சமணர்களின் நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய திரி ரத்தினங்கள் அல்லது இரத்தினத் திரையத்தைக் குறிப்பதாக இருக்கலாம்.

பிற சமண மலைக்குகை போலவே இங்கும் அருகில் ஒரு இயற்கையான நீர்ச்சுனை உள்ளது. அதில் எப்போதும் நீர் வற்றுவதில்லை. குகைத் தளத்தின் அருகே முக்குடையை நினைவூட்டும் சின்னம் ஒன்று காணப்படுகிறது.

பண்டைக்காலத் தமிழ் எழுத்து ஆய்விற்கும், தொன்மையான பழந்தமிழர் இசை ஆய்விற்கும் அறச்சலூர்க் கல்வெட்டுகள் மிகவும் இன்றியமையாதனவாக விளங்குகின்றன.

கொங்கு நாட்டுச் சமணர்கள் செய்த இசைத் தொண்டை இவ் அறச்சலூர்க் கல்வெட்டுகள் நன்கு காட்டுகின்றன.[103]

ஆறுநாட்டார்மலை (புகலூர்)

கரூர் மாவட்டம், கரூர் வட்டம் புகலூர் அருகே உள்ள வேலாயுதம் பாளையத்தில் ஆறுநாட்டார்மலை என்ற உயர்ந்த பாறைத் தொடர் உள்ளது. ஆறு நாடுகட்கு உரிய மலை என்று கூறுவர். சிலர் அம்மலை சமணருக்குரியது என்னும் பொருளில் அருகநாட்டார்மலை என்பதே ஆறுநாட்டார்மலை என ஆயிற்று என்பர். சமணருடைய அடைக்கல தானத்தைக் குறிக்கும் வகையில் புகலூர் என்ற பெயர் அமைந்துள்ளது.

தெற்கு வடக்காக மிக நீண்டுள்ள அப்பாறைத் தொடரில் சமண முனிவர் படுக்கைகளும், இயற்கைக் குகைத்தளங்களும் பல உள்ளன. பாறையில் சில இடங்களில் படுக்கையில் நீர் விழாமலிருக்க விளிம்புகள் வெட்டப்பட்டுள்ளன. அங்குச் சமண முனிவர்கள் பலர் தங்கித் தவம் செய்துள்ளனர்.

ஆறுநாட்டார்மலையில் பன்னிரண்டு தமிழிக் கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் பெரிய கல்வெட்டுகள் இரண்டு. மற்றவை சிறிய கல்வெட்டுகள். அவைகளில் சில பகுதிகள் அழிந்துள்ளன.

ஆற்றூர்ச் செங்காயபன் என்ற மூத்த சமண முனிவருக்கு கோ ஆதன் செல்லிரும்பொறையின் பேரனும் பெருங்கடுங்கோன் மகனுமாகிய இளங்கடுங்கோ என்பவன் இளவரசன் ஆனதன் நினைவாகப் படுக்கை செய்தளித்ததை இரு கல்வெட்டுகள் கூறுகின்றன. முதல் கல்வெட்டில் அறுத்த கல் என்றும் இரண்டாம் கல்வெட்டில் அறுப்பித்த கல் என்றும் பொறிக்கப்பட்ட சிறு வேறுபாட்டுடன் இரண்டு கல்வெட்டுகளும்

காணப்படுகின்றன. முதல் கொடை இளவரசன் ஆவதற்கு முன் அளித்ததெனவும், இரண்டாம் கொடை இளவசரன் ஆன பின்னர் அளித்த கொடை என்றும் கொள்ளலாம்.

ஆய்வாளர்கள் கோ ஆதன் செல்லிரும்பொறையைச் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்றும், பெருங்கடுங்கோவைத் தகடூர் எறிந்த பெருங்சேரல் இரும்பொறை என்றும், இளங்கடுங்கோவை இளஞ்சேரல் இரும்பொறை என்றும் கொள்கின்றனர். அவர்கள் மூவரும் பதிற்றுப்பத்தின் 7,8,9 ஆம் பத்திற்குரிய பாட்டுடைத் தலைவர்கள். அப்படியானால் சேர மன்னர் வரலாறு கூறும் இக்கல்வெட்டு மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.[104]

'தாவனூர்ப் பிணன் குற்றன்'

'நல்லியூர் பிட்டந்தை மகன் கீரன் கொற்றி'

'நல்லியூர் பிட்டன் குறமகள் கீரன் கொற்றி'

'எண்ணெய் வாணிகன் வேறி ஆதன்'

'பொன் வாணிகன் மகன்'

'கொற்றந்தை ஈழவன்'

'கருவூர்ப் பொன்வாணிகன் நத்தி'

'ணாகன் மகன் பெருங்கீரன்'

ஆகியோர் கற்படுக்கைகள் அமைந்த பேர்களாகக் குறிக்கப்படுகின்றனர்.

படுக்கைகள் கல், பாளி, அதிட்டானம் என்ற பெயர்களில் குறிக்கப்பட்டுள்ளன.

கருவூர் - கருஊர் என்றும், நல்லியூர் நல்லிஊர் என்றும் ஆற்றூர் - யாற்றூர் என்றும் எழுதப்பட்டுள்ளன.

நல்லி, ஆதன், ஓரி, பிட்டன், கொற்றன், கீரன், கொற்றி போன்ற பெயர்கள் சங்க இலக்கியங்களில் பயின்று வரும் சொற்களாகும்.

ஆனைமலை

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் ஆனைமலைக்கும் வேட்டைக்காரன்புதூருக்கும் இடையில் உள்ள பாதைக்கு மேற்கே இரண்டு கிலோமீட்டர் தொலைவில் கரடு முரடான சதுரக்குன்று ஒன்றுள்ளது. இது ஆனைமலைத் தொடரின் ஒருபகுதி.

பொதுமக்கள் இக்குன்றை ஆனைமலைக்கரடு என்றழைப்பார்கள். நாட்டு வரைபடங்களில் அக்குன்றின் பெயர் 'ஜைன்கல் துர்க்கம்' என்று கூறப்பட்டுள்ளது. குன்று 150 மீட்டர் உயரம் உள்ளது. படிக்கட்டுக்கள் உண்டு. ஆனால் பல இடங்களில் சரிந்துள்ளது.

மலைமேல் பெருமாள் கோயில் உள்ளது. சேனைக்கல் ராயப் பெருமாள் என்று பெயர். ஜைன் கல் என்பது சேனைக் கல் என்று மாறி விட்டது போலும். ஜைன்கல் என்ற பெயர் அக்குன்றுக்கும் சமண சமயத்திற்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது.[105]

அக்கோயில் பூசாரி 'ஜேன்கல்' என்பதுதான் ஜெயின் கல்-ஜைன் கல் என்று கூறினார் என்று கோவைகிழார் குறித்துள்ளார். கன்னடத்தில் ஜேன் என்றால் தேன் என்பது பொருள். அம்மலையில் தேன்கூடுகள் நிறைய இருப்பதால் அப்பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர்.

இப்போதுள்ள பெருமாள் எழுந்தருளுவதற்கு முன் பண்டைக்காலத்தில் அங்கே சமண உருவம் இருந்திருக்க வேண்டும் என்று கோவைகிழார் கருதுகிறார்.

ஈரெட்டிமலை

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம் அந்தியூர் மலைத்தொடரில் உள்ளது ஈரெட்டிமலை. அங்குக் கண்ணப்பன் என்பவர் வீட்டிலிருந்து தமிழ்நாடு அரசு தொல்பொருள்துறை ஒரு கல்லைப் பெற்றுள்ளது. அதன் செதுக்கப்பட்ட ஒரு பகுதியில்

துறகையுள்
எாரு கல்

என்று கி.பி. 4ஆம் நூற்றாண்டுப் பிற்காலத் தமிழி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

இது துறவிருந்து உயிர் நீத்த சமணத் துறவி ஒருவருக்கு எடுக்கப்பட்ட நினைவுக் கல்லாகலாம். இவ்வாறு துறவிருந்து உயிர் நீத்த சமண ஆண், பெண் துறவியர்க்கு நிசீதிகை, நிசீதிகை கல் நினைவுக் கல்லாக நாட்டப்பட்டுள்ளது. திருக்கோயிலூரில் பாரி மகளிரை மலையமானுக்கு அளித்த பின்னர்த் தீப்பாய்ந்து உயிர் நீத்த கபிலருக்குக் 'கபிலக்கல்' நினைவுக் கல்லாக உள்ளது. அதுபோல் உண்ணாநோன்

பிருந்து உயிர் நீத்த சமணத் துறவி ஒருவருக்கு ஈரெட்டிமலைக் கல் நினைவுக்கல்லாக இருக்கலாம்.

அறச்சலூர்க் கல்வெட்டைப் போல வட்டெழுத்தின் தொடக்க நிலையை இக்கல்லில் காணுகிறோம். தமிழ்நாட்டின் தொன்மையான நினைவுக்கல் இதுவேயாகும்.[106]

ஐவர்மலை

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம் கொழுமம் அருகில் அய்யம்பாளையம் என்ற ஊர் உள்ளது. அதன் அருகில் ஐவர்மலை என்ற மலை உள்ளது. சங்க இலக்கியங்களில் ஒன்றான பதிற்றுப்பத்தில் ஐவர்மலை 'அயிரைமலை' என்று குறிக்கப்பட்டுள்ளது. தற்போது ஐவர்மலை திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்ததாக இருப்பினும் பண்டைய நாளில் இம்மலை வைகாவிநாடு, ஆவிநன்குடிநாடு என வழங்கப்பெற்ற வையாபுரிநாட்டைச் சேர்ந்ததாக இருந்தது. கொங்கு 24 நாடுகளில் வையாபுரிநாடும் ஒன்று.

இம்மலையை

'நெடுங்கோட்டு . . . .
நேர்உயர் நெடுவரை அயிரை'

என்று பாலைக்கௌதமனாரும்,[107]

*'இழும்என இழிதரும் பறைக்குரல் அருவி
முழுமுதல் மிசைய கோடுதொறும் துவன்றும்
அயிரை நெடுவரை'*

என்று கபிலரும்,[108]

*'மடைஎதிர் கொள்ளா அஞ்சுவரு மரபின்
கடவுள் அயிரை'*

என்று அரிசில்கிழாரும்[109] பதிற்றுப்பத்தில் புகழ்ந்து பாடியுள்ளனர்.

சிலப்பதிகாரத்தில்

*'உருகெழு மரபின் அயிரை மண்ணி
இருகடல் நீரும் ஆடினோன்'*

என்று இளங்கோவடிகளும் பாடியுள்ளார்.[110] அரும்பத உரைகாரர்

அயிரையை ஆறு என்பார். மலை என்றும் கூறுவர் என உ.வே. சாமிநாதய்யர் எழுதியுள்ளார்.

விந்தியமலையில் உள்ள துர்க்கை விந்தை என்றழைக்கப்பட்டதைப் போல அயிரைமலையில் உள்ள துர்க்கையும் அயிரை எனப்பட்டது. கொற்றவை உறைவதொரு மலை என்று பதிற்றுப்பத்து உரைகாரர் கூறுவார்.

இப் பழம்பெரும் அயிரைமலை ஐவர்மலை எனப் பெயர் மாற்றம் பெற்றது. அப்பகுதி மக்கள் அம்மலையில் பஞ்சபாண்டவர்கள் வசித்ததாகக் கூறுவர்.

ஐவர்மலையின் சரிவில் சமண முனிவர்கள் தவம் செய்த இயற்கைக் குகைத் தளங்கள் பல உள்ளன. அக்குகைகளுக்கு மேல் பகுதியில் சமணத் தீர்த்தங்கரர்களுடைய உருவங்கள் வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ளன.

அவ்வுருவங்களின் கீழே வட்டெழுத்தில் தமிழ் மொழியில் சில கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.[11] ஒரு கல்வெட்டில் இரண்டாம் வரகுண பாண்டியனின் எட்டாம் ஆட்சியாண்டில் கி.பி. 870இல் குணவீரக் குரவடிகள் மாணாக்கர் கொழுமத்துச் சாந்திவீரக் குரவர் என்பவர் திரு அயிரையில் பார்சுவநாத தீர்த்தங்கரரையும், இயக்கி அவ்வைகளையும் புதுப்பித்து அவிப்புறமாக 505 காணம் பொன் தந்தார் என்று கூறப்பட்டுள்ளது. கி.பி. 870இல் புதுப்பிக்கப்பட்ட அச்சிற்பங்கள் அதற்கு முன் சில நூற்றாண்டுகள் முன்னராவது செதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

குவணச்சேரித் தட்டாரச் சாவிகித்தி வட்டம் வடுகி ஸ்ரீ அயிரைமலை தேவர்க்கு அவிப்புறத்திற்காக 2 கழஞ்சு பொன் தந்தாள் என்று மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது. சாவகர் என்பதன் பெண்பால் பெயர் சாவிகித்தி.

செயங்கொண்ட சோழமண்டலத்துப் பங்களநாட்டு நடுவில் வகை முகைநாட்டுப் பள்ளிச்சந்தம் வைகாவூர்த் திருமலைக் கல்வெட்டொன்றில் குணவீர மாமுனிவர் என்ற பெயரும், நாஞ்சில்நாட்டுக் குறண்டியில் குணவீர படாரர் என்ற பெயரும் காணப்படுகிறது. இவர்கள் அனைவரும் சமண சமயத்தில் 'வீரசங்கம்' என்னும் பிரிவைச் சார்ந்தவர்கள். இவர்கள் வணங்கும் சமணப் பள்ளிகள் 'வீர ஜினாலயம்' எனப்படும்.

'ஜினன்' என்றால் வென்றவன் என்று பொருள். வென்றவனாகிய ஜினனை வழிபடும் காரணத்தால் இவர்கள் வீரசங்கத்தார் எனப்பட்டனர்.

'வீரன் திருவறம் பேணுமெய்
வீர சங்கத்தவர்'

என்பது ஒரு பழம்பாடல் பகுதியாகும். வீரசங்கத்துப் பெருமடை மல்லி சேனப் பெரியான் என்ற தொடர் அயிரைமலைக் கல்வெட்டிலும் காணப்படுகிறது.

சமண சமய இலக்கிமார்களை 'ஔவை' என்று குறிக்கும் வழக்கம் உண்டு. சீவகசிந்தாமணியில் சமண சமயப் பெண்பால் துறவிகளும் 'ஔவைமார்' என்று கூறப்படுகின்றனர்.

மணியியல் சீப்பிடச் சிவக்கும் வாணுதல்
அணியிருங் கூந்தலை ஔவை மார்கள்தாம்
பணிவிலர் பறித்தனர் பரமன் சொன்னநூல்
துணிபொருள் சிந்தியாத் துறத்தல் மேயினார்

என்பது சீவக சிந்தாமணிப் பாடலாகும்.[112]

ஒவ்வொரு தீர்த்தங்கரர் உருவத்தின் கீழும் அதனை அமைத்தவர் பெயர் வட்டெழுத்தில் வெட்டப்பட்டுள்ளது.[113]

'ஸ்ரீ வடவள்ளி ஆரம்விச்சி வரதபாணி'[114]

'ஸ்ரீ அச்சணந்தி'[115]

'ஸ்ரீ இந்திரசேனன்'[116]

'ஸ்ரீ வெண்பு நாட்டு நால்கூர் குடியன் வந்தன்'[117]

'திருவரம்பத்தில் பாதமுலத்தான் ஆரி'[118]

'கெழவத்து வெண்புநாடு கவிரிச்சி'[119]

'ஸ்ரீ காடன்'[120]

'ஸ்ரீ பெரும்பத்தி ஊர் பட்டினிக் குரத்திகள் மாணாக்கியார்
அவ்வணந்திக் குரத்தி'[121]

ஆகியோர் தீர்த்தங்கரர் உருவங்களைச் செதுக்கியுள்ளவர்கள் பெயர்களாக அயிரைமலையில் காணப்படுகிறது.

அச்சணந்தி என்பார் பெயர் மதுரை மாவட்டத்தில் அழகர்மலை,[122] உத்தமபாளையம்,[123] கருங்காலக்குடி,[124] அரிட்டாபட்டி,[125] ஆனைமலை,[126] கொங்கர் புளியங்குளம்,[127] நெல்லை மாவட்டம் எருவாடி,[128] கன்னியாகுமரி மாவட்டத்துச் சிதரால்,[129] வேலூர் மாவட்ட வள்ளிமலை[130] ஆகிய இடங்களில் காணப்படுகிறது. இவர்கள் சமண சமயத்தில் நந்தி சங்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் 9,10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். இவ் அச்சணந்தி அனைவரும் ஒருவரா? அல்லது ஒரே பெயரையுடைய பலரா என்பது ஆய்வுக்குரியது.

வெண்புநாடு என்பது திருநெல்வேலி மாவட்டம் கழுகுமலைக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள ஒரு நாடாகும்.[131]

பட்டினிக் குரத்தியர் என்பவர் உண்ணாநோன்பு மேற்கொண்டவர் என்று பொருள்படும். ஒருநாளைக்கு ஒருவேளை உணவைமட்டும் சிலர் மேற்கொள்வர். சிலர் ஓரிரு நாட்கள் உண்ணாநோன்பை மேற்கொள்வர். சிலர் எட்டுநாள் உண்ணாவிரதம் இருப்பர். அவர்கள் 'அட்டோபவாசிகள்' எனப்படுவர். உத்தமபாளையத்தில் எட்டு நாட்கள் உண்ணாநோன்பிருந்து உண்ட முனிவர் ஒருவர் அட்டோபவாசி படாரர் என்றும், சமணமலையில் அட்டோபவாசி கனகவீரர் என்றும் குறிக்கப்பட்டுள்ளனர். கழுகுமலையில் பட்டினி படார மாணாக்கிகள் என்ற தொடர் காணப்படுகிறது.[132]

குரத்தியார் என்பது சமண சமயப் பெண்பால் துறவியரைக் குறிக்கும் சொல்லாகும். கழுகுமலையில் பல குரத்தியர் பெயர்கள் காணப்படுகின்றன.[133] துறவியர் ஆடவராக இருந்தால் அவர்கள் குரவர் அல்லது குரவடிகள் என்றழைக்கப்பட்டனர்.[134]

ஐவர்மலையில் மொத்தம் 16 தீர்த்தங்கரர் உருவங்கள் உள்ளன. அவை அனைத்தும் சமண சமயத் தீர்த்தங்கரர் என்பதை அறியாத சிலர் அவ்வுருவங்களுக்கு மேல் பிரம்மா, ருத்தரன், விஷ்ணு, துரோணாச்சாரியார், சைந்த மகரிஷி, தருமர், பீமர், அர்ச்சுனர், நகுலர், சகாதேவர், சேரன், சோழன், பாண்டியன், கிருஷ்ணர், திருவள்ளுவர், திருதராட்டிரன் என்று எழுதி வைத்திருந்தனர். இப்போது அவை அழிக்கப்பட்டுள்ளன.

கனககிரி

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டத்தில் கனகபுரம் என்ற ஊர்

உள்ளது. அவ்வூரில் அருகில் கனககிரி என்ற சிறு குன்று உள்ளது. அக் குன்றின் மேற்குப்புறம் இயற்கையான குகைத்தளம் ஒன்றுள்ளது. அங்குச் சமண முனிவர்கள் தங்கி வாழ்ந்த கற்படுக்கை ஒன்று மிகவும் சிதைந்த நிலையில் காணப்படுகிறது.[135]

பொன் அல்லது கனகம் என்பது சமண ஊர்களுக்கும், முனிவர்கட்கும் பெயராக அமைந்துள்ளது. பொன்னூர், கனகவீரக் குரவர் என்பன போன்ற பெயர்களைக் காணுகின்றோம்.

பிற்காலத்தில் அப்படுக்கையைச் சிதைத்து அதன் மேல் அக்குன்றின் மேல் உள்ள முருகன் கோயிலாகிய கனககிரிக் குமரருக்கு ஆறுகாலம் பூசை செய்ய வேண்டும் என்ற கல்வெட்டொன்றைப் பொறித்துள்ளனர்.

குண்டாங்கல் பாறை

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் வைகை நல்லூர்புதூர் அருகில் உள்ள குண்டாங்கல் பாறையில் சமண தீர்த்தங்கரர் உருவம், படுக்கைகள் ஆகியன உள்ளன.

குன்னமலை

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் நடந்தை என்னும் ஊர் அருகில் குன்னமலை என்ற சிறுகுன்று உள்ளது. அதன் அடிவாரக் காட்டில் உள்ள சிறுபாறையில் சுவத்திகச் சின்னங்களுடன் 'ஜிநாயநம' என்ற கல்வெட்டும் வெட்டப்பட்டுள்ளது. பழங்காலத்தில் சமணர்கள் அப்பகுதியில் வாழ்ந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

கொல்லிமலை

கொங்குநாட்டு மலைகளில் செழிப்பும் வற்றா வளமும் உடைய மலைகளில் கொல்லிமலையும் ஒன்று. இது சேலம் மாவட்டத்தில் நாமக்கல் வட்டத்தில் உள்ளது.

சங்க இலக்கியங்களில் கொல்லிமலை வல்வில் ஓரிக்கு உரிய மலையாகக் கூறப்படுகிறது.[136] மலையமான் திருமுடிக்காரி வல்வில் ஓரியைப் போரில் கொன்று கொல்லிமலையைச் சேரர்க்கு அளித்தான்.[137] அது முதற்கொண்டு கொல்லிமலை வானவன், பொறையன் ஆகிய சேரர்க்கு உரித்து என்று கூறப்படுகிறது.[138]

கொல்லிமலை மிகப் பெரியது.[139] அகன்ற காடுகளை உடையது.[140] குளிர்ச்சி பொருந்தியது.[141] பலா முதலிய பல்வேறு பயன்தரு மரங்களை உடையது.[142] கல்மிசைச் செல்லும் சிறு வழிகளை உடையது என இலக்கியங்களில் கூறப்படுவது.[143]

கொல்லிமலையின் மேற்குப் பகுதியாகிய குடவரையில் கொல்லிப் பாவை என்னும் அழகிய பாவை ஒன்றிருந்தது.[144] அது வினைமாண் பாவை என வருணிக்கப்பட்டுள்ளது.[145] உயரிய கொல்லிமலையில் அத்தெய்வம் தீது தீர்த்துக் காப்பாற்றுகிறது என்றும் கூறப்படுகிறது.

சிறப்பு வாய்ந்த இக் கொல்லிமலையில் அறப்பள்ளி ஈசுவரன் கோயில் உள்ளது. திருஞானசம்பந்தர் 'கொங்கில் குளிர் அறப்பள்ளி' என்று அக்கோயிலைத் தேவார வைப்புத் தலமாகப் பாடியுள்ளார். 'அறப் பள்ளி' என்ற பெயரே அது முன்னொரு காலத்தில் சமணப்பள்ளியாக விளங்கிப் பின்னர்ச் சிவன் கோயிலாக மாற்றப்பட்டது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

மூவர் தேவாரத்தில் பள்ளி என முடியும் சைவத் தலங்கள் பல சுட்டிக் கூறப்படுகின்றன.[146] அவை ஒருகாலத்தில் சமணப் பள்ளிகளாக விளங்கியிருக்கலாம்.

அறப்பள்ளி ஈசுவரன் கோயிலின் அருகில் தெற்கே சாலையின் கீழ்ப்புறம் முற்றுப்பெறாத சிறு சமணத் தீர்த்தங்கரர் சிலை ஒன்று மேற்கு நோக்கியவாறு காணப்படுவது மேற்கண்ட கருத்தை உறுதிப்படுத்துகிறது.

கொல்லிமலையில் மேல்கலிங்கம் சோழமுடையான் கோயிலின் பின்புறம் உள்ள சோலையில் ஒரு சமணத் தீர்த்தங்கரர் உருவம் உள்ளது. அதனைக் கொல்லிமலை மக்கள் சாத்திரமெல்லாம் கற்ற சமணாண்டிப் பாட்டன் என்றழைக்கின்றனர்.

இம்மலையிலுள்ள மட்டு வளாகம், வாசலூர்ப்பட்டி, கரையங்காடு, குண்டில் நாட்டுக் கீரைக்காடு போன்ற இடங்களில் காணப்படும் சாத்தனார் கோயில்களில் சமணத் தாக்கம் காணப்படுகிறது.

மேல்கலிங்கம், கரையங்காடு நெடுவலம், வெருகனூர், வாசலூர்ப்பட்டி ஆகிய இடங்களில் தீர்த்தங்கரர் சிலைகள் உள்ளன. இம்மலையில் உள்ள சில பெண்கள் சிற்பங்கள் சமண இயக்கியர் உருவங்களாக இருக்கலாம் என்று கூறுவர்.[147]

சித்தர்மலை

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம் நாமக்கல்லுக்கு அருகில் கிழக்கே 4 கிலோமீட்டர் தொலைவில் சித்தர்மலை எனப்படும் குன்று ஒன்று உள்ளது. அங்குக் குன்றின் சரிவிலுள்ள இயற்கைக் குகைத்தளத்தில் சமணமுனிவர்களின் படுக்கைகள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. பொதுமக்கள் இதைச் சித்தர் குகை என்றே கூறுகிறார்கள்.

சுக்காலியூர்க்கரடு

கரூர் மாவட்டம் கரூரின் தென்மேற்கே 7 கிலோமீட்டர் தொலைவில் கரூர் - திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் சாலைக்கு மேற்கே சுக்காலியூர்க்கரடு உள்ளது. சிறியமலை. அக்கரட்டின் கடைசிப்பகுதி 30 மீட்டர் உயரம் உள்ளது. அங்கு ஆறு மீட்டர் உயரத்தில் வழவழப்பாகச் செதுக்கப்பட்ட 5 கல் படுக்கைகள் உள்ளன. தலையணை போன்ற அமைப்பும் வெட்டப்பட்டுள்ளது.[148]

பொது மக்கள் 'பாண்டவர் படுக்கை' என இதை அழைக்கின்றனர். இதுபற்றிக் கல்வெட்டுகளில் குறிப்பு எதுவும் இல்லை.

செந்நாக்குன்று

நாமக்கல் மாவட்டம் மோகனூர் சர்க்கரை ஆலை அருகிலுள்ள செந்நாக்கல் பாளையத்தில் செந்நாக்குன்று என்னும் சிறு பாறைத் தொடர் உள்ளது. அதன் வடக்குச் சரிவில் உள்ள இயற்கைக் குகைத்தளத்தில் 4 கல் படுக்கைகள் வெட்டப்பட்டுள்ளன. தலையணை போன்ற திண்டு அமைப்பும் படுக்கையில் உள்ளது. அவற்றில் ஒன்றில் 'ஸ்ரீவத்சம்' என்னும் மங்கல உருவம் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. மற்றொன்றில் அழகிய மலர் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

குகைத்தளத்தில் படுக்கையின் மேல்புறம் 'சுவத்திகச் சின்னம்' பொறிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பங்களின் காலம் கி.பி. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். கிடைத்துள்ள சமணச் சிற்பங்களில் இவையே காலத்தால் முந்தையதாகும்.[149] படுக்கையில் தண்ணீர் வழியாமல் இருக்கப் பாறையில் விளிம்பு போல் வெட்டப்பட்டுள்ளது. இக்குன்றில் உச்சியில் 1970 ஆண்டு ஐயனார் கோயில் ஒன்று கட்டியுள்ளனர்.

திருச்செங்கோடு

நாமக்கல் மாவட்டத்திலுள்ள உயர்ந்த மலைகளில் ஒன்று திருச்செங்கோட்டுமலை. சங்க காலப் புலவர் செங்குன்றூர்க் கிழார் வாழ்ந்த ஊர் என்பர்.

சிலப்பதிகாரத்தில் 'செங்கோடு' என்று இளங்கோவடிகளால் சிறப்பிக்கப்படுவது. இங்குத் திருஞானசம்பந்தர் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தங்கித் தேவாரப் பதிகம் பாடியுள்ளார். அடியார்கட்கு ஏற்பட்ட நோயைத் தீர்த்துள்ளார்.

இம் மலைமேலுள்ள செங்கோட்டு வேலவர், அர்த்தனாரீசுவரர் கோயிலிலிருந்து உச்சியில் உள்ள பாண்டீசர் கோயிலுக்குச் செல்லும் வழியில் கிழக்கு நோக்கியுள்ள ஒரு இயற்கைக் குகைத்தளத்தில் 5 கல் படுக்கைகள் வெட்டப்பட்டுள்ளன. மேலே ஒன்றும் கீழே நான்குமாக அமைக்கப்பட்டுள்ளன.

திருச்செங்கோட்டிலுள்ள கோயில்கள் முதலிய திருத்தலங்களைத் தொகுத்துக் கூறும் 'திருமுக விலாசம்' என்னும் நூல்

'சொற்குமர தீர்த்தம்அன்பர் தோத்திரம்செய் ஐவர்குகை
பொற்பிலகு காஞ்சி புரவழியாம்'

என்று கூறுகிறது.[150] திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை என்னும் நூல்

'பாலகரை வந்தியர்க்கு உதவுசிலையும் பஞ்ச
பாண்டவர் இருந்த *குகையும்'*

என்று கூறுகிறது.[151]

திருமூர்த்திமலை

கோயமுத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டத்தில் திருமூர்த்தி மலை என்னும் மலை உள்ளது. திருமூர்த்தி என்பது சமண தீர்த்தங்கரரைக் குறிக்கும் சொல்லாகும்.

சூளாமணியில் அருகக் கடவுளரைக் குறிக்குமிடத்தில்

'அணியாது ஒளிதிகழும் ஆரணங்கு திருமூர்த்தி
கணியாது முழுதுணர்ந்த கடவுளென்று அறையுமே'

'திருமருவு வலன்அணிந்து திகழ்கின்ற திருமூர்த்தி
ஒருமருவும் சிலையென்பது ஒழியாமல் உணர்த்துமே'

என்று கூறப்பட்டுள்ளது. சீவக சிந்தாமணியும் அருகக் கடவுளுக்கு

'செம்பொன் வரைமேல் பசும்பொன்எழுந் திட்டதேபோல்
அம்பொன் பிதிர்வின் மறுஆயிரத் தெட்டணிந்து
வெம்பும் சுடரின் சுடரும்திருமூர்த்தி விண்ணோர்
அம்பொன் முடிமேல் அடித்தாமரை சென்னிவைப்பாம்'[152]

என்று வணக்கம் கூறுகிறது. மேருமந்திர புராணம் என்னும் நூலில்

'பூமாலை முதலாய புனையாத திருமூர்த்தி
காமாதி வென்றுஉயர்ந்த கடவுள்என் றறையுமே'

என்னும் தொடர் காணப்படுகின்றன.[153]

சமண தீர்த்தங்கரரை இவ்வாறு திருமூர்த்தி என அழைக்கும் வழக்கம் இருப்பது தெரியாமல் இம்மலையைத் திரிமூர்த்திமலை என இன்று அழைக்கின்றனர். இங்குச் சிவன், பிரம்மா, திருமால் ஆகிய மும்மூர்த்திகள் உறைவதாகக் கருதி வழிபடுகின்றனர். வேலாயுத பண்டிதர் இதனையே கருத்தில் கொண்டு திருமூர்த்திமலைப் புராணம் பாடியுள்ளார்.

அனசூயை வரலாற்றைக் கூறி ஒரு சாபத்தால் சிவன், பிரம்மா, திருமால் ஆகிய மும்மூர்த்திகளும் அவள் முன்னிலையில் குழந்தைகள் ஆன கதையைப் புராணமாகப் பாடியுள்ளார். இத்தலத்தில் அந்நிகழ்ச்சி நடைபெற்றதாக அவர் கூறியுள்ளார்.

திருமூர்த்திமலை அடிவாரத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் சென்றால் அழகான ஒரு பள்ளத்தாக்கு வழியே ஓடும் ஒரு சிற்றாற்றின் அருகே 10 மீட்டர் குறுக்களவுள்ள ஓர் உருண்டைக் கற்பாறை நிற்பதைக் காணலாம். அந்தப் பாறையின் கீழ்ப்பக்கத்தில் ஒரு தீர்த்தங்கரின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது.

அது முக்குடையின்கீழ் இரண்டு சாமரேந்திரர் இருபுறமும் நிற்கத் தியானத்தில் அமர்ந்திருக்கும் சமண தீர்த்தங்கரர் உருவமே என்பதைக் கண்டோர் அறிவர். அவ்வுருவம் சற்றுத் தலை சாய்ந்து நிற்கிறது. அதனால் அப்பாறை முன்னொரு காலத்தில் இருந்த நிலையில் இப்போது இல்லாமல் ஓரளவு சாய்ந்தோ உருண்டோ வந்திருக்க வேண்டும் என்பதை

அறியலாம். இந்தச் சமண தீர்த்தங்கரர் உருவைத்தான் வேறு பெயராக மாற்றி இந்துக்கள் வணங்கி வருகின்றனர்.

இவ்வுருவம் செதுக்கப்பட்ட காலத்தில் திருமூர்த்திமலை வட்டாரத்தில் சமண சமயம் மிகவும் செழிப்பாக இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

இப்பாறையின் அருகிலேயே அமணலிங்கேசுவரர் கோயில் என்ற சிவன் கோயில் உள்ளது. அதன் பெயரே அக்கோயில் ஒருகாலத்தில் சமணக் கோயிலாக விளங்கியிருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக்குகிறது.

இத்திருமூர்த்தி மலையில் பாறைக் கோயிலுக்கு முன்னால் சமநிலப் பாறையில் கல்வெட்டு ஒன்று பெரிய எழுத்துக்களில் வெட்டப்பட்டுள்ளது. அக்கல்வெட்டின் காலம் கி.பி. 1793 ஆகும்.

அக்கல்வெட்டின்படி அந்தச் சுவாமிக்கு அமணேசுவர சுவாமி என்பது பெயர். அவ்வட்டாரத்துக்கு அமணசமுத்திரம் சீமை என்பது பெயர். அந்த அமணசமுத்திரம் சீமையில் பெண்களுக்குத் திருமணம் செய்தால் நான்கு பொன்னுக்குள்ளாகச் சீதனம் அளிக்கவேண்டும் என்றும், மாடுகளைச் சீதனம் கொடுக்க வேண்டும் என்றும், பெண்களின் மேல் பிரியப்பட்டு அதிகப் பொன்னோ அல்லது பசுவின் காலளவு நிலமோ கொடுத்தால் கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற தோசம் வரும் என்றும் வெட்டப்பட்டுள்ளது.

திருமூர்த்திமலையின் அருகில் உள்ள தளிப்பாளையக்காரர் எத்துலப்ப நாயக்கர் காலத்தில் அக்கல்வெட்டு வெட்டப்பட்டது.[154]

தொம்பர்மலை

கோயமுத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டம் திருமூர்த்தி மலைக்கருகில் தொம்பர்மலை என்னும் மலை உள்ளது. அம்மலையில் இடிந்து கிடக்கும் ஒரு கோயில் அருகே கல்வெட்டொன்று காணப்படுகிறது. 'அமணேசுவரசுவாமி சகாயம்' என்று அக்கல்வெட்டு தொடங்குகிறது.[155]

தளிப் பாளையக்காரர் மலையாண்டி எத்துலப்ப நாயக்கர் அவர்கள் மனைவியார் ஆண்டியம்மன் என்பவர் விரோதிகிருது வருடம் மாசி மாதம்

26ஆம் நாள் செய்த கொடை ஒன்றை அக்கல்வெட்டுக் கூறுகிறது. உபையம் என்று காணப்படுவதால் அக்கோயில் பகுதி ஒன்றைக் கட்டியிருக்கலாம் என்று தெரிகிறது. அமணேசுவரசுவாமி சகாயம் என்று கல்வெட்டின் தொடக்கத்தில் கூறியிருப்பதால் அக்கோயில் சமணக் கோயிலாக இருந்திருக்க வேண்டும்.

பிள்ளைதின்னிக்கரடு

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் குமரமங்கலத்தின் தெற்கேயுள்ள போக்கம்பாளையம் கிராமத்தில் ஒரு உயர்ந்த பாறைத் தொடர் உள்ளது. அதனை உள்ளூர் மக்கள் பிள்ளைதின்னிக்கரடு என்று அழைக்கின்றனர்.

கீழே குதிரைப்பாறை என்னுமிடத்தில் பள்ளிக்கூடம் என்ற இயற்கைக் குகைத்தளம் ஒன்றுள்ளது. அருகிலுள்ள சமுத்திரப் பாளையத்து மக்கள் வைகாசி மாதம் 'அமணசாமிவிழா' என்ற பெயரில் விழாக் கொண்டாடுகின்றனர். அருகில் பாலூற்றுச் சுனை என்னும் பெயரில் சுனை ஒன்றுள்ளது. இக்கரட்டின் உச்சியில் சமண முனிவர் படுக்கைகள் வெட்டப்பட்டுள்ளன. 4 படுக்கைகள் முழுமையாகவும் ஒரு படுக்கை பாதியும் ஆக வெட்டப்பட்டுள்ளன. இப் படுக்கைகளின் மேல்புறம் ஒரே சமதளமாகப் பாறை வெட்டப்பட்டுள்ளது. அதனைப் 'பாட்டன் கடை' என்றழைக்கின்றனர். ஒருகாலத்தில் சமண முனிவர் தங்கித் தவம் நோற்ற இடமாகலாம்.

பொன்சொரிமலை

சேலம் மாவட்டம் இராசிபுரம் வட்டம் மல்லூரின் அருகே பொன்சொரிமலை என்னும் மலை உள்ளது. அம்மலையின் தெற்குப் பக்கம் இயற்கைக் குகைததளம் ஒன்றும் சமண முனிவர் படுக்கைகளும் உள்ளன. 5 படுக்கைகள் உள்ளதால் உள்ளூர் மக்கள் பஞ்சபாண்டவர் படுக்கை என்று அழைக்கின்றனர்.

குகையின் மேல்தளத்தில் சுமார் கி.பி. 15ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்தில்

'தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்'[156]

என்ற குறட்பா கல்வெட்டாக வெட்டப்பட்டுள்ளது. சமணர்கள் கொல்லாமையை முதல் அறமாகக் கொள்பவர்கள். திருக்குறளைச் சமணர் தங்கள் வேதம் என்பர்.[157] அதனால் தம் முனிவர் வாழ்ந்த குகைத்தளத்தில் இக்குறளை வெட்டி வைத்துள்ளனர்.

சமணக் கோயில்கள்

கொங்கு நாடெங்கும் சமண சமயம் பரவலாக இருந்துள்ளதைப் பார்க்கும்பொழுது இங்குச் சமணக் கோயில்கள் பல இருந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது. காலப் போக்கில் அவற்றுள் பெரும்பாலானவை அழிந்துவிட்டன. அவற்றுள் சில வேறு சமயக் கோயிலாக மாற்றப்பட்டு விட்டன.

கட்டுமானக் கோயிலாக - சமணப் பள்ளியாக - இன்று எஞ்சியிருப்பவை ஆறு கோயில்களே. ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டத்தில் சீனாபுரம், திங்களூர், விசயமங்கலம், ஈரோடு வட்டத்தில் பூந்துறை, வெள்ளோடு, கோயம்புத்தூர் மாவட்டம் அவிநாசி வட்டத்தில் ஆலத்தூர் ஆகிய இடங்களில் மட்டுமே சமணக் கோயில்கள் எஞ்சியிருக்கின்றன.

மற்றும் சில இடங்களில் சிலைகள் மட்டுமே காணக்கிடைக்கின்றன. அவ்விடங்களிலும் முன்பு சமண சமயக் கோயில்கள் இருந்திருக்க வேண்டும்.

மேற்கண்ட ஊர்களில் சமணக் குடியிருப்பு அருகியது. ஆயின் பூந்துறையிலும், விசயமங்கலத்திலும் மட்டுமே திகம்பர சமண சமயக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அங்குச் சமண அர்ச்சகர்கள் பூசை செய்து வருகின்றனர். கொங்கு நாட்டின் வேறு எந்தப் பகுதியிலும் பழைய திகம்பர சமணக் குடும்பங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆலத்தூர்

கோயம்புத்தூர் மாவட்டம் அவிநாசி வட்டத்தில் ஆலத்தூரிலுள்ள சமணப்பள்ளி வீரசங்காதப் பெரும்பள்ளி என்றழைக்கப்படுகிறது.[158] சிறு அளவிலான சமணப் பள்ளியிலிருந்து வேறுபட்டுப் பெரியவையான சமணப் பள்ளிகள் பெரும்பள்ளிகள் என அழைக்கப்பட்டன.[159] சில பௌத்தப் பள்ளிகளும் பெரும்பள்ளிகள் எனப் பெயர் பெற்றிருந்தன.[160]

தீர்த்தங்கரர் ஆடை, அணிகலன்கள் எதுவும் அணியாமல் உள்ளார்; இருப்பினும் மிகவும் அழகாக உள்ளார் என்ற பொருளில் அணியாத அழகர் என்றழைக்கப்பட்டார்.[162]

'அணியாது ஒளிதிகழும் ஆரணங்கு திருமூர்த்தி'[163]

'அணிவன அணியா அழகா ஜெய ஜெய'[164]

எனச் சமண இலக்கியங்களும் தீர்த்தங்கரரை அழைக்கின்றன.

ஆலத்தூர்க் கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் மட்டும் உள்ள கோயில். கருங்கல் திருப்பணி. முன்பகுதிக் கட்டிடம் சரிந்து விழுந்துள்ளது. கோயிலின் உள்ளே செல்ல வழியில்லை. ஏனைய சிற்பங்களோ ஒன்றும் இல்லை. கோயிலுக்கு வெளியே கிடந்த தீர்த்தங்கரர் சிற்பம் தற்போது கோவையில் உள்ள தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலில் ஐந்து தமிழ்க் கல்வெட்டுகள் உள்ளன. மூன்று கல்வெட்டுகள் தமிழ் எழுத்திலும், இரண்டு கல்வெட்டு வட்டெழுத்திலும் எழுதப்பட்டுள்ளன.[165]

கருவறை நிலையில் உள்ள கல்வெட்டு அந்நிலையைக் கல்லூர் நீலஞ்செல்லன் என்பவர் தன் மணவாட்டி காவஞ்சாத்தியையும், மகள் செல்லப் பணத்தியையும் சாத்தி நாட்டுவித்தான் என்ற செய்தியைத் தெரிவிக்கிறது.[166]

மகாமண்டபத் தென்சுவரில் உள்ள கல்வெட்டு அம்மண்டபத்தைக் கட்டியவர் பெயரை விரிவாகக் கூறுகிறது. வடபரிசார நாட்டு ஆலத்தூர் சமண தர்மத்தாரில் அகத்திய கோத்திரம் கமலநாத சிந்தாமணி தேவர் அத்த வீரிய தேவர் என்பவர் அம் மண்டபத்தை எடுப்பித்துள்ளார். குடங் கொண்டு கோயில் உட்புகுந்து பூசை செய்பவர்களும், நம்பி நேமிநாதனும் இவ்வறத்தைக் காக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.[167]

சமணப் பள்ளிக்கு எதிரில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு அப்பள்ளியைப் புதுப்பித்தவர் பெயரைக் கூறுகிறது.[168]

சிந்தரையன் மகளார் நம்பிராட்டியார் வானவன் மாதேவியாரின் சித்தப்பா ஆலத்தூர் அடிகள் என்பார் அக்கோயில் நிர்வாகம் செய்யும்

பொழுது பெருமானடிகள் நாமத்திலே அக்கோயிலைப் புதுக்குவித்தார் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

மேற்குச் சுவர்க் கல்வெட்டு போசள மன்னன் வீரவல்லாளதேவர் காலத்தில் ஆங்கிரச வருடம் ஆடிமாதம் 2ஆம் தேதி (29-6-1332) இக் கோயிலில் நடைபெற்ற வழக்கொன்றையும் அது தீர்ந்த விவரத்தையும் விரிவாகக் கூறுகிறது.[169] தெண்ணாயக்கர் கோட்டைக்குத் தெற்கு ஆறுநாட்டு நாட்டவர் அவ் வழக்கைத் தீர்த்துள்ளனர்.[170]

சமணர்கள் ஆலத்தூர் முழுவதும் சமண தேவருக்குச் சோழன் சக்கரவர்த்தியால் கொடுக்கப்பட்டது என்று கூறினர்.

சைவர்கள் ஆலத்தூரை அவிநாசி ஆளுடையாருக்குத் திரிபுவனச் சக்கரவர்த்தி கொடுத்தார் என்று கூறினர். இரு சாராரும் ஆலத்தூருக்கு உரிமை கொண்டாடினர்.

இவ் வழக்கு ஆறுநாட்டுச் சபைக்கு விசாரணைக்காகச் சென்றது. சோமப்பத் தெண்ணாயக்கன் முன்பாகவும், ஆறு நாட்டார் முன்பாகவும் முறைப்பாடு செய்தனர்.

இரு சாராரும் சான்றாகத் தத்தம் சாசனத்தைக் காட்டினர். இரண்டு சாசனங்களையும் பார்த்து இரண்டும் சரியான பழைய சாசனங்களாகத் தெரியவே ஆலத்தூரை இரண்டு கோயிலுக்கும் பொதுவாகச் செய்து மறு சாசனம் எழுதித் தரப்பட்டது.

14ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டில் நடைபெற்ற நீதி முறையை இந்தக் கல்வெட்டு மிகவும் தெளிவாக விளக்குகிறது.

சீனாபுரம்

ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை - திங்களூர்ப் பாதையில் 7 கி.மீ. தொலைவில் உள்ள மமுட்டித்தோப்பு என்னுமிடத்தில் பகவான் ரிஷபதேவர் கோயில் உள்ளது.[171] முதல் தீர்த்தங்கரருக்கு எடுக்கப்பட்ட சிறு கோயில்.

அரைமீட்டர் கல் கட்டிடத்தின் மேல் செங்கல்லாலும் சுதையாலும் கட்டப்பட்ட கோயில். சுதை வேலைப்பாட்டிலான சில உருவங்கள் உள்ளன. அவை அழிந்த நிலையில் உள்ளன. தெற்குப் பார்த்து அமைக்கப்பட்ட கோயில்.

கோயில் 9 மீட்டர் நீளமும் 4½ மீட்டர் அகலமும் உடையது. கருவறையும் ஒரு முன்மண்டபமும் மட்டுமே கொண்ட சிறு கோயில். கோயிலின் முன் 1 மீட்டர் நீளம் அகலமுள்ள சமசதுர மேடை ஒன்றுள்ளது. கோயிலின் முன்னர் 5 மீட்டர் தூரத்தில் பலிபீடம் உள்ளது.

கருவறையில் 1 மீட்டர் உயர அளவுள்ள ரிஷபதேவர் எழுந்தருளி யுள்ளார். 2 நாகர் சிற்பங்கள் உள்ளன. கோயில் கதவு எப்பொழுதும் திறந்தவண்ணம் இருக்கிறது. பவணந்தி முனிவர் வாழ்ந்து வழிபட்ட கோயில். நன்னூல் பாயிரத்தில் இச் சீனாபுரம் 'பொன்மதிற் சனகை' என்று குறிக்கப்பட்டுள்ளது.

ஊர் நிருவாக அலுவலர் 'பஸ்தி ஆதீசுவரர்' என்று குறித்துள்ளார். பஸ்தி என்பது சமணக் கோயிலைக் குறிக்கும். 65 ஆண்டுகட்கு முன்னர் விசயமங்கலத்திலிருந்து சூரய்யர் என்பவர் வாரம் ஒருமுறை வந்து பூசை செய்து செல்வார் என்று கூறுகின்றனர்.

அருகேயுள்ள தோட்டத்தில் வாழும் நாயக்கர் முன்பு நாள்தோறும் தீபம் ஏற்றுவாராம். இப்போது பூசையும் இல்லை. தீபம் எற்றப்படுவதும் இல்லை. உள்ளூர்ப் பொது மக்களைக் கோயிலைப் பற்றிக் கேட்டால் 'சீனாக்காரர் கோயில்' 'சார்க்கார் கோயில்' என்று கூறுகின்றனர்.[172] அப்படி அங்கு ஒரு புகழ்வாய்ந்த பழங்கோயில் இருப்பது பற்றி யாரும் எந்த எண்ணமும் இல்லாமல் இருக்கிறார்கள்.

சீனாபுரத்தின் அருகில் உள்ள நமிட்டிப் பாளையத்தில் 27 ஏக்கர் 61 சென்ட் நிலமும், தலையம்பாளையத்தில் 22 ஏக்கர் நிலமும் இக் கோயிலுக்கு இருந்ததென்று கூறுகிறார்கள்.[173]

திங்களூர்

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் திங்களூர் அருகே தென்புறம் சுங்கக்காரன்பாளையம் செல்லும் வழியில் உள்ள கோயில். தோட்டத்தின் நடுவே கிழக்குப் பார்த்தவண்ணம் புஷ்பதந்த தீர்த்தங்கரர் கோயில் உள்ளது. புஷ்பதந்த தீர்த்தங்கரர் 24 சமண தீர்த்தங்கரரில் ஒன்பதாமவர்.

கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் எனக் கோயில் மூன்று பாகங்களை உடையது. புஷ்பதந்தர் சிற்பம் 45 செ.மீ. உயரம் உள்ள சிறு

உருவம். மகாமண்டபத்தில் தென்சுவர் மத்தியில் ஒரு சிறு அறையில் பிரம இயக்கனுடைய உருவம் இருக்கிறது.

10ஆம் தீர்த்தங்கரராகிய சீதளநாத தீர்த்தங்கரர் உருவமும், குதிரை வாகனமும் உள்ளதாக 40 ஆண்டுகட்குமுன் கோவைகிழார் எழுதியுள்ளார். இப்போது அவை அங்கு இல்லை.

மகா மண்டபத்தில் 4 தூண்கள் உள்ளன. அத்தூண்களில் துவார பாலகர், குதிரை, அன்னம், பசு, முனிவர் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. முக்குடை, பார்சுவநாதர், கோமடேசுவரர், மகாவீரர் நின்ற நிலையிலும் அமர்ந்த நிலையிலும், மலைமீது தவம் செய்யும் நிலையிலும் தீர்த்தங்கரர் உருவங்கள் ஆகிய சமண சமயம் தொடர்பாக சிற்பங்களும் உள்ளன.

மும்மூர்த்தி, தண்டபாணி, விநாயகர் சிற்பங்களும் உள்ளன. அவை இந்து சமயத்தின் தாக்கமாகும். இரட்டை நாகர் சிற்பங்களும், 5 தலை நாகர் சிற்பங்களும் உள்ளன. இந்து சமயம் போலவே சமண சமயத்திலும் நாகர் வழிபாட்டுக்கு உரியனவைகளாக விளங்குகின்றன.

கருவறை கல்லால் கட்டப்பட்டுள்ளது. அர்த்த மண்டபம், மகா மண்டபங்கள் செங்கல்லால் கட்டப்பட்டுச் சுதை பூசப்பட்டுள்ளது. கல்லால் அடுக்கிக் கட்டப்பட்டிருந்த சுற்றுச் சுவர் சிதைந்து விட்டது. இக் கோயிலின் தென்கிழக்கு மூலையில் வடக்குப் பார்த்த நிலையில் மடைப்பள்ளி உள்ளது.

இக்கோயிலில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. மடைப்பள்ளி நிலையில் உள்ள கல்வெட்டு கோனாட்டான் விக்கிரம சோழனின் 40ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு.[174] சாலிவாகன சகம் 967இல் வெட்டப்பட்டது. கி.பி. 1045ஆம் ஆண்டுக்குரிய சாசனம். முன் மண்டபத்தின் பெயர் சிங்களாந்தகன் என்றும், அதனை எடுப்பித்தவர் அறத்துளான் முத்தன் பொன்னனான கணித மாணிக்கச் செட்டி என்பவர். இக் கல்வெட்டில் திங்களூரில் பெயர் 'சந்திரவசதி' என்று குறிக்கப்பட்டுள்ளது. பஸ்தி என்ற சமணச் சொல் தமிழில் 'வசதி' என்று வழங்கப்படுகிறது.

திங்களூர்ச் சிவன் கோயில் கல்வெட்டிலும் இவ்வூரின் பெயர் சந்திர புரம்,[175] சந்திரபுரி[176] என்று கூறப்பட்டுள்ளது. பத்திரபாகு முனிவர் காலத்தில் தென்னகம் வந்த சந்திரகுப்த மௌரியர் சிரவணபெள

கொளாவில் சல்லேகனை விரதமிருந்து உயிர் துறந்தார். சிரவணபெள கொளாவில் அவர் உயிர் துறந்த மலை சந்திரகிரி என்றும், அவர் நினைவாக எடுக்கப்பட்ட கோயில் சந்திரபஸ்தி, சந்திரகுப்த பசதி என்று அழைக்கப்படுகிறது. சந்திர குப்த மௌரியன் காலத்தில்தான் தமிழ்நாட்டிலும் சமணம் பரவியது. எனவே திங்களூரைக் குறிக்கும் சந்திரவசதி என்னும் இப்பெயர் சந்திரகுப்த மௌரியன் பெயரால் ஏற்பட்ட கோயிலாக இருக்கலாம். சந்திரவசதி என்பது திங்களூர் என்ற மாறிவிட்டது போலும்.

கோயிலில் உள்ள மற்றொரு கல்வெட்டு போசள மன்னன் வீர வல்லாளன் காலத்துக் கல்வெட்டு. பிலவங்க வருடம் தை மாதம் முதல் மூன்று காலச் சந்தி பூசைக்கு அறிகணிநல்லூரைக் கொடையாகக் கொடுத்த விவரம் கூறப்பட்டுள்ளது.[177]

இக்கல்வெட்டின் புஷ்பதந்த தீர்த்தங்கரர் பூமேந்திரர் என்று குறிக்கப்படுகிறார். அறிகணிநல்லூர் என்பது தொண்டை நாட்டில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திருக்கோவலூரை அடுத்துள்ள அறையணி நல்லூர் என்னும் சமணத் தலமாக இருக்கலாம்.

பலிபீடத்தில் உள்ள கல்வெட்டு வேதம் பாடும் பிச்சப்பெருமாள் மகன் முனிவிலிடு முப்பிரான் என்பவர் அப்பலிபீடத்தை அமைத்தார் என்று கூறுகிறது.[178]

பூந்துறை

ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு-அறச்சலூர் சாலையில் 12 கி.மீ. தொலைவில் உள்ள ஊர் பூந்துறை. கொங்கு 24 நாடுகளில் முதன்மையாகக் கருதப்படும் நாடான 'பழம்பூந்துறை' நாட்டின் தலைநகர்.

பூந்துறையில் அரசினர் மேல்நிலைப்பள்ளியின் வடபுறம் உள்ள பழைய சந்தை மேட்டில் பார்சுவநாத தீர்த்தங்கரர் கோயில் உள்ளது. தெற்கு நோக்கி உள்ள கோயில். முன் மண்டபத்துடன் கூடிய கருவறை மட்டும் உள்ள சிறுகோயில். இப்போது புதிதாகச் சுவர் இல்லாமல் தூண்கள் நிறுத்தி முன் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. 8 மீட்டர் நீளமும் 3 மீட்டர் அகலமும் உள்ள கோயில்.

திகம்பர சமணக் கோயிலான பூந்துறை பார்சுவநாத தீர்த்தங்கரர் கோயிலுக்குக் கோயம்புத்தூர், ஈரோடு நகர்களில் உள்ள சுவேதாம்பர

சமண சமயத்தவர்களும் இப்போது வந்து வணங்கிச் செல்கின்றனர். இவர்கள் குஜராத், ராஜஸ்தான் பகுதியிலிருந்து அண்மையில் வணிகத்தின் பொருட்டு இப்பகுதிகளில் குடியேறியவர்கள் ஆவர்.

அதனால் முன்பு அணியாத அழகராகத் திகழ்ந்த பார்சுவநாதர் இப்போது ஆடை அணிகலன்களுடன் திகழுகிறார். இவ்வாறான மாற்றத்திற்குப் பூந்துறைத் திகம்பர சமணக் குடும்பம் உடன்பட்டுவிட்டது. ஆனால் விசய மங்கலம் திகம்பர சமண சமயக் குடும்பத்தார் இம்மாற்றத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர்.

இக்கோயில் சக ஆண்டு 1423ஆம் ஆண்டு (கி.பி. 1508) திருப்பணி செய்யப்பட்டதாகக் கிழக்குச் சுவர்க் கல்வெட்டுக் கூறுகிறது.

இங்குப் பார்சுவநாதருடன் இயக்கி பத்மாவதியின் உருவச்சிலையும் உள்ளது. கொங்கு மண்டல சதகம் பாடிய கார்மேகக் கவிஞர் இப்பார்சுவநாதர் பற்றிப் பாடல் ஒன்று இயற்றியுள்ளார்.

'பச்சை மணிவடிவாய்ப் பாரில்விசுவ சேனன்அகம்
மெச்சும் வடிவாய் வெளிவந்த-உச்சிதனாம்
பாரிச நாதன் பதம்நினைந்தோர் வாழ்வாரே
சீரிசை நூல் இன்பம் சிறந்து'

என்பது அப்பாடலாகும்.[179]

இனாம் தாசில்தார் இராபின்சன் காலத்தில் 30 ஏக்கர் மானியம் விடப்பட்டதாகக் கூறுகின்றனர். இப்போது மானியம் ஏதும் இல்லை.

இவ்வூரில் வாழ்கின்ற திகம்பர சமணக் குடும்பத்தினர் சமணர் முறைப்படி மாலை 6 மணிக்கு முன்பு சாப்பிட்டு விடுகின்றனர். இரவு உணவு உண்ணக்கூடாது என்ற சமண சமயக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றனர். யுகாதி, தீபாவளி, கௌரி நோன்பு ஆகிய பண்டிகைகளைக் கொண்டாடி வருகின்றனர்.

விசயமங்கலம்

ஈரோடு மாவட்டத்தில் சென்னை - கொச்சி தேசிய நெடுஞ்சாலையில் பெருந்துறையிலிருந்து 10 கி.மீ. மேற்கே விசயமங்கலம் உள்ளது. கொங்கு 24 நாடுகளில் ஒன்றான குறுப்பு நாட்டின் தலைநகர். விசயமங்கலப் பகுதி குறுப்பு நாட்டின் தென்பகுதி. அதனால் அப்பகுதி

தென் குறுப்புநாடு என்றழைக்கப்பட்டது. தென்குறுப்பு நாட்டுக்கு வீரசோழபுர நாடு என்றும் பெயருமுண்டு. சில ஆவணங்களில் இப்பகுதி திருவாய்ப்பாடி நாடு, கோட்டைசூழ் நாடு என்றும் குறிக்கப்பெறும்.

'விசயமங்கலம்' என்ற பெயர் சமணர் இங்கு பெற்ற வெற்றியால் பெற்ற பெயர் என்று சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் கூறுகிறார்.[180] பாண்டவர்கள் வனவாசம் முடிந்து மறைந்து வாழ்ந்த அஞ்ஞாதவாச காலத்தில் அவர்களுள் ஒருவனான அருச்சுனன் தன் வில்லை அடைக்கலமாக வைத்த இடம் இவ்வூர் என்றும், அருச்சுனனுக்கு விசயன் என்றும் பெயர் இருப்பதால் விசயன் மங்கலம்-விசயமங்கலம் ஆயிற்று என்பர்.[181] இங்குள்ள விஜயபுரி அம்மன் கோயிலில் அருச்சுனன் வில்லை அடைக்கலம் வைக்கும் சிற்பம் உள்ளது.[182]

இவ்வூர்க் கல்வெட்டொன்றில் வாகைப்புத்தூர் என்ற பெயர் வருகிறது. நன்னனும் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலும் போரிட்ட இடம் வாகைப் பெருந்துறை என்று சங்க இலக்கியம் கூறும்.[183] அவ் வாகை என்ற பெயரே சமணரால் விசயமங்கலம் ஆயிற்று என்ற ஒரு கருத்தும் உண்டு.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ் விசயமங்கலத்தின் வடபகுதியில் மேட்டுப்புத்தூர், பஸ்திபுரம், பஸ்திபாளையம், கோயில்பாளையம் எனப் பெயர் வழங்கும் இடத்தில் வீரசங்காதப் பெரும்பள்ளி என்னும் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் உள்ளது.

திகம்பர சமண சமயத்தில் ஒரு குழுவினரான வீரசங்கத்தாரால் இக்கோயில் ஏற்படுத்தப்பட்டதாக இருக்கலாம். விசயமங்கலம் அருகில் பெரிய வீரசங்கிலி, சின்ன வீரசங்கிலி என்ற ஊர்கள் உள்ளன. முதல் கொங்குச் சோழனின் அமைச்சரான வீரசங்காதச் சுற்றியதேவன் என்பார் திருப்பணி செய்ததால் வீரசங்காதப் பெரும்பள்ளி ஆகியிருக்கலாம் என்று கே.வி. சுப்பிரமணிய அய்யர் கருதுகிறார்.[184]

கோயிலுக்கு வெளியே 10 மீட்டர் உயரமுள்ள மானஸ்தம்பம் எனச் சமணர் அழைக்கும் தீபத்தம்பம் நான்கு தூண்கள் கொண்ட சதுர மண்டபத்தின் நடுவே ஓங்கி உயர்ந்து நிற்கிறது. அதன் உச்சிப்பகுதி உடைந்து கீழே கிடக்கிறது. மானஸ்தம்பம் ஒரே கல்லால் ஆனது. மானஸ்தம்பத்தின் அடிப்பகுதியில் நான்குபுறமும் சமண சமயம் தொடர்பான சிற்பங்கள் உள்ளன.

மானஸ்தம்பத்தின் கிழக்கே குந்துநாதரின் இயக்கனான காந்தர்வ இயக்கன் அன்னவாகனத்தில் உள்ளார். தெற்குப்புறம் சிம்மவாகனத்தில் மகாவீரர் அமர்ந்த கோலத்தில் உள்ளார். மேற்குப்புறம் சுவாலாமாலினியும் வடபுறம் பிரம இயக்கனும் (சாத்தன்) உள்ளனர்.

மூன்று நிலைகளையுடைய கோபுரம் கோயிலின் வாயிலில் உள்ளது. முதல் நிலைவரை கருங்கல்லாலும், மற்ற இரண்டு நிலைகள் செங்கல்லாலும் அமைந்துள்ளன. கோபுரம் அதிக கனமில்லாமல் உயர்ந்துள்ளதால் இக் கோபுரத்தை நெட்டைக் கோபுரம் என்று மக்கள் அழைக்கின்றனர். கோபுரத்தின் கிழக்கிலும் மேற்கிலும் தீர்த்தங்கரர் சிற்பங்கள் உள்ளன.

கோபுர விதானத்தின் தென்புறம் நடுவே யானைமீது சக்கரேசுவரி இயக்கி அமர்ந்திருக்கும் நிலை உள்ளது. சக்கரேசுவரியின் ஒருபுறம் பத்மாவதி இயக்கியும் அன்னப்பறவைகளும் தர்மதேவியும் உள்ளனர். மறுபுறம் குதிரை, மயில், காளை உருவங்கள் உள்ளன.

மேற்குப் பக்கம் சாமரேந்திரர் இருவர் கவரி வீசும் நிலையில் நடுவே மகாவீரரின் அமர்ந்த கோலம் காணப்படுகிறது.

வடக்குப் பக்கம் இருபுறமும் யானைகள் புடைசூழத் தீர்த்தங்கரர் ஒருவர் சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பக்கம் ஆடவர் மத்தளம், தாளம் அடிக்க நடனமாதர்கள் நடனமாடும் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இச் சதுர சிற்பங்களின் நடுவே பத்மம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதனைச் சூழ்ந்து மத்தளம் அடிப்போரும் நடன மாதரும் காணப்படுகின்றனர்.

உயர்ந்த பலிபீடத்தைக் கடந்து கோயில் உள் சென்றால் கோயில் 5 மண்டபங்களைக் கொண்டு விளங்குவதைக் காணலாம். அவை

கருவறை
அர்த்தமண்டபம்
மகாமண்டபம்
வாத்திய மண்டபம்
நிருத்தமண்டபம்

என்பனவாம்.

கருவறை

கருவறையில் எட்டாம் தீர்த்தங்கரராகிய சந்திரப்பிரப தீர்த்தங்கரர் எழுந்தருளியுள்ளார். முன்பு மூலத்தானத்தில் சுதையால் ஆன பெரிய சந்திரப்பிரப தீர்த்தங்கரர் உருவம் அமைக்கப்பட்டிருந்தது என்று கூறுகின்றனர். காலப்போக்கில் அது அழிந்த பின்னர் அபிடேகத்திற்காக வைத்திருந்த 30 செ.மீ. உயரம் கொண்ட சிறு கற்சிலையை மூலத்தானத்தில் ஒரு பீடத்தின் மேல் வைத்துள்ளனர்.

சிறு கருவறை 1½ மீட்டர் அளவுள்ள பக்கங்களைக் கொண்ட சதுர அறை. கருவறையின் உள்ளே முன்பு வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்த சுவடு தெரிகிறது. காலப்போக்கில் புகை படிந்து ஓவியத்தின் பெரும்பகுதி அழிந்துவிட்டது. அருகதேவன் அறம் உரைக்கும் மண்டபமாகிய சமவசரணக் காட்சி அங்கு வரையப் பெற்றிருந்தது என்று அங்குள்ள சமணக் குடும்பத்தினர் கூறுகிறார்கள்.

அர்த்த மண்டபம்

அர்த்த மண்டபம் என்னும் இரண்டாம் மண்டபத்தின் நடுவே ஒரு பீடத்தில் வர்த்தமான மகாவீரரின் 30 செ.மீ. உயரம் உள்ள சிறு கற்சிலை வைக்கப்பட்டுள்ளது. பொதுவாகக் கோயிலின் அர்த்த மண்டபத்தின் தெய்வீகப் படிமங்கள் வைக்கப்படுவதில்லை. வழக்கத்திற்கு மாறாக இங்கு வைக்கப்பட்டுள்ளது.

மகாமண்டபம்

கருவறை அர்த்த மண்டபத்தைக் காட்டிலும் மகாமண்டபம் பெரியது. மகாமண்டபத்தின் நடுவில் அரசண்ணாமலையிலிருந்து கொண்டு வரப்பட்ட நேமிநாதர் உருவச்சிலை வைக்கப்பட்டுள்ளது. மேற்குச் சுவர் ஓரமாக அங்கிருந்து கொண்டுவந்த நேமிநாதரின் இயக்கி கூசுமாண்டினி என்னும் அம்பிகாவின் சிற்பம் உள்ளது.

மகாமண்டபத்தில் 4 தூண்கள் உள்ளன. தூண்களில் பெண்கள், பறவைகள், விலங்குகளின் சிற்பங்கள் உள்ளன. மகாமண்டபத்தின் நடுவே 20 செ.மீ. உயரமுள்ள அனந்தநாத தீர்த்தங்கரர் சிலையும், சுவர் ஓரம் 13 தீர்த்தங்கரர் சிலைகளும் வைக்கப்பட்டிருந்தன என்று கோவைகிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் கூறுகிறார்.[185] இன்று அச்சிற்பங்கள் அங்கு இல்லை.

மகாமண்டப விதானத்தின் நான்கு புறங்களிலும் 24 தீர்த்தங்கரர்களின் சிற்பங்களும் வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு 24 தீர்த்தங்கரர்களையும் ஒன்றாக அமைக்கப்படுவதைச் 'சதுர்விம்சதி' என்பர். செஞ்சி அருகில் உள்ள திருநாதர் குன்றிலும், திருநெல்வேலி மாவட்டக் கழுகு மலையிலும் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன.

வாத்திய மண்டபம்

வாத்திய மண்டபம் மகாமண்டபத்தைவிடப் பெரிது. வாத்திய மண்டபத்தின் மேற்குப்புறம் உள்ள சிறு அறையில் சுவாலாமாலினி சிலை உள்ளது. அதன் நெற்றிப் பொட்டில் சிறு தீர்த்தங்கரர் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு மீட்டர் உயரம் உள்ள பெரிய சிற்பம். இடக்கை தொங்கவிடப்பட்ட நிலையிலும், வலக்கை மலர் ஏந்திய நிலையிலும் உள்ளன.

இதன் வெளியே சாமரேந்திரர் கவரி வீசக் கோமுக இயக்கனும், இயக்கி சக்கரேசுவரியும் உடன் நிற்கும் நிலையில் அழகிய பெரிய ஆதிநாதர் சிற்பம் வைக்கப்பட்டுள்ளது.

வாத்திய மண்டபத்தில் புலமை முத்திரையுடன் ஐந்து புலவர்கள் சிலைகள் உள்ளன. அவற்றுள் பெரிய சிலையைக் கொங்கு வேளிர் என்று கூறும் மரபு உள்ளது. பவணந்தி முனிவர், கங்க மன்னன் சீயகங்கன், பணிப்பெண் சிலைகளும் உள்ளன. சிறிதும் பெரிதுமான இரண்டு நாகர், ஐந்து தலை நாகர் சிற்பங்கள் உள்ளன.

மண்டபத்தின் கிழக்குப்புறம் சுவாலாமாலினி கோயில் எதிரில் ஒரு வாயில் உள்ளது. வாயிலின் எதிரே ஒரு சிறு பலிபீடமும் அதனருகில் வெளியில் சல்லேகனை நினைவுக்கல் ஒன்றும் கல்வெட்டுடன் உள்ளது.

நிருத்த மண்டபம்

நிருத்த மண்டபத்தில் சுற்றிலும் இருந்த சுவர்கள் இப்போது எடுக்கப்பட்டுவிட்டன. முன்பு 8 தூண்கள் மட்டுமே இருந்தன. இப்போது சுவருக்குள் இருந்த 8 தூண்களும் சேர்த்து மொத்தம் 16 தூண்கள் உள்ளன.

மையத்தில் உள்ள நான்கு தூண்களின் மட்டும் பல்வேறு சிறு சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. தீர்த்தங்கரர்கள், இயக்கர்கள், இயக்கிகள், சாத்தனார், காமதேனு, முனிவர், ஆடவர், பெண்டிர், நடனமாதர், அன்னம், மயில், இரதி, மன்மதன், இராமன், வேடன், யாழ் மங்கை, சரசுவதி, அனுமன், யாளி, கண்ணனின் காலிங்கநர்த்தனம், பாம்பணையில் அரங்கநாதர், முருகன், விநாயகர், காவடிச் சிற்பங்கள் உள்ளன.

வட்டார வழக்கில் உள்ள உள்ளூர்ச் சிற்பங்களும் இந்து சமயத்தின் தாக்கமுள்ள சிற்பங்களும் இங்கே காணப்படுகின்றன.

நிருத்த மண்டபத்தின் கிழக்குப் பகுதியில் புளிஅப்பையின் நிசீதிகைக்கல் உள்ளது. கங்க மன்னனின் தளபதியாகிய சாமுண்டராசன் தங்கை புளிஅப்பை கி.பி. 10ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கு சல்லேகனை விரதமிருந்து உயிர் துறந்துள்ளாள்.

நிருத்த மண்டப விதானத்தைச் சுற்றிலும் நான்கு புறமும் ரிஷப தேவராகிய ஆதிநாதரின் வரலாற்றுச் சம்பவங்களை விளக்கும் ஸ்ரீ புராணச் சிற்பங்கள் வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ளன.

முதலில் கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு என்னும் திசைகளுக்குரிய இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் முதலிய அட்டதிக்குப் பாலகர்கள் தத்தம் வாகனங்களுடனும், ஆயுதங்களுடனும் காட்சியளிக்கின்றனர்.

அடுத்து இராமன், இலட்சுமணன், பஞ்சபாண்டவர் ஆகியோர் உள்ளனர். சிம்ம வாகனத்துடனும், குழந்தையுடனும் உள்ள அம்பிகா சிற்பம் அடுத்து உள்ளது.

நாபி மகாராசா, மருதேவி அம்மன் என்னும் ஆதிநாதரின் பெற்றோர் திருமணக்காட்சி, தேவர்கள் மலர் தூவல், பள்ளியறை, மருதேவி கருவுறுதல், ஆதிநாதரைப் பெற்றெடுத்தல், தேவர்கள் ஆடல் பாடலுடன் குழந்தைக்கு நீராட்டுதல், பரிநிர்வாணக் காட்சி ஆகியவை சிறுசிறு சிற்பங்களாக மிக அழகிய முறையில் செதுக்கப்பட்டுள்ளன. இவை மிகவும் அரிய சிற்பங்களாகும். காஞ்சிபுரத்தை அடுத்துள்ள திருப்பருத்திக்குன்றில் இக்காட்சிகள் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன.

கோயிலின் தென்மேற்கு மூலையில் மடைப்பள்ளி உள்ளது. அதனுள்ளேயும் சல்லேகனைச் சிற்பம் ஒன்றுள்ளது. இக்கோயிலின் வடகிழக்கு மூலையில் ரிஷபதேவராகிய ஆதிநாதருக்கு எடுத்த கோயில் குறைப் பணியாக முற்றுப் பெறாமல் நின்ற நிலையில் உள்ளது.

கல்வெட்டுகள்

விசயமங்கலம் வீரசங்காதப் பெரும்பள்ளி எனப்படும் சந்திரப் பிரப தீர்த்தங்கரர் கோயிலில் ஒன்பது கல்வெட்டுகள் உள்ளன.

நிருத்த மண்டபத்தில் பதிக்கப்பட்டிருந்த கல் ஒன்றின் விளிம்பில்

'பெருங்கதையின் அழகிலும்
பெருமையிலும் மூழ்கியிருக்கிறது'

என்னும் பொருள் தரக்கூடிய வடமொழிக் கல்வெட்டு ஒன்று நாகரி எழுத்தில் பொறிக்கப்பட்டிருந்தது.[186] அதன் வாசகம்

'ஸ்ரீ பிர்கத் கதா லாவண்ய ரத் பிரதாபஹ:'

என்பதாகும். அக்கல் வழவழப்பாக அழகான முறையில் செதுக்கப்பட்டுள்ளது. ஒருபுறம் சுவத்திகச் சின்னமும், இருபுறமும் பிரபை வைக்கக்கூடிய வகையில் இரு துளைகளும் இருக்கின்றன. அது பெருங்கதை மொழிபெயர்ப்பைக் குறிக்கும் கல்வெட்டாக இருக்கலாம். கொங்கு வேளிரின் விசயமங்கலத்தில் இக் கல்வெட்டுக் கிடைப்பது இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறும் செய்தியாகும்.

நிருத்த மண்டபத்தில் உள்ள தூண் ஒன்று சல்லேகனை நினைவுத் தூணாக விளங்குகிறது. அதில் மிக முக்கியமான கல்வெட்டொன்று பொறிக்கப்பட்டுள்ளது.[187]

கங்க மன்னர்கள் இரண்டாம் மாறவர்மன், இரண்டாம் இராசமல்லன் தளபதியும் அமைச்சனுமாகிய சாமுண்டராயன் சிரவண பௌகொளாவில் புகழ் வாய்ந்த கோமடேசுவரர் என்னும் பாகுபலி சிற்பத்தை நிறுவியவர். அம்மாபெரும் செயலைச் செய்த சாமுண்டராயனின் தங்கை புளிஅப்பை என்பவள் விசயமங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயிலில் சல்லேகனை விரதமிருந்து உயிர் துறந்திருக்கிறாள். அப் புளிஅப்பையின் நினைவுக் கல்லாகிய நிசீதிகைக்கல் தூண் அமைப்பில் நிறுவப்பட்டுள்ளது.

தீர்த்தங்கரர் உருவம் மேலும், அதன் கீழ் புளிஅப்பை உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் அடுத்த பக்கத்தில் அந்நிகழ்ச்சியைக் குறிக்கும் கல்வெட்டும் உள்ளது.

கோவிராசகேசரி குலோத்துங்க சோழன் என்னும் கொங்குச் சோழ மன்னனின் 14ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு நிசீதிகைக் கல்லின் வடக்கு, மேற்குப் பக்கங்களில் வெட்டப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு சகர யாண்டு 1085இல் பொறிக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 1163ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டாகும்.[188]

விசயமங்கலம் வீரசங்காதப் பெரும்பள்ளியுடைய தேவருக்கு மூன்று கலநெல் விதை விதைக்கக்கூடிய நிலம் கொடையாக அளிக்கப்பட்டதை அக்கல்வெட்டுக் கூறுகிறது. அந்நிலத்தின் வருவாயிலிருந்து தேவ காலால் நான்கு நாழி நெல் அமுதுபடிக்குக் கொடுக்கப்பட்டது. இருங்கோள நாட்டார் காவலில் நிலம் கொடையாக விடப்பட்டது என்ற விவரம் தெரிகிறது.

கொங்கு அரசர் ஒருவரின் 46ஆம் ஆட்சியாண்டில் சகர யாண்டு 1189இல் (கி.பி. 1267) விசயமங்கலத்தில் உள்ள படைத்தலை வேளாளர்களில் திருவானைக்காவுடைய சொக்கன் என்பவன் வாத்திய மண்டபத்தில் கிழக்கு வாயில் நிலை செய்வித்ததாக இடப்பக்க நிலைக் கல்வெட்டுக் கூறுகிறது.[189]

அதே வாயிலில் வலது நிலையில் உள்ள கல்வெட்டில் கார்த்திகைத் திங்களில் வேளிரையும், தேவராசாரியரையும், தோழன்மாரையும் எழுந்துருளுவித்து விஷு அயன சங்கராந்திக்கு ஆறுநாழியும், திருக்கார்த்திகைக்கு 12 நாழியும் அமுதுபடிக்கு அளித்ததைக் கூறுகிறது. இரண்டு திருவிளக்கு ஏற்ற வேண்டும் என்றும் இக்கொடை ஸ்ரீ வத்சகோத்திரத்தில் சிலவர் பிள்ளை பெரிய நாட்டில் பண்டிதப் பெருமாள் கெங்கை ஆழ்வார் வசம் அளிக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது. இதற்காக ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு 2 கொடுக்கப் பெற்ற செய்தியும் தெரிவிக்கப் பெற்றுள்ளது.[190]

கோயிலின் கிழக்குச் சுவருக்கு வெளியே கோயிலுக்குரிய தீர்த்தக் கிணறான பீம தீர்த்தக் கிணற்றில் இரண்டு கல்வெட்டுத் துண்டுகள் உள்ளன.

கொங்குப் பாண்டிய மன்னன் வீரபாண்டியனின் 27ஆம் ஆட்சியாண்டு சகரயாண்டு 1210இல் (கி.பி. 1288) வடகரைநாட்டு வெள்ளாளன் கொடுத்த கொடையை ஒரு கல்வெட்டுத் துண்டு அறிவிக்கிறது. மற்றொரு கல்வெட்டில் வீரசங்காதப் பெரும்பள்ளி என்று கோயில் பெயர் மட்டும் பொறிக்கப்பட்டுள்ளது.

வாத்திய மண்டபக் கல் ஒன்றில் கன்னடக் கல்வெட்டு ஒன்றுள்ளது. நந்தன வருடம் மாசி மாதம் சுக்கில பட்சம் பிரதமை என்று நாள் மட்டும் பொறிக்கப்பட்டுள்ளது.

சகாப்தம் 1334ஆம் ஆண்டு (கி.பி. 1412) விசய நகர மன்னன் வீரஹரிகர உடையார் காலத்தில் வடபரிசாரநாடு, வெங்கரை நாடு, நாலூர்ப்பற்று நாடு, பேரூர் நாடு, குறுப்பு நாடு, வீரசோழபுர நாடு ஆகிய கோட்டை சூழ்ந்த ஆறு நாட்டுக்கு உரியவர்கள் விசயமங்கலம் அணியாத அழகியார்க்குப் பூசைக்காகக் குறுப்பு நாட்டுச் செங்கறப்பள்ளியில் பள்ளிச்சந்தமாக நிலம் கொடுத்ததைக் கிழக்குச் சுவர்க் கல்வெட்டுக் கூறுகிறது.[191]

வெள்ளோடு

ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு - சென்னிமலை வழியில் 15ஆம் கிலோமீட்டரில் உள்ள ஊர் வெள்ளோடு. வெண்மணல் நிறைந்த ஓடை ஒன்று இங்குள்ளது. அதனால் அது வெள்ளோடை எனப்பட்டது. பின் அப்பெயர் மருவி வெள்ளோடு என்று ஊருக்குப் பெயராயிற்று.

ஊரின் வடக்கே வயலின் நடுவில் ஒரு மேடான பகுதியில் தெற்குப் பார்த்து 8 மீட்டர் நீளமும் 3½ மீட்டர் அகலமும் உள்ள நீள்சதுர அமைப்புள்ள ஒரு கோயில் உள்ளது. கருவறை, அர்த்த மண்டபம் உள்ள கோயில் முதல் தீர்த்தங்கரராகிய ஆதிநாதருக்கு எடுக்கப்பெற்ற கோயில்.[192] கருங்கல் பீடத்தின் மேல் சுதையால் அமைந்த கோயில். தூண்களோ சிற்பங்களோ எதுவுமில்லை.

1929இல் நாகய்யர் என்பவர் பூசை செய்ததைப் பார்த்ததாகக் கோவைகிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் எழுதியுள்ளார். 40 ஆண்டுகட்கு முன்பு (1889) கல்வெட்டுக்கள் இருந்ததாகக் கோவை கிழாரிடம் நாகய்யர் கூறியுள்ளார்.[193]

இக்கோயிலில் இப்போது கல்வெட்டுகள் எதுவுமில்லை. இக்கோயிலில் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் சிலையும் உள்ளது. இப்போது பூந்துறைச் சமணக் குடும்பத்தார் மேற்பார்வையில் இக்கோயில் உள்ளது. பூசை நடப்பதில்லை.

சமண உருவங்கள்

கொங்கு நாட்டில் சில இடங்களில் கட்டுமானக் கோயில்கள் இன்றிச் சமண உருவச் சிலைகள் மட்டும் காணப்படுகின்றன. ஏற்கெனவே அங்கிருந்த சமணக் கோயில்கள் காலப்போக்கில் அழிந்திருக்கலாம்; அல்லது கோயில் இன்றித் தனியாக வழிபாட்டுக்காகச் செய்யப்பெற்ற 'தரிசன பிம்பங்கள்' என்பனவாகவும் இருக்கலாம்.

செப்புப் படிமம் உள்ள இடம்

ஆறகளூர்; தேவண்ணகவுண்டன் கிடையூர்

கற்சிலைகள் உள்ள இடங்கள்

ஆறகளூர்	புலியூர்
கோயில்பாளையம்	பெரியபட்டி
தேவம்பாடிவலசு	பொங்கலூர்
பரன்சேர்பள்ளி	பொட்டனேரி
பருத்திப்பள்ளி	

கற்சிலைகள் இருந்து மறைந்த இடங்கள்

ஈரோடு; காங்கேயம்; தாராபுரம்; பழங்கரை

செப்புப் படிமம் - ஆறகளூர்

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் உள்ள ஆறகளூர் பழமையானதோர் ஊராகும். ஆறு (6) அகழிகளையுடைய ஊர் என்றும், ஆறு (நதி) அகழியாக உடைய ஊர் என்றும் கூறுவர். வாண அரசர்களுக்குத் தலைநகராக விளங்கிய ஊர்.

அங்குள்ள திருக்காமீசுவரம் உடைய நாயனார் என்னும் சிவன் கோயிலில் நின்றநிலையில் நேமிநாத தீர்த்தங்கரர் உருவமும், இயக்கி அம்பிகாவின் உருவமும் பஞ்சலோகச் சிற்பமாக உள்ளன. அவை கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.[194]

நேமிநாதரின் இயக்கி அம்பிகாவின் உருவம் தமிழ்நாட்டுக் கலை மரபைப் பின்பற்றிச் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. கீழைச் சாளுக்கியர் கலை மரபிலும், கி.பி. 10ஆம் நூற்றாண்டில் விளங்கிய ஆந்திரா - கருநாடகக் கலைமரபிலும் செய்யப்பெற்ற செப்புத் திருமேனி என்று தெரிகிறது. இதே போன்று காட்சியளிக்கும் இயக்கி அம்பிகாவின் செப்புத் திருமேனி ஒன்று ஆந்திர மாநிலத்தில் பாபட்லா என்னுமிடத்தில் கிடைத்துள்ளது.[195]

நேமிநாதர் உருவம் நின்ற நிலையில் ஒரு பீடத்தின் மேல் இருக்கு மாறு வடிக்கப்பட்டுள்ளது.

காமீசுவரர் கோயில் கல்வெட்டொன்றில் 'பள்ளிச்சந்தம்' குறிக்கப் பட்டுள்ளது.[196] எனவே அங்கு முன்பு சமணப்பள்ளி ஒன்று இருந்திருக்க வேண்டும். காலப்போக்கில் அவை அழிந்துவிடவே இச் செப்புப் படிமங்களைச் சிவாலயத்தில் வைத்து விட்டனர் போலும்.

தேவண்ணகவுண்டன் கிடையூர்

இங்கு கிடைத்த மூன்று தீர்த்தங்கரர் செப்புப் படிமங்கள் சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளன, அவற்றுள் நின்ற நிலையில் இரு 'சுபார்சுவநாதர்' படிமங்களாகும் (1989).

கற்சிலைகள் - ஆறகளூர்

சமணச் செப்புப் படிமங்கள் உள்ள ஆறகளூர் காமீசுவரர் திருக் கோயிலில் மாக்கல்லால் செய்யப்பட்ட தீர்த்தங்கரர் உருவம் ஒன்றுள்ளது. அம் மாக்கல் சிற்பமும் கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

கோயில்பாளையம்

கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூர் வட்டம் கோயில் பாளையம் பழமையானதோர் ஊர். சர்க்கார் சாமக்குளம், கவசை என்றும் அழைக்கப்பெறும் ஊர். அவ்வூரில் சமண தீர்த்தங்கரர் உருவம் ஒன்று உள்ளது. ஊருக்கு மேற்கேயுள்ள சாலை ஓரத்தில் உள்ள விநாயகர் கோயிலில் விநாயகருக்கு அருகே இச்சிலை வைக்கப்பட்டுள்ளது. விநாயகருக்குப் பூசை நடைபெறும்போது தீர்த்தங்கரருக்கும் பூசை நடைபெறுகிறது.

தேவம்பாடிவலசு

கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் தேவம்பாடி வலசில் தீர்த்தங்கரார் உருவம் ஒன்றுள்ளது. அச்சிற்பத்தை உள்ளூர் மக்கள் அமணேசுவரர் என்றழைக்கின்றனர்.[197]

பரன்சேர்பள்ளி

ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம் பரன்சேர்பள்ளிக் கிராமத்தில் உள்ள ஆயி அம்மன் கோயிலுக்கு வடபுறம் கிழக்கு நோக்கிச் சமணத் தீர்த்தங்கரார் உருவம் ஒன்று அமர்ந்த நிலையில் உள்ளது. அது வர்த்தமான மகாவீரர் என்னும் 24ஆம் தீர்த்தங்கரார் உருவமாகும்.

உள்ளூர்க் கோயிலுக்குப் பூசை செய்யும் பண்டாரம் இந்தச் சிலை என்ன சுவாமி என்று தெரியாமலே இதற்கும் பூசை செய்து வருகிறார். ஆனால் உள்ளூர் மக்கள் இதனை வழிபடுவதில்லை.

பருத்திப்பள்ளி

கீழ்க்கரைப் பூந்துறை நாட்டின் இணைநாடுகளில் பருத்திப்பள்ளி நாடும் ஒன்று. அதன் தலைநகரம் பருத்திப்பள்ளி, நாடாழ்வார் நாட்டுப் பருத்திப்பள்ளி என்றும், முள்வாய் சூழ்ந்த குன்றத்தூர் நாட்டுப் பருத்திப்பள்ளி என்றும் அழைக்கப் பெறுவது.[198]

இவ்வூரில் ஒருகாலத்தில் சமண சமயம் மிகச் சிறப்புடன் விளங்கியிருக்க வேண்டும். இங்குச் சில சமணச் சிற்பங்கள் சிதைந்து காணப்படுகின்றன. நின்ற கோலத்தில் பார்சுவநாதர் சிற்பம் அவற்றுள் ஒன்று.[199] சமணப் பள்ளியின் கொடை நிலங்களின் எல்லையைக் குறிக்கும் சுவத்திகக் குறியீட்டுக் கற்கள் சில கிடைக்கின்றன.

இவைகளைப் பற்றி 75 ஆண்டுகட்கு முன்பு தி.அ. முத்துசாமிக் கோனார் தம் 'கொங்கு நாடு' என்னும் நூலில் பின்வருமாறு குறித்துள்ளார்.[200]

> 'ஊர்க்கிணற்றருகில் சில கற்சிற்பங்கள் எடுத்து நிறுத்தப் பட்டிருக்கின்றன. சில தலை உடைந்ததாக இருக்கின்றன. உடையாதது ஒன்று இருக்கிறது. அது இரண்டு கைகளையும் தொங்கவிட்டிருக்கிறது. ஒரு ஆபரணக் கட்டுமிருக்கவில்லை.

தலையின்மேல் ஏழு தலைநாகம் படம் விரிக்கிறது. அதன் மேல் மூன்று அடுக்குள்ள குடை ஒன்றிருக்கிறது.

பொன்னும் நன்மணியும் முத்தும்
புனைந்த முக்குடை நிழற்ற
மின்னு பூம்பிண்டி நீழல்
வீற்றிருந் தவனெனப் போற்றும்

அருகக் கடவுள் சமண உரு என்கிறார்கள்

பெரிய பட்டி

கோவை மாவட்டம் உடுமலை - பல்லடம் வழியில் 15ஆம் கிலோ மீட்டரில் உள்ள வேலாயுதன்புதூரிலிருந்து நெகமம் செல்லும் சாலையில் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பெரியபட்டியில் உள்ள சுப்பிரமணியர் கோயில் எதிரே சமண தீர்த்தங்கரர் சிலை ஒன்றுள்ளது. அதனைத் 'தரும ராஜா' என்று மக்கள் அழைக்கின்றனர்.

புலியூர்

கரூர் அருகில் உள்ள புலியூரில் 'முனிஅப்பிச்சி' என்ற பெயரில் தீர்த்தங்கரர் உருவம் வழிபாட்டில் உள்ளது.

பொங்கலூர்

கோவை மாவட்டம் பல்லடம் வட்டம் பொங்கலூர் உயர்நிலைப் பள்ளி அருகில் சாலை ஓரமாகச் சமணத் தீர்த்தங்கரர் உருவம் ஒன்றுள்ளது. மெலிந்த தோற்றத்தில் உள்ள இச்சிலை சிறிது பின்னப்பட்டுள்ளது.[201]

பொட்டனேரி

சேலம் மாவட்டத்தில் மேச்சேரியிலிருந்து மேட்டூர் செல்லும் வழியில் உள்ள பொட்டனேரியில் பெருமாள் கோயிலுக்கு வடக்கே வயலில் மேற்குப் பார்த்த நிலையில் தீர்த்தங்கரர் சிலை ஒன்றுள்ளது. அதனைச் 'சித்தர்சாமி' என்ற பெயரில் இந்துக்கள் வணங்கி வருகின்றனர். மார்கழி மாதம் பந்தல் போட்டுத் திருவிழா எடுக்கின்றனர்.

மறைந்த இடங்கள்

அண்மைக்காலம் வரை சிலவிடங்களில் சமணச் சிற்பங்கள் இருந்த குறிப்புத் தெரிந்தும் இன்று அச்சிற்பங்கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. காலப்போக்கில் அவை காணாமல் போய்விட்டன என்று அறிகின்றோம்.

ஈரோடு

ஈரோடு மாவட்டத்தின் ஈரோடு நகரில் செங்குந்தர் மேல் நிலைப்பள்ளியின் விளையாட்டு மைதானத்தின் வடகிழக்கு மூலையில் புதருக்குள் பின்னமான சமண தீர்த்தங்கரர் உருவம் இருந்தது. அப்பகுதி மக்கள் 'மொட்டைப் பிள்ளையார்' என அழைத்தனர். 35 ஆண்டுகட்கு முன்பு அச்சிற்பம் அங்கு இருந்தது. இன்று காணப்பெறவில்லை.

காங்கேயம்

கொங்கு 24 நாடுகளில் ஒன்றா,ன காங்கேய நாட்டின் தலைநகர் காங்கேயம். 1953ஆம் ஆண்டு கொங்கு நாடும் சமண சமயமும் என்ற நூலை எழுதிய கோவைகிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் காங்கேயத்திலுள்ள சந்தைமேட்டில் சமணச் சிற்பம் ஒன்று இருந்ததாக எழுதியுள்ளார்.[202] இன்று அச்சிற்பம் அவ்விடத்தில் இல்லை.

தாராபுரம்

பன்னெடுங்காலமாகக் கொங்கு நாட்டின் தலைநகராக விளங்கிய ஊர் தாராபுரம். இராசராசபுரம் என்னும் பழம்பெயரையுடையது. கொங்கு நாடு என்னும் நூலை 1933ஆம் ஆண்டு எழுதிய தி.அ.முத்துசாமிக் கோனார் தாராபுரத்தில் இருந்த சமணச் சிற்பங்கள் பற்றித் தம் நூலில் எழுதியுள்ளார்.[203]

> 'தாராபுரத்தின் வடக்கே 1 பர்லாங்கில் வயலிடையே ஒரு திட்டில் யட்சி, சந்திரப்பிரப தீர்த்தங்கரர் திருவுருவம் 5 அடி உயரத்தில் நல்ல வேலைப்பாடாகவும் அனேக சிலைகள் உடைந்தும் அநேக சிலைகள் புதைந்தும் கிடக்கின்றன'

என்பது கோனார் எழுதியிருக்கும் பகுதியாகும். இன்று தாராபுரத்தில் சமணச் சிற்பம் எதுவுமில்லை.

பழங்கரை

கோவை மாவட்டம், அவிநாசி வட்டம் பழங்கரை என்னும் ஊரில் சமணச் சிற்பம் ஒன்றுள்ளதாகக் கோவைகிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் தம் நூலில் எழுதியுள்ளார்.[204] இன்று பழங்கரையில் சமணச் சிற்பம் எதுவுமில்லை.

கல்வெட்டுகள் காட்டும் சமணத் தலங்கள்

கொங்கு நாட்டில் சில ஊர்களில் சமண சமயச் சின்னங்களான கோயில்களோ, சிலைகளோ, பிற பொருள்களோ எதுவும் இன்றிக் கிடைக்கும் கல்வெட்டுக் குறிப்புகளால் மட்டுமே அங்குச் சமண சமயம் சிறப்புற்றிருந்த நிலை பெறப்படுகிறது. சமண சமயம் பற்றிய குறிப்புகள் உள்ளூர்க் கல்வெட்டுகளிலும், பிற ஊர்க் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் இருந்து பெறப்பட்டன.

அம்மன் கோயில்பட்டி

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் வரலாற்றுப் புகழ் பெற்ற தாரமங்கலம் அருகில் அம்மன்கோயில்பட்டி என்ற ஊர் உள்ளது. அங்குள்ள உப்பாற்றங்கரையில் பாறையொன்றில் செயற்கையாக அமைக்கப்பட்ட சுனை ஒன்றுள்ளது.

அச்சுனையை ஒட்டி கி.பி. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழி எழுத்துகளில் அமைந்த கல்வெட்டு ஒன்றுள்ளது.[205] அது இரண்டு வரிகளாக அமைந்துள்ளது. அதன் மூலம் வியக்கன் கோபன் கணதேவன் என்பவர் அந்தச் சுனையை அமைத்த விவரம் தெரிகிறது. அவர் தந்தையின் பெயர் வரம்பன் கோசூர் கிழார் என்றும் காணப்படுகிறது.[206]

கிழார் என்பது நில உடைமையாளர்களான உழவர் பெருமக்களுக்குச் சங்க காலத்தில் வழங்கி வந்த பெயர். கோவூர் கிழார், குறுங்கோழியூர் கிழார், ஆவூர் மூலங்கிழார், அரிசில் கிழார் போன்ற பலர் பெயர்களைச் சங்க இலக்கியம் மூலம் காணுகிறோம். கோசூர் கிழார் என்றால் கோசூருக்கு உரிமையுடைய உழவர் பெருமகன் என்பது பொருள்.

இக் கல்வெட்டில் சமண சமயம் பற்றிய குறிப்பு இல்லை. எனினும் சமண முனிவர்கட்கென்றே இந்தச் சுனை அமைக்கப்பட்டதென்று அருகிலுள்ள சிதைந்த கல் படுக்கைகளால் அறிகின்றோம்.

வியக்கன் என்ற பெயர் அமைப்பும் 'இயக்கன்' என்ற சமண சமயப் பெயரோடு ஒப்புமை உடையதாக இருப்பதும் குறிக்கத்தக்கது. வியக்கன் கோபன் கணதேவன் சமண சமயத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம்.

சமண முனிவர்கள் தங்கிய இயற்கைக் குகைத் தளங்களின் அருகே இயற்கையாகவே சுனைகள் அமைந்திருக்கும். இங்கு இயற்கைச் சுனை இல்லாத காரணத்தால் வியக்கன் கோபன் கணதேவன் சமண முனிவர்கட்குச் சுனை அமைந்திருக்கலாம்.

'தொட்டனைத்தூறும் மணற்கேணி' என்ற குறளின்படித்[207] தொடு என்ற அடிச்சொல்லால் எழுந்த தொட்ட என்ற சொல் சுனை தோண்டியதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது சிறப்புக்குரியது.

ஆத்தூர்

கரூர் மாவட்டம் கரூர் வட்டம் புகழூருக்கு அருகில் ஆத்தூர் என்னும் ஊர் உள்ளது. புகலூர் ஆறுநாட்டார்மலை தமிழிக் கல்வெட்டில் யாற்றூரில் வாழ்ந்த மூத்த சமண முனிவராகிய செங்காயபன் என்பவருக்குச் சேர மன்னன் கோ ஆதன் செல்லிரும்பொறை பேரனும் பெருங்கடுங்கோன் மகனும் ஆன இளங்கடுங்கோ இளவரசன் ஆகும்போது கல்படுக்கைகள் வெட்டித் தானமாகத் தந்த விவரம் கூறப்படுகிறது.[208]

சேர மன்னர் கல்வெட்டில் குறிக்கப்பட்ட யாற்றூர் அருகில் உள்ள இன்றைய ஆத்தூராக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.[209] அப்படி யானால் ஆத்தூர் சமண முனிவர் பலர் தங்கியிருந்த ஊராக இருக்கவேண்டும்.

கரூர்

கரூர் என்பது வஞ்சி என்ற பெயருடன் ஒருகாலத்தில் சேர மன்னர் வாழ்ந்த தலைநகராக இருந்துள்ளது. அதைக் குறிக்கும் வகையில்

மாகோதை

மகோக்கோதை

என்ற பெயர்கள் பொறிக்கப்பட்ட சேரர் காசுகள் பல கரூர் அமராவதி ஆற்றங்கரையில் கிடைத்துள்ளன. சங்க இலக்கியத்திலும் கரூர் சிறப்பிக்கப் படுகிறது. பன்னிரண்டு சங்கப் புலவர்கள் கரூரில் வாழ்ந்துள்ளனர்.

பழங்காலத்தில் சமணர்களும் கரூரில் வாழ்ந்திருக்க வேண்டும் என்று புகழூர் ஆறுநாட்டார்மலைக் கல்வெட்டு மூலம் தெரிகிறது. கரூரில் வாழ்ந்த பொன் வாணிகன் அத்தி என்பவன் சமண முனிவர்கட்காகக் கல் படுக்கைகளை வெட்டித் தானமாக அளித்துள்ளான். இதைக் குறிக்கும் கல்வெட்டில் கரூர் 'கருஊர்' என்று எழுதப்பட்டுள்ளது.[210]

களந்தை

கோவைக்குத் தெற்கே திருப்புகழ் பாடல் பெற்ற பொன்மலை வேலாயுதசுவாமி வீற்றிருக்கும் கிணத்துக்கடவுமலைக்கும், பல்லடம் வட்டத்தில் உள்ள தென்சேரிகிரிக் குன்றுக்கும் இடையே பல்லடம் - பொள்ளாச்சி சாலையில் அமைந்துள்ள பழமையான ஊர் களந்தை.

இங்குள்ள ஆதீசுவரர் கோயில் ஒரு காலத்தில் சமணக் கோயிலாக இருந்திருக்க வேண்டும். ஆதீசர், ஆதிநாதர் என்பது முதல் தீர்த்தங்கரர் பெயர். சில சமண தீர்த்தங்கரர் உருவங்கள் அக்கோயிலில் உள்ளன. நேமிநாதன், வச்சணந்திமாலை என்னும் வெண்பாப்பாட்டியல் ஆகிய நூல்களை இயற்றிய குணவீரபண்டிதர் வாழ்ந்த ஊர் களந்தை.

சேலம் மாவட்டம் மின்னாம்பள்ளிக் கல்வெட்டில் மின்னாம்பள்ளித் தேவருக்குக் கொடை கொடுத்தவர் பெயர் 'களந்தை நீலன்' என்று காணப்படுகிறது. இக் களந்தை மேற்கண்ட பொள்ளாச்சி வட்டக் களந்தையாகும்.

செங்கப்பள்ளி

சென்னை-கொச்சி தேசிய நெடுஞ்சாலையில் விசயமங்கலத்திற்கும் அவிநாசிக்கும் இடையில் உள்ள ஊர். கொங்கு நாட்டில் மின்னப்பள்ளி, விண்ணப்பள்ளி, பருத்திப்பள்ளி, பரன்சேர்பள்ளி ஆகிய ஊர்கள் சமணத் தொடர்புடைய ஊர்களாக இருப்பதுபோல் செங்கப்பள்ளியும் சமணத் தொடர்புடையதோர் ஊராகும். பள்ளி என முடியும் ஊர்கள் கொங்கு நாட்டில் பல உள்ளன.[210A] சொல்லிம்மலையின் அறப்பள்ளி உள்ளது.

செங்கல்லால் அமைக்கப்பட்ட சமணப்பள்ளி இருந்த காரணத்தால் இவ்வூர் செங்கற்பள்ளி என்ற பெயர் பெற்றது. விசயமங்கலத்தில் உள்ள சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் மகாமண்டபக் கிழக்குச் சுவர்க் கல்வெட்டில் இவ்வூர் செங்கற்பள்ளி என்றே குறிக்கப்பட்டுள்ளது.[211]

கோட்டை சூழ்ந்த ஆறுநாட்டுச் சபையார் விசயமங்கலத்து அணியாத அழகரான சந்திரப்பிரப தீர்த்தங்கரருக்குக் கொடையாக அளித்த ஊர் செங்கற்பள்ளி. நிலமும் ஊர்க்குளமும் பள்ளிச்சந்தமாக விடப்பெற்ற செய்தி கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. செங்கற்பள்ளியில் கொடையாக அளிக்கப்பட்ட நிலத்திற்கு வடபாற் கெல்லையாக 'அமண்பள்ளி' அமைந்திருந்த குறிப்புக் கல்வெட்டில் உள்ளது. இன்று செங்கப்பள்ளியில் சமணப்பள்ளி எதுவும் இல்லை. காலப்போக்கில் அழிந்திருக்க வேண்டும்.

தூசியூர்

நாமக்கல் மாவட்டம் நாமக்கல் வட்டத்தில் தூசியூர் உள்ளது.

இராசகேசரிவர்மனாகிய முதலாம் இராசராசனின் 5ஆம் ஆட்சியாண்டில் அளிக்கப்பட்டது திருச்செங்கோட்டுச் செப்பேடுகள். சோழர்கள் ஈழத்தில் நடத்திய போரில் கலந்து கொண்டு கொல்லி மழவன் ஒற்றியூரன் பிரதிகண்டவர்மன் என்ற கொங்கு நாட்டுத் தலைவர் வீரமரணம் அடைந்தார். அவருடைய ஆத்மா சாந்தியடையும் பொருட்டு விடப்பெற்ற கொடைகளை இச் செப்பேடுகள் விளக்கமாக விவரிக்கின்றன.[212]

கொடை கொடுக்கப்பட்ட தூசியூர் 'கணவதி நல்லூர் ஆன அமண்குடி' என்ற கூறப்படுகிறது. கொடை நிலத்திற்கு எல்லை கூறும்போது

'இதுக்கு எல்லை சிறுகரைக்கு மேக்கு
பள்ளிச் சந்தத்துக்கு வடக்கு அமச்சிக்குக் கிழக்கு'

என்று கூறப்பட்டுள்ளது.

'அமண்குடி' என்பது சமணர் குடியிருக்கும் ஊரைக் குறிக்கும்.[213] அமண்குடியில் சமணப்பள்ளியும் ஒன்று இருந்திருக்க வேண்டும். அச் சமணப் பள்ளிக்குக் கொடையாக விடப்பெற்ற நிலங்கள் பள்ளிச்சந்தம் என்று இக்கல்வெட்டில் அழைக்கப்பட்டிருக்கிறது.

இப்போது தூசியூரில் சமணப் பள்ளியோ அல்லது சமணச் சிற்பமோ எதுவுமில்லை. காலப்போக்கில் அவை அழிந்திருக்க வேண்டும்.

செங்கப்பள்ளியிலும், தூசியூரிலும் பள்ளிச்சந்த நிலங்கள் உள்ளதென ஆவணங்கள் கூறுகின்றன. சமணப்பள்ளிகட்கும், பௌத்தப்பள்ளிகட்கும் விடப் பெற்ற கொடை நிலங்கள் பொதுவாகப் பள்ளிச்சந்தம் எனப்படும்.

செங்கப்பள்ளி நிலம் விசயமங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயிலுக்கு விடப்பெற்றதாலும், தூசியூர் அமண்குடி என்றழைக்கப்பெற்ற தாலும் இப்பள்ளிச் சந்தங்கள் பௌத்தப்பள்ளிக்கு விடப்பெற்ற நிலங்கள் அல்ல. சமணப் பள்ளிகட்கு விடப்பெற்ற நிலங்கொடைகளே என்பது புலப்படும்.

தேவத்தூர்

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் தேவத்தூரின் மேற்கே உள்ள சிறு பாறை ஒன்றில் அழிந்த நிலையில் ஒரு வட்டெழுத்துக் கல்வெட்டுக் காணப்படுகிறது. அக்கல்வெட்டில் '. . . . . . . துங்க பல்லவரையர் பள்ளி' என்ற தொடர் காணப்படுகிறது.[214]

இவ் வட்டெழுத்துக் கல்வெட்டு கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்தமைதியைக் கொண்டுள்ளது. அதனால் 10ஆம் நூற்றாண்டில் தேவத்தூரிலோ அல்லது அதன் அருகிலோ சமணப்பள்ளி ஒன்று இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. இன்று அப்பகுதியில் சமணப்பள்ளி எதுவும் இல்லை.

நல்லூர்

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வட்டத்தில் சத்தியமங்கலம் - கோவை நெடுஞ்சாலையில் நல்லூர் என்ற சிற்றூர் உள்ளது. விண்ணப்பள்ளி என்ற கிராமத்தைச் சேர்ந்தது நல்லூர்.

நல்லூரில் நெடுஞ்சாலையின் மேல்புறம் ஒரு கல் மேடையின் மையத்திலுள்ள பெரிய வேப்பமரத்தின் ஓரத்தில் கிழக்குப் பார்த்து ஒரு பெரிய கல் சாய்த்து நட்டு வைக்கப்பட்டுள்ளது. அக் கல்வெட்டுள்ள கல்லை ஊர் மக்கள் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். அதில் கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றுள்ளது. அக்கல்வெட்டின் நடுப்பகுதி சிதைந்துள்ளது.[215]

அக் கல்வெட்டில் கோலார் நாடு, புந்நாடு ஆகிய நாடுகள் குறிப்பிடப்படுகின்றன. சேர மன்னன் இரவிகோதை காலத்தில் அவ்வூர்ச் சமணப்பள்ளிக்கு அளிக்கப்பட்ட கொடையை அக்கல்வெட்டுக் குறிக்கிறது. அக்கல்வெட்டில் அத்திகோசம் என்ற தொடர் காணப்படுகிறது. அத்திகோசத்தார் என்பவர்கள் பண்டைய தமிழகத்தில் இருந்த வணிகக் குழுவினரைக் காக்கும் யானைப்படையினர் ஆவர்.[216]

கல்வெட்டின் பின்பக்கம் யானைப்படை, குதிரைப்படை உட்பட வணிகக் குழுவின் குறிகள் பல பொறிக்கப்பட்டுள்ளன.

நல்லூரிலோ அல்லது அருகிலுள்ள விண்ணப்பள்ளியிலோ கி.பி. 10ஆம் நூற்றாண்டில் சமணப்பள்ளி ஒன்று இருந்திருக்க வேண்டும். சேர மன்னர் கோ இரவி கோதை காலத்தில் வணிகக் குழுவினரும் அவர்களின் காவல் படையினரான அத்திகோசத்தாரும் அதற்குக் கொடை வழங்கியிருக்கலாம் என்பது இக்கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது.

வானவன் மாதேவி

நாமக்கல் மாவட்டத்து நாமக்கல்லில் உள்ள முனியப்பன் கோயில் அருகேயுள்ள அகன்ற பாறையில் ஒரு கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. கி.பி. 13ஆம் நூற்றாண்டில் கோனேரின்மை கொண்டான் என்ற பட்டப் பெயர் கொண்ட ஓர் அரசன் காலத்தில் அவ்வூர் வைத்ய புரந்தரர் அங்க வைத்தியன் சவர்ணன் பாரஸ்ரீயன் ஆதித்த தேவன் திருவம்பலப் பெருமாள் என்பவருக்கு ஏழுர் நாட்டு வானவன் மாதேவி என்ற ஊரில் வைத்தியக் காணி நிலம் அளித்ததை இக்கல்வெட்டுக் கூறுகிறது.[217]

வானவன் மாதேவி என்பது நாமக்கல் அருகில் உள்ள ஊர். வைத்தியனுக்கு அளிக்கப்பட்ட நிலத்தைக் குறிப்பிடும்போது

> *'பழந் தேவதானம் திருவிடையாட்டம் பள்ளிச்சந்தம்*
> *பட்டர்கள் இறையிலி நீக்கி'*

என்ற தொடர் காணப்படுகிறது. வானவன் மாதேவியின் சமணப்பள்ளிக்கு நிலம் அளிக்கப்பட்ட செய்தி பள்ளிச்சந்தம் என்ற தொடர் மூலம் தெரிய வருகிறது.

பெரியபாளையம்

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் சர்க்கார் பெரிய பாளையத்தில் உள்ள சுக்ரீவேசுவரர் கோயிலில் உள்ள வீரபாண்டியனின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் முகுந்தனூர் குரக்குத்தளி ஆளுடையார்க்கு அளிக்கப்பட்ட கொடை விவரம் கூறப்பட்டுள்ளது. கல்வெட்டில்

'இந் நாயனார்க்குப் பேரால் சமணசந்தி
யுள்ளிட்ட வேண்டும் வெஞ்சனங்களுக்கும்'

என்ற தொடர் காணப்படுகிறது.

இதன் மூலம் முகுந்தனூர் ஆன சர்க்கார் பெரியபாளையத்தில் ஒரு சமணப்பள்ளி இருந்தமை தெரிகிறது. சமணப்பள்ளியில் நடைபெறும் வழிபாடு 'சமண சந்தி' எனப்படும்.

மின்னாம்பள்ளி

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் மின்னாம்பள்ளியில் தமிழ்க் கல்வெட்டுப் பொறித்த கல் ஒன்று கிடைத்தது. கி.பி. 10ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு. பெருநற்கிள்ளிச் சோழனின் ஒன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு.[218] மின்னப்பள்ளியில் இருந்த சமண தீர்த்தங்கரருக்கு ஊரார்களால் ஒரு கழஞ்சுப் பொன் கொடையாகக் கொடுக்கப்பட்டதைத் தெரிவிக்கும் கல்வெட்டு.

இக்கல்வெட்டில் களப்பக்கோன் பெயரில் குழி விளக்கெண்ணையைக் களந்தை நீலன் கொடுத்த விவரம் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் மின்னாம் பள்ளியின் பழம்பெயர் மின்னப்பள்ளி என்பதும் அங்கு ஒரு சமணப்பள்ளி இருந்ததும் அங்கிருந்த தீர்த்தங்கரர் மின்னப்பள்ளித் தேவர் என அழைக்கப்பட்டதும் தெரிகிறது.

களப்பக்கோன் களப்பிரர் குடிவழியைச் சேர்ந்த பிற்கால அரசராக இருக்கலாம். களப்பிரர் சமண சமயத்தினர்; சமண சமயத்திற்கு ஆதரவு அளித்தனர் என்பது வரலாறு.

முட்டம்

கோவை மாவட்டம் கோவை வட்டம் போளுவாம்பட்டி அருகில் முட்டம் என்னும் ஊரில் உள்ள நாகேசுவரர் கோயில் கல்வெட்டொன்றில்

'ஆலால சுந்தரப் பெருமாளையும் பரவை நாச்சியாரையும்
எழுந்தருளுவித்து நாளொன்றுக்கு அமுதுபடிக்கு
விட்ட நிலமாவது சமணக வதிக்கு வடக்கும்'

என்ற தொடர் காணப்படுகிறது.[219]

இதனால் முட்டத்தில் சமணர்கள் வாழ்ந்ததும் அவர்கட்கு நிலம் இருந்ததும் பெறப்படுகிறது. எனினும் இன்று முட்டத்தில் சமண சமயச் சின்னங்கள் எதுவுமில்லை.

வடபள்ளி

திண்டுக்கல் மாவட்டம் அய்யம்பாளையம் கிராமத்தில் உள்ள ஐவர்மலையில் உள்ள தீர்த்தங்கரர் சிற்பங்களில் இரண்டாம் உருவத்தின்கீழ்

'ஸ்ரீ வடவள்ளி ஆரம்விச்சி வரதபாணி'

என்பவர் அத் தீர்த்தங்கரர் சிற்பத்தைச் செய்ததாகக் குறிப்புக் காணப்படுகிறது.[220]

ஆரம்விச்சி வரதபாணி வாழ்ந்த ஊர் வடபள்ளி என்று தெரிகிறது. கோவை நகரில் மேற்கே 'வடவள்ளி' என்ற ஊர் உள்ளது. வடபள்ளியே வடவள்ளி ஆகியிருக்கலாம்.

குறிப்புகள்

1. **S.K. Ramachandra Rao, *Jainism in South India*, pp.8-9. M.S.Ramasamy Ayyangar, *Studies in South Indian Jainism*, pp.19-21.**

   P.B. Desai, *op.cit.*, p.32.

   மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்,* பக். 34-36.

2. அர. சம்பகலட்சுமி, 'சமணம்', *ஆய்வுத்தேன்,* ப.23.

   ஏ. ஏகாம்பரநாதன், *மு.கா.நூல்,* பக்.1-2.

3. க.ப. அறவாணன், *சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை*, ப. 4.

   ஜீவபந்து டி.எஸ். ஸ்ரீபால், *தமிழகத்தில் ஜைனம்,* ப. 3.

4. **M.S. Ramasamy Ayyangar, *op.cit.*, p. 19.**

5. பத்திரபாகுவை ஆறாவது தேரர் என்றும் அழைப்பர். **Robert Zyndenbos, "Bhadarbahu and Saravanabelgola kshetra', *Gommeteshvara Commemoration Volume*, p.19.**

6. **M.S. Ramasamy Ayyangar, *op.cit.*, pp.19-20.**
7. **S.K. Ramachandra Rao, *op.cit.*, p.8.**
8. **P.B. Desai, *op.cit.*, p. 96**
9. **Epigraphia Carnatica, Vol. II, Introduction, p. LXXIV.**
10. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாடும் சமணமும்,* ப. 37.
11. **S.K. Ramachandra Rao, *op.cit.*, p.9**
12. காடவபுரம் (சிரவணபௌகொளா) பகுதியிலிருந்து அசன், மைசூர் மாவட்டம் வழியாகக் கொங்கு நாட்டிற்கு வரும் வழியில் பல சமணக் கோயில்கள் உள்ளன. அப்பகுதியில் சமண சமயச் செப்பேடுகளும் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. பார்க்க: **Ram Bhushan Prasad Singh, Jainism in Early Medieval Karnataka, pp.153-157.**
13. 'சிரவணபௌகொளா' என்பது 'சமணரின் வெள்ளைக்குளம்' எனப் பொருள் தரும் தொடராகும். பழங் கல்வெட்டுகள் அப்பகுதியை 'வெள்கொளம்' என்றே குறிக்கின்றன. கன்னடத்தில் அத்தொடர் 'பெள்கொளா' என மாறியது. வடமொழிக் கல்வெட்டுகள் அப்பகுதியைத் 'தவளசரோவரம்' 'ஸ்தேவ சரோவரம்' எனக் குறிக்கின்றன. 'தீர்த்தம்' என்றும் அப்பகுதியைச் சில கல்வெட்டுக்கள் அழைக்கின்றன. **EC Vol.II 34, 38, 77, 242, 343, 364, 444, 568, 571.**
14. **EC II 486-490; 492-494.**
15. மேல்சித்தாமூர் ஜினகாஞ்சி மடத்தை 16ஆம் நூற்றாண்டில் நிறுவியவர் சிரவணபௌகொளாவில் சமணக்கல்வி கற்றுவந்த வீரசேனாச்சாரியார் என்பவர். அண்மையில் அம்மடத்தின் தலைவராக விளங்கிய தச்சூர் ஸ்ரீ பாலவர்ணசுவாமிகள் சிரவணபௌகொளாவில் சமணக்கல்வி கற்றவர். அங்குத் தமிழ்க் கல்வெட்டுகள் இருப்பதுபோல் சித்தாமூரில் கன்னடக் கல்வெட்டுகள் உள்ளன. - ஏ. ஏகாம்பரநாதன், *சித்தாமூர் வரலாறு,* பக். 66, 72, 80;
16. *மேலது,* ப. 94
17. **S.K. Ramachandra Rao, op.cit., p.9.**
18. **S. Settar, Inviting Death, p.9; Epigraphia Indica, II, 133.**
19. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாடும் சமணமும்,* ப. 38.
20. *மேலது,* ப. 38.
21. **Epigraphia Carnatica II, 1; pp.363-364.**
22. **Ibid., 24, 71, 77, 254, 364.**
23. **Asim Kumar Chattarjee, *A Comprehensive History of Jainism,* p.37; S.K. Ramachandra Rao, *op.cit.*, p.71; M.S. Ramasamy ayyangar, *op.cit.*, p.20.**

24. **P.B. Desai, b.A. Selatore, V.A. Smith, R. Narasimmachar, B. Lewis Rice, S. Setter, C.M. Ramachandra Chettiar, Mayilai Seeni Venkatasamy and others.**

25. **MDG 3.** என்னும் கொடுமணல் புதைகுழியில் இப்பானை ஓடு கிடைத்தது. கரிப்பகுப்பாய்வு (சி 14) முறையில் அதன் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

26. கி. - ஏனைய கி எழுத்திலிருந்து வேறுபட்டிருப்பதை வரைபடத்தில் காணலாம்.

27. **Paranavitana (Ed.), Inscriptions of Ceylon, Vol.1: Early Brahmi Inscriptions.** 'தமெட வணிஜ விசாகன்' என எழுதப்பட்டுள்ளது. கல்வெட்டு வரிசை எண் 356, 357.

28. 'வேனில் அத்தம் என்னாது ஏமுற்று
விண்பொரு நெடுங்குடை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறை' (அகம். 69:9-12)

'. . . . புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத்து அரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசம் கடிப்பித்து இரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையின் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த
இலங்குவெள் அருவிய அறை' (அகம். 251:7-14)

'முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனிஇருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த
அறை' (அகம். 281:8-12)

'வென்வேல்
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடைகழி அறை' (புறம். 175:5-8)

29. **S. Krishnasamy Ayyangar, *Beginning of the South Indian History*, pp.88-103;**

மு. இராகவையங்கார், *இலக்கிய சாசன வழக்காறுகள்*, ப. 56. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார், *தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி. 250-600)*, ப. 6.

30. *வேணாவுடையார் வம்சாவளி*, மக்கென்சி ஆவணம் டி 3036; *பாளையப்பட்டு வம்சாவளி* ப. 85.
31. *சோழன் பூர்வ பட்டயம்*, ப. 227.
32. கார்மேகக் கவிஞர், *கொங்கு மண்டல சதகம்*, எண் 4.
33. தனிப்பாடல், *மேலது* 4 (மேற்கோள் பாடல்).
34. *ஸ்ரீபுராணம்*, பக். 114-119; எஸ்.வையாபுரிப்பிள்ளை, *இலக்கிய தீபம்*, பக். 135-136.
35. அசோகனின் பாறைச் சாசனங்கள் 2,13; இவற்றை அசோகன் தன் அண்டை நாடுகள் எனக் குறிக்கின்றான். போர் விஜயம் போல இது தர்ம விஜயம் என்று கூறப்படுகிறது. **D.C. Sircar, *Inscriptions of Asoka and Select Inscriptions,* Vol.I pp. (2) 171-18; (13) 34-38.**
36. **P.B. Desai, *op.cit.*, p.2.**
37. ***Ibid.*, p. 3**
38. **S.K. Ramachandra Rao, *op.cit.*, p.1.**
39. ஜீவபந்து டி.எஸ். ஸ்ரீபால், *தமிழகத்தில் ஜைனம்*, ப. 11. அ. சக்கரவர்த்தி நயினார், *மேருமந்திர புராணம்*, முன்னுரை.
40. எஸ். வையாபுரிப்பிள்ளை, *தமிழ்ச்சுடர் மணிகள்II* ப. 27;தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், *சமணத் தமிழ் இலக்கிய வரலாறு*, ப. 9.
41. *தொல்காப்பியம்*, சிறப்புப் பாயிரம், நச்சினார்க்கினியர் உரை.
42. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா. நூல்*, ப.37.
43. **ARE 531 of 1938.**
44. **Epigraphia Carnatica II-1.**
45. கருங்காலக்குடி (**ARE 561 of 1911**); கீழவளவு (**ARE 135 of 1903**) ; புகலூர் - அறச்சலூர்; சித்தன்னவாசல் (**ARE 328 of 1914**) ; திருப்பரங்குன்றம் (**ARE 140 of 1952**) ; மறுகால் தலை (**ARE 407 of 1906**) ; மாங்குளம் (**ARE 460 of 1906**); மேட்டுப்பட்டி (**ARE 45 of 1908**) ; விக்கிரமங்கலம் (**ARE 621 of 1908**)
46. *மகாவம்சம்* பகுதி 10 எண் 97-99.
47. மேற்கோள்: க.ப. அறவாணன், *மு.கா.நூல்*, ப.8.
48. *மேலது*, ப.9.
49. இறையனார் களவியல் உரையிலும் பன்னீராண்டு வற்கடமும் அதனால் புலவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய நிகழ்ச்சியும் கூறப்படுவது ஒப்பு நோக்கத்தக்கது.
50. நாலடியார் வரலாறு கூறும் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் அனைவரும் இவ்வாறே கூறுகின்றனர்.

51. **K.S. Vaidyanathan, *Ancient Geography of the Kongu Country*, p. 78.**

52. ***Ibid*.,**

திருமுருகன்பூண்டி, *அரசம்பாளையக் கல்வெட்டுகள்*, பக். 149, 150.

53. **Asim Kumar Ghattarjee, *op.cit*., p.30.**

54. ***Ibid*., p. 182.**

55. **EC III 17, 32, 138.**

56. **EC III 102.**

57. தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல்துறைக் கண்டுபிடிப்பு.

58. அய்யர்மலை அரசண்ணாமலை, அர்த்தநாரி பாளையம்கரடு, அறச்சலூர்மலை, ஆறுநாட்டார்மலை, ஆனைமலை, ஈரெட்டிமலை, ஐவர்மலை, கனககிரி, குண்டாங்கல் பாறை, குன்னமலை, கொல்லிமலை, சித்தர்மலை, சுக்காலியூர்க்கரடு, செந்நாக்குன்று, திருச்செங்கோடு, திருமூர்த்திமலை, தொம்பர்மலை, பிள்ளைதின்னிக்கரடு, பொன்சொரிமலை.

59. அவை கல், கல்கஞ்சணம், பள்ளி, பாழி, உறை என அழைக்கப்பட்டன.

60. இப் பழந்தமிழ்க் கல்வெட்டுகள் வெட்டப்பட்ட எழுத்துக்களைப் பிராமி, தென்பிராமி, தமிழ்பிராமி, தமிழி எனப் பல்வேறு பெயர்களில் அழைப்பர். பன்னவன சூத்ரம், சமவாங்கியத சூத்திரம் போன்ற பழைய சமண நூல்கள் இந்தியாவில் வழங்கிய எழுத்து வகைகளைக் குறிக்குமிடத்துப் பிராமி, தமிழி இரண்டையும் வேறு வேறாகக் குறிக்கின்றன. எனவே பழந்தமிழ்க் கல்வெட்டுகளைத் தமிழி என்பதே பொருந்தும். லலிதவிஸ்தாரம் என்னும் நூல் திராவிடி என்றும் இதனைக் கூறும்.
– *கல்வெட்டுக் கருத்தரங்கு*, ப.52.

61. வச்சிரநந்திக் குரவர், வினையபாசுரக் குரவடிகள், பேரூர்க் குரத்தி, அவ்வணந்திக் குரத்தியார்.

62. ஏ. ஏகாம்பரநாதர், *கல்வெட்டில் சமணம்*, பக். 57-58.

63. *யாப்பருங்கல விருத்தி* 52, 82, 90.

64. 'சாமரை இடையிடை மகிழ்ந்தனை' *யாப்பருங்கல விருத்தி* 83

65. இதனால் தீர்த்தங்கரர் 'அணியாத அழகர்' எனப்பட்டார்.

66. *யாப்பருங்கல விருத்தி* 95, 96.

67. *மேலது* 8, 66, 83.

68. *அருங்கலச்செப்பு* 37

69. இவை அடைக்கலம், ரட்சை, ஆசிரயம், அபயம் என்றும் கூறப்பெறும்.

70. பள்ளிக்கூடம் என்ற பெயர் இதனால் ஏற்பட்டது என்பர்.

71. **Iravatham Mahadevan, *op.cit.*, pp. 7-12.**
72. சமணத் தலமான களந்தை இவ்வூர் அருகில் உள்ளது.
73. **ARE 614 of 1905; SITI 256; EI Vol. XXX, p. 249.**
74. **M. Arokkiasamy, *The Kongu Country*, p. 104.**
75. அர. சம்பகலட்சுமி, சமணம், *ஆய்வுத்தேன்*, ப.34.
76. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் (ப.ஆ.) *கொங்கதேச ராசாக்கள்*, பக்.7–9.
77. ***ARE* 349 of 1924; 297 of 1968.**
78. இரா. பூங்குன்றன், *தொல்லியல் கருத்தரங்கு* அத்திகோசத்தார் 48.
79. ***ARE* 705 of 1905; *SII* XIV 22.**
80. ***ARE* 614 of 1905; *SITI* I 256; *ARE* 216 of 1978;**
    ***ARE* 599 of 1905; *SITI* I 274.**
81. ***ARE* 216 of 1978; *SITI* I 258.**
82. ***ARE* 596 of 1905; *SITI* I 272.**
83. மூவர் தேவாரத் திரட்டு 710, 3370, 718, 3048, 535, 1781.
84. ***ARE* 624 of 1905.**
85. ***ARE* 695 of 1905.**
86. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் டி 2844, 3580.
87. **ARE 597 of 1905.**
88. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாடும் சமணமும்*, ப. 73.
89. சங்க இலக்கியங்களில் மலைகளில் வசித்த முனிவர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

    ‘பொரியரை ஞெமிர்ந்த புழற்காய்க் கொன்றை
    நீடிய சடையோர் ஆடா மேனிக்
    குன்றுறை தவசியர்போல’ (நற் 141:3–5)

    ‘உண்ணா மையின் உயங்கிய மருங்கின்
    ஆடாப் படிவத்து ஆன்றோர் போல
    வரைசெறி சிறுநெறி நிரையுடன் செல்லும்
    கான யானை கவினழி குன்றம்’ (அகம். 123:
    1–4)
90. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *மு.கா.நூல்*. பக். 87–89.
91. மார்க்கீய காந்தி (ப.ஆ.), *பாளையப்பட்டுக்களின் வமிசாவளி* **III** ப. 56; டி 2890, 3317, 3529, ஆர் 1635.
92. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *மு.கா. நூல்*, ப. 89.
93. தகவல் அளித்தவர் நாமகிரிப் பேட்டை புலவர் வெ. இரா. துரைசாமி.

94. *ARE* 280 of 1962; *சுதேசமித்திரன்* 4-6-1961. இதனை தி.நா. இராமச்சந்திரன்,

எழுத்தும் புணர்த்தான் மணிய்
வண்ணக்கன் ஆதன் சாத்தன்

என்று படித்துள்ளார் *'The Hindu'* 21-5-1962 டாக்டர் டி.வி. மகாலிங்கம்,

சித்தம் தீர்த்தம் பூனதத்தான் மணிய்
வண்ணக்கன் தேவன் சாத்தன்

என்று படித்துள்ளார். *Early South Indian Palaeography*, pp. 290-298, 1967. ஐராவதம் மகாதேவன்,

ஏழு தானம் பண்வித்தான் மணிய்
வண்ணக்கன் தேவன் சாத்தன்

என்று முதலில் படித்துள்ளார். *கல்வெட்டுக் கருத்தரங்கு*, ப. 67. எண் 72, 1968. பின்னர் அவர் முதல் வரியை எழுத்தும் புணருத்தான் மலைய எனப் படித்துள்ளார்.

95. ARE 281 of 1962.

96. ARE 282 of 1962; Iravatham Mahadevan, *Corpus of the Tamil-Brahmi Inscriptions*, p. 13.

97. *சிலப்பதிகாரம்*, அரங்கேற்று காதை 56-57. சிலப்பதிகார அரும்பதவுரை.

98. *கல்வெட்டு ஓர் அறிமுகம்*, பக் 24-26.

99. மயிலை சீனி வேங்கடசாமி, *சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டுகள்*, ப. 32.

100. டி.என். இராமச்சந்திரன், *The Hindu*, 21-5-1962.

101. T.V. Mahalingam, *Early South Indian Palaeography*, pp. 293-298.

102 அறச்சலூர் அருகே *மணியன்பாளையம்* என்ற ஊர் உள்ளது. அப்பகுதியில் கொங்கு வேளாளர்களில் ஒருபிரிவினரான *மணியன்* குலத்தினர் வாழ்கின்றனர். அங்குள்ள வேளாளர்களில் *வண்ணக்கன்* குலத்தாரும் உள்ளனர். இவையெல்லாம் பழம் பெயரின் தாக்கத்தைக் காட்டுகின்றன.

103. குடுமியாமலை இசைக் கல்வெட்டு கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதனால் அறச்சலூர்க் கல்வெட்டின் தொன்மைச் சிறப்பு நன்கு வலுப்பெறும். எனினும் தொன்மையான இந்த இசைக் கல்வெட்டு தக்க பாதுகாப்பு இன்றி அழிந்து வருகிறது.

104. *ARE* 341-347, 349 of 1928; ARE 296. 297 of 1964; Iravatham Mahadevan, *op.cit.*, No 56-67.

105. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *மு.கா.நூல்,* ப.101.

106. நடன காசிநாதன், *கல்வெட்டு,* தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, இதழ் 20; ரக்தாட்சி ஆண்டு ஆனித் திங்கள், பக். 16-19.

107. *பதி* 21.

108. *பதி* 70.

109. *பதி* 79.

110. *சிலப்பதிகாரம்* 28. 145-146.

111. **ARE 691-703 of 1905; 705 of 1905; *SII* XIV 221 108-119.**

112. *சீவக சிந்தாமணி*

113. 'ஸ்ரீவீரசங்கத்துப் பெருமடை
மல்லிசேனப் பெரியான்
செயல் - என்பது போல (***ARE*** **697 of 1905; SII XIV 113**)

114. ***ARE*** **691 of 1905 ; *SII* XIV 107.** மாணி எனக் கல்வெட்டில் உள்ளது.

115. ***ARE*** **692 of 1905; *SII* XIV 108.**

116. ***ARE*** **694 of 1905; *SII* XIV 110.**

117. ***ARE*** **695 of 1905; *SII* XIV 111.**

118. ***ARE*** **696 of 1905; *SII* XIV 112.**

119. ***ARE*** **698 of 1905; *SII* XIV 114.**

120. ***ARE*** **699 of 1905; *SII* XIV 115.**

121. ***ARE*** **701 of 1905; *SII* XIV 117.**

122. ***ARE*** **396 of 1955.**

123. ***ARE*** **729 of 1905; *SII* XIV 126.**

124. ***ARE*** **562 of 1911.**

125. *முக்குடை,* மாத இதழ், ஜூலை 1975, பக். 13-14.

126. ***ARE*** **70 of 1905; *SII* XIV 102.**

127. ***ARE*** **54 of 1910.**

128. ***ARE*** **603 of 1915; *SII* XIV 129.**

129. **TAS II, p. 126.**

130. ***EI*** **Vol. IV, pp. 141-142.**

131. ***SII*** **V 354.**

132. ***SII*** **V 372.**

133. *SII* V 319, 320, 321, 322, 323, 324, 326, 336, 355, 364, 369, 370, 371, 384, 392, 394, 399.

134. வஜ்ரநந்திக் குரவர் *ARE* 10 of 1959; *ASSI* 1958-59, p.41. வினையபாசுரக் குரவடிகள் *ARE* 430 of 1923.

135. K.S. Vaidyanathan, op.cit., p. 229.

136. *நற்* 265, *குறு.* 101, *அகம்.* 208.

137. *அகம்.* 209.

138. *நற்.* 185, 346, *குறு.* 89, *அகம்.* 62, 213.

139. *அகம்.* 303.

140. *அகம்.* 338.

141. *அகம்.* 346.

142. *நற்.* 192, 201, *அகம்.* 208.

143. *அகம்.* 185.

144. *நற்.* 185, 201, *குறு.* 89.

145. *நற்.* 185.

146. திருஅகத்தியான்பள்ளி, திருக்காட்டுப்பள்ளி, திருச்சக்கரப்பள்ளி, திருச்சிராப்பள்ளி, திருச்செம்பொன்பள்ளி, திருநனிபள்ளி, திருமயேந்திரப்பள்ளி என்பவை அவற்றுள் சிலவாகும்.

147. இந்த நூலாசிரியரும், நாமகிரிப்பேட்டை புலவர் வெ. இரா. துரைசாமியும் இவற்றை 28-6-93இல் நேரில் சென்று கண்டனர்.

148. K.S. Vaidyanathan, *op.cit.*, p. 230.

149. கொடுமுடி சண்முகப்பிரகதம் (ப.ஆ.), *மு.கா.நூல்,* ப.3.

150. *திருமுக விலாசம்* கண்ணி 3.

151. *திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை* 15.

152. *சீவக சிந்தாமணி* 2. *சூளாமணி* 4:64, 66.

153. *மேருமந்திர புராணம்* 64.

154. *ARE* 186 of 1927.

155. ARE 187 of 1927.

156. *திருக்குறள்* 251.

157. திருக்குறளைச் சமணர் 'எம் ஓத்து' என்று குறிப்பிடுவர். *நீலகேசி,* மொக்கலவாதச் சருக்கம் 60, 87ஆம் பாட்டின் உரை.

158. விசயமங்கலத்தில் இருக்கும் சமணக் கோயிலும் வீரசங்காதப் பெரும் பள்ளி என்றழைக்கப்படுகிறது.

159. அமுதமொழிப் பெரும்பள்ளி, *ARE* **601 of 1902;** ***SII*** **VIII 198.**

இரவிகுலசுந்தரிப் பெரும்பள்ளி ***ARE*** **219 of 1902;** ***SII*** **VII 846.**

ஐநூற்றுவப் பெரும்பள்ளி, **IPS 1083;** சமணமும் தமிழும், ப. 133.

கங்கசூரப் பெரும்பள்ளி, ***ARE*** **277 of 1916;** ***SII*** **XIII 297.**

கண்டராதித்தப் பெரும்பள்ளி, ***ARE*** **448 of 1938.**

குலோத்துங்கசோழப் பெரும்பள்ளி, ***ARE*** **288 of 1917.**

சித்திரமேழிப் பெரும்பள்ளி, ***ARE*** **186 of 1962.**

சுந்தரசோழப் பெரும்பள்ளி, ***ARE*** **29 of 1962;** ***ASSI*** **1958-59 p.84.**

பெருநற்கிள்ளிச் சோழப் பெரும்பள்ளி, **IPS 530 ;** ***A Manual of Pudukkottai State,*** **Vol. II Part II, p. 979.**

வீரகேரளப் பெரும்பள்ளி, **ARE 474 of 1920.**

வீரராசேந்திரப் பெரும்பள்ளி, **ARE 130 of 1940.**

ஸ்ரீகரணப் பெரும்பள்ளி, **ARE 64 of 1923.**

என்பன தமிழகத்துப் பெரும்பள்ளிகட்குள் சில.

160. அ) மூன்றுகைத் திருவேளைக்காரப் பெரும்பள்ளி, **SITI Vol. III Part 2, p. 96.**

ஆ) ஸ்ரீ சைலேந்திர சூடாமணிவர்ம்ம விகாரம் ஆன ராஜராஜப் பெரும்பள்ளி, ***Epigraphia Indica,*** **Vol. XXII, p. 278.**

இ) இராஜேந்திர சோழப்பெரும்பள்ளி, அக்கசாலைப் பெரும் பள்ளி, *ஆவணம்,* இதழ் 3, ப. 47.

161. ***ARE*** **216 of 1978.**

162. வேலூர் மாவட்டம், போளூர் வட்டம், ஓதளவாடியிலும் ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் விசயமங்கலத்திலும் தீர்த்தங்கரர்கள் அணியாத அழகர் என அழைக்கப்பட்டனர் ***ARE*** **142 of 1942;** ***ARE*** **596 of 1905;** ***SITI*** **I No 272.**

163. *சூளாமணி,* இரதநூபுரச் சருக்கம் 64.

164. *அருக சரண அகவல்,* வரி 41.

165. ***ARE*** **215, 216, 217, 218 of 1978.**

166. ***ARE*** **215 of 1978.**

167. ***ARE*** **217 of 1978.**

168. ***ARE*** **218 of 1978.**

169. *ARE* 216 of 1978.

170. பிற்காலத்தில் இக்கோட்டை டணாயக்கன் கோட்டை என்று பெயர் பெற்று விளங்கியது. ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகில் உள்ள கீழ்பவானி அணைத்தேக்கத்துள் இக்கோட்டை மூழ்கியுள்ளது.

171. ரிஷபதேசர் கோயிலை ஆதிநாதர் கோயில் என்று அழைப்பர்.

172. சீனாபுரம் என்ற பெயர் அமைப்பினாலும், அடிக்கடி கார்களிலும், ஜீப்புகளிலும் வந்து வெளியூரார் கோயிலைப் பார்த்துச் செல்லுவதாலும் உள்ளூர் மக்கள் வழிபடாததாலும் அவ்வாறு கூறுகின்றனர்.

173. உள்ளூர்ப் பொது மக்கள் கூறியவை.

174. *SITI* I 256; *ARE* 614 of 1905; *EI* Vol. XXX, p. 249.

175. *ARE* 603 of 1905.

176. *ARE* 605 of 1905.

177. *SITI* I 258.

178. *SITI* I 257.

179. *கொங்குமண்டல சதகம்*, கார்மேகக் கவிஞர், (ப.ஆ.) தி.அ. முத்துசாமிக் கோனார், முன்னுரை, ப. 4.

180. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாடும் சமணமும்.* ப. 73.

181. விஜயபுரி அம்மன் கோயில் அர்ச்சகர் ஆறுமுகப்பண்டாரம் கூறியது.

182. இக்கோயிலின் அர்த்தமண்டபக் கிழக்குச் சுவரில் உள்ளது.

183. அகம். 199.

184. *E.I.* Vol XXX, p. 99, Seven Vatteluttu Inscriptions from Kongu Country.

185. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாடும் சமணமும்*, ப. 81.

186. வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கல் உடைக்கப்பட்டு விட்டது.

187. *ARE* 597 of 1905; *EI* VII, p. 108.

188. *SITI* I 274; *ARE* 598 of 1905.

189. *ARE* 600 of 1905.

190. *SITI* I 275; *ARE* 599 of 1905.

191. *SITI* I 272; *ARE* 596 of 1905.

192. மயிலை சீனி வேங்கடசாமி, *சமணமும் தமிழும்*, ப. 167.

193. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாடும் சமணமும்,* ப. 90.

194. **R. Poongundran, 'Jain Bronzes from Aragalur', *South Indian Studies*, Vol. II, pp. 190-191.**

195. வெ. வேதாசலம், *இயக்கி வழிபாடு*, ப. 69.

196. **ARE 424 of 1913.**

197. தகவல் அளித்தவர் பேராசிரியர் எஸ்.பி. கந்தசாமி, பொள்ளாச்சி

198. காஞ்சிபுரத்தில் ஜினகாஞ்சி 'திருப்பருத்திக்குன்றம்' என்று அழைக்கப்படுகிறது.

199. இப்போது இப் பார்சுவநாதர் சிலை சேலம் அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது தலை உடைந்த சிலை பருத்திப்பல்லியில் உள்ளது.

200. தி.அ. முத்துசாமிக் கோனார், *கொங்குநாடு*, ப. 234.

201. இச்சிலை இப்போது தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் கோவை அருங்காட்சியகத்தில் உள்ளது.

202. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *மு.கா.நூல்*, ப. 73.

203. தி.அ.முத்துசாமிக் கோனார், *மு.கா.நூல்*, ப. 243.

204. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *மு.கா.நூல்*, ப. 73.

205. இதனைக் கண்டு பிடித்தவர் கடத்தூர் புது. போ. வேங்கடராமன் ***'The Hindu'*** 4-2-1987.

206. வரம்பன் என்பதைப் பரம்பன் என்று ஐராவதம் மகாதேவன் படித்துள்ளார்.

207. *திருக்குறள்* 396.

208. ***ARE* 343 of 1928; *ARE* 297 of 1964.**

209. *கல்வெட்டு ஓர் அறிமுகம்*, ப. 56.

210. **Iravatham Mahadevan, *op.cit.*, No.66.**

210A. அனுமன்பள்ளி, இளம்பள்ளி, ஈஞ்சம்பள்ளி, ஏமப்பள்ளி, கச்சுப்பள்ளி, கஞ்சப்பள்ளி, குராப்பள்ளி, கோயம்பள்ளி, சிராப்பள்ளி, தடப்பள்ளி, தென்பள்ளி, பனையம்பள்ளி, பெற்றம்பள்ளி, மடப்பள்ளி, மேழிப்பள்ளி, வயிரம்பள்ளி, வெள்ளறைப்பள்ளி என்பன.

211. ***ARE* 596 of 1905; *SITI* I 272.**

212. ***SII* Vol. III Part IV No 213, p. 478.**

213. காஞ்சியை அடுத்த திருப்பருத்திக்குன்று சமண ஊர். அவ்வூர் அமண் சேர்க்கை என்று அழைக்கப்பெறும். *பல்லவர் செப்பேடுகள்* முப்பது, ப. 28.

214. *ARE* 59 of 1932,

215. *தொல்லியல் கருத்தரங்கு II*, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, ப. 83.

216. புதுக்கோட்டை மாவட்டம் பூலாங்குறிச்சியில் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டில் 'அத்திகோயத்தார்' குறிக்கப்பெறுகின்றனர்.

217. *SII* XXII Part I 13.

218. பெருநற்கிள்ளி என்ற பெயர் சிறப்புக்குரியது. சங்க இலக்கியத்தில் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற பெயர்களைக் காணுகிறோம். இப் பெயரிடும் வழக்கம் 10 ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்திருந்தது என்பது இக் கல்வெட்டு மூலம் தெரிகிறது.

புதுக்கோட்டைக் கல்வெட்டுக்களில் பெருநற்கிள்ளிச் சோழப் பெரும்பள்ளி (*IPS* 530), பெருநற்கிள்ளிச் சோழ நாடாழ்வான் (IPS 435) என்ற பெயர்களைக் காணுகிறோம். திருப்பழனம் கல்வெட்டில் சோழப் பெருமானடிகள் பெருநற்கிள்ளிச் சோழன் (*ARE* 143 of 1928) என்பவன் குறிக்கப்பெறுகிறான். திருவாலங்காட்டுச் செப்பேட்டில் பெருநற்கிள்ளிச் சோழன் என்பவன் குறிக்கப் பெறுகிறான் (*EI* XXII, p. 220).

219. *ARE* 150-157 of 1910.

220. *ARE* 691 of 1905; *SII* XIV 107.

4

கொங்குச் சமணரின் தமிழ்ப்பணி

கொங்கு நாட்டில் பெரிதும் போற்றி வளர்க்கப்பட்ட சமண சமயம் கி.பி. ஆறு, ஏழாம் நூற்றாண்டுகளில் பல்லவ, பாண்டிய நாட்டுப் பகுதிகளில் எங்கணும் பரவியது. பிற வைதீக சமயங்களான சைவ, வைணவ சமயங்களுக்குச் சமண சமய வளர்ச்சி பெரிதும் இடையூறாக இருந்தது. ஏனெனில் பல்லவ, பாண்டிய அரசர்களில் சிலர் சமண சமயத்தைச் சார்ந்திருந்தனர்.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் போன்ற சைவ சமய நாயன் மார்களும், வைணவ சமய ஆழ்வார்களும் சமணர்கட்கு எதிராகத் தங்கள் சமயப் பரப்புப் பணியை மேற்கொண்டனர். அதன் பயனாகப் பல்லவ மன்னன் மகேந்திரவர்மனும் (610-630), கூன்பாண்டியனும் (நின்றசீர் நெடுமாறன்) (640-680) சைவசமயம் திரும்பினர்.

இதனால் சமணர்கள் தமிழ் நாட்டில் அரசியல் மீது கொண்டிருந்த ஆதிக்கம் தடைப்பட்டது. சமணர்கள் தங்கள் கவனத்தை மொழித்துறையில் திருப்பினர்.[1] அவர்கள் செய்த தமிழ்ப்பணி அவர்கட்கு அழியாப் புகழைத் தேடித் தந்தது. எப்பகுதிக்குச் சென்றாலும் சமணர்கள் அப்பகுதி மக்களின் மொழியைக் கற்பது வழக்கம். அதனால் தமிழ்நாட்டில் அவர்கள் கற்றிருந்த தமிழ் மொழிப் பயிற்சி தமிழ்த் துறைகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டது.

சமணர்கள் மூன்று துறைகளில் தமிழ்ப்பணி செய்தனர். அப்பணிகளாவன:

1. சமண சமயத் தத்துவம், வரலாறு சார்ந்த இலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்த்தல்.
2. தமிழ் மொழியில் புதிய இலக்கண நூல்கள், உரைநூல்கள், நிகண்டுகள் பாட்டியல் ஆகியவைகளைப் படைத்தல்.

3. தமிழ் மக்கள் நல்வாழ்வுக்கென நீதிநூல்களை இயற்றுதல்.

தேவார காலத்திற்கு முன்னைய சமணர்கள் தொண்டு பெரும் பாலும் அறம் உரைக்கும் பாங்கிலேயே அமைந்தது. இதனைப் பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள நாலடியார், அறநெறிச்சாரம், சிறுபஞ்சமூலம் முதலிய நூல்கள் கூறும் கருத்தின் மூலம் அறிகின்றோம்.

அறவுரை வழங்குவதில் உரையும் பாட்டும் இடம்பெற்றாலும் கல்லாதவரையும் எளிதில் பிணிக்கும் பாட்டையே பெரும்பாலும் வளர்க்கத் தொடங்கினர். தொல்காப்பிய நூலில் காணப்பெறாத பல பாட்டினங்கள் சமணர்கள் செய்த நூல்களில் காணப்படுகின்றன. பழைய தமிழ் நெறியைப் புதுநெறியில் புகுத்தினர்.[2]

தமிழில் இலக்கியங்களையும், சிறு நூல்களையும் இயற்றத் தொடங்கினர். இளஞ்சிறார் முதல் பெரியோர் ஈறாகப் பலர்க்கும் பயன் படத்தக்க தமிழ் நூல்களை இயற்றத் தலைப்பட்டனர். தம் பள்ளிகளில் இருந்த கூடங்களில் சிறார்கட்குக் கல்வி போதித்தனர். ஆனால் காப்புச் செய்யுள்களிலும், நூலினுள் வாய்ப்பு நேரும் இடங்களிலும் தம் சமயக் கருத்தைக் கூறத் தவறவில்லை.

சிறுவர் கற்கும் கணக்கியல் வாய்பாடுகளில் தம் சமயக் கருத்தை நுழைக்க இடம் இன்மையால் காப்புச் செய்யுளில் தம் சமய உணர்வைக் காட்டினர். நெல்லிலக்க வாய்பாட்டின் காப்புச் செய்யுளில்

'வன்மதி முக்குடையான் மலரடி தொழுதால்
நெல்லணி லக்கம் நெஞ்சினில் வருமே'

என்றும், சிறுகுழி வாய்பாட்டின் காப்புச் செய்யுளில்

'அருகனை அமலனை அசலனை அடிதொழ
சிறுகுழி முப்பதும் சிந்தையில் வருமே'

என்றும் சமணர் பாடியுள்ளனர்.

தம்பால் படிக்க வரும் மாணாக்கர்கள் எளிதில் தமிழ் நூல்களைப் பயின்று பொருள் அறிதற்கு ஏதுவான நிகண்டுகள் செய்யத் தொடங்கினர். தமிழ்நாட்டில் நிலவிய தொல்காப்பியம் மிகவும் பரந்து விரிந்த நூலாக இருந்தமையின் சிறுவர்கள் கற்கும் வண்ணம் எளிமையாகச் சின்னூலும் நன்னூலும் செய்தனர்.

கொங்கு நாட்டுத் தனி இலக்கியமாகிய கல்வி ஒழுக்கத்தின் தொடக்கத்தில்

அஞ்சு வயதில் ஆதியை ஓது
ஆதியை ஓத அறிவுண் டாமே

என்று பாடியுள்ளனர் (ஆதி - ரிஷபர்)

கலம்பகம், அந்தாதி முதலிய சிற்றிலக்கியங்கள் யாத்தனர் (திருக்கலம்பம், திருநூற்றந்தாதி முதலியன). நரி விருத்தம் போன்ற கதை நூல்களையும், மேருமந்தர புராணம், யசோதர காவியம், சூளாமணி போன்ற சமண சமய வரலாறு கூறும் நூல்களையும் இயற்றினர். சீவக சிந்தாமணி போன்ற பெருங் காப்பியங்களையும், சிறு காப்பியங்களையும் பலவற்றை இயற்றினர்.

இவர்கள் தமிழ்ப்பணியைப் பற்றிக் கூறவந்த அறிஞர் ஒருவர்

> 'நம் தமிழ் மொழியின் இலக்கண இலக்கிய நெறியின் வளர்ச்சியினை வரலாற்று முறையால் ஆராய்கின்றவர், இவ் வளர்ச்சி குறித்துச் சமண முனிவர் செய்துள்ள தொண்டுகளைக் காணாது போக முடியாது. தமிழ் வளர்ச்சிக்கெனச் சிறந்த தொண்டு புரிந்த தமிழ் மக்களைவிடச் சமண முனிவரே தலைசிறந்து நிற்கின்றனர்'

என்று கூறியுள்ளார்.[3]

சமணரின் இலக்கணத் தொண்டைப் பாராட்ட முற்பட்ட ஒரு பேராசிரியர் பின்வருமாறு எழுதுகிறார்.

> இலக்கியம் முதலான பிற துறைகளைவிட, இலக்கணத்திற்குச் சைனர் ஆற்றிய பணி மிகுதி. இது ஏன்? வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் கட்டுப்பாட்டோடு வாழ்ந்தவர் சைனர். உலகச் சமயங்களிலேயே மிகுந்த கட்டுத்திட்டம் வாய்ந்தது சைனம் என்பது அறிஞர் கருத்து. உண்பது, உடுப்பது, உறைவது, வாழ்வது அனைத்திலுமே கட்டுப்பாடு கட்டுப்பாடு என்று வரையறைகளை அமைத்துக்கொண்ட அறிஞர்களின் உள்ளம், மொழியிலும் வரையறை காணத் துடித்தது. அத்துடிப்பின் விளைவே மொழியை வரையறைப்படுத்தும் இலக்கணமாக வளர்ந்தது.

சைனரின் இலக்கணத் தொண்டு ஐயத்திற்கு அப்பாற் பட்டது. அது தமிழ்மீது அவர்கள் கொண்டிருந்த மொழிக் காதலைப் புலப்படுத்தியது. அதன் மூலம் இலக்கியச் செழுமை உடையதாகவும் ஆக்கியது. இலக்கணங்களைப் படைப்பதன் மூலம் மரபுப் பெயர்கள் அழியாவண்ணம் வேலி கோலப்பட்டது. பாத்தி பகுத்ததன் மூலம் தமிழ் விளைச்சல் மிகுதியாகியது . . . . இவற்றால் தமிழ் பொலிவு பெற்றது.

எழுத்து, சொல், அகப்பொருள், புறப்பொருள், யாப்பு, பாட்டியல் என இலக்கண மூலப் படைப்பின் மூலம் அவை விரிந்தன[4]

கொங்கு நாட்டுச் சமணர்களின் தமிழ்ப்பணி காரணமாக இன்று நமக்குக் கிடைத்திருக்கும் நூல்கள் பின்வருமாறு அமைந்துள்ளது.

இலக்கியம்

பெருங்கதை

சீவக சிந்தாமணி

இலக்கணம்

நேமிநாதம்

வச்சணந்திமாலை

நன்னூல்

உரை

நன்னூல்-மயிலை நாதர் உரை

சிலப்பதிகாரம் - அரும்பத உரையாசிரியர் உரை

சிலப்பதிகாரம் - அடியார்க்கு நல்லார் உரை

வரலாற்று இலக்கியம்

கொங்கு மண்டல சதகம்

நீதிநூல்

கல்வி ஒழுக்கம்

பெருங்கதை

பெயர்

கதை,[5] உதயணன் கதை,[6] பெருங்கதை,[7] கொங்குவேள் மாக்கதை,[8] உதயேந்திரன் காதை,[9] உதயணன் சரிதை[10] என்றெல்லாம் பல பெயர்களால் சிறப்பிக்கப்படும் நூல் பெருங்கதை.

அடியார்க்கு நல்லார் அடைமொழி எதுவுமின்றிக் 'கதை' என்றே பெருங்கதையைக் குறிப்பிடுவது சிறப்பு மிக்கதாகும். அடியார்க்கு நல்லார் காலத்தில் பெருங்கதை பெற்றிருந்த சிறப்பை அவ் வழக்குக் காட்டுகிறது.

பிற பெயர்கள் பாட்டுடைத் தலைவன் பெயராலும், இயற்றிய ஆசிரியர் பெயராலும், அளவாலும் வழங்கப் பெறுவன. 'பெருங்கதை' என்ற பெயரே பெருவழக்காகத் திகழுகிறது. அப்பெயர் பெருங்கதையின் மூல நூலாகிய 'பிருகத் கதா' என்பதன் மொழிபெயர்ப்பாகும்.

நூல்

கௌசாம்பி நகரத்து மன்னன் சதானிகனுக்கும், மிருகாபதிக்கும் மகனாகப் பிறந்த உதயணன், அவன் மகன் நரவாணதத்தன் ஆகியோரின் வரலாற்றைக் கூறும் நூல் பெருங்கதையாகும். இந்நூல் உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம் ஆகிய ஐந்து காண்டங்களையும் 99 காதைகளையும் உடையது.[11]

நூல் முழுவதும் நிலைமண்டில ஆசிரியப்பாவால் எழுதப்பட்டுக் காதைகள் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளன.

ஆசிரியர்

பெருங்கதை ஆசிரியர் கொங்குவேள் என்று அந்நூலுள் எங்கும் கூறப்படவில்லை. ஆனால் தனிப்பாடல்,[12] கலித்தொகை ஏட்டுப்பிரதி,[13] இளம்பூரணர் தொல்காப்பிய உரைச் சிறப்புப் பாயிரச் செய்யுள்,[14] கொங்கு மண்டல சதகம்[15] போன்றவற்றாலும், பெருங்கதை ஏட்டின் முகப்பில் எழுதிய குறிப்பிலிருந்தும்[16] பெருங்கதையை எழுதிய ஆசிரியர் கொங்குவேள் என்பதை அறிகிறோம்.

அவற்றில் எல்லாம் 'கொங்குவேள்' என்றே எழுதப்பட்டுள்ளது. வேள் என்பதை வேளிர் எனப் பிற்காலத்தில் சிலர் எழுதியுள்ளனர்.[17] சிலர் வேள் என எழுதுகின்றனர். வேளிர் வரலாறு எழுதிய மு. இராகவையங்கார் கேள் - கேளிர் என்பது போல, வேள் ஒருமை என்றும் வேளிர் பன்மை என்றும் எழுதியுள்ளார்.[18] சங்க இலக்கியத்திலும் அவ்வழக்கே பின்பற்றப்படுவதைக் காண்கிறோம்.[19]

மரியாதையின் பொருட்டு ஒருவரைப் பன்மைக்கிளவியால் அழைக்க இலக்கணம் இடம் தருகிறது.[20] கொங்குவேள் என்பதை அவ்வாறு கொங்கு வேளிர் என அழைக்கத் தொடங்கியிருக்கலாம். தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோவிலூர் வட்டத்தில் சோழவாண்டிபுரத்தில் உள்ள ஆண்டிமலைக் கல்வெட்டில் 'வேளி கொங்கரையர் புத்தடிகள்' என்ற சமயப் பெரியார் ஒருவர் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.[21] வேள் - வேளி எனக் குறிக்கப்பட்டுப் பின்னர் வேளிர் என ஒருவரைக் குறிக்கவும் தொடங்கியிருக்கலாம்.

'கொங்குவேள்' என்பது கொங்கு நாட்டைச் சேர்ந்த வேள் என்று பொருள்படும். சங்க இலக்கியங்களில் வேள் எனப்படுவோர் மிகவும் தொன்மையான குடியினராகக் குறிக்கப்பட்டுள்ளனர்.[22]

ஊர்

கொங்கு மண்டலத்தின் 24 நாடுகளில் ஒன்றான குறுப்பு நாட்டில் ஒரு ஊராக விளங்குவது விசயமங்கலம்.[23] ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டத்தில் சென்னை, கொச்சி நெடுஞ்சாலையில் பெருந்துறையின் மேற்கே பத்து கி.மீ. தொலைவில் விசயமங்கலம் உள்ளது.

விசயமங்கலம் ஊரின் வடபுறத்தில் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் உள்ளது. கோயில் உள்ள பகுதிக்கு மேட்டுப்புத்தூர், கோயில் பாளையம் என்ற பெயர்கள் உண்டு.[24] சமணர்கள் அப்பகுதியைப் பஸ்திபுரம் அல்லது பஸ்திபாளையம் என்றழைப்பர்.[25]

சங்க காலம் தொடங்கிச் சிறப்புற்று விளங்கும் மரபில்[26] வாழும் கொங்கு நாட்டு வேளாளர்களில் ஒரு பிரிவினரைச் 'சயின வேளாளர்' என்று ஒரு செப்பேடு குறிக்கிறது.[27] அவ்வாறு விசயமங்கலத்தில் வாழ்ந்த சமண வேளாளர் மரபில் கொங்குவேள் தோன்றிப் பெருங்கதைக் காவியம் இயற்றினார்.

காலம்

பெருங்கதை பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோரின் தொல்காப்பிய உரையிலும்,[28] யாப்பருங்கல விருத்தி உரையிலும்,[29] பெருந்தேவனாரின் வீரசோழிய உரையிலும்,[30] நன்னூல் மயிலைநாதர் உரையிலும்,[31] தக்கயாகப்பரணி உரையிலும்,[32] அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரையிலும்[33] மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

மேற்காட்டிய எல்லா உரையாசிரியர்களும் ஏறக்குறைய 11-13 ஆம் நூற்றாண்டுக்கு உரியவர்கள்.

வீரசோழிய உரையாசிரியர் பெருந்தேவனார் பெருங்கதையில் சில சொல்லும் பொருளும் தெரியவில்லை என்று கூறுகிறார்.[34] பெருந்தேவனார் கி.பி. 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். பெருங்கதைப் பகுதிக்கு அவர் காலத்திலேயே பொருள் விளங்கவில்லை என்றால் பெருங்கதை சில நூற்றாண்டுகளுக்கு முன்பேனும் தோன்றியிருக்க வேண்டும்.

வடமொழியில் 'பிருகத் கதா' எழுதிய துர்விநீதன் கி.பி. 550 முதல் 600 வரை வாழ்ந்தவன்.[35] எனவே கி.பி.600க்குப்பின் கொங்குவேளிர் வாழ்ந்திருக்க வேண்டும்.

விசயமங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயிலில் பெருங்கதை இயற்றப்பட்டதைக் குறிக்கும் வடமொழிக் கல்வெட்டொன்று நாகரி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.[36] அதன் காலம் 7 அல்லது 8ஆம் நூற்றாண்டாகலாம். விசயமங்கலம் சமணக் கோயில் சக ஆண்டு 600இல் (கி.பி. 678) கட்டத் தொடங்கியிருக்க வேண்டும் என்று மக்கென்சி ஆவணம் ஒன்றின் மூலம் தெரிகிறது.[37]

அப்பொழுது தலைக்காட்டுக் கங்கர்கள் கொங்கு நாட்டை ஆட்சி புரிந்தனர். கொங்கு மண்டல சதகம் கங்க மன்னன் அவனிதன் ஆட்சியைக் (கி.பி. 500-540) குறிப்பிடுகிறது.[38] எல்லாக் குறிப்புகளையும் நோக்கும்போது பெருங்கதை ஆசிரியர் கொங்குவேளிர் கி.பி. 7ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்தவர் என்று கருதலாம்.[39]

மூல நூல்களும் பிற தமிழ் நூல்களும்

பைசாச மொழியில் குணாட்டியர் (கி.பி.113) கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றிய 'பிருகத்கதா'வும்,[40] வடமொழியில்

துர்விநீத கங்கன் (கி.பி.550-600) ஆறாம் நூற்றாண்டின் கடைசியில் இயற்றிய பிருகத்கதாவும் கொங்குவேள் பெருங்கதைக்கு மூல நூல்களாக அமைந்திருக்கலாம். ஆனால் வடமொழி நூலே கொங்கு வேளிருக்கு மூல நூலாக அமைந்தது என்பது அறிஞர்கள் கருத்தாகும்.[41]

உதயணன் வரலாறு இராமாயண, பாரதக் கதை போல் பெருங்கதையைக் கொங்குவேள் எழுதுமுன்னரே தமிழ்நாட்டு மக்களுக்கு நன்கு தெரிந்திருந்தது என்பது கூலவாணிகள் சீத்தலைச் சாத்தனார் தாம் இயற்றிய மணிமேகலையில் உதயணன் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறியுள்ளதால் அறியலாம்.[42]

தமிழில் பெருங்கதை தவிர உதயண குமார காவியம், வச்சத் தொள்ளாயிரம் ஆகிய நூல்கள் உதயணன் வரலாற்றைக் கூறுவனவாகும்.[43]

பொதுவாக உதயணன் வரலாறு வடமொழி, பாலி, பிராகிருத மொழியில் முதலில் தோன்றிப் பின் இந்திய மொழிகள் பலவற்றிலும் புகுந்துள்ளது.

பெருங்கதைச் சிறப்பு

பெருங்கதை இலக்கிய உலகில் மிகச் சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. ஒரு தனிப்பாடல், சிந்தாமணி, கம்பராமாயணம், திருக்குறள் ஆகியவற்றோடு இணைத்துப் பெருங்கதையைக் கூறுகிறது.

திருத்தக்க மாமுனிசெய் சிந்தா மணிகம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம் - உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக் கூறேம் குறளணுகேம்
எங்கெழில்என் ஞாயிறு எமக்கு

என்பது அப்பாடலாகும்.[44]

அடியார்க்கு நல்லார் பல நூல்களை ஆய்ந்து பெருங்கதை இயற்றப் பட்ட தன்மையை விரிவாகக் கூறுகிறார்.

'இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன் அவைக்களத்துத் தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி

> மோசியாரும், வெள்ளூர்க் காப்பியனாரும், சிறுபாண்டரங்கனாரும், மதுரையாசிரியன் மாறனாரும், துவரைக் கோமானும், கீரந்தையாரும் என்றித் தொடக்கத்தார் உள்ளிட்ட மூவாயிரத்து எழுநூற்றுவர் தம்மால் பாடப்பட்ட கலியும், குருகும், வெண்டாளியும் முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதை . . . .'

என்பது அப்பகுதியாகும்.[45]

தொல்காப்பியத்தின் முதல் உரையாசிரியர் எனக் கூறப்பெறும் இளம்பூரணர் பெருங்கதைக்குக் குறிப்புரை எழுதிய செய்தி தொல்காப்பிய உரைப் பாயிரத்தால் விளங்குகிறது.

> *'பண்டே*
> *கொங்குவேள் மாக்கதை குறிப்புரை கண்டோன்'*

என்பது அதனை விளக்கும் அடிகளாகும்.[46]

பெருங்கதைக் கல்வெட்டு

விசயமங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயிலில் தமிழ் இலக்கிய வரலாற்றுக்குச் சிறப்பளிக்கக் கூடிய வகையில் பெருங்கதையோடு தொடர்புடைய மிக முக்கியமான கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது.[47]

அக்கோயிலில் நிருத்த மண்டபத்தின் விதானத்தில் ஸ்ரீ புராணச் சிற்பங்கள் தொடர்ச்சியாக வெட்டப்பட்டுள்ளன. அம் மண்டபத் தரையில் கற்களின் இடையில் 70 செ.மீ. நீளமும், 35 செ.மீ. அகலமும் உள்ள கல் ஒன்று பதிக்கப்பட்டுள்ளது. அக் கல் நன்றாக வழவழப்பாகச் செதுக்கப்பட்டுள்ளது. இரண்டு ஓரங்களிலும் சிறு துளைகள் உள்ளன. ஒருபுறம் சமணரின் சுவத்திகச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

அக் கல்லின்முன் விளிம்பில் வடமொழியில் நாகரி எழுத்தில் ஒரு வரியில் அமைந்த கல்வெட்டொன்று வெட்டப்பட்டுள்ளது. அதன் வாசகம்

> '*ஸ்ரீ பிருகத்கதா லாவண்ய ரத் பிரதாபஹ:*'

என்பதாகும். அதன் பொருள் (இம் மண்டபம் அல்லது இக்கோயில்) 'சிறப்பான பெருங்கதையின் அழகிலும் பெருமையிலும் மூழ்கியிருக்கிறது' என்பதாகும்.

ஓரத்தில் உள்ள துளைகள், திருச்சுற்று (பிரபை) வைத்திருந்த இடமாக இருக்கலாம். கல்லில் உள்ள சமணரின் சுவத்திகச் சின்னம், வழவழப்பான தன்மை இவைகளை நோக்கும்போது அக்கல்லில் பெருங்கதை ஏட்டுச் சுவடிகள் வைக்கப்பட்டிருக்கலாம்; அல்லது பெருங்கதை ஆசிரியர் கொங்குவேள் தாம் இயற்றிய பெருங்கதையை அதில் அமர்ந்து அரங்கேற்றியிருக்கலாம் எனக் கருதலாம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க அக்கல் பெயர்த்தெடுக்கப்பட்டு உடைக்கப்பட்டு விட்டது.

கொங்கு மண்டல சதகக் குறிப்பு

சினேந்திரன் என்னும் கார்மேகக் கவிஞர் இயற்றிய கொங்கு மண்டல சதகத்தில் பெருங்கதை ஆசிரியர் கொங்குவேளிர் பற்றி ஒரு செய்தி உள்ளது. அச்செய்யுள்,

'நீதப் புகழ்உத யேந்திரன் காதை நிகழ்த்துதற்குக்
கோதற்ற மங்கையில் மூன்று பிறப்புற்ற கொள்கையன்றி
மேதக்க சொற்சங்கத் தார்வெள்க வேகொங்கு வேள்அடிமை
மாதைக்கொண் டுத்தரம் சொன்னது வும்கொங்கு மண்டலமே'

என்பதாகும்.[48]

கார்மேகக் கவிஞரின் கொங்கு மண்டல சதகத்தை 1923ஆம் ஆண்டு திருச்செங்கோடு அ. முத்துசாமிக் கோனார் விளக்கவுரையுடன் அச்சிட்டார். பல செய்யுள்களுக்கு விரிவாக உரை இயற்றித் தக்க பல மேற்கோள் பாடல்கள் அளித்துள்ள கோனார் பெருங்கதை பற்றிய செய்யுளுக்கு விளக்கமாக உரை எழுதவில்லை.

'இது உதயணன் கதை என்றும், பெருங்கதை என்றும்
கூறும் கொங்குவேள் மாக்கதை அரங்கேற்றிய
சரிதம் என்று மாத்திரம் விளங்குகிறது. மற்றை
விபரம் நன்கு விளங்காமையால் உரை எழுதவும்
இயலவில்லை'

எனக் கோனார் எழுதியுள்ளார்.

பெருங்கதை முதல் பதிப்பு வெளியானது 1924ஆம் ஆண்டு. கோனார் 1923இல் கொங்கு மண்டல சதகப் பதிப்பை வெளியிட்டாலும்

உ.வே. சாமிநாதய்யரிடம் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த அவர் பெருங்கதை அமைப்பு, சிறப்பு, மேற்கோள் இவைகளை ஓரளவு தந்துள்ளார். சதகப்பாடலில் கண்ட வரலாறு அப்போது அவருக்கு விளங்காமையால் உரை எழுதவில்லை. கோனார் மூலமாகக் கொங்கு மண்டல சதகப் பாடல் உ.வே. சாமிநாதய்யருக்குக் கிடைத்துத் தம் பெருங்கதைப் பதிப்பில் குறித்துள்ளார்.

கொங்கு மண்டல சதக ஆசிரியர் கார்மேகக் கவிஞர் சமணர். விசயமங்கலத்துச் சேர்ந்தவர். விசயமங்கலம் சமணக் கோயிலில் பரம்பரையாகப் பூசை செய்யும் சமண அந்தணர் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

நன்கு கற்றறிந்திருந்த கார்மேகக் கவிஞர் தம் ஊரில் தம் சமயத்தார் பரம்பரை பரம்பரையாகக் கூறி வந்த இரண்டு அரிய செய்திகளை இச் செய்யுளில் கூறியுள்ளார். அவற்றுள் ஒன்று கொங்குவேள் மூன்று பிறப்புற்ற கொள்கை; மற்றொன்று கொங்குவேள் அடிமை மாதைக் கொண்டு விசயமங்கலத்து சங்கத்தார் கேட்ட கேள்விகட்கு விடையளித்தது ஆகியவையாகும்.

(அ) மூன்று பிறப்புற்ற கொள்கை

இதுபற்றிச் சமணர்களிடம் இருவிதமான கருத்து நிலவுகிறது. முதலாவது பெருங்கதை இயற்றும் பொருட்டுக் கொங்குவேள் விசயமங்கலத்தில் மூன்று முறை அவதாரம் செய்தார் என்பது.

இரண்டாவது கருத்து பைசாச மொழியில் பிருகத் கதா இயற்றிய குணாட்டியரும், வடமொழியில் பிருகத் கதா இயற்றிய துர்விநீதனும், தமிழில் பெருங்கதை இயற்றிய கொங்குவேளிரும் ஆகிய மூவரும் ஒருவரே! அதாவது முதல் பிறப்பில் குணாட்டியராகப் பிறந்தவரே கங்க நாட்டில் துர்விநீதனாக இரண்டாம் அவதாரம் செய்தார். விசயமங்கலத்தில் கொங்குவேளாக மூன்றாவதாக அவதாரம் செய்தவரும் அவரே. அதாவது ஒருவரே மூன்று இடங்களில் மூன்று முறை அவதாரம் செய்து மூன்று மொழிகளில் உதயணன் கதையைப் பாடினார் என்பதாகும்.

(ஆ) அடிமை மாதைக் கொண்டு விடை கூறியது

விசயமங்கலத்தில் தமிழ்ச் சங்கம் ஒன்று இருந்தது. கொங்குவேளிர் பெருங்கதை என்ற பெயரில் உதயணன் வரலாற்றைக் காவியமாக எழுத

முற்பட்டபோது அதற்குரிய ஆற்றல் கொங்குவேளிருக்கு உண்டா என்பதைச் சோதனை செய்ய அச்சங்கத்தினர் விரும்பினர்.

ஒருநாள் தம்முன் வந்து தாங்கள் கேட்கும் வினாக்களுக்கு விடை கூறுமாறு கொங்குவேளை விசயமங்கலம் தமிழ்ச் சங்கத்தார் கேட்டுக் கொண்டனர். குறிப்பிட்ட நாளில் சங்கத்தார் கேட்ட கேள்விகட்குக் கொங்குவேள் தாமே விடை கூறாமல், தம் வேலைக்காரப் பெண்ணைக் கொண்டு விடை கூறச் செய்தார்.

வரலாற்றுச் சிலைகள்

விசயமங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயிலில் வாத்திய மண்டபத்தின் உள் தென்மேற்கு மூலையில் வடக்கும் கிழக்கும் நோக்கி 5 ஆடவர் சிற்பங்கள் அமர்ந்த நிலையிலுள்ளன. நின்ற நிலையிலுள்ள ஒரு பெண் சிற்பமும் உள்ளது.[49]

அச் சிலைகள் தவம் செய்யும் முனிவர்கள் சிற்பங்களாகத் தோன்றவில்லை. கைகளில் ஏடுகள் தாங்கிய தமிழ்ப் புலவர்களாகக் காட்சியளிக்கின்றனர். அவைகளைப் பார்வையிட்ட சிற்ப வல்லுநர் ஒருவர் 'அவை புலவர் முத்திரையுடைய புலவர்களின் சிற்பங்களே; மதுரையில் தமிழ்ச் சங்கப் புலவர்கள் 49 பேர் சிற்பங்கள் மீனாட்சியம்மன் கோவிலில் உள்ளன. அவை போலவே விசயமங்கலச் சிற்பங்கள் காட்சியளிக்கின்றன' என்று கூறியுள்ளார்.[50]

ஐந்து சிற்பங்களில் பெரிதாக உள்ள சிற்பத்தைக் 'கொங்கு வேளிர்' என்றும், நின்ற நிலையில் உள்ள பெண் சிற்பத்தைக் கொங்குவேளிரின் வேலைக்காரி சிற்பம் என்றும் கோயிலில் உள்ள சமணக் குடும்பத்தார் கூறுகின்றனர்.

அக் கோயில் மகாமண்டபக் கிழக்கு வாயில் நிலையில் உள்ள ஒரு கல்வெட்டில் கீழ்வருமாறு தொடர்கள் காணப்படுகின்றன.

'. . . . வேளிரையும் தேவராசாரியனை
ரயும் தோழன்மா
ரையும் எழுந்த
ருள்வித்து விஷூ
அயன சங்கராந்தி
திருக்கார்த்திகைக்கு

அமுதுபடிக்கு
இறுக்கும் கலம்
அறுநாழியும் ....'

இக்கல்வெட்டில் வேளிரை எழுந்தருளச் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது காணலாம்.[51] இத் தொடர் கொங்குவேளைக் குறிப்பதாகவே கொள்ளலாம்.

கொங்கு நாட்டு ஆவணங்களில் பெருங்கதைக் குறிப்புகள்

கொங்கு நாட்டில் செப்பேடுகளிலும், ஓலைப்பட்டயங்களிலும் பல்வேறு வரலாற்று ஆவணங்கள் கிடைத்துள்ளன. அவைகளில் கொங்கு நாட்டை ஆட்சி புரிந்த அரசர்களும், கொடை அளித்த பாளையக்காரர்களும், பட்டக்காரர்களும் காப்பிய மாந்தர்களோடு ஒப்பிட்டுப் புகழ்ந்து கூறப்பட்டுள்ளனர்.

யானையைப் பழக்குவதிலும், யானை நூலிலும், யானை ஏற்றத்திலும் உதயணன் மிகவும் சிறந்தவனாகப் பெருங்கதையில் புகழப் பெறுகிறான். பிரச்சோதன மன்னனின் யானையை அடக்கிப் பின் அந்த யானை மூலமாகவே வாசவதத்தையுடன் உதயணன் தன் நகர் மீளும் திறம் மிகவும் அரிய ஆற்றல் மிக்க செயலாகும்.

உதயணன் சிறைப்பட்டபோது உதயணனை மீட்க யூகி மிகவும் தந்திரமாகப் பல பணிகளைத் திறம்படச் செய்கிறான்.

பெருங்கதையில் யானைத் தொடர்பில் உதயணனும், கூர்த்தமதியில் யூகியும் சிறந்து விளங்கினர். எனவே செப்பேடு, பட்டயங்களில் கொங்கு நாட்டுத் தலைவர்கள்

கரிதனில் உதயன்
கரிக்கு உதயன்
கரிமேல் உதயன்
கடகரி உதயன்

என்றும்,

மதிதனில் யூகி
மதிக்கு யூகி

என்றும் புகழப் பெறுகின்றனர். சிறு கிராமத்தில் எழுதப்பட்ட நாட்டுப்புற மக்களின் ஆவணங்களில்கூட இப் புகழ் மொழிகளைக் காணுகிறோம்.[52]

அவற்றின் மூலம் கொங்கு நாட்டு மக்களுக்குப் பெருங்கதை நிகழ்ச்சிகள், உதயணன், யூகி பற்றிய செய்திகள் நன்கு தெரிந்திருந்தன என்பதை அறிகிறோம்.

சிலப்பதிகாரம், மணிமேகலை காலத்திற்குப் பின்னர்த் தமிழ்க் காப்பியங்களுக்கெல்லாம் முன்னோடியாகத் தோன்றி, ஆசிரியப்பாவிலும் அரிய பெரும் அழகு நடையைக் கைவந்த கலையாகக் காட்டித் திகழும் கொங்குவேளின் பெருங்கதைக் காப்பியம் கொங்கு நாட்டுச் சமண இலக்கியங்களின் மணிமுடி எனலாம்.

சீவகசிந்தாமணி

நூல்

சமணர்களின் தலைசிறந்த காப்பியமாக விளங்கும் சீவகசிந்தாமணியை அளித்தது கொங்குநாடு எனப் பல்வேறு சான்றுகள் கொண்டு காணமுடிகிறது. அவற்றை விரிவாகக் காணலாம். தமிழில் ஐம்பெருங் காப்பியங்கள் என வழங்குவனவற்றுள் சீவக சிந்தாமணியும் ஒன்று.[53] சீவகன் என்னும் ஏமாங்கதநாட்டு மன்னனது பிறப்பு முதல் வீடுபேறு இறுதியாக உள்ள வரலாற்றை 3145 விருத்தப் பாடல்களால் 13 இலம்பகங்களில் கூறும் நூல்.[54]

காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்னும் எண்மரைச் சீவகன் மணம் புரிந்து கொண்ட மங்கலக் கதையோடு, கல்வியாகிய நாமகளையும், செல்வமாகிய பூமகளையும், ஆட்சியாகிய மண்மகளையும், வீடுபேறாகிய முத்திமகளையும் மணந்ததாகப் புனைந்து கூறும் சுவைமிக்க காப்பியம். அதனால் சீவக சிந்தாமணிக்கு 'மணநூல்' என்று பெயரும் உண்டு.

சமணர்கள் இந்நூலைத் தங்கள் வீடுகளில் நாள்தோறும் பூசை செய்து பாராயணம் செய்து வருகின்றனர். ஐம்பெருங்காப்பியங்களில் முதல் நூலாகக் குறிக்கப்பெறும் சிறப்பினை உடையது.[55] பிற்காலத்தில் தமிழ்ப்புராணங்களில் முக்கியமான இடம்பெறும் நாட்டுப்படலம், நகரப்படலம் ஆகியவற்றிற்கு அடிப்படை சீவக சிந்தாமணியேயாகும். வேண்டிய அளவு சீர்கள் பெருகி விரிந்த பொருளைக் கூறுவதற்கும், இடங்களுக்கு ஏற்ற சந்தங்களை அமைப்பதற்கும் வாய்ப்பாக உள்ள விருத்தப்பாடல் வடிவில் முதன் முதலில் அமைந்த முழுநூல் சிந்தாமணியாகும்.

ஆசிரியர்

சிறப்புமிக்க இந்நூலின் ஆசிரியர் திருத்தக்கதேவர் ஆவார். இவர் திருத்தகு முனிவர், திருத்தகு மகாமுனிவர், திருத்தக்க மகாமுனிவர், தேவர் என்றும் அழைக்கப் பெறுவார்.[56] திருத்தக்க தேவரின் ஆசிரியரும் மிகச்சிறந்த புலமை பெற்றவர். அவரைக் 'குருக்கள்' என்று நச்சினார்க் கினியர் உரை குறிப்பிடும்.[57] தமிழ் இலக்கண, இலக்கியப் பயிற்சியும், சமண சமயப் புலமையும் நன்கு உடையவர் திருத்தக்க தேவர் என்பது அவர் நூல் மூலம் வெளிப்படுகிறது.

காலம்

சிரவணபௌகொளா கல்வெட்டொன்று கி.பி. 874 முதல் 914 வரை ஆட்சிபுரிந்த அகாலவர்சன் காலத்தில் வாழ்ந்த குணபத்திராச்சாரியார் என்னும் சமண முனிவரைப் பற்றிக் கூறுகிறது.[58] அவர் ஆத்மானு சாசனம், மகாபுராணத்தின் பிற்பகுதியாகிய உத்தர புராணம் ஆகியவற்றைப் பாடியவர்.[59] தன் ஆசிரியர் ஜினசேனர் தொடங்கிய மகாபுராணத்தின் பிற்பகுதியாக இவர் உத்தரபுராணம் பாடியது கி.பி. 897ஆம் ஆண்டாகும்.[60]

அவர் பெயருடன் இணைந்து சிந்தாமணிதேவர் என்னும் புலவர் ஒருவர் கூறப்படுகிறார். அவர் வச்சிரநந்தி தொடங்கிய திராவிட சங்கத்தைச் சேர்ந்தவர்.[61] தமிழ்நாட்டுச் சமணத் தலைவரான குந்த குந்தர் வழியினர். தேவகணத்தைச் சேர்ந்தவர்.[62] சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவரும் தேவ கணத்தைச் சேர்ந்தவர். அக் கல்வெட்டில்

'தர்ம்மார்த்த காம பரிநிர்வ்ருத்தி சாரு சிந்தாஸ்
சிந்தாமணிஹ் ப்ரதிநிகேதம் அஜாரி யேந ச
ஸ் தூயதே சரச சௌக்க புஜாசு ஜாதாஸ்
சிந்தாமணிமுனி வ்ருஷா ந கதஞ்சநேந'

எனப் பழங்கன்னடத்தில் வெட்டப்பட்டுள்ளது. அதன் பொருள்

'சிந்தாமணி ஒவ்வொரு வீட்டிற்கும் பயன்படுவது; தூய சிறப்பான எண்ணங்களை உடையது ; மகிழ்ச்சி தரத்தக்கது; வீடுபேறு அளிக்க வல்லது; அதனால் இன்பந்தரத்தக்க அந்நூலை இயற்றிய ஆச்சாரியரான சிந்தாமணி முனிவரை எப்படிப் புகழாமலிருக்க முடியும்'

என்பதாகும். இக்கல்வெட்டில் சிந்தாமணியுடன் சூளாமணியும் குறிக்கப் பெறுகிறது. திருமுக்கூடல் நரசப்பூர்க் கல்வெட்டிலும் சிந்தாமணியும் சூளாமணியும் குறிக்கப்பெறுகிறது.[63]

சிந்தாமணி என்னும் பெயரமைந்ததற்குக் கூறப்படுகின்ற பல காரணங்களுள் சிந்தித்தவற்றைச் சிந்திப்பார்க்குத் தருவது சிந்தாமணி என்பதும் ஒன்று.[64] இக்கருத்து மேற்கண்ட கன்னடக் கல்வெட்டுடன் பொருந்தி வருதலைக் காணலாம்.

வீரராசேந்திரன் (கி.பி. 1063-1070) காலத்துத் தோன்றிய வீரசோழிய உரை 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாப்பருங்கலவிருத்தியை மேற்கோள் காட்டுகிறது.[65] யாப்பருங்கலவிருத்தி சீவகசிந்தாமணிப் பாடலை மேற்கோள் காட்டுகிறது.[66]

மேற்கண்ட காரணங்களைக் கொண்டு சீவக சிந்தாமணி கி.பி. 9ஆம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப்பட்டிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.[67]

சிந்தாமணியின் போர்க்களக் காட்சி வருணனையில் பாண்டியரும் பல்லவரும் குறிக்கப்படுகின்றனர். சோழர் பெயர் குறிக்கப்படவில்லை. இதனால் சோழ மரபின் ஒளி குன்றிய காலத்தில் சீவக சிந்தாமணி எழுதப்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர் கருதுகின்றனர்.[68]

உரைப்பாயிரத்தில் வரலாற்றுச் செய்திகள்

சீவக சிந்தாமணி உரைக்குச் சில பாயிரச் செய்யுட்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்றில் சீவக சிந்தாமணி ஆசிரியர் மிகவும் புகழ்ந்து கூறப்படுவதுடன் அவரை ஆதரித்தவர், அவர் ஊர் பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. அப்பகுதி

'வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தென்கடல் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன்'

என்பதாகும்.[69] இதன் மூலம் திருத்தக்க தேவரை ஆதரித்த அரசன் பொய்யாமொழி; அவன் தலைநகர் வஞ்சி என்று தெரிகிறது.

பொய்யாமொழி

சிம்மநந்தி என்னும் சமண முனிவர் துணையுடன் நிறுவப்பட்டது கங்க அரசு.[70] தலைக்காட்டைத் தலைநகராகக் கொண்டு அரசு செலுத்திய கங்க அரசர்கள் பெரும்பாலும் சமணர்களாகவே இருந்தனர்.[71]

அவர்களில் கி.பி. 870 முதல் 907 வரை அரசாட்சி புரிந்த இரண்டாம் இராசமல்லன் தலைக்காட்டைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்ததுடன், கொங்கு நாட்டிலும் ஸ்கந்தபுரம் என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான். ஸ்கந்தபுரத்தில் இரண்டாம் இராசமல்லன் (கி.பி. 870-907) தன் அண்ணன் குணதுத்தமராயன் என்பவனைப் பிரதிநிதியாக நியமித்து ஆட்சி புரிந்தான். அவன் கி.பி. 878இல் ஸ்கந்தபுரத்தை ஆட்சி புரிந்ததாகக் கொங்கதேச ராசாக்கள் என்னும் நூல் கூறுகிறது.[72]

இரண்டாம் இராசமல்லனுக்குக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் தர்மமகாதிராச சத்யவாக்ய கொங்கணிவர்ம இராசமல்லப் பெருமானடிகள் என்ற பெயர் வழங்குகிறது.[73] தலைக்காட்டுக் கங்கர்கள் காலத்தில் மதுரையில் தோன்றிய திராவிட சமண சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பெரும் செல்வாக்குடன் திகழ்ந்தனர். அவர்களில் பலர் தமிழ் அறிந்த சமணர்கள்.

சிரவணபௌகொளாவில் நான்காம் இராசமல்லனின் (கி.பி. 973-985) தளபதியாகவும், அமைச்சனாகவும் விளங்கிய பெருவீரன் சாமுண்டராயன் தான் எடுப்பித்த உலகப் புகழ்பெற்ற 19 மீட்டர் உயரம் உள்ள கோமடேசுவரர் சிலையில் கன்னடத்துடன் தமிழிலும் 'ஸ்ரீசாமுண்ட ராஜன் செய்வித்தான்' என்ற கல்வெட்டு பொறித்துள்ளதைக் காணுகின்றோம்.[74]

அறிஞர்கள் சிலர் திருத்தக்கதேவரைப் புகழ்ந்த பொய்யாமொழி 'சத்யவாக்யன்' என்று பெயர் பெற்ற கங்க மன்னனாக இருக்க வேண்டும் என்று கருதி எழுதியுள்ளனர்.[75]

கொங்கு நாட்டின் எல்லை அருகிலுள்ள தலைக்காட்டில் ஆட்சி புரிந்த இச் 'சத்யவாக்யன்' தன் கல்வெட்டுகளில் கொங்குநாடு, கொங்க நாடு 8000, கொங்கதேசம், கொங்கவிஷையம் என்ற பெயருடைய நாட்டை ஆண்டதாகக் கூறிக் கொள்ளுகிறான்.[76]

வஞ்சி

திருத்தக்கதேவரைப் புகழ்ந்த பொய்யாமொழி வஞ்சியைச் சேர்ந்தவன் என்று கூறப்பட்டுள்ளது. பெருவஞ்சி என்பதில் பெரு என்பது வஞ்சிக்கு அடைமொழியாக இருக்கலாம்.

சேரரின் மேலைக் கடற்கரைத் தலைநகரும்[77] கொங்கு நாட்டுக் கருவூரும்[78] வஞ்சி எனப் பெயர் பெற்று விளங்குவதை அனைவரும் அறிவர்.

'அனுப்பப்பட்டிச் செப்பேடு' என்னும் கொங்கு ஆவணம் கொங்கு நாட்டில் 'நாலுவஞ்சி' உள்ளன என்று கூறும். அச்செப்பேட்டில் வரும்

'கொங்கு மலைநாடும் குளிர்ந்தநதி பன்னிரண்டும்
சங்கரனார் தெய்வத் தலம்ஏழும் - பொங்கொளிர்சேர்
வஞ்சிநகர் நாலும் வளமையால் ஆண்டருளும்
கஞ்சமலர்க் கையுடையோன் காண்'

என்ற வெண்பா மூலம் அதனை அறிகின்றோம்.[79]

கொங்கு நாட்டுத் தனிப்பாடல் ஒன்று சேலம், தாராபுரம், கருவூர், மூலனூர் ஆகிய நான்கு ஊர்களையும் கொங்கு வஞ்சி என்று கூறுகிறது.

'மாந்தரர்க்கும் மற்றுவரு மன்னவர்க்கும் கொங்குவஞ்சி
ஏந்துபுகழ் சேர்தலைமை ஏந்துபதி - சார்ந்திலகு
சேலமொடு தாரா புரியும் திகழ்கருவூர்
மூவனூர் ஆக மொழி'

என்ற பழம்பாடல் மூலம் அந் நான்கு ஊர்களும் கொங்கு வஞ்சி என அழைக்கப்பட்டதென அறிகிறோம்.[80] தாராபுரம், கருவூர், மூலனூர் ஆகிய மூன்று ஊர்களிலும் இன்றும் வஞ்சியம்மன் கோயில்கள் உள்ளன.[81]

வஞ்சி-தாராபுரம்

தாராபுரத்திற்கு வஞ்சி என்ற பெயர் முன்னர் வழங்கி வந்துள்ளது என்பதைப் பின்வரும் சான்றுகள் விளக்கும்.

(அ) ஓதாளர் குறவஞ்சி[82]

'ஆதியில் விராடபுரி
அதன்பிறகு வஞ்சிபுரி

பின்னர்த் தில்லைபுரி
தாரகாபுரியெனும் தாராபுரி'

(ஆ) பழனிமலைச் செப்பேடு[83]

'கொங்கு மண்டலம் நரையனூர்நாடு வஞ்சி
வாடபுரம் சீர்மை'

(இ) அனுமன்பள்ளி செங்குந்தர் பட்டயம்[84]

'வஞ்சிபுரம் தாராபுரம்'

(ஈ) மக்கென்சி ஆவணம்[85]

'தாராபுரத்திற்கு பூராந்தபுரம் தில்லை புகலி வஞ்சி
இராசையென்று அஞ்சுபேர் வந்தது'

(உ) தாராபுரம் தில்லாபுரி அம்மன் கோயில் கல்வெட்டு[86]

'கொங்கு வஞ்சி விலாடபுரமான இராசராசபுரம்'

(ஊ) வாலசுந்தரக் கவிராயரின் கொங்கு மண்டல் சதகம்[87]

'நல்ல புகழ்வஞ்சி வாடபுரம்'

மேற்கண்ட இலக்கியம், செப்பேடு, கல்வெட்டு, ஓலைப்பட்டயம், வரலாற்று ஆவணம் மூலம் தாராபுரத்திற்கு வஞ்சி என்ற பெயர் வழங்கி வந்துள்ளமையை அறிகிறோம்.

ஸ்கந்தபுரம் பற்றி அறிஞர்கள் கருத்தும் முடிவும்

லேசன் என்னும் மேனாட்டறிஞர் கோபிக்கும், கொள்ளேகாலுக்கும் இடைப்பட்ட கஜ்ஜல்கட்டிக் கணவாய்ப் பகுதியில் 'ஸ்கந்தபுரம்' இருக்க வேண்டும் என்பர்.[88]

புலவர் அ.மு. குழந்தை சத்தியமங்கலத்திற்கு மேல் மலைப்பகுதியில் உள்ள டணாயக்கன் கோட்டையே ஸ்கந்தபுரம் என்று கூறுகிறார்.[89]

கொங்கு நாட்டு வரலாறு என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதிய மு. ஆரோக்கியசாமி ஸ்கந்தன் என்றால் முருகன். முருகனுக்குக் காங்கேயன் என்று பெயர். அதனால் காங்கேயமே ஸ்கந்தபுரம் என்பார்.[90]

கோவைகிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் கரூர் அல்லது தாராபுரம் ஸ்கந்தபுரமாக இருக்கலாம் என்பார்.[91]

கே.எஸ். வைத்தியநாதன் என்பார் திருமுருகன்பூண்டி என்ற ஊர்ப் பெயரில் முருகன் பெயர் வருவதால் ஸ்கந்தபுரம் திருமுருகன்பூண்டியே என்பார்.[92]

வரலாற்றறிஞர்கள் ஸ்கந்தபுரம் 'ஆற்றங்கரையில் வயல்கள் சூழ்ந்த இடத்தின் நடுவே இருந்ததாகக் கூறுகின்றனர்.[93]

கஜ்ஜல்கட்டி, டணாய்க்கன் கோட்டை ஆகியவை மலைப்பகுதியில் உள்ளன. காங்கேயத்தில் ஆறும், வயலும் இல்லை. கரூரில் ஆறு உண்டு; ஆனால் வயல் இல்லை.

தாராபுரம் அமராவதி ஆற்றங்கரையிலும் வயல்கள் சூழ்ந்த பகுதியிலும் இருப்பதாலும் கொங்கு தாராபுரம் என்று பெயர் பெற்றிருப்பதாலும், கொங்கூரின் அருகே இருப்பதாலும் பன்னெடுங்காலம் பல அரசர்களின் தலைநகராக விளங்கியதாலும் தாராபுரம் அல்லது அதனருகில் ஸ்கந்தபுரம் இருக்கலாம்.

ஸ்கந்தபுரம் எது?

கங்கர்கள் கொங்கு நாட்டின் தலைநகராக ஸ்கந்தபுரத்தைக் கொண்டிருந்தனர். அது எது என்பதுபற்றி அறிஞர்களிடையே பல்வேறு வகைப்பட்ட கருத்துகள் நிலவுகின்றன.

கோவைகிழார் ஸ்கந்தபுரம் என்பது தமிழ்ப் பெயரின் வடமொழி ஆக்கமாகக் கருதுகிறார். கங்கர்கள் தலைக்காட்டைத் தளவனபுரி என்று அழைத்தனர். கொங்கு நாட்டுப் பேரூர் ஆதிபுரி என்றும், கரூர் கெர்ப்பபுரம் என்றும், முத்தூர் முக்தாபுரி என்றும், வள்ளலூர் அன்னதான சிவபுரி என்றும் மாறியுள்ளதை எடுத்துக் காட்டாகக் காட்டுகிறார்.[94] சமணர்கள் வாகை என்னும் ஊரை விஜயமங்கலம் ஆக்கினர்.[95]

வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் தாராபுரத்திற்கு அண்மையில் உள்ள கொங்கூரே ஸ்கந்தபுரம் என்று கூறியுள்ளார்கள். ஸ்கந்தம் அல்லது கந்தம் என்றால் வாசனை என்று பொருள். கொங்கு என்ற சொல்லை ஸ்கந்தம் ஆக்கிக் கொங்கூரை ஸ்கந்தபுரம் எனக் கூறினர் என்று தெய்வ சிகாமணிக் கவுண்டர் கருதுகிறார்.[96]

சோழ மன்னன் முதலாம் பராந்தகன் காலத்தில் (907-948) கொங்கூருக்கு அருகே இருந்த கொங்கு வஞ்சியைப் பராந்தகபுரம் என்று

மாற்றினர்.[97] பின் இராசராசன் பெயரால் இராசராசபுரம் ஆயிற்று. பின் அப்பெயரே தாராபுரம் என மருவியது.[98]

தாராபுரத்தின் சிறப்பு

கங்கர்கள் காலம் தொடங்கிக் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆட்சிவரை தொடர்ந்து வந்த எல்லா அரச மரபினரும் தாராபுரத்தையே தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்துள்ளனர்.

'கொங்கு தாராபுரம்' என்று பல ஆவணங்கள் தாராபுரத்தைக் குறிக்கின்றன.[99] தாராபுரத்தில் பெரிய நிலக்கோட்டை இருந்தது. அதனைத் 'தாராபுரம் கெடி' எனச் செப்பேடுகளும், பிற வரலாற்று ஆவணங்களும் குறிக்கின்றன.[100] 'தாராபுரம் சீமை'[101] 'தாராபுரம் சாவடி'[102] தாராபுரம் மண்டலம் சாவடி என்னும் பெயர்களிலும் இப்பகுதி அழைக்கப்பட்டுள்ளன.

தாராபுரத்தின் அருகே சின்னத் தாராபுரம் என்ற ஊர் ஒன்றுள்ளது. அவ்வூர்க் கல்வெட்டுகள் அவ்வூரைக் கீழைத் தாராபுரம் என்றும் அழைக்கிறது.[103] அதனால் சில ஆவணங்கள் தாராபுரத்தைப் 'பெரிய தாராபுரம்' 'மேலைத் தாராபுரம்' என்றும் அழைக்கிறது.[104]

சீவக சிந்தாமணி உரைப்பாயிரப் பாட்டில் பொய்யாமொழி வண்பெருவஞ்சிப் பொய்யாமொழி என அழைக்கப் பெறுகிறார். பெரிய தாராபுரம் - பெருவஞ்சி என ஆகலாம். கரூர், சேலம், மூலனூர் ஆகிய வேறுசில ஊர்களும் வஞ்சி என அழைக்கப்பட்டதால் அவற்றிலிருந்து தலைநகர் தாராபுரத்தை வேறுபடுத்திக் காட்டவும் 'பெருவஞ்சி' என அழைத்திருக்கலாம்.

சமண இராமாயணத்தில் 'கொங்கு தாராபுரி' சமணம் செழித்த ஊர்களில் ஒன்று என்று கூறப்பட்டுள்ளது.[105] இன்றும் தாராபுரத்தில் சமண தீர்த்தங்கரர் சிலை உள்ளது.[106]

நச்சினார்க்கினியர் குறிப்பு

திருத்தக்க தேவரைப் பற்றிய வரலாறு தெரியாத நிலையில் அவரைப் பற்றிக் கூறுவோர் அனைவரும் அவர் சோழ நாட்டினர் என்று கூறுவதற்குரிய ஒரே காரணம், நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணி ஓம்படைச் செய்யுளில் '*முந்நீர் வலம்புரி*' எனவரும் தொடருக்குச்

'*சோழகுலமாகிய கடலிலே* பிறந்த வலம்புரி' என்று உரை எழுதியுள்ள ஒரே குறிப்புத்தான்.[107]

நச்சினார்க்கினியர் 'சோழகுலம்' என்று கூறுகிறாரே தவிரச் சோழநாடு என்று கூறவில்லை.

கொங்கு நாட்டில் சோழர் தொடர்பு

கொங்கு நாட்டில் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே சோழர் ஆட்சி ஏற்பட்டது. கி.பி. 880இல் பட்டத்துக்கு வந்த ஆதித்த சோழன் கொங்கு நாட்டை வென்றான்.

சோழ நாட்டு மக்கள் பலர் கொங்கு நாட்டில் குடியேறியுள்ளனர். அவர்கள் தங்களைக் கொங்கு நாட்டில் வாழ்ந்தாலும் சோழிய வேளாளர், சோழிய பிராமணர், செந்தலை வேளாளர் என்று அழைத்துக் கொண்டனர்.

கொங்கு நாடே பல காலங்களில் வீரசோழ மண்டலம், அதிராச ராசமண்டலம், சோழ கேரள மண்டலம் என்று பெயர் பெற்றுச் சோழ நாட்டின் ஒருபகுதியாக இருந்துள்ளது.[108]

கொங்கு நாட்டு மக்கள் பலருக்குச் 'சோழன்' என்ற அடைமொழி உள்ளதைக் கொங்கு நாட்டுக் கல்வெட்டுகள் கூறுகின்றன.[109]

எனவே 'சோழகுலம்' என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுவதால் திருத்தக்கதேவர் சோழ நாட்டவராக இருக்க வேண்டும் என்பதில்லை. கொங்கு நாட்டைச் சேர்ந்த சோழர்குடி ஏதாவது ஒன்றைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்.

விசயமங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் 'திருவானைக் காவுடைய சொக்கன்' என்னும் சோழ நாட்டினன் திருப்பணி செய்து கொடை விட்டிருப்பதைக் கல்வெட்டுக் கூறுகிறது.

கொங்கு நாடும் சிந்தாமணியும்

'கலகமிடும் அமண்முருட்டுக் கையர் பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணி', 'குண்டு அமண்புரட்டுச் சிந்தாமணி', 'சமணர் பொய்நூல்', 'அவகதை', 'பயனற்ற கதை' எனச் சைவ இலக்கியம் பழித்தாலும்[110] சிந்தாமணி மீது கொங்கு நாட்டு மக்கள் மிகுந்த பற்றுக் கொண்டுள்ளனர்.

கொங்கு நாட்டு நூல் என்ற கருதப்படும் சீவக சிந்தாமணியுடன் கொங்கு நாட்டு மக்கள் தொடர்புடையவர்களாக விளங்கினர்.

(அ) கொங்கு நாட்டில் வாழ்ந்த பெருமக்கள் பலர் 'சிந்தாமணி நயினார்' என்று பெயர் வைத்துக்கொண்டுள்ளனர்.[111] நயினார் என்று இன்றும் தொண்டை நாட்டுச் சமணர்கள் பெயர்கள் வைத்துக் கொள்ளுவதைக் காணுகிறோம்.[112] எனவே 'சிந்தாமணி நயினார்' என்று வைத்துக் கொண்டவர்கள் சமணர் எனக் கருதுவர்.

(ஆ) 'பாகவதன் அனதாரி' என்பவர் வேளாளர் வரலாறு கூறும் மரபாள சூடாமணி என்னும் நூலைப் பாடினார். அந்நூல் பாடியதற்கான காரணத்தைக் கூறும்போது கொங்கு நாட்டு வேளாளர்கள் சீவக சிந்தாமணியைப் படித்துக் கொண்டிருந்தனர். அந்தப் பாவத்தைப் போக்க நான் மரபான சூடாமணி பாடுகிறேன் என்று கூறுகிறார்.

'சீவகனார் புகழ் உரைக்கும் சிந்தாமணி அதனின்
பாவம் அறுத்திட'

தான் பாடுவதாகக் கூறுகிறார்.[113] சீவகனை இகழும் போதுகூடச் சீவகனார் என மரியாதைக்குரிய ஆர் விகுதி அளித்துப் பாடியிருப்பது கொங்கு நாட்டார் சீவகன்மீது கொண்டிருந்த பற்றை விளக்குகிறது.

(இ) சேலம் மாவட்ட அலைவாய்மலைப் பட்டயத்தில் கையொப்ப மிட்டுள்ள கொங்கு வேளாளர் ஒருவர் பெயர் 'சிந்தாமணிக் கவுண்டர்' என்பதாகும். ஈரோடு மாவட்டக் கொடுமணலில் கொங்கு வேளாளரின் பூசை செய்யும் ஆண்டியின் பெயர் 'சமணாண்டி' என்பது. கொங்கு நாட்டு வேளாளர்களில் கரைக்காட்டு வேளாளர், சேரகுல வேளாளர், தென்திசை வேளாளர், பள்ளி வேளாளர், உடும்பரை வேளாளர் இவர்களோடு 'சயின வேளாளர்' என்பவர்களும் கூறப்படு கின்றனர்.[114]

(ஈ) கொங்கு நாட்டிலுள்ள கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம் ஆலத்தூரில் வீரசங்காதப் பெரும்பள்ளி என்ற சமணக் கோயில் ஒன்றுள்ளது. இது மிகவும் தொன்மையான

கோயில். பழங்கால வட்டெழுத்துக் கல்வெட்டு முதல் போசளர் கல்வெட்டு வரை இங்கு உள்ளன.

இவ் வீரசங்காதப் பெரும்பள்ளி மண்டபத் தென் சுவரில் அரசன் பெயர் இல்லாத கல்வெட்டு ஒன்றுள்ளது. கி.பி. 11ஆம் நைற்றாண்டைச் சேர்ந்த எழுத்தமைதியில் அக் கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டில்

'கமலநாத சிந்தாமணி தேவர்'

என்ற சமண அடியார் ஒருவர் குறிக்கப் பெறுகிறார். இவ் அடியவர் சிந்தாமணி ஆசிரியராகக் கொள்ளாவிடினும் இவருடைய பெயரில் சிந்தாமணியின் பெயர்த் தாக்கத்தைக் காணுகிறோம்.

(உ) ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் கல்வெட்டொன்றில் ஒடுவங்க நாட்டில் சத்தியமங்கலத்தில் சிந்தாமணி பவானி சங்கமம் என்ற தொடர் காணப்படுகிறது. அதனால் கொங்கு நாட்டில் சிந்தாமணி என ஓர் ஆற்றுக்குப் பெயர் உள்ளமை தெரிகிறது.[115]

சாமிநாதய்யர் குறிப்பு

சீவக சிந்தாமணியை அரிதின் முயன்று மிகவும் செம்மையாக 1887ஆம் ஆண்டில் பதிப்பித்தவர் உ.வே. சாமிநாதய்யர். நூலாசிரியர் வரலாற்றில்

> 'திருத்தக்க தேவருடைய காலம், இடம் அவரை ஆதரித்த பிரபுவின் பெயர் முதலியவற்றுள் யாதொன்றும் தமிழ் நூல்களால் வெளிப்படையாக விளங்கவில்லை'

என எழுதியுள்ளார்.

சென்னையில் உ.வே. சாமிநாதய்யர் நூலகத்தில் அவருக்கு வந்த கடிதங்கள், அய்யர் சுவடி தேடுதல், பதிப்பித்தல் தொடர்பாக எழுதிய பல குறிப்புகள், ஐயரவர்கள் படிக்கும்போதுழ அவர் எடுத்தெழுதிய குறிப்புகள் ஆகியவற்றைத் தொகுத்து வைத்துள்ளார்கள். அவற்றுள் வேண்டியவற்றை வரிசையாக அச்சிட்டும் வருகின்றனர். அவற்றுக்குத் 'தமிழ்க் கருவூலம்' என்று பெயரிட்டுள்ளனர். அத் தொகுப்பில் ஜே. 220

என்று குறிப்பிட்டுள்ள ஒரு தொகுதியில் கொங்கு நாட்டு நூல்கள் என்னும் தலைப்பில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

பெருங்கதை
சீவக சிந்தாமணி
சூளாமணி[116]
நன்னூல்
மயிலைநாதர் உரை
நேமிநாதம்
அகப்பொருள் விளக்கம்[117]
வச்சணந்திமாலை
சிலப்பதிகார அரும்பதவுரை
அடியார்க்கு நல்லார்

உ.வே. சாமிநாதய்யர் கருத்துப்படி சீவக சிந்தாமணி கொங்கு நாட்டு நூலாகிறது. இம்முடிவு அய்யரவர்கள் தம் இறுதிக் காலத்தில் கண்ட முடிவாகும்.

தலைக்காட்டுக் கங்க மன்னன் சத்யவாக்ய இராசமல்லன் காலத்தில் கொங்கு நாட்டு ஸ்கந்தபுரத்தில் (கொங்கூர்) அவர்கள் ஆட்சி புரியும்போது அவர்களால் ஆதரிக்கப்பட்ட திருத்தக்க தேவர் கொங்கு நாட்டில் சீவக சிந்தாமணியைப் பாடினார்.

பிற்காலத் தமிழ்க் காப்பியங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்கும் சிந்தாமணிப் பெருங்காப்பியத்தைத் தமிழுலகத்திற்கு அளித்த பெருமை கொங்கு நாட்டுக்கு உரியதாகும்.

நேமிநாதம்

எழுத்து, சொல் இலக்கணம் கூறும் நூல் நேமிநாதம். இந்நூல் 97 வெண்பாக்களில் அமைந்தது.[118] இதனை இயற்றியவர் குணவீரபண்டிதர் என்னும் சமணப்புலவர்.[119] நேமிநாதர் என்னும் 22ஆம் சமண தீர்த்தங்கரர் பெயரால் இந்நூலை இயற்றி, இதற்கு நேமிநாதம் என்னும் பெயரைக் குணவீர பண்டிதர் இட்டார் என்பர்.[120] நேமிநாதம் இயற்றிய காரணத்தால் குணவீர பண்டிதருக்கே நேமிநாதர் என்ற பெயர் உண்டு என்றும் கூறுவர்.[121]

சுருக்க நூல்

இந்நூல் முன்னிருந்த இலக்கண நூல்களில் கூறப்பட்ட விரிந்த செய்திகளைச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறுமுகத்தான் செய்யப்பட்டது என்பது குணவீரபண்டிதர் வாக்கினாலும்[122] உரையாசிரியர் குறிப்பினாலும்[123] நன்கு தெரிகிறது. அதனால் இந்நூலுக்குச் சின்னூல் என்ற பெயரும் வழங்கிற்று.[124]

ஆசிரியர் குணவீரபண்டிதர்

இவர் சமண சங்கத்துள் 'ஸ்ரீ வீரசங்கம்' என்ற பிரிவைச் சேர்ந்தவர்.[125] இப்பிரிவைச் சேர்ந்த சமணப் பெரியார் சிலர் இப்பெயர் பெற்றுள்ளனர்.

'குணவீர மாமுனிவன்'[126]
'குறண்டி குணவீர படாரர்'[127]
'குணவீர பண்டிதன்'[128]

என்பன அவையாகும். இச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வீரநந்தி, வீரசேனன் என்று பெயர் பெற்றுள்ளனர்.[129] இவர்கள் வழிபடும் கோயில் 'வீரசங்கத்துப் பெரும்பள்ளி', 'வீரஜினாலயம்' என்றும் அழைக்கப்பெறும்.[130]

குணவீரபண்டிதரின் ஆசிரியர் வச்சணந்தி முனிவர்.[131] குணவீர பண்டிதர் ஆசிரியர் வச்சணந்தி முனிவர் இருவரும் களந்தை என்னும் ஊரைச் சேர்ந்தவர்கள்.[132] அக்களந்தை

'பீடார் களந்தை'[133]
'வளமலி களந்தை'[134]
'தென் களந்தை'[135]
'விளங்கெழில் மாடத்துக் களந்தை'[136]
'வையம்புகழ் களந்தை'[137]

என்றெல்லாம் பலவாறு புகழ்ந்துரைக்கப் பெற்றுள்ளது.

களந்தை எது?

நேமிநாத ஆசிரியர் குணவீரபண்டிதரின் களந்தை தொண்டை நாட்டிலுள்ள ஊர் என்றும்,[138] அவ்வூர் செங்கல்பட்டு மாவட்டத்தில்

செங்கல்பட்டை அடுத்த ஒத்தவாக்கம் புகைவண்டி நிலையத்தை அடுத்துள்ள பொன்விளைந்த களத்தூர் என்றும் கூறுவர்.

நேமிநாத ஆசிரியர் குணவீரபண்டிதரும், வச்சணந்தி முனிவரும் வாழ்ந்த ஊர் - களந்தை - ஒரு சமணத்தலம். பொன்விளைந்த களத்தூரில் சமணச் சின்னங்கள் இன்று எதுவும் இல்லை.[139] தொண்டை நாட்டுச் சமண ஊர்களின் பட்டியலிலும் அவ்வூர் இல்லை.[140]

நேமிநாத ஆசிரியரின் ஊர் களந்தை ஒரு பழம்பதியாகும். ஆனால் பொன்விளைந்த களத்தூரில் பழமைச் சின்னங்கள் எதுவுமில்லை. அவ்வூர் 18ஆம் நூற்றாண்டில் பிறந்த படிக்காகப் புலவருக்குப் பின் புகழ் பெற்றது.[141]

தொண்டைமண்டல சதகம் பாடிய புலவராம் படிக்காசுப் புலவர் தாம் பிறந்த ஊராகிய பொன்விளைந்த களத்தூரில் நேமிநாதர் பிறந்திருப்பின் அதனைச் சுட்டிக் கூறாமல் இரார். ஆனால் நூலின் இயற்பெயரைக் கூடக் கூறாமல் நாட்டைக் குறிக்கும் வகையில்

"சின்னூல் உரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும்
மின்னூ புரத்திரு அன்னமின் னேதொண்டை மண்டலமே"

என்று பொதுவாகப் பாடியுள்ளார்[142] என்பது மேலும் சிந்தித்தற்குரியது.

கொங்கு 24 நாடுகளில் வாரக்கநாடு என்பது ஒன்று. 16 பழம் பதிகளைக் கொண்ட அந்நாட்டின் இரண்டாம் ஊராகக் களந்தை என்ற ஊர் ஒன்று குறிக்கப்படுகிறது.

"பூமேவு தென்சேரி திருவளர் களந்தையும்
புகழ்கொண்ட பல்லடமுடன்
பூமலூர் அழகாய பேறைமா நகரமும்
புகழ்குயிலை சூரனூரும்"

என்பது ஊர்த்தொகைப் பாடல் பகுதியாகும்.[143]

இக்களந்தை மிகப்பழம்பெரும் ஊர். பெரிய களந்தை, சின்னக் களந்தை என இரு பகுதிகள் அடங்கியது.

சுமார் 100 ஏக்கர்ப் பரப்பில் தொல்பொருள்கள் கிடைக்கும் மேடுகளைக் கொண்டது. அங்குச் சமண உருவங்கள் கிடைக்கின்றன.

இங்கு ஆதிநாதர் (ரிஷப தேவர்- முதல் தீர்த்தங்கரர் கோயில்) கோயில் முன்பு இருந்தது.

ஆதிநாதேசுவரர் 'அமணலிங்கேசுவரர்' என்று அழைக்கப்படுகிறார். இக்கோயிலில் சமணச் சிற்பங்கள் பல இன்றும் உள்ளன.[144]

வாரக்கநாட்டை அடுத்த வைகாவூர் நாட்டில் அய்யம்பாளையம் என்ற ஊர் அருகே ஐவர்மலை என்ற மலையொன்று உள்ளது. அம்மலை பதிற்றுப்பத்தில் புகழ்ந்து கூறப்பெறும் அயிரைமலையாகும்.[145] அம்மலையில் பல சமண முனிவர்கள் வாழ்ந்து சமயப்பணியும் கல்விப்பணியும் செய்துள்ளனர்.[146] பல தீர்த்தங்கரர் சிற்பங்கள் அங்கு உள்ளன.

அங்குள்ள கல்வெட்டுக்களில்

'குரத்தியார்'[147]

'மாணாக்கர்'[148]

'மாணாக்கியார்'[149]

என்ற தொடர்கள் காணப்படுகின்றன. அயிரைமலையில் குணவீரபண்டிதரின் குரு வச்சணந்தியின் நந்திகணத்தார் பலர் வாழ்த்துள்ளனர்.

கி.பி. 870 ஆம் ஆண்டுக்குரிய வரகுணபாண்டியரின் கல்வெட்டில் கீழ்வருமாறு உள்ளது.

> 'சகரயாண்டு எழுநூற்றுத் தொண்ணூற்றிரண்டு போந்தன வரகுணற்கு யாண்டு எட்டு குணவீரக் குரவடிகள் மாணாக்கர் காழத்து சாந்திவீரக் குரவர் திருவயிரை பாரீஸ்வ படாரரையு மியக்கி அவ்வைகளையும் புதுக்கி இரண்டுக்கு முட்டா வவியு மோரடிகளுக்கு சோறாக அமைந்தன பொன் ஐந்நூற்றைந்து காணம்'[150]

இக் கல்வெட்டில் குணவீரக் குரவடிகள் ஆசிரியர் என்பதும் அவர் மாணாக்கர் சாந்திவீரக்குரவர் என்பதும் பெறப்படுகிறது. இக் குணவீரக் குரவடிகள் நேமிநாத ஆசிரியர் குணவீரபண்டிதர் எனலாம்.

மேற்கண்ட காரணங்களால் நேமிநாத ஆசிரியர் குணவீரபண்டிதரின் ஊர் கொங்கு நாட்டுக் களந்தை எனலாம்.

குணவீரபண்டிதர் காலம்

குணவீரபண்டிதர் இயற்றிய மற்றொரு நூலான வெண்பாப் பாட்டியல் என்னும் வச்சணந்திமாலையின் பாயிர உரையில் 'இந்நூல் யார் காலத்துச் செய்ததோ எனில் குருத்தவா மணிமுடிக் கொற்றவர் கோமான் திருத்தகு மணி முடித் *திரிபுவனதேவன்* என்னும் அரசன் காலத்திற் செய்ததென்றுணர்க' என வருவது கொண்டு குணவீரபண்டிதரை மூன்றாம் குலோத்துங்கன் (1178-1216) காலத்தவன் என்பர்.[151]

மூன்றாம் குலோத்துங்கனின் பட்டப்பெயர் திரிபுவனவீர தேவன் என்பது; திரிபுவனதேவன் என்பது அல்ல.[152]

எனவே குணவீரபண்டிதரின் வச்சணந்திமாலை குறிப்பிடும் திரிபுவனதேவன் மூன்றாம் குலோத்துங்கனாக (1178-1216) இருக்க வேண்டும் என்பதில்லை.

நன்னூலுக்கு முற்பட்ட நேமிநாதம்

இலக்கிய வரலாற்று நூல்களில் பல நேமிநாதம் நன்னூலுக்கு முற்பட்டது என்றே கூறுகின்றன.

"நன்னூல் தோன்றுவதற்கு முன் தொல்காப்பியம் கற்பவர் நேமிநாதத்தைக் கற்றுப் பின்னரே தொல்காப்பியம் கற்று வந்தனர்"[153]

"பழங்காலத்தில் தொல்காப்பியமாகிய பெரு நூலைக் கற்பதற்கு முன், நேமிநாதத்தை மாணவர்கள் கற்று வந்தனர். நன்னூல் நேமி நாதத்திற்குப் பின்னர்த் தோன்றியது"[154]

"நேமிநாதம் நன்னூலுக்கு முற்பட்டது"[155]

"தொல்காப்பியம் - நன்னூல் கால இடைவெளியில் ஓர் இலக்கணப் பாலமாக நேமிநாதம் விளங்குகிறது"[156]

என்பன அவர்தம் உரைகளிற் சில.

நேமிநாதத்தின் சிறப்புப் பாயிரத்தில் காணும்

"தொல்காப்பியக் கடலில் சொற்றீபச் சுற்றளக்கப்
பல்காற் கொண்டோடும் படகென்ப - பல்கோட்டுக்
கோமிகா மற்புலனை வெல்லும் குணவீர
நேமிநா தத்தின் நெறி"

என்ற பாடல் தொல்காப்பியக் கடலைக் கடக்க நேமிநாதம் படகாகப் பயன்படும் என்று கூறுகிறது.

நன்னூல் நேமிநாதம் வேறுபாடுகள்

	நேமிநாதம்		நன்னூல்
1.	பெண்பாவால் அமைந்தது	-	நூற்பாவால் அமைந்தது
2.	சுருக்கமாக இலக்கணம் கூறல்	-	விரிவாகக் கூறல்
3.	மொழி முதல் எழுத்து 98	-	மொழி முதல் எழுத்து 102
4.	ஆய்தம் முதல் எழுத்து	-	ஆய்தம் முதல் எழுத்து அல்ல
5.	சார்பெழுத்து 216	-	சார்பெழுத்து 369
6.	மொழி ஈறு 9 எழுத்து	-	மொழி ஈறு 12 எழுத்து

மேற்கண்ட பட்டியல் நேமிநாதத்திற்கும், நன்னூலுக்கும் உள்ள கால இடைவெளியைக் காட்டும். நேமிநாதம், அதன் உரை ஆகியவைகளை உட்கொண்டு பல நன்னூல் நூற்பாக்கள் எழுந்துள்ளன.[157]

நேமிநாதம் பயிற்சி குறைதல்

நன்னூல் தோன்றி நாட்டில் உலவிய பின்னர் நேமிநாதத்தின் பயிற்சி குறைந்தது.

"நன்னூலுக்கு முன் நேமிநாதம் நல்ல செல்வாக்கினைப் பெற்றிருந்தது. ஆனால் நன்னூல் தோன்றியதும் இந்நூல் பயில்வார் தொகை மிக மிக அருகியே காணப்படுகிறது"

என்பது ஆய்வாளர் உரை.[158]

திருத்தணிகையுலா என்னும் நூல் சிலேடை வடிவில்

"நேமிநா தத்தால் நிலைதெரியாச் சொற்புணர்ச்சி
காமர்நன்னூல் சூத்திரத்தால் காட்டிடீர்"

என இக் கருத்தைத் தெரிவிக்கிறது.[159]

பவணந்தி முனிவரின் நன்னூலுக்கு முன் குணவீரபண்டிதர் இயற்றிய நேமிநாதம் பாடப்பட்டது. ஐவர்மலைக் கல்வெட்டின் மூலமும், களந்தையில் காணப்படும் சான்றுகள் மூலமும் நேமிநாதர் கொங்கு நாட்டவர் என்பதை அறிகிறோம். நன்னூலுக்கு வழிகாட்டியாக நன்னூலுக்கு முன் எழுத்து, சொல் இலக்கணம் படைத்த பெருமை கொங்குநாட்டுச் சமணர்களுக்குண்டு.

வச்சணந்திமாலை

பிரபந்தங்கள் தோற்றம்

தொல்காப்பியருக்குப் பின் தோன்றிய தொடர்நிலைச் செய்யுள்களிலும், பக்தி இலக்கியங்களிலும் புதிய சில பிரபந்த மரபுகள் தோற்றுவிக்கப்பட்டன. அதனையொட்டிப் பிரபந்த இலக்கியங்கள் தோன்றின. காலந்தோறும் தோன்றி வளர்ந்த வந்த இப்பிரபந்தங்கள் பிற்காலத்தில் 96 வகை என்னும் வரையறையைப் பெற்றது.

பிரபந்த மரபியல் என்னும் நூலில் ‘பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறு என்னும் தொகை’ எனக் குறிக்கப்படுகிறது. சிவந்தெழுந்த பல்லவராயன்மீது பாடப்பட்ட உலாவில் ‘தொண்ணூற்றாறு கோலங் கொண்ட பிரான்’ என வருவது பிரபந்த வகைகளைச் சுட்டும் என்பர்.[160]

பாட்டியல் நூல்கள்

இவ்வாறு தோன்றிய புத்திலக்கிய மரபுகளுக்கு இலக்கணம் காணும் நோக்கில் தமிழில் பாட்டியல் நூல்கள் பல தோன்றின. பாட்டியல் கோட்பாடு இரண்டு வகையாக இருந்தது. ஒன்று அகத்தியர் வழி. மற்றொன்று இந்திரகாளி வழி. முன்னது வைதிகத்தைச் சார்ந்தது. பின்னது அவைதிக வழியைச் சேர்ந்தது. பன்னிரு பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் முதலியவை அகத்தியர் பாட்டியலை முதல் நூலாகக் கொண்டவை. வச்சணந்திமாலை இந்திரகாளி நூலை முதல் நூலாகக் கொண்டது.[161] வச்சணந்திமாலை உரையில் ‘இஃது எந்நூல் வழித்தோ எனின் இந்திரகாளி என்னும் பாட்டியல் மரபின் வழித்து என்று குறிக்கப்பட்டுள்ளது.[162]

வச்சணந்திமாலை.

இந்நூலின் ஆசிரியர் நேமிநாதம் செய்த குணவீரபண்டிதரே ஆவர்.

இவர் சமணர்.[163] குணவீரபண்டிதரின் குரு வச்சணந்தி முனிவர் என்பவர். ‘வஜ்ரணந்தி’ என்ற பெயரே தமிழில் வச்சணந்தி என்றாகும்.[164] அருங்கலச் செப்பில் இவர் வச்சிரமாமுனி என்று புகழப்படுகிறார்.[165] குணவீரபண்டிதர் தன் ஆசிரியர் வச்சணந்தி பெயரால் இந்நூலைச் செய்தார்.

இதனை வச்சணந்திமாலை அவையடக்கப் பாடல் மூலம் அறியலாம்.

என்களங்கம் யாவையும் நீக்கி இனிதருளி
நன்களந்தை நூலோடு நாட்டுவரால் - தென்களந்தை
மன்பெயரான் வன்புகழான் வச்சணந்தி மாமுனிவன்
தன்பெயரால் நாட்டும் தமிழ்

என்பது வச்சணந்திமாலை அவையடக்கப் பாடலாகும்.

இந்நூல் பாயிரம் (1), மொழியியல் (23), செய்யுளியல் (48), பொதுவியல் (30), அவையடக்கம் (1) ஆகிய ஐந்து பகுதிகளையுடையது. 103 வெண்பாக்களால் அமைந்துள்ளது. இந்நூலை வெண்பாப் பாட்டியல் என்றும் அழைப்பர். இந்நூல் அந்தாதி யாப்பில் அமைந்தது. அந்தாதித் தொடையில் இயற்றப்பட்ட முதல் இலக்கண நூல் இதுவேயாகும்.

குணவீரபண்டிதர் கொங்கு நாட்டவர் என்பது முன்பே விளக்கப்பட்டது. அவர் இயற்றிய பாட்டியல் நூலான வச்சணந்தி மாலையும் கொங்கு நாட்டு நூலாகும். பிரபந்த இலக்கியங்களுக்கு இலக்கணம் கூறும் பாட்டியலை அளித்ததன் மூலம் கொங்கு நாட்டு இலக்கிய வளம் நன்கு வெளிப்படுகிறது.

நன்னூல்

ஐந்திலக்கணக் கோட்பாடு

பண்டைக்காலத் தமிழின் இயல்பை உணர்த்தும் இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பியத்துள் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களே விரித்துக் கூறப்பட்டுள்ளன. யாப்பு, அணி என்பன பொருளதிகாரத்தில் செய்யுளியல், உவமையியல் ஆகிவற்றுள் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. காலப்போக்கில் அவை யாப்பதிகாரம், அணியதிகாரம் என்று தனியே விரித்துக் கூறுகிற அளவுக்கு விரிந்து விட்டன.

பிற்காலத்தில் தமிழ்ப் பாவகைகள் பல்கிப் பெருகின. வடமொழியின் பல்வேறு அலங்கார சாத்திரங்கள் தமிழில் வந்து கலக்கத் தொடங்கின. இந்தச் சூழ்நிலையில் தனிப்பெரும் இடம் வகித்த யாப்பையும், அணியையும் பொருளதிகாரத்தினுள் அடக்க முடியவில்லை. இவ்விரண்டும் தனித்தனியாகக் கிளைத்தெழுந்து தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்திலக்கணமாகப் பல்கியது.[166] 'இலக்கணப் பஞ்சகம்'[167] என்று அழைக்கும் முறையில் அக்காலத்தில் உருவானது. இவ்வைந்திலக்கணக் கோட்பாட்டைச் சோழர் காலத்தின் தனிப்பெரும் நன்கொடை என்பர்.[168]

வீரசோழன் என்னும் பட்டப்பெயரையுடைய வீரராசேந்திரன் (கி.பி. 1063-1070) காலத்தில்[169] மிழலைக் கூற்றத்துப் பொன்பற்றியுடையான் ஆன புத்தமித்திரர் என்பார் 'வீரசோழியம்' என்ற பெயரில் ஐந்திலக்கண நூலொன்று செய்தார்.[170]

எழுத்து, சொல் இலக்கணம் பற்றிக் குணவீரபண்டிதரின் நேமி நாதமும், பவணந்தி முனிவரின் நன்னூலும் தோன்றின.[171] பொருள் இலக்கணம் இரண்டாகப் பிரிந்து நாற்கவிராச நம்பியின் அகப்பொருள் விளக்கமும், ஐயன் ஆரிதனாரின் புறப்பொருள் வெண்பாமாலையும் தோன்றியது. யாப்பிலக்கணத்திற்கு அமிதசாகரரின் யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும் தோன்றின. அணியிலக்கணம் கூறத் தண்டியாசிரியரின் தண்டியலங்காரம் தோன்றியது. இன்று வரை இந்த ஐந்திலக்கண மரபு நின்று நிலவுகிறது.

நன்னூலும் பவணந்தியும்

இடைக்காலத் தமிழுக்கு இலக்கண வரம்பு கோலப் பவணந்தி முனிவரின் நன்னூல் எழுந்தது.[172] நன்னூலின் சிறப்புப் பாயிரம், பொன் மதில் சனகையில் வாழ்ந்த சன்மதி முனிவரால் அருளப்பட்ட சொல்லுதற்கரிய பல்வேறு சிறப்புக்களையுடைய பவணந்தி என்னும் தவச்சான்றோர் இந்நூலை இயற்றினார் என்று கூறும். மேலும் அது அவர் முன்னோர் நூலின் வழியே தம் நூலை இயற்றினார் என்ற செய்தியையும் கூறும்.

இந்நூலைக் கங்கர் மரபில் வந்த சீயகங்கன் வேண்டப் பவணந்தி இயற்றினார் என்றும் கூறுவர்.[173]

பவணந்தி முனிவர் சன்மதி முனிவரின் சீடர் என்பது பாயிரத்தால் பெறப்படுகிறது. சன்மதி முனிவரின் மகன் பவணந்தி என்ற கருத்தும் உண்டு.[174] பவணந்தி கற்றுணர்ந்த சான்றோர். கொங்கு மண்டல சதகம் 'துங்கப் புலமைப் பவணந்தி' என்று குறிப்பிடும்.[175]

'இலக்கணக் கொத்து' ஆசிரியர் சுவாமிநாத தேசிகர்,[176] பிரயோக விவேக நூல் உரையாசிரியர்[177] ஆகியோர் பவணந்தியை 'நன்னூலார்' என்றே சுட்டிக் கூறுவர்.

சமண சமயத்தார் பற்பல சங்கத்தாராகப் பிரிந்திருந்தனர். ஒவ்வொரு சங்கத்திலும் பல கணங்கள் இருந்தன. கணங்கள் கச்சை, அன்வயம் என்ற பிரிவுகளைப் பெற்றிருந்தன. தென்னிந்தியச் சமண சங்கங்களில் மிகப் புகழ் படைத்தது திரமிளசங்கம் ஆகும். திரமிள சங்கத்தில் மிகவும் சிறப்படைந்திருந்தது நந்திகணம் ஆகும். நந்திகணத்து அருங்கலான்வயத்தார் தமிழ் நாட்டில் பரவியிருந்தனர்.

நந்திகணத்தார்

தமிழ் நாட்டில் பெரும்பான்மையினராக வாழ்ந்த நந்திகணத்தைச் சேர்ந்தவர்கள் - குறிப்பாகச் சமண ஆச்சாரியர்கள் நந்தி என்ற பெயரைத் தம் பெயருடன் சேர்த்துக் கொள்வர். அச்சநந்தி,[178] அவ்வநந்தி,[179] ஆரம்பநந்தி,[180] ஆர்யநந்தி,[181] உத்தநந்தி,[182] ஏறநந்தி,[183] கனகநந்தி,[184] குணநந்தி,[185] சந்திரநந்தி,[186] சாந்தநந்தி,[187] சிம்மநந்தி,[188] நாகநந்தி,[189] புட்பநந்தி,[190] பெறாநந்தி,[191] மாகநந்தி,[192] வச்சிரநந்தி,[193] வீரநந்தி,[194] ஸ்ரீநந்தி[195] என்பன தமிழ் நாட்டில் வழங்கிய சில நந்தி கணத்தாரின் பெயர்கள் ஆகும்.

நந்திகணத்தாரில் 'பவணந்தி' என்ற பெயர்பெற்றோரும் இருந்தனர். 'பவணம்' என்ற சொல்லுக்கு நாகம், நாகலோகம் என்ற பொருள் உண்டு. பவணம் + நந்தி = பவணநந்தி - பவணந்தி என்று இப்பெயர் அமைந்திருக்கலாம்.

இதே பொருளில் நாகநந்தி, நாதநந்திக்குரவர்[196] என்ற பெயர்களையும் காணுகின்றோம்.

பவணந்தி - என்ற பெயர், பவணநந்தியின் பெயர் வடிவமே என்பதற்குத் திருஞானசம்பந்தரின்

"கனகநந்தியும் புட்பநந்தியும் பவணநந்தியும் குமணமா
சுனகநந்தியும் குணகநந்தியும் திவணநந்தியும் மொழிகொளா
அனகநந்தியர் மதுவெரிழிந்தவ மேதவம்புரி வோமெனும்
சினகருக் கெளியேன்அலேன் திருஆலவா யரன்நிற்கவே"

என்ற பதிகம் சான்றாகும்.[197]

நேமிநாதமும் நன்னூலும்

நேமிநாதம் சமணர் செய்த இலக்கண நூலாகும். இந்நூல் வீரசோழியத்திற்கும் நன்னூலுக்கும் முற்பட்டது. ஆனால் வீரசோழியம் ஐந்திலக்கணத்தைக் கூறும் முயற்சியில் வெற்றி பெறவில்லை என்றும் தமிழ் மக்கள் அதனை மிகுதியும் விரும்பிப் பயின்றதில்லை என்றும், நேமிநாதத்துக்குப் போதிய பயிற்சி இல்லாது போயிற்று என்றும் அறிஞர் கருதுவர்.[198] எனவே இந்நூல்களைப் பயில்வார் மிகுதியாக இல்லை.

எழுத்து, சொல் இலக்கணம் கூறும் நேமிநாதம் மிகச் சுருக்கமாக இருப்பதாலும், மிக எளிமையாக விரிந்து கொடுத்துக் கருத்துக்களைக் கூற இயலும் நூற்பா வகையில் இல்லாமல், வெண்பா வடிவில் இருப்பதாலும் இந்நூல் மிகுதியாகப் பயிலப் பெறவில்லை போலும்.

திருத்தணிகையுலா என்னும் நூல் இக்கருத்தை,

"நேமிநா தத்தால் நிலைதெரியாச் சொற்புணர்ச்சி
காமர்நன் னூல் சூத்திரத்தால் காட்டிடீர்"

"நன்னூ லிடையயம் நண்ணிப் பரந்தெழுந்து
முன்னூல் உரையகல மோகித்தாள்

எனச் சிலேடை வடிவில் தெரிவிக்கிறது.[199]

நன்னூல் தான் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை மிகச் சிறப்பாக இலக்கணம் பயில்வாரிடையே உயிரோட்டமுள்ள ஒரு நூலாக நின்று நிலவுகிறது. நன்னூலுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர் என்ற செய்தியே தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் எல்லாக் காலத்திலும் அந்நூல் மிகுதியாகப் பயிலப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது.[200]

தொல்காப்பியத்திற்குப் பின்னர் 1500 ஆண்டுகள் கழித்துத் தோன்றிய நன்னூல் தன் காலத்து இலக்கிய வழக்கை யெல்லாம்

தவறாமல் மேற்கொண்டு தலைமையுடையதாய், சுருக்கமும் தெளிவும் உடையதாய் விளங்குகிறது. இலக்கிய வரலாற்று ஆசிரியர் ஒருவர் 'இன்றளவும் பயனும் ஆட்சியும் உடைய நூல் நன்னூல். இந்நூல் தமிழுக்கு வரம்பாகி நிலவுகிறது. இதன் பெயரே இதன் சிறப்பை விளக்கும். இதை ஒத்த நூல் இன்னும் தோன்ற வில்லை' என்று பாராட்டுவார்.[201] நன்னூலையும், நன்னூல் ஆசிரியர் பவணந்தியையும் தமிழ்ப் புலவர்கள் பலரும் பலவாறு பாராட்டுவர்.[202]

கல்வெட்டில் பவணந்தி

கல்வெட்டுகளில் பவணந்தி என்ற பெயர் சில இடங்களில் பயின்று வருகிறது.

1. 'ஸ்ரீபடிக்கமண படாரர் மாணாக்கர் பவணந்திப் பெரியார் செயல்'[203]
2. 'ஸ்ரீ வீரணன் பவணந்தி செய்வித்த திருமேனி'[204]
3. 'ஸ்வஸ்திஸ்ரீ பாணராயர் குருகளப்ப
பவணந்தி பட்டாரர் சிஷ்யரப்ப
தேவசேன பட்டாரர் பிரதிமா'[205]

முதல் இரண்டு கல்வெட்டுகளும் திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி வட்டம் கழுகுமலையில் உள்ள கல்வெட்டுகள். அவற்றின் காலம் 9ஆம் நூற்றாண்டாகும். அக் கல்வெட்டுகள் தமிழ் மொழியில் வட்டெழுத்தில் உள்ளன.

மூன்றாம் கல்வெட்டு ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் வள்ளிமலையில் உள்ளது. இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் பாணராயன் 9ஆம் நூற்றாண்டின் இறுதியையும் 10ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தையும் சேர்ந்த பாணகுல மன்னன் இரண்டாம் விஜயாதித்த பாணராயன் ஆவான் (898-910). இதில் குறிக்கப்பெறும் பவணந்தியை நன்னூல் ஆசிரியர் பவணந்தியோடு சிலர் பொருத்திக் காட்டுவர்.[206] நன்னூலாசிரியர் பவணந்தி முனிவர் 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர். இக்கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்ற பவணந்தி என்ற பெயருக்கும் நன்னூலாசிரியருக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. ஆயினும் இங்கு மேலே காட்டப்பெற்ற மூவரும் சமண சமயம் சார்ந்தவர்கள் என்பது கருத்திற் கொள்ளத்தக்கது. இருப்பினும் அவர்கள் பவணந்திக்கு முற்பட்டவர்கள்.

பவணந்தி முனிவர் சமயம்

பவணந்தி என்ற பெயரே அவர் சமண சமயம் சார்ந்தவர் என்பதைக் காட்டும். நன்னூல் எழுத்ததிகாரத் தொடக்கத்தில்

'பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த
நான்முகன் தொழுதுநன்கு இயம்புவன் எழுத்தே'

என்றும், நன்னூல் சொல்லதிகாரத் தொடக்கத்தில்

'முச்சக நிழற்றும் முழுமதி முக்குடை
அச்சுதன் அடிதொழுது அறைகுவன் சொல்லே'

என்றும் அருகதேவனுக்கு இவர் வணக்கம் செலுத்தும் நூற்பாக்களும் இவர் சமணர் என்பதைத் தெள்ளிதின் காட்டும். நான்முகன், அச்சுதன் என்னும் பெயர்கள் அருகதேவனைக் குறிக்கம்.

நன்னூலினுள்ளும் இவர் சமணர் என்பதற்கு ஆதரவாகச் சில இடங்களில் அகச்சான்றுகள் உள்ளன.

மொழிக்கு முதற்காரணம் நாதம் என்று வைதிகர் கொள்கையைக் கூறாமல், அணுத்திரளே மொழிமுதற் காரணம் என்ற சமணக் கருத்தைப் பவணந்தியார் கூறியுள்ளார்.[207]

உயிர்களை ஓரறிவுயிர் முதலாக ஐந்தறிவு உயிரீறாக இவர் அமைத்திருக்கும் முறைமை சமண சமயக் கருத்தைப் பின்பற்றியது.[208] இக் கருத்து மேருமந்திர புராணம் போன்ற சமண சமய நூல்களில் காணப்படுகிறது.[209]

பவணந்தி முனிவர் சமண சமயப் பிரிவில் ஒன்றாகிய நந்திகணத்தைச் சேர்ந்தவர் என்பது முன்பே விளக்கப்பட்டது.

பவணந்தி முனிவர் காலம்

பவணந்தி முனிவரை நன்னூல் இயற்றுமாறு சொன்னவர் சீயகங்கன் ஆவான். நன்னூல் சிறப்புப் பாயிரத்தில்,

" . . . . துன்னார்
இகல்அற நூறி இருநிலம் முழுவதும்
தனதுஎனக் கோலித் தன்மத வாரணம்

திசைதொறும் நிறுவிய திறல்உறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோல் சீய கங்கன்
அருங்கலை வினோதன் அமர்ஆ பரணன்"

வேண்டிக் கொள்ளப் பவணந்தி முனிவர் நன்னூல் இயற்றினார் என்பது கூறப்படுகிறது. எனவே சீயகங்கன் காலமே பவணந்தி முனிவர் காலமாகும்.

சீயகங்கன் கி.பி. 13ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் மூன்றாம் குலோத்துங்க சோழன் (1178-1218). மூன்றாம் இராசராச சோழன் (1216-1256), முதலாம் கோப்பெருஞ்சிங்கன் (1191-1243) ஆகியோர் காலத்தில் வாழ்ந்ததாகக் கல்வெட்டுகள் மூலம் அறிகின்றோம்.

வ.எ.	அரசன் பெயர்	ஆட்சி ஆண்டு	கி.பி. ஆண்டு	இடம்	சீயகங்கனைப் பற்றிய குறிப்பு
1	மூன்றாம் குலோத்துங்கன்[210]	3	1181	காளகஸ்தி	குவளாலபுரபரமேஸ்வரன் சீயகங்கன்
2	மூன்றாம் குலோத்துங்கன்[211]	12	1190	காணிக் குப்பம்	குவளாலபுர பரமேஸ்வரன், கங்க குலோத்பவன், சூரநாயகன், சீயகங்கன்
3.	மூன்றாம் குலோத்துங்கன்[212]	27	1205	காஞ்சி புரம்	குவளாலபுர பரமேஸ்வரன் கங்க குலோத்பவன் சிய்யகங் கன் அமராபரணனான திருவேகம்பமுடையான்
4.	முதலாம் கோப்பெருஞ்சிங்கன்[213]	17	1208	மேல் பாடி	குவளாலபுர பரமேஸ்வரன், கங்ககுலோத்பவன் காவேரி வல்லவன், நந்திகிரிநாதன், வெட்டும் அமராபரண சீயகங்கன்

5	மூன்றாம் குலோத்துங்கன்[214]	31	1209	வாவிலி தோட்டம்	குவளாலபுர பரமேஸ்வரன் கங்ககுலோத்பவன் சீயகங்கன்
6.	மூன்றாம் குலோத்துங்கன்[215]	34	1212	வல்லம்	அமராபரணன் சீயகங்கன்
7.	மூன்றாம் குலோத்துங்கன்[216]	34	1212	காள கஸ்தி	குவளாலபுர பரமேஸ்வரன் கங்ககுலோத்பவன் சூர நாயகன் திருவேகம்ப முடையான் அமரா பரணன் சீயகங்கன்
8.	மூன்றாம் குலோத்துங்கன்[217]	35	1213	காஞ்சி புரம்	குவளாலபுர பரமேஸ்வரன், உத்தம சோழகங்கன், கங்கா குலோத்பவன், சிறைமீட்ட பெருமாள் சீயகங்கன்
9.	மூன்றாம் ராஜராஜன்[218]	8	1224	மேல் பாடி	சிறைமீட்ட பெருமாளான சிய்யகங்கதேவர்
10.	மூன்றாம் ராஜராஜன்[219]	9	1225	சா தெள்ளா	உத்தமசோழகங்கன் வெட்டும் அமரா பரணன், அகளங்க சீயகங்கன் வீரகங்கன்
11.	மூன்றாம் ராஜராஜன் [220]	19	1235	அகஸ் திய கொண் டா	சூரநாயகன் சீயகங்கன்
12.	- 221	-	-	அகஸ் திய கொண் டா	உத்தமசோழகங்கன் வீரகங்கன் வெட்டும் அமரா பரணன் சீயகங்கன்

கி.பி. 1181 முதல் 1235 வரை சுமார் 44 ஆண்டுக்காலம் சீயகங்கன் ஆட்சி புரிந்துள்ளான். சோழரின்கீழ்க் கங்க நாட்டையும் கொங்கு நாட்டையும் சீயகங்கன் ஆண்டு வந்தான். சிம்மநந்தி என்னும் சமண முனிவரால் கங்கமரபு தோற்றுவிக்கப்பட்டது. கங்கர்கள் பெரும்பாலோர் சமணராகவே திகழ்ந்தனர். சீயகங்கன் சமய சமயத்தில்

'அருங்கலான்வயம்' என்ற பிரிவைச் சேர்ந்தவன். 'அருங்கலை வினோதன்' என்று பாயிரம் சுட்டுவது இக்கருத்தையேயாகும். எனவே சமண சமயம் சார்ந்த அமராபரணன் சீயகங்கன் காலமே (கி.பி. 1181-1235) பவணந்தி முனிவர் காலமாகும்.

சனகை எது

பவணந்தி முனிவரின் ஊர் சனகை ஆகும். நன்னூல் சிறப்புப் பாயிரத்தில் அவ்வூர் 'பொன்மதில் சனகை' எனக் குறிக்கப்பெறும். அச்சனகை என்னும் ஊர் எது என்பது பற்றி மூன்றுவிதமான கருத்துகள் உள்ளன. அவை பின்வருமாறு:

1. கருநாடக மாநிலம், மைசூர் மாவட்டம் திருமுக்கூடல் நரசபுரம் வட்டத்தில் உள்ள சனநாதபுரம் . . . சனகை[222]
2. தொண்டை மண்டலத்து, வடஆர்க்காடு மாவட்டத்து அரக்கோணம் வட்டம் சோழிங்கரை அடுத்துள்ள சனகாபுரம் . . . சனகை[223]
3. கொங்கு மண்டலத்து ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் சீனாபுரம் . . . சனகை[224]

கருநாடகத்துச் சனநாதபுரம்

மயிலைநாதர் தம் பாயிர உரையில் சனகை என்பதற்குச் சனநாதபுரம் என்று எழுதியுள்ளார்.[225] மயிலைநாதர் உரைப் பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாதய்யர் கருநாடக மாநிலத்தில் உள்ள சனநாதபுரத்தைப் பவணந்தியின் ஊர் என்ற ஒரு கருத்தையும் குறிக்கின்றார்.[226]

அவ்வூர் கல்வெட்டுகளில் 'கங்கபாடியான முடிகொண்ட சோழ மண்டலத்துத் தென்கரை இடைநாட்டு மாவிலங்கையான ஜனநாதபுரம்' என்றும், 'முடிகொண்ட சோழ மண்டலத்துக் கங்கைகொண்ட சோழ வளநாட்டு இடைநாட்டு ஜனநாதபுரம்' என்றும், 'பெரிய நாட்டு மாயிலங்கையான ஜனநாதபுரம்' என்றும் பலவாறு குறிக்கப்பெறுகின்றது.[227]

இவற்றிலிருந்து 'மாவிலங்கை' என்பது அவ்வூரின் பழம்பெயர் என்றும், 'சனநாதபுரம்' என்னும் பெயர் சோழமன்னன் முதலாம் இராசராசனின் பட்டப்பெயர்களில் ஒன்றாகிய 'சனநாதன்'[228] என்ற பெயரால் அவ்வூர்க்குப் பெயர் ஏற்பட்டது என்பதையும் அறிகிறோம்.

பவணந்தி முனிவர் காலத்தில் கருநாடக மாநிலச் சனநாதபுரம் சூழ்ந்த கருநாடகப் பகுதியில் போசளர் ஆட்சி புரிந்தனர்.[229] அங்கு மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில்லை. எனவே அவனுக்குக் கீழ் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த சீயகங்கனின் நிருவாகத்தின்கீழ் அப்பகுதியில்லை என்பது தெளிவாகிறது.

மயிலைநாதர் உரையில் சனநாதபுரம் என்பதற்குச் சனநாகபுரம், சனகாபுரம் என்ற பாடவேறுபாடுகளும் உள்ளன.[230] ஆனால் கருநாடக மாநில ஊர்ப்பெயர் சனநாதபுரமே என்பது கல்வெட்டால் உறுதிப்படுகிறது.

சனநாதபுரம் என்பது சனதை என மாறுமேயன்றிச் சனகை என மாறாது. இதனை ஆய்வாளர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர்.[231] மேலும் கருநாடக மாநிலத்துச் சனநாதபுரத்தில் சமண சமயச் சின்னங்கள் எதுவும் இல்லை.[232]

அவ்வூர் பவணந்தி முனிவரின் ஊராக இருந்திருந்தால் சிறப்புப் பாயிரம் இயற்றிய ஆசிரியர் அதன் பழம்பெயராகிய மாவிலங்கை என்பதையும் குறித்திருப்பார்.

எனவே பவணந்தியின் பிறப்பிடம் கருநாடக மாநிலத்துச் சனநாத புரமாக இருக்க முடியாது.

தொண்டை நாட்டுச் சனகாபுரம்

தொண்டை நாட்டுச் சனகாபுரமே பவணந்தி முனிவரின் ஊர் என்று கொள்பவர்கள் அக்கருத்துக்கு ஆதரவாக வள்ளிமலைக் கல்வெட்டில் பவணந்தி பட்டாரகர் என்ற பெயர் வருவதைக் காட்டுவர்.[233]

பவணந்தி பட்டாரகர் பாண அரசரின் குலகுரு.[234] அவர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமுமாகும். சமண சமய குரவராகிய அவர் புலவர் என்பதற்கு எவ்விதச் சான்றுமில்லை. அப் பவணந்தி பட்டாரகர் காலம் நன்னூலாசிரியர் பவணந்தி முனிவரின் காலத்துடன் பொருந்தியும் வரவில்லை. இருவருக்கும் சுமார் மூன்று நூற்றாண்டுகள் இடைவெளி உள்ளது. தொண்டை மண்டல சதகம் பவணந்தி தொண்டை நாட்டவர் என்று கூறுகிறது.

"தன்னூர்ச் சனகையில் சன்மதி மாமுனி தந்தமைந்தன்
நன்னூல் உரைத்த பவணந்தி மாமுனி நற்பதியும்
. . . . தொண்டை மண்டலமே"

என்பது அச் சதகப் பாடல் பகுதியாகும். அவர் ஊர்ப்பெயரைச் சுட்டிக் கூறவில்லை.

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மக்கென்சியின் உதவியாளர்கள் தொண்டை நாட்டின் சமணக் கிராமங்களைத் தொகுத்துப் பட்டியல் தயாரித்துள்ளனர். அப்பட்டியலில் எல்லாச் சமண ஊர்களும் குறிக்கப்பட்டுள்ளன.[235] சமணப்பள்ளி ஒரூரில் நல்ல நிலையில் இருந்தால் அதனைப் '*பெலம்*' என்றும், அழிந்த நிலையில் இருந்தால் '*கிலம்*' என்றும், வேறு சமயக் கோயிலாக மாற்றம் பெற்றிருந்தால் '*அன்னியன் குடியிருப்பு*' என்றும், அச் சமணப்பள்ளி பிறர் ஆக்கிரமிப்பில் அல்லது உரிமையில் இருந்தால் '*அடைமானம்*' என்றும் குறித்துள்ளனர்.

'மேலைச்சேரி ஜாகீர் துக்கடியில் ஜினாலயம் பெலம்'
'மாகறல் ஜினாலயம் கிலம்'
'பூர்வநத்தம் ஜினாலயம் அன்னியன் குடியிருப்பு'
'பட்டணம் ஜினாலயம் அடைமானம்'

என்ற தொடர்கள் அமைப்பில் அவ் அட்டவணையில் தொண்டை நாட்டுச் சமண ஊர்கள் குறிக்கப் பெறுகின்றன. அவ் அட்டவணை தொண்டை நாட்டுச் சமண ஊர்களின் விரிவட்டணை என்று பெயர் பெறும்.

இப்பட்டியலில் தொண்டை நாட்டுச் 'சனகாபுரம்' ஓரிடத்திலாவது குறிக்கப்பெறவில்லை. எனவே சனகாபுரம் சமணக் கிராமம் இல்லை என்பது தெளிவு. இன்று அச் சனகாபுரத்தில் சமணச் சின்னம் எதுவும் கிடையாது.[236]

எனவே தொண்டை நாட்டுச் சனகாபுரம் பவணந்தி முனிவரின் ஊராக இருக்க முடியாது.

கொங்கு நாட்டுச் சீனாபுரம்

பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் மூன்றாம் குலோத்துங்கன் கங்கநாட்டின் ஒருபகுதியையும், கொங்கு நாட்டையும்

சீயகங்கனை ஆட்சி புரியுமாறு அரசன் ஆக்கினான்.[237] மேல்பாடிக் கல்வெட்டு[238] மூலம் இச்செய்தி உறுதிப்படுகிறது. கொங்குப் பகுதியை ஆட்சிபுரிந்த சீயகங்கன் சமண சமயத்தவன்.

சீயகங்கனுக்கு

உத்தமசோழகங்கன்

அகளங்கன்

சிறைமீட்ட பெருமாள்

போன்ற பட்டப்பெயர்கள் உள்ளன.[239] கொங்கு நாட்டில் ஈரோடு வட்டத்தில் கங்காபுரம், சோழகங்கபுரம், உத்தமசோழபுரம், அகளங்கநல்லூர் (பருவாச்சி) போன்ற ஊர்ப் பெயர்கள் உள்ளன. சிறைமீட்டான் என்ற பெயர்களைப் பதின்மூன்றாம் நூற்றாண்டுப் பெயர்களாகக் கொங்கு நாட்டில் காணுகிறோம்.[240]

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் மொசக்குத்திவலசு உத்தமசோழச் சதுர்வேதமங்கலம் என்றும், அங்குள்ள சிவாலயம் உத்தம சோழீசுவரம் என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன. அங்குள்ள சிதைந்த கல்வெட்டொன்றில் ‘சீயகங்கன்’ என ஒரு தொடர் காணப்படுகிறது.[241]

கார்மேகக் கவிஞர் பாடிய கொங்கு மண்டல சதகத்தில் சீயகங்கனைப் பற்றி ஒருபாடலும், பவணந்தி முனிவரைப் பற்றி ஒருபாடலும் காணப்படுகின்றன.[242]

“சொல்காப் பியத்தின் குணதோடம் தேர்ந்து சொலுவதற்குத்
தொல்காப் பியம்கற்க நீண்ட அதனைச் சுருக்கியிசை
ஒல்காப் பெரும்பவ ணந்தியென் றோதி உபகரித்த
வல்கா வலன்சீய கங்கனும் தான்கொங்கு மண்டலமே”

“கங்கக் குரிசில் உவக்கநன் னூலைக் கனிந்துபுகல்
துங்கப் புலமைப் பவணந்தி மாமுனி தோன்றிவளர்
கொங்கில் குறும்பு தனிவாதி நாத குருவிளங்கும்
மங்குற் பொழிற்சன காபுர மும்கொங்கு மண்டலமே”

இவ்விரு பாடல்கள் அடங்கிய இச் சதகத்தைப் பாடிய கார்மேகக் கவிஞர் ஜினேந்திரன் என்னும் இயற்பெயருடைய சமணர். அவர் பண்டைய சமண மரபு தெரிந்து பாடியுள்ளார். கொங்கு நாட்டின் இன்றைய சீனாபுரத்தின் பழைய பெயர் சனகாபுரமே என்பது சதகப் பாடலால் விளங்குகிறது.

சனகாபுரம் - சனகை எனச் சிறப்புப் பாயிரத்தில் உள்ளது. அவ்வூர் கொங்கு 24 நாடுகளில் குறுப்பு நாட்டைச் சேர்ந்தது. குறுப்பு நாட்டின் பண்டைய பெயர் குறும்பு நாடு என்பது. சுந்தரர் தேவாரத்தில் அந்நாடு அவ்வாறே சுட்டிக் கூறப்படுகிறது.

"கொங்கில் குறும்பில் குரக்குத் தளியாய்"

என்பது சுந்தரர் தேவாரம்.[243]

சீனாபுரத்தில் ஊரின் வடமேற்கே 1 கி.மீ. தொலைவில் உள்ள மமுட்டித் தோப்பில் கொங்கு மண்டல சதகம் குறிப்பிடும் 'ஆதிநாதகுரு' - பகவான் ரிஷபதேவர் கோயில் இன்றும் உள்ளது.

பவணந்தி முனிவர் வணங்கிக் கூறும் முச்சக நிழற்று முழுமதி முக்குடையின்கீழ் ஆதிநாதர் சிலை அங்கு அமர்ந்த கோலத்தில் உள்ளது.

சீனாபுரத்தின் அண்மையில் உள்ள சமணத் தலமான விசயமங்கலத்தில் வீரசங்காதப் பெரும்பள்ளி ஆன சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயிலில் அமர்ந்த நிலையில் பவணந்தி முனிவர் சிலையும், நின்ற நிலையில் சீயகங்கன் சிலையும் உள்ளன.

பவணந்தி முனிவர் கொங்கு நாட்டுச் சீனாபுரத்தில் கி.பி. 12ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்து, சீயகங்கன் வேண்டிக்கொள்ள நன்னூலை இயற்றினார் என்பது உறுதிப்படுகிறது.

தோன்றிய நாள் முதல் இன்றளவும் பெருவழக்கத்தில் உள்ள சிறப்பு மிகு நன்னூலைத் தந்ததன் மூலம் கொங்குநாடு தமிழ் மொழிக்கு மிகச் சிறந்த ஒரு பெருங்கொடையை அளித்துள்ளது எனலாம்.

நன்னூல் - மயிலைநாதர் உரை

காலம்

நன்னூலுக்கு எழுதப்பெற்ற பல உரைகளுள் முதலாவது மயிலைநாதர் உரையாகும். இவர் நன்னூலாசிரியர் பவணந்தி முனிவரின் சமகாலத்தவராக அல்லது அடுத்துத் தோன்றியவராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.[244] அப்படியானால் மயிலைநாதர் காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகலாம்.

'நம்முன் கவ்வாம்' என்பதற்குக் 'கங்கன்' என்ற சொல்லை எடுத்துக்காட்டுகிறார்.[245]

'கங்கன் அகல்மார்பன் கற்றோர்க்கு இனிதளிக்கும்
செங்கனக வெள்ளைச் செழுமணிகள் - எங்கும்
தெறித்தனவே போல்விளங்கும் மீன்சூழ்ந்த திங்கள்
எறிக்குநிலா என்றே இனி'

என்பது மயிலைநாதர் மேற்கோள் காட்டிய பாடல்களில் ஒன்று.[246] பவணந்தியைப் போல் மயிலைநாதரும் கங்க மன்னர்களால் ஆதரிக்கப்பட்டிருக்கலாம்.

சமயம்

மயிலைநாதர் சமணசமயக் கருத்துக்களைப் பல இடங்களில் மிகுதியாக எடுத்துக்காட்டுகின்றார். சமண சமய நூல்களிலிருந்து மேற்கோள் பலவற்றைக் காட்டுகிறார். அருகதேவனைப் பெரிதும் போற்றுகிறார். எனவே மயிலைநாதர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பது தெளிவாகிறது.[247]

மயிலைநாதர் கொங்கன், கொங்கச்சி, கொங்கணன், கட்டி, கட்டிமான், கருவூரான் முதலிய கொங்கு நாட்டு மக்கள் பெயர்களைக் கூறுகிறார். அவர் எடுத்துக்காட்டுகளில் காட்டும் ஆந்தை, கணவாளன், சாத்தந்தை, செங்கண்ணன் போன்ற பல சொற்கள் கொங்கு நாட்டு மக்களின் பழம் குலப்பெயராக இன்றும் வழக்கில் உள்ளன.

கருவூர், அரசூர் முதலிய கொங்கு நாட்டு ஊர்களையும், கொங்கத்து உழவு எனக் கொங்கு நாட்டுத் தொழிலையும் குறிப்பதால் இவர் கொங்கு நாட்டவராக இருக்கலாம்.[248]

உ.வே. சாமிநாதய்யர் தன் குறிப்பில் மயிலைநாதர் கொங்கு நாட்டவர் என்றே குறித்துள்ளார்.[249] 'உரையாசிரியர்கள்' என்னும் ஆய்வு நூலிலும் இவர் கொங்கு நாட்டவர் என்ற கருத்துக் கூறப்பட்டுள்ளது.[250]

மயிலை

மயிலைநாதர் என்ற பெயர் மயிலாப்பூரில் எழுந்தருளியிருந்த தீர்த்தங்கரர் நேமிநாதரின் பெயர் என்பர்.[251]

நேமிநாதர் திருவுருவம் மயிலையில் மட்டும் அல்லாமல் தமிழகத்தில் பல ஊர்களில் எழுந்தருள்விக்கப்பட்டுள்ளது. கொங்கு நாட்டு விசயமங்கலத்தில் நேமிநாதர் படிமம் உள்ளது. விசயமங்கலத்தின் அருகேயுள்ள அரசண்ணாமலையிலும் நேமிநாதர் சிற்பம் இருந்துள்ளது. விசயமங்கலம் போல் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் உள்ள கோவை மாவட்ட ஆலத்தூர்ச் சமணப் பள்ளிக் கல்வெட்டில் 'நம்பி நேமிநாதன்' என்ற பெயர் காணப்படுகிறது.[252]

தளவாய்புரச் செப்பேட்டில் கொங்கு நாட்டை வென்ற பாண்டிய மன்னன் பராந்தகன் வீரநாராயணன் 'மயிலையர்கோன்' என்று பாராட்டப்படுகின்றான்.[253]

கொங்கு நாட்டு ஈரோட்டுக்குள்ள வேறு பெயர்களில் 'மயிலை' என்பதும் ஒன்று.[254] 4-2-1918 அன்று கொங்கு நாட்டுப் பெரும்புலவரும், கொங்குமண்டல சதகம் பதிப்பித்தவருமாகிய தி.அ. முத்துசாமிக் கோனார், உ.வே. சாமிநாதய்யருக்கு எழுதிய கடிதத்தில்,

"கொங்கு நாட்டில் மயிலை என்ற ஊர்
இருக்கிறதா? என்று வினவிய ஞாபகமிருக்கிறது.
ஈரோட்டுக்குப் பழைய பெயர் மயிலை,
அந்தக் கோயில் பூஜாந்தரத்தில் தாசிகள்
பாடும் அம்மானைப் பாடல்களில் வருகிறது"

என்ற எழுதியுள்ளார்.[255] உ.வே. சாமிநாதய்யர் நன்னூல் பதிப்பின்போது அவருக்கும் திருச்செங்கோடு அ.முத்துசாமிக் கோனாருக்கும் பல கடிதப்போக்கு வரத்துக்கள் நடந்துள்ளன. கொங்கு நாட்டுச் செப்பேடுகள், ஓலைப் பட்டயங்களில் மயிலம்பாடி, மயிலாடி, மயிலாபுரி என்ற ஊர்கள் குறிக்கப் பெறுகின்றன.[256]

ஈரோட்டிலும், ஈரோட்டைச் சுற்றிலும் சமண சமயச் சின்னங்கள் பல உள்ளன. எனவே மயிலைநாதர் கொங்கு நாட்டில் ஈரோட்டுப் பகுதியைச் சேர்ந்தவர் எனலாம். நன்னூலிலக்கணமும் அதற்கு முதலுரையாசிரியரான மயிலைநாதரும் கொங்கு நாட்டில் சமணர்களாகப் பிறந்து தமிழிலக்கண உலகில் நீங்கா இடம் பெற்றுள்ளனர். இங்ஙனம் மயிலைநாதர் கொங்கு நாட்டின் சமணம் தந்த கொடையாக விளங்குகிறார்.

அரும்பத உரையாசிரியர்

பெயர்

சிலப்பதிகாரம் முழுவதற்கும் அரும்பதங்களுக்கு மட்டும் உரை எழுதிய காரணத்தால் இவர் அரும்பத உரையாசிரியர் என்றே அழைக்கப்படுகிறார். அடியார்க்கு நல்லார் காலத்திலேயே இவர் பெயர் தெரியாமல் மறைந்துவிட்டது என இவ்வழக்கால் அறியலாம்.

பெரும்பாலான மேற்கோள் பாடல்களின் நூலையும் ஆசிரியரையும் குறிப்பிடும் அடியார்க்கு நல்லார் இந்திரவிழவூரெடுத்த காதை உரையில் 'அவைக்களத்தார் ஐந்து எனக் காட்டுவர் அரும்பதவுரையாசிரியர்' என்ற எழுதியுள்ளார்.[257] அடியார்க்கு நல்லாருக்கு அரும்பத உரையாசிரியரின் இயற்பெயர் தெரிந்திருப்பின் அதனைச் சுட்டியிருப்பார்.

காலம்

சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் அடியார்க்கு நல்லாருக்கு முற்பட்டவர் என்று தெரிகின்றதேயொழியக் காலத்தைக் குறிப்பிட்டுக் காட்டும் சான்றுகள் எவையும் அவர் உரையில் காணப்படவில்லை.

ஆபிரகாம் பண்டிதர் கருத்து

கருணாமிர்த சாகரம் என்ற இசை நூலை எழுதிய தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் தம் நூலுள் அரும்பத உரையாசிரியர் கருத்துகளைக் கூறி அவற்றைக் கூறியவர் செயங்கொண்டார் என்று குறிப்பிடுகின்றார். அவர் அவ்வாறு குறிப்பிடுவதற்குக் காரணம் எதுவும் குறிப்பிடவில்லை.[258]

சமயம்

அரும்பத உரையாசிரியர் உரைப்பதிப்பின் தொடக்கத்தில் விநாயகர் வணக்கம் கூறும் வெண்பா ஒன்று காணப்படுகிறது. அதனைக் கொண்டு இவர் சைவர் என்பர்.[259] 'கரும்பும், இளநீரும், கட்டிக் கனியும் விரும்பும் விநாயகன்' பற்றிய அப்பாடல் மிகவும் பிற்காலத்துப் பாடல். சிலப்பதிகாரத்தைக் 'கதை' என்றும் அப்பாடல் கூறுகிறது. அரும்பதவுரைக்கும் அப்பாடலுக்கும் தொடர்பு ஏதுமின்றி உள்ளது.

பிற்காலத்தில் ஏடு பெயர்த்து எழுதுவோர் எவராவது அவ் விநாயக வணக்கப் பாடலை ஏட்டின் தொடக்கத்தில் எழுதியிருத்தல் கூடும்.

அரும்பத உரையாசிரியர் சமண சமயத்தின்மீது மிகுந்த பற்றுடையவராகவே காணப்படுகிறார்.

'கவுந்தி' என வருமிடங்களில் அரும்பத உரைகாரர் 'கவுந்தியடிகள்' என மரியாதையுடன் அழைக்கிறார். சமணப் பெண் துறவிகள் தங்கும் இடத்தை 'ஸ்ரீகோயில்' எனக் குறிப்பிடுகிறார். உண்ணாநோன்பு, சாவகர், சாரணர் பற்றி விளக்கவுரை எழுதுகிறார்.[260] எனவே அவர் சமணராக இருக்க வாய்ப்பு உண்டு.

நாடு

அரும்பத உரைகாரர் நாடு கொங்கு நாடு என்ற அடிப்படையில்

'குன்றக்குரவர்'[261]

'நெடுவேள் குன்றம் அடிவைத்தேறி'[262]

'சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்'[263]

'வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்'[264]

எனவரும் இடங்களுக்கெல்லாம் குன்றம் என்ற சொல்லுக்குக் கொங்கு நாட்டில் உள்ள 'திருச்செங்கோடு' என்றே அரும்பதவுரை எழுதியுள்ளார்.

'பூவா வஞ்சிப் பொன்னகர்ப் புறத்தென்
வாய்வாள் மலைந்த வஞ்சி சூடுதும்'

என்ற பகுதியில் பூவாவஞ்சிக்குக் 'கருவூர்' என உரை எழுதியுள்ளார்.[265]

வேட்டுவவரியில் கண்ணகியைக் கண்டு அணங்கேறிய சாலினி கண்ணகியை 'இளவோ கொங்கச் செல்வி குடமலையாட்டி, எனக் குறிப்பிடுவாள். இதில் இதற்கு அரும்பத உரையாசிரியர், 'மேற்பட்டு இவளைத் தெய்வமாகக் கொண்டாடும் இடம் கூறினபடியாலே இவள் துர்க்கையாகவே பிறந்தாள்' என்று கொங்கு நாட்டில் கண்ணகி தெய்வமாக வழிபடப்பெறும் நிலையை அறிந்து கூறுகிறார்.[266]

சமணராகவும் இருக்க வாய்ப்புள்ள சிலப்பதிகார அரும்பத உரைகாரர் கொங்கு நாட்டு மலையையும், கொங்கு நாட்டு ஊரையும், கொங்கு நாட்டில் கண்ணகி வழிபாட்டையும் குறிப்பிடுவதால் அவர் கொங்கு நாட்டவரே எனலாம்.

சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார்க்கு வழிகாட்டியாகவும், முதல் உரைகாரராகவும் விளங்கும் பெயர் தெரியாப் பெரும்புலவராகிய இவர் கொங்கு நாட்டுச் சமணர் என்பதும், கொங்கு நாட்டில் வழங்கிய நிகழ்ச்சிகளையும் இடங்களையும் சுட்டுவதுடன் சமணப் பெருமையை நிலைநாட்டுவதில் முன்னிற்பதையும் அறியமுடிகிறது.

அடியார்க்கு நல்லார்

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியதன் மூலம் அந்நூலின் பன்முகக் கலைச் சிறப்புக்களையெல்லாம் அழிந்துவிடாமல் நன்கு வெளிப்படுத்தியவர் அடியார்க்கு நல்லார். அடியார்க்கு நல்லார் உரை இல்லையேல் சிலப்பதிகார நுட்பங்களும், குறிப்பாக அரங்கேற்று காதையின் இசை நாட்டியக் குறிப்புகளும் நன்கு வெளிப்படாமல் போயிருக்கும்.

காலம்

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார அரும்பத உரைகாரருக்குப் பின் தோன்றியவர். அரும்பத உரையாசிரியரை ஆதரித்தும், மறுத்தும் அடியார்க்கு நல்லார் உரை எழுதியுள்ளார்.[267] கலிங்கத்துப்பரணிப் பாடலை அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டுகிறார்.[268] நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் கொள்கை சிலவற்றை மறுத்துள்ளார். எனவே அடியார்க்கு நல்லார் கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர்.[269]

சமயம்

திருஞானசம்பந்தர் கருவூர் ஆனிலைப் பதிகத்தில் சிவபெருமானை 'அடியார்க்கு நல்லரே' எனக் குறிப்பதால்[270] 'அடியார்க்கு நல்லார்' என்று பெயர் பெற்றிருந்த இவர் சைவ சமயம் சார்ந்தவர் என்பர்.[271]

தமிழகத்தில் முன்பு மக்கள் பலர் அடியார்க்கு நல்லார் என்னும் பெயரை வைத்துக் கொண்டிருந்தனர்.[272] அவர்கள் அனைவரும் சைவர் என்பதற்குச் சான்று இல்லை. பெயரைமட்டும் வைத்து அவர் சார்ந்த சமயத்தைக் கூற இயலாது.

வள்ளிமலைத் திருப்புகழில் முருகப்பெருமானையும் அருணகிரிநாதர் அடியார்க்கு நல்ல பெருமாளே என்று அழைக்கிறார்.[273] சிவபெருமானும், முருகனும் பக்தர்கட்கு நல்லவர் - பக்தவத்சலர்[274] என்ற பொருளில்தான் அத்தொடர் வழங்கப்படுகிறது எனலாம்.

அடியார்க்கு நல்லார் சமண சமய நூல்களைச் சுட்டிக் கூறுமிடத்து, 'நமது தரிசனத்துக் கடியப்பட்ட வாற்றால் தேனுண்டலைப் பரிகரிக்க என்றதாம். எனவே ஊனையும் உடன் கூறிற்றாம்' என்று எழுதியுள்ளார்.[275] சமணக் கொள்கைகளைப் பல இடத்து வலியுறுத்திக் கூறுகிறார் அடியார்க்கு நல்லார்.[276] 'பட்டினி நோன்பிகள்' என்பதற்கு அவர் எழுதிய உரைப் பகுதி முதலியவை அவர் சமணர் என்பதை வலியுறத்தும்.[277]

நாடுபற்றிய கருத்துகள்

அடியார்க்கு நல்லார் எந்நாட்டைச் சேர்ந்தவர் என்பதில் பல அறிஞர்கள் வேறுபட்ட கருத்துகளைக் கூறியுள்ளனர்.

1. அடியார்க்கு நல்லார் நிரம்பை என்னும் ஊரைச் சேர்ந்தவர் என்பது உரைச்சிறப்புப் பாயிரம் மூலம் தெரிகிறது. நிரம்பை என்னும் ஊர் சோழமண்டலத்துத் தீபங்குடியைச் சார்ந்த நிகும்பரை தீர்த்தம் என்னும் ஊராகலாம். எனவே அவர் சோழ நாட்டினர் என்பது மு. அருணாசலம் கருத்து.[278]

2. அடியார்க்கு நல்லார் குணபூஷண சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியென்னும் ஈழநாட்டரசருக்கு மந்திரத் தலைவராய் இருந்தவர். அவர் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ் வல்ல உத்தமப் புலவர். அவர் வெட்டிய குளம் ஒன்று அடியார்க்கு நல்லான் குளம் என்ற பெயருடன் விளங்குகிறது. அவர் இருந்த மனை நிலமும் அவர் பெயரை விளக்குகிறது. அவருக்கு நட்பினராய் விளங்கியவர் காங்கேயன் என்பவர். அவரிருந்த ஊர் காங்கேயன்துறை என வழங்குகின்றது. இவ்வேதுக்களால் அடியார்க்கு நல்லார் ஈழத்து நாட்டினரே யாகற்பாலர்.[279]

என்று இலங்கைத் தமிழறிஞர் ஒருவர் எழுதியுள்ளார்.

3. அடியார்க்கு நல்லார் தொண்டை நாட்டைச் சேர்ந்தவர். அந்நாட்டுப் பல்குன்றக் கோட்டத்துச் சிங்கம் பொருத வளநாட்டு தேனூர் என்னும் ஊரில் அடியார்க்கு நல்லார் பிறந்தார் என்று சிலர் கூறுவர்.[280]

4. கொங்கு நாடு, இலங்கை என்னும் இரு கருத்துக்களையும் ஏற்று அடியார்க்கு நல்லார் கொங்கு நாட்டில் தோன்றி

இலங்கையில் வாழ்ந்தவர் என்று ஒரு ஆய்வாளர் எழுதியுள்ளார்.[281]

இப்படிப் பல திறப்பட்ட கருத்துக்கள் அடியார்க்கு நல்லார் பற்றித் தமிழ் இலக்கிய வரலாற்றில் கூறப்பெறுகின்றன.

கொங்கு நாட்டவர்

அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரத்தில் காணப்படும் சில பாடல்கள் அவர் யார்? எந்த நாட்டவர் என்பதற்கு ஓரளவு விளக்கம் அளிக்கின்றன. அப் பாடல்கள்

"ஒருந் தமிழ்ஒரு மூன்றும் உலகின் புறவகுத்துச்
சேரன் தொகுத்த சிலப்பதி காரத்தில் சேர்ந்தபொருள்
ஆரும் தெரிய விரித்துரைத் தான்அடி யார்க்குநல்லார்
காரும் தருவும் அனையான் நிரம்பையர் காவலனே"

"காற்றைப் பிடித்துக் கடத்தில் அடைத்தக் கடியபொருள்
காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமற் காலமெனும்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கேயர் கோன்அளித்த
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை செய்வித்ததே"

என்பனவாகும்.[282]

முதல் பாடலில் அடியார்க்கு நல்லார்க்கு நிரம்பையர் காவலன் என்ற பெயர் கூறப்படுகிறது. அதன்படி அடியார்க்கு நல்லார் நிரம்பை என்னும் ஊருக்குத் தலைவர் ஆவார்.

அந் நிரம்பை என்னும் ஊர் கொங்கு நாட்டு 24 நாடுகளில் குறுப்பு நாட்டைச் சேர்ந்ததாகக் கொண்டு நாட்டு ஊர்த்தொகைப் பாடல் கூறுகிறது.

"வருவிசைய மங்கையும் நிரம்பையும் கூடலூர்
மறுவறு சிறுங்கழிஞ்சி"

என்பது அப்பாடல் பகுதியாகும்.[283] பெருந்தொகையில் அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரப் பாடலைப் பதிப்பித்த மு. இராகவையங்கார் நிரம்பை - கொங்கு மண்டலத்ததோர் ஊர் என்று கூறுகிறார்.[284]

இரண்டாம் பாடலில் குறிக்கப்பெற்ற பொப்பண்ண காங்கேயன் நாமக்கல் மாவட்டத் திருச்செங்கோடு வட்ட மோரூரில் வாழ்ந்த காங்கேயர் குடியைச் சேர்ந்தவர்.[285]

போசள மன்னன் விஷ்ணுவர்த்தனன் இராமானுசரால் சமண சமயத்திலிருந்து வைணவ சமயத்திற்கு மாற்றப்பட்டான். அம் மன்னனின் அமைச்சராகப் பொப்பண்ண காங்கேயன் விளங்கினான். அவன் சமண சமயம் சார்ந்தவன்.[286]

இதனை உட்கொண்டே கொங்கு மண்டல சதகம்

"குருவை உணர்ந்த இளங்கோ அடிகள்உட் கொண்டுசொன்ன
தருவை நிகரும் சிலப்பதி காரத் தனித்தமிழுக்கு
அருமை உரைசெய் அடியார்க்கு நல்லார் அவதரித்த
வருமைப் பொழில்நிரம் பைப்பதி யும்கொங்கு மண்டலமே"

என்று கூறுகிறது.[287] இவற்றின் மூலம் அடியார்க்கு நல்லார் கொங்கு நாட்டவரே என்பது விளங்குகிறது.

திருச்செங்கோடும் சிலப்பதிகாரமும்

சிலப்பதிகாரத்தில் கண்ணகி கொங்கச் செல்வி என்று பாராட்டப் படுகிறாள்.[288] இதற்கு 'மேற்பட்டு இவளைத் தெய்வமாகக் கொண்டாடும் இடம்' என்பார் அரும்பத உரைகாரர். அடியார்க்கு நல்லார் 'கொங்க நாட்டினை ஆளும் செல்வி' என்பார். கீழ்கொங்கமாகிய திருச்செங்கோட்டுப் பகுதி 'கொங்கம்' அல்லது 'மழகொங்கம்' எனக் குறிக்கப்படுகிறது.[289]

'அதுகேட்டுக் கொங்கிளங் கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்திசெய்ய மழை தொழில் என்றும் மாறாததாயிற்று' என்பது சிலப்பதிகார உரைபெறு கட்டுரைப் பகுதியாகும்.

கொங்கிளங்கோசர் தங்கள் நாட்டகத்து எடுத்த கோட்டம் திருச்செங்கோடு ஆகலாம் என்ற கருத்தும் உண்டு.[290]

அரும்பத உரையாசிரியர் 'நெடுவேள் குன்றம்', 'செங்கோடு', 'வென்வேலான் குன்று' எனவரும் இடங்களிலெல்லாம் 'திருச்செங்கோடு' என்றே குறிக்கின்றார்.[291]

கொங்கு மண்டல சதகத்திலும் திருச்செங்கோட்டோடு சிலப்பதிகாரத்தைத் தொடர்பு படுத்தும் பாடல் ஒன்று உள்ளது. அப்பாடல்

"உளங்கோ துறாமல் ஒழுகுசெங் குட்டுவற்கு ஓர்துணையாம்
இளங்கோ அடிகள் இயற்றிய காப்பியத் தேவமுதம்
கொளுங்கோன் மதுவெனக் கூறுசெங் கோட்டுவேள் குமரனவர்
வளங்கோ னிடாத செங்கோடு வளர்கொங்கு மண்டலமே"

என்பதாகும்.[292]

அடியார்க்கு நல்லார் உரையுடன் சிலப்பதிகாரத்தை 1892இல் சிறப்புடன் பதிப்பித்த உ.வே. சாமிநாதய்யர் தம் முன்னுரையில்,

"அடியார்க்கு நல்லார் வருணம், சமயம், காலம்
ஆகிய இவற்றுள் ஒன்றும் புலப்படவில்லை"

என்று எழுதியுள்ளார்.[293]

ஆனால் மேற்கண்ட குறிப்புகள் மூலம் அடியார்க்கு நல்லார் சமண சமயம் சார்ந்தவர்; அவர் கொங்கு மண்டலத்துக் குறுப்பு நாட்டில் சமணர்களின் சிறந்த பதியாகிய விசயமங்கலத்தை அடுத்துள்ள நிரம்பை என்னும் ஊரைச் சேர்ந்தவர்; அவர் அரும்பதவுரைகாரர்க்கும், கலிங்கத்துப்பரணிக்கும் பின்பு நச்சினார்க்கினியருக்கும் முன்பு அதாவது கி.பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதை அறியலாம்.

கொங்குமண்டல சதகம்

கொங்கு நாட்டு வரலாற்று ஆய்வுக்கு மிகவும் அடிப்படையான பல சான்றுகளைத் தரும் சிறப்பான நூல் கொங்குமண்டல சதகம். இந்நூலைக் கி.பி. 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றியவர் கார்மேகக் கவிஞர் என்பவர் ஆவார். அவர் கொங்கு நாட்டின் நடுப்பகுதியிலுள்ள விசயமங்கலத்தில் வாழ்ந்த சமண அர்ச்சகர் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

விசயமங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் சமணப்பள்ளி அர்ச்சகர்கள் ஸ்ரீவத்ச கோத்திரம், ஔபாக்கிய சூத்திரம், விருத்தானிய யோகசாகை, காசிப குலத்துச் சமண அந்தணர்கள் ஆவர். இச் சமணக் குடும்பத்தில் தோன்றிய பத்மநாப அய்யரின் மகனாகத் தோன்றினார் கார்மேகக் கவிஞர்.

இளமையில் இவருக்கு 'ஜினேந்திரன்' என்பது பெயர். சமண சமயத்தில் ஆழ்ந்த பற்று உடையவராகத் திகழ்ந்தார்.

"பிண்டி நீழல் பெம்மான் அடியுளம்
கொண்ட கார்மேகம்"

என்றும்,

"வரிக்குயில் கூவும் பிண்டி
மரத்துமுக் குடைக்கீழ் நின்ற
கருத்தனைக் கருத்துள் உள்ளும்
கார்மேகக் கவிஞன்"

என்றும் இவர் புகழப்பெற்றுள்ளார்.

தன் தந்தையார் பத்மநாப அய்யரிடம் தமிழையும், வடமொழியையும் கற்றுப் புலமை வாய்ந்தவராகத் திகழ்ந்தார். இளமையில் ஒருநாள் நெருங்கிய உறவினர்கள் வாழும் பூந்துறைக்குச் சென்றார். அங்கு எழுந்தருளியுள்ள பார்சுவநாத தீர்த்தங்கரர் மீது ஒரு பாடல் பாடுமாறு அங்குள்ளவர்கள் வேண்டினர். உடனே

"பச்சை மணிவடிவாய் பாரில்விசுவ சேனன்அகம்
மெச்சும் வடிவாய் வெளிவந்த - உச்சிதனாம்
பாரிச நாதன் பதநினைந்தோர் வாழ்வாரே
சீரிசை நூல் இன்பம் சிறந்து"

என்னும் வெண்பாவைப் பாடினார். எல்லோராலும் பாராட்டப் பெற்றார்.

தன் அன்னையின் ஊரும், பழைய சமணத் தலமும் ஆகிய இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அனுமந்தக்குடி என்னும் ஊருக்குச் சென்று சமண சமயத் தொடர்பான வரலாறுகளையும், தத்துவங்களையும் கற்றார்.

பாண்டியநாடு, சோழநாடு தொண்டைநாடு போன்ற பகுதிகளுக்கெல்லாம் சென்று பல புலவர்களோடு இன்னுரையாடி மகிழ்ந்தார். இவர்தம் கவித்திறம் கண்டு ஜினேந்திரன் என்னும் இயற்பெயருடைய இவருக்குக் 'கார்மேகம்' என்ற பட்டப்பெயரை அளித்தனர். அது முதல்கொண்ட இவர் 'கார்மேகக் கவிஞர்' என்றே அழைக்கப்பட்டார்.

கருநாடக மாநிலம் கொல்லாபுரம் என்ற ஊரைச் சேர்ந்த சாந்தம் என்னும் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு விசயமங்கலத்தில் இனிதே வாழ்ந்தார்.[294]

தான் பிறந்த கொங்கு நாட்டின் பழைய வரலாற்றுச் செய்திகள், எல்லைகள், நாடுகள், மலைகள், ஆறுகள், தலங்கள், சித்தர்கள், புலவர்கள், வள்ளல்கள், அரசர்கள், செயற்கரிய செய்த பெருமக்கள், கோயில்கள், சமயச் செய்திகள், பிற இன்றியமையாத நிகழ்ச்சிகள் ஆகிய தொன்மைச் சிறப்புகள் எல்லாவற்றையும் தொகுத்துத் தகுந்த ஆதாரங்களுடன் 'கொங்கு மண்டல சதகம்' என்னும் பெயரில் அரிய நூலொன்றை இயற்றினார்.[295] அவ்வரிய நூலைக் கொங்கு நாட்டில் மறைந்து கிடந்த சமண வரலாற்றுச் செய்திகளை வெளிப்படுத்தும் வாயிலாகப் படைத்துள்ளார்.[296]

கொங்குவேளிர், பவணந்தி முனிவர், சீயகங்கன், அடியார்க்கு நல்லார் பற்றிய பல அரிய செய்திகளை வெளியிட்டார். கார்மேகக் கவிஞர் கூறிய செய்திகளே அவர்கள் வரலாற்றை ஆய்வு செய்ய அடிப்படைச் சான்றுகளாக அமைகின்றன.

கல்வியொழுக்கம்

நூல்

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை போன்ற நீதி நூல்கள் போல[297] ஓரோரடியில் கல்வி பற்றிய ஆழமான கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறும் பண்டைய நூல் 'கல்வி ஒழுக்கம்' ஆகும்.

முன்னைய மூன்று நூல்களும் மக்கள் நல்வாழ்க்கைக்குரிய பொதுவான நீதிகளைக் கூறுவன. ஆனால் நூல் முழுவதும் கல்வியின் சிறப்பு, கல்வி கற்கும் முறை, கற்கவேண்டிய கல்வி, கற்றவர் பெறும் பெருமை இவைகளையே முழுக்க முழுக்கக் கூறும் நூல் 'கல்வியொழுக்கம்' ஆகும்.

'கல்வி யொழுக்கம் கருத்துடன் படிக்கச்
செல்வம் மிகுத்துச் சிறப்புண் டாமே'

எனத் தொடங்கித் தமிழில் மொழி முதலில் வரும் எழுத்துக்களை வரிசையாகக் கொண்டு கல்வியைப் பற்றிய பல நீதிகளைக் 'கல்வியொழுக்கம்' கூறுகிறது.

'அஞ்சு வயதில் ஆதியை ஓது'
'ஆதியை ஓத அறிவுண் டாமே'
'இனியது கொடுத்தும் எழுத்தை அறி'
'ஈட்டிய நற்பொருள் எழுத்தே யாகும்'
'ஊமை என்பது ஓதா தவரை'
'ஏழை என்பவர் எழுத்தறி யாதார்'
'கூர்மை என்பது குன்றாக் கல்வி'
'திருந்த ஓதத் திருவுண் டாமே'
'பூலோக கத்தின் பொருளே கல்வி'

என்பன அவற்றுள் காணப்படும் சில கருத்துள்ள நீதித் தொடர்களாகும்.

வழக்கின் அருமை

மிகச் சிறந்த முறையில் எளிமையாகக் கல்வியின் சிறப்புக் கூறும் கல்வியொழுக்க நூல் இன்று தமிழ் நாட்டுக் கல்வியுலகில் பெருவழக்கில் இல்லை. தமிழ் இலக்கிய, இலக்கணம் கற்றறிந்த அறிஞர்கள்கூடக் கல்வியொழுக்கம் பற்றி அறியாமல் உள்ளனர்.

ஆயினும்,

> 'அவ்வையார் 'கல்வியொழுக்கம்' என்றொரு நூல் செய்திருப்பதாகக் கேள்வி; அன்றி அதனைக் கண்டதில்லை. அதனை மேல்நாட்டறிஞர்கள் மொழிபெயர்த்திருப்பதாகவும் அறிகின்றோம். இந்தியாவில் எங்கணும் பெற்றுக்கொள்ள அது கிடைக்கவில்லை'

என்று எழுதியுள்ளார்கள்.[298] இதிலிருந்து அந்நூல் கிடைத்தற்கு அரிதாக இருப்பதை அறியலாம்.

பதிப்புக்கள்

சிறப்புமிக்க இக் கல்வியொழுக்கம் முதன் முதலில் 1926ஆம் ஆண்டு இலங்கை, யாழ்ப்பாணம், கரவெட்டி கிழக்கு க.பொன்னம்பல உபாத்தியாயர் அவர்களால் உரையெழுதி அச்சிடப்பட்டது.[299] அவருடைய தம்பி க.குழந்தைவேலு என்னும் மருத்துவரால் இரண்டாம் பதிப்பாக 1968இல் யாழ்ப்பாணத்தில் கல்வியொழுக்கம் வெளியிடப்பட்டது.[300]

1966இல் அவ்வையாரைப் பற்றித் தான் எழுதிய கட்டுரையொன்றில் கல்வியொழுக்கம் பற்றிக் குறிப்பிட்ட ம.பொ.சிவஞானம் தன் அவ்வையார் நூலிலும் கல்வியொழுக்கம் பற்றிக் குறிப்பிட்டார்.[301] பின் அவரே தனி நூல் வடிவில் கல்வியொழுக்கத்தை வெளியிட்டுள்ளார்.

ஆதி

கல்வியொழுக்கத்தில் முதல் இரண்டு தொடர்களில் ஐந்து வயதில் ஆதியை ஓதவேண்டும் என்றும், அவ்வாறு ஆதியை ஓதினால் அறிவுண்டாகும் என்றும் கூறப்பட்டுள்ளன.

சமண தீர்த்தங்கரர்களில் முதல் தீர்த்தங்கரர் ரிஷபதேவர். அவர் முதல் தீர்த்தங்கரர் என்பதால் அவருக்கு 'ஆதி' என்ற பெயரும் உண்டு. ஆதிநாதர், ஆதிதேவர், ஆதியான், ஆதிமூர்த்தி என்றெல்லாம் பலவாறு ரிஷபதேவர் அழைக்கப்படுவார்.[302]

'போது சாந்தம் பொறப ஏந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானம் துன்னு வாரே'

என்பது ஆதியாகிய ஆதிநாதரைப் போற்றிப் புகழும் ஒரு பாடலாகும்.[303]

கொங்கு மண்டல சதக ஆசிரியர் கார்மேகக் கவிஞரும் ஆதிநாத குரு என்று முதல் தீர்த்தங்கரர் ரிஷபதேவரை அழைக்கிறார்.[304]

ஆதியை ஓதுக

சமணர்கள் கொள்கைப்படி ஆதிநாதரே முதலில் எண்ணையும், எழுத்தையும், எல்லாக் கலைகளையும் தோற்றுவித்தவர் ஆவார்.[305]

எனவே கல்வி பயிலத் தொடங்குவோர் முதலில் ஆதியை (ஆதி நாதரை) வணங்கியே கல்வியைத் தொடங்க வேண்டும்; அப்போதுதான் கல்வி அறிவு வளரும் என்று கல்வியொழுக்கம் தொடக்கத்திலேயே கூறுகிறது.

'அஞ்சு வயதில் ஆதியை ஓது'
'ஆதியை ஓத அறிவுண் டாமே'

என்ற இரண்டு அடிகளில் அக் கருத்தினைக் காணுகிறோம்.

அவ்வை யார்?

கல்வியொழுக்க ஏடுகளில் அவ்வையார் பாடியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஓர் ஓலைச்சுவடியில்

‘அவ்வை அருளிச் செச
சமண்ணன் கல்வியொழுக்கம்’

என்றும், மற்றொரு சுவடியில்

‘ஔவையா யருளிச் செயித
சமணன் கல்வி யொழுக்கம்’

என்றும் காணப்படுகின்றன.[306] இதன் மூலம் கல்வியொழுக்கம் சமணநூல் என்பது தெளிவாகிறது.

சமண சமயப் பெண்பால் துறவியர்க்குள்ள பல பெயர்களில் அவ்வை என்பதும் ஒன்று.[307] பிற்காலத்தில் அவ்வை - அவ்வையார் என்பது எல்லாப் பெண்பாலாரையும் குறிக்கும் பொதுவான சொல்லாக மாறிவிட்டது. அச் சொல் அம்மை - அம்மையார் என்று பொருள் தரும் சொல்லாக ஏற்கப் பட்டுவிட்டது.

சிலப்பதிகாரத்தில் சமண சமயப் பெண்ணான மாதரி அவ்வை என்ற பெயரால் குறிக்கப்படுகிறார்.[308] கொங்கு நாட்டு ஐவர்மலை சமணக் கல்வெட்டில் சமண இயக்கிகள் அவ்வைகள் என அழைக்கப் பெறுகின்றனர்.[309]

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் அருகேயுள்ள கருங்காட்டில் அவ்வையாரம்மை சுவாமியார் கோயில் ஒன்று உள்ளது.[310] சேலம் மாவட்டத்தில் சங்ககிரி அருகே வாழ்ந்த அசதிமீது அவ்வையார் கோவை ஒன்று பாடியுள்ளார்.[311]

அவ்வை என்னும் சொல் கன்னட மொழியில் ‘அப்பை’ என்றாகும். சிரவணபெளகொளாவில் பல சமணப் பெண்கள் பெயர் அவ்வை, அப்பை என முடிகிறது.[312] விசயமங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயிலில் மேலைக் கங்கர் படைத்தலைவன் தங்கை ‘புளிஅப்பை’ உண்ணா நோன்பிருந்து உயிர் விட்டதாக அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது.[313]

எனவே 'கல்வியொழுக்கம்' என்னும் இந்நூலை இயற்றிய 'அவ்வை' சமண சமயப் பெண்பால் புலவராவர்.

கொங்கு நாடும் கல்வியொழுக்க ஏடுகளும்

கல்வியொழுக்க நூல் பயிற்சி தமிழ் நாட்டின் பிற பகுதிகளில் மிகக் குறைவாக இருப்பினும் கொங்கு நாட்டில் மட்டும் அந்நூல் பயிற்சி மிகவும் அதிகமாக இருந்துள்ளது. கொங்கு நாட்டுப் பகுதிகளில் கல்வியொழுக்க ஏடுகள் மிகவும் அதிகமாகக் கிடைக்கின்றன.

பரம்பரைப் புலவர்கள் வீடுகளில் அவை கிடைக்கின்றன.

1) ஈரோடு மாவட்டம் கொடுமணல் தம்மரெட்டிபாளையம் நாச்சிமுத்துப் புலவர் வீட்டு ஏடுகளில் கல்வியொழுக்க ஏடுகள் பத்து ஏடுகள் முழுமையாகவும் சில குறைப்பிரதிகளும் கிடைத்தன. அவை ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில் உள்ளன.[314]

2) ஈரோடு மாவட்டம் காங்கேய நாட்டுப் புதுப்பைப் புலவர் ஏடுகள் பலவற்றைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறை பெற்றுள்ளது. அவற்றுள்ளும் சில கல்வியொழுக்க ஏடுகள் கிடைத்துள்ளன.[315]

3) ஈரோடு மாவட்டம், ஈரோடு நகரத்தில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் சில கல்வியொழுக்க ஏடுகள் உள்ளன.

4) ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம் வேலம்பாளையம் தெய்வசிகாமணிக் கவுண்டர் ஏடுகள் கோவை, பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் உள்ளன. அவற்றுள்ளும் சில கல்வியொழுக்க ஏடுகள் உள்ளன.

இவ்வாறு கொங்கு நாட்டுப் பகுதியில் அதிகமாகக் கல்வியொழுக்கம் எனும் ஓலைச்சுவடிகள் கிடைப்பதால் இது கொங்கு நாட்டு நூல் என்பதை மெய்ப்பிக்கிறது. இந்நூலைப் படி எடுத்தும், படித்தும் கொங்கு நாட்டு மக்கள் மிகுதியும் பயன்படுத்தி உள்ளனர்.

கல்வியைப் பற்றிய சிறப்பு வாய்ந்த நீதி இலக்கியமான இந்நூல் கொங்கு நாட்டுச் சமணர்கள் தமிழுக்கு அளித்த ஒரு பெருங்கொடையாகும்.

குறிப்புகள்

1. மு. அருணாசலம், *தமிழ் இலக்கிய வரலாறு - பதின்மூன்றாம் நூற்றாண்டு*, ப. 361
2. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, 'சமண முனிவரின் தமிழ்த் தொண்டு', *கரந்தைக் கட்டுரைக் கோவை*, ப. 24
3. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, *மு.கா.நூல்*, ப.21.
4. க.ப. அறவாணன், *சைனரின் தமிழிலக்கண நன்கொடை*, ப. 137.
5. *சிலப்பதிகாரம்*, அடியார்க்கு நல்லார் உரை 1:4:27-34; 1:5:1-6.
6. *மேலது* உரைப்பாயிரம் பக். 7-8 (ஏழாம்பதிப்பு, 1960); வீரசோழியம், பெருந்தேவனார் உரை, அலங்காரம் 4.
7. *சிலப்பதிகாரம்*, அடியார்க்கு நல்லார், 1:8:23-26.
8. *இலக்கணக்கொத்து* - பாயிரம், நூ. 7; உ.வே.சா. முன்னுரை, ப. XXXV.
9. கார்மேகக் கவிஞர், - *கொங்கு மண்டல சதகம்* 99.
10. *பெருங்கதை*, பாயிரம், 'புலவர் கூட்டுண்ணும் புத்தமுதாக உதயணன் சரிதை ஓதினர்'.
11. இந்நூலின் முதல், இறுதி, இடையில் சில பகுதிகள் கிடைக்கவில்லை.
12. மு. இராகவையங்கார், *பெருந்தொகை*, ப. 467.
13. *மேலது*, 2013, ப. 473.
14. மு.வை. அரவிந்தன், *உரையாசிரியர்கள்*, ப. 167.
15. கார்மேகக் கவிஞர், *மு.கா. நூல்*, ப. 138.
16. வேலம்பாளையம் புலவர் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் வீட்டு ஏட்டுச்சுவடி.
17. வேளிர்: சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாடும் சமணமும்*, ப. 60. அர. சம்பக லட்சுமி, 'சமணம்', *ஆய்வுத்தேன்*, ப. 30. ஈ.எஸ். வரதராச அய்யர், *தமிழ் இலக்கிய வரலாறு* (1-1100), ப.30.

    வேள் : மயிலை சீனி வேங்கடசாமி, *சமணமும் தமிழும்*, ப. 167. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், *சமணத் தமிழ் இலக்கிய* வரலாறு, ப. 97 **R. Vijayalakshmi, A Study of the Perunkatai, p. 4.**
18. மு. இராகவையங்கார், *வேளிர் வரலாறு*, ப.1.
19. வேந்தரும் வேளிரும் (*பதி.* 30:30), வேளிருள் வேள் (*புறம்.* 201:12), இருபெரு வேந்தரொடு வேளிர் (*மதுரை*, 55).
20. *தொல்காப்பியம்*, 'ஒருவரைக் கூறம் பன்மைக் கிளவி', நூ. சொல் 27.

21. *ARE* **1936-37, pp. 60-61;** புத்தடிகள் என்பதைச் சமணத் துறவியாகவே பி.பி. தேவாய் கருதுகிறார். ***Jainism in South India*, p. 49.**
22. தொன்றுமுதிர் வேளிர் (*நற்.* 280:8), தொல்முதிர் வேளிர், வேள்முது மாக்கள் (*அகம்* 258:2; 372:4), தொன்முதிர் வேளிர் (*புறம்,* 24:21), எவ்வி தொல்குடி (*புறம்,* 202:14).
23. பேரூர் சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரிப் பதிப்பு, *கொங்கு மண்டல சதகங்கள்,* ப. 232.
24. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்,* ப. 169; *பாளையப்பட்டுக்களின் வம்சாவளி* III, ப. 54.
25. 15-5-1933 அன்று விசயமங்கலம் சமணக் கோயில் அறங்காவலரும் அர்ச்சகருமாகிய வி.கே.எஸ். சூரையர் கோவை மாவட்ட ஆட்சியருக்கு எழுதிய கடித நகல்.
26. கடுஞ்சின விறல்வேள், வேளாவிக்கோமான் பதுமன் (*பதி.* 11:6; பதிகம் 8:2); நெடுவேள் ஆவி (*அகம்* 1:3); மாவேள் ஆய், தேர்வேள் ஆய், மாவேள் எவ்வி (*புறம்* 24:18; 133:7; 135:13), இருங்கோவேள் (*பட்டின,* 282), மானவிறல் வேள் (*மலை* 164).
27. செ. இராசு, *கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள்,* காலிங்கராயன் அணை கட்டின பட்டயம், ப. 72.
28. *தொல்காப்பியம்* நூ. 522, செய்யுளியல் 240.
29. *யாப்பருங்கல விருத்தி* நூ. 50-3.
30. *வீரசோழியம்,* அலங்காரம் 4.
31. *நன்னூல்* மயிலைநாதர் உரை, நூ. 366.
32. *தக்கயாகப்பரணி* 2, 28, 22, 54, 55, 137, 167, 179, 258, 263, 371, 395, 537, 630, 688,
33. சிலப்பதிகாரம் 1:4:27-34; 1:5:1-6; 1:8:24-26.
34. 'குண்டலகேசி, உதயணன் கதையும் முதலாக உடையவற்றில் தெரியாத சொல்லும் பொருளும் வந்தன', *வீரசோழியம்,* அலங்காரம் 4.
35. **M.V. Krishna Rao, *The Gangas of Talakad*, p. 34.**
36. 'ஸ்ரீ பிருகத் கதா லாவண்ய ரத் பிரதாபஹ:' என்னும் கல்வெட்டு.
37. *மக்கென்சி ஆவணம்* எண், டி. 2890, 3317, 3529; ஆர். 1635.
38. 'அவநிதன் ஆதி அரசர் வடக்கும் அடங்கமணி
    மவுலி தரித்துப் புகழ்நீண் டதுகொங்கு மண்டலமே'
    கார்மேகக் கவிஞர், *மு.கா.நூல்.* 100.
39. கி.பி. ஏழாம் நூற்றாண்டு என்றே தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் (*சமணத் தமிழ் இலக்கிய வரலாறு,* ப. 98), ஈ.எஸ். வரதராச அய்யர் (*மு.கா.நூல்,*

ப.33), **R. Vijayalakshmi, A Study of the Perunkatai, p. 6.** ஆகியோர் கருதுகின்றனர். பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை கி.பி. 470இல் மதுரையில் நிறுவப்பட்ட வச்சிரநந்தி தமிழ்ச் சங்கத்தில் நாலடியார் காலத்திற்குப் பின் பெருங்கதை தோன்றியிருக்கலாம் என்பர்.

எஸ். வையாபுரிப்பிள்ளை, *காவிய காலம்,* பக். 89-91.

40. ஈ.எஸ். வரதராச அய்யர், *மு.கா.நூல்,* ப.33; தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், *மு.கா.நூல்,* ப. 97.

41. **R. Vijayalakshmi, *op.cit.*, p. 17.** தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், *மு.கா.நூல்,* ப. 97.

42. கொடிக்கோ சம்பிக் கோமகன் ஆகிய
வடித்தேர்த் தானை வத்தவன் தன்னை
வஞ்சம் செய்துழி வான்தளை விடீஇய
உஞ்சையில் தோன்றிய யூகி அந்தணன்
உருவுக்கு ஒவ்வா உறுநோய் கண்டு
பரிவுறு மாக்களின் தாம்பரிவு எய்தி
உதய குமாரன் உளங்கொண்டு ஒளித்த
மதுமலர்க் குழலாள்
- *மணிமேகலை,* 15 பாத்திரங்கொண்டு பிச்சைபுக்க காதை 61-68.

43. உதயண குமார காவியத்தை 1935ஆம் ஆண்டு உ.வே. சாமிநாதய்யர் வெளியிட்டார். 367 செய்யுள்கள் கொண்டது. வீரசோழிய அலங்காரப்படலம் (எண் 11) பெருந்தேவனார் உரை மூலமாக 'வச்சத் தொள்ளாயிரம்' என்னும் நூல் இருந்ததை அறிகிறோம். இந்நூல் வெண்பாவால் ஆகியது.

44. மு. இராகவையங்கார், *பெருந்தொகை* 1981, 2013.

45. *சிலப்பதிகாரம்,* அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரம், பக். 7-8.

46. மு.வை. அரவிந்தன், *மு.கா.நூல்,* ப. 167.

47. 1974ஆம் ஆண்டு ஈரோடு, சி.எஸ்.ஐ. ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் விசயமங்கலம் கோயிலுக்கு வரலாற்றுப் பயணம் மேற்கொண்டபோது இக் கல்வெட்டைக் கண்டுபிடித்தனர்.

48. கார்மேகக் கவிஞர், *மு.கா.நூல்,* 99, பக் 138-139.

49. அச் சிற்பங்கள் பற்றி விவரம் தெரியாத அவ்வூர்ப் பொதுமக்களின் விசாரித்தால் அவர்கள் உடனே அவை பஞ்சபாண்டவர், திரௌபதி சிற்பங்கள் எனக் கூறுவர். ஆனால் பாண்டவர்கட்கு அச் சிலைகட்கும் யாதொரு தொடர்பும் இல்லை. தமிழ்நாட்டில் பல இடங்களில் சமணர் படுக்கைகள், சிற்பங்கள், மலைகள் ஆகியவை பாண்டவரோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றன. திருச்செங்கோட்டில் பாண்டவர்

படுக்கை, ஆர்க்காட்டிலும், தொண்டூரிலும் பஞ்சபாண்டவமலை என்ற வழக்குக் காணலாம்.

50. சிற்ப வல்லுநர் வை. கணபதி ஸ்தபதி நேரில் கூறியவை.

51. *ARE* **599 of 1905.**

52. செ. இராசு, *கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணம்* 33, 34, 40, 44, 46, 50, 75,

செப்பேடுகள் : தீர்த்தகிரிச் செப்பேடு
அலைவாய்மலைச் செப்பேடு
கபிலமலைச் செப்பேடு

ஓலைப்பட்டயங்கள்: அரையநாட்டுப் பட்டயம்
அல்லாள இளையான் பட்டயம்
பூந்துறை நாட்டார் மேலோலை
முத்தூர்ப் பட்டயம் காண்க.

53. ஏனையவை சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன.

54. நச்சினார்க்கினியர் 2700 பாடல்களே திருத்தக்கதேவர் பாடியது என்பார். 445 பாடல்கள் கந்தியார் என்னும் சமணப் பெண் புலவர் இடைச்செருகலாகச் சேர்த்தது என்பர் உ.வே.சா. (மேற்படிப் பாடல் அடிக்குறிப்பு).

55. 'சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலைபுனைந்தான் - நந்தா
வளையாபதி தருவான் வாசவனுக்கு ஈந்தான்
தளையாத குண்டலகே சிக்கும்'

- திருத்தணிகையுலா 526-527.

56. உ.வே. சாமிநாதய்யர், *சீவக சிந்தாமணி*, உ.வே.சா.பதிப்பு, முன்னுரை, ப.16.

57. *சீவக சிந்தாமணி*, நச்சினார்க்கினியர் உரை, முதல் பாடல் (கடவுள் வணக்கம்).

58. **EC II, NO 77; p. 50.** (இது மல்லிசேனர் பிரசஸ்தி எனப்படும்)

59. **Ram Bhushan Prasad Singh,** ***Jainism in Early Medieval Karnataka*****, p. 140.**

60. அவ்வை சு. துரைசாமிப்பிள்ளை, *சீவக சிந்தாமணி ஆராய்ச்சி*, ப. 12.

61. திராவிட சங்கம்-திரமிள சங்கம் என்றும் அழைக்கப்படும். அவ்வை சு. துரைசாமிப்பிள்ளை, *சீவக சிந்தாமணி ஆராய்ச்சி*, ப. 11.

62. *EC* **II NO 77, pp. 50-51.**

63. **R. Vijayalakshmi, *A Study of Civakacintamani*, p.40.**
64. *சீவக சிந்தாமணி*, உ.வே.சா.பதிப்பு, முன்னுரை, ப.20.
65. மு.வை. அரவிந்தன், *மு.கா.நூல்*, ப. 687.
66. *யாப்பருங்கலவிருத்தி*, ஒழிபு 2; உ.வேசா., சீவக சிந்தாமணி அடிக்குறிப்பு, ப.1.
67. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், *மு.கா.நூல்*, ப.104.
    துஅ. கோபிநாதராவ், *செந்தமிழ்* தொகுதி 5, ப. 95.
    டி.எஸ். குப்புசாமி சாஸ்திரிகள், *தமிழகம்* தொகுதி 1, ப.130.
68. **R. Vijayalakshmi, *op.cit.*, p. 36.**
69. *சீவக சிந்தாமணி*, உ.வே.சா. பதிப்பு, ப. 1523.
70. ***EC* VII, ch. 4.**
71. *கொங்கதேச ராசாக்கள்*, பக். 2,9.
72. *மேலது*, ப.9.
73. **K.V. Ramesh, *Inscriptions of the Western Gangas*, 318, 456, 466.**
74. ***EC* II 273.**
75. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், *மு.கா.நூல்*, ப. 104;
    ஈ.எஸ். வரதராச அய்யர், *மு.கா.நூல்*, ப. 43.
76. ***EC* II 101, 102, 120, 123, 139.**
77. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், *சேரன் வஞ்சி*, ப. 25.
78. மு. இராகவையங்கார், *சேரன் செங்குட்டுவன்*, பக். 161-162.
79. செ. இராசு, மு.கா.நூல், ப. 131.
80. க. பழனிசாமிப் புலவர், *கொங்குச் செல்வி*, ப. 177; கருவூருக்குக் காகம் என்ற பாடபேதம் உண்டு.
81. சேலத்தின் அருகே வஞ்சிநாடு என்ற பகுதி உள்ளது. **K.S. Vaidyanathan, Ancient Geography of the Kongu Country, pp. 29, 42, 49, 56, 58, 66, 74, 97.**
82. க. பழனிசாமிப் புலவர், *மு.கா.நூல்*, ப. 70.
83. ***ARE* 35 of 1947;** சோமலெ (ப.ஆ.), *அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகச் சிறப்பு மலர்*, செ. 43-53.
84. செ. இராசு, *மு.கா.நூல்*, ப. 200.
85. *புரவிபாளையம் கோப்பண மன்றாடியாரிடத்துள்ள ஐந்து ஜாதி வரலாறு*, டி. 3133.
86. ***ARE* 146 of 1905.**

87. பாடல் எண் 32, ப. 172.
88. மேற்கோள் : சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் *கொங்குநாட்டு வரலாறு*, ப. 91.
89. மேற்கோள்: கொடுமுடி ச. சண்முகம், *ஆய்வுக் களஞ்சியம்* 3, ப.24.
90. மேற்கோள்: *மேலது*, ப.24.
91. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாட்டு வரலாறு*, பக். 91-92.
92. **K.S.Vaidyanathan, *op.cit.*, p.63.**
93. கொடுமுடி ச. சண்முகம், *மு.கா.நூல்*, ப.24; கோவை கிழார், *மு.கா.நூல்*, ப.91.
94. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாட்டு வரலாறு*, ப. 89.
95. ***SITI* I No 268; *ARE* 570 of 1905.**
96. மேற்கோள் : கொடுமுடி ச. சண்முகம், *குறும்பொறைக் கோமான்*, ப. 25.
97. ***ARE* 296 of 1911; 139 of 1920.**
98. சோழர் நாளில் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இராசராசபுரம் என்ற பெயரில் பல ஊர்கள் அமைக்கப்பட்டன. கொங்கு நாட்டு இராசராசபுரம் - தாராபுரம் ஆயிற்று; சோழ நாட்டு இராசராசபுரம் - தாராசுரம் ஆயிற்று; பாண்டிய நாட்டு இராசராசபுரம் - இராதாபுரம் ஆயிற்று; தொண்டை நாட்டு இராசராசபுரம் - தாதாபுரம் ஆயிற்று.
99. செ. இராசு, *கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள்*, பக். 153, 186, 188, 199, 200, 201, 206, 219.
100. செ. இராசு, *மு.கா.நூல்*, பக். 46, 320.
101. *மேலது*, பக். 238, 286; 'தாராபுரம் சீர்மை' எனவும் குறிக்கப்பெறும்.
102. *மேலது*, ப.10.
103. சின்ன தாராபுரம் முனிமுத்தீசுவரர் கோயில் கல்வெட்டு, கள ஆய்வில் கண்டது.
104. சின்னதாராபுரம், முனிமுத்தீசுவரர் கோயில் கல்வெட்டு; அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், டி 3138.
105. 'ஜினயோபாய சிகார போனகிரி - செஞ்சி கொங்கு தாராபுரி - பெனுகொண்டாய - கிலைக துர்க்க ஹாரண-பிரேங்கட பிரதா போதயா, மேற்கோள்: சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாட்டு வரலாறு*, ப. 324.
106. தி.அ.முத்துசாமிக் கோனார், *கொங்குநாடு*, ப.243.
107. *சீவக சிந்தாமணி*, பா. 3143.
108. **K.S. Vaidyanathan, *op.cit.*, pp. 17,60,90.**

109. சோழன் காடவூரான், சோழன்காளி, வீர விக்கிரம சோழியாண்டான், *காடையீசுவரர் குடமுழுக்கு விழா மலர்,* ப. 29. சிங்கன் சோழன் அணுத்திரப் பல்லவராயன் **ARE 211 of 1909.**

110. சேக்கிழார் நாயனார் புராணம் 20, 21, 22.

111. கொங்குப் புலவர் பட்டயம், இருபத்துநாலு நாட்டுப் பட்டயம்.

112. சக்கரவர்த்தி நயினார், அப்பாண்டை நயினார், தருணேந்திர நயினார் என்ற பெயரிலுள்ளவை இங்கு ஒப்புநோக்கத்தக்கன.

113. ‘மேழிவிளக்கம்’ முன்னுரை, ப. 13.

114. செ. இராசு, *கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள்,* பக். 72, 267, 327.

115. ***SII* XXVI 222; *ARE* 209 of 1909.**

116. சூளாமணி பாண்டிய மன்னன் சேந்தன் என்பான் அவைக்களத்தில் தோலாமொழித் தேவரால் விசையன் கார்வெட்டி அரையன் என்பான் கேட்டுக்கொள்ள அரங்கேற்றப்பட்டது என்று கூறப்படுகிறது. - தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், *மு.கா.நூல்,* பக். 109-110.

117. அகப்பொருள் விளக்கம் குலசேகர பாண்டியன் காலத்தில் (கி.பி. 1196-1266) புளிங்குடி உய்யவந்தான் மகன் நாற்கவிராச நம்பியால் இயற்றப்பட்டது. - மு.வை. அரவிந்தன், *மு.கா.நூல்,* ப. 712. சூளாமணி, அகப்பொருள் விளக்கம் ஆகிய இரண்டையும் கொங்கு நாட்டு நூல்கள் என அய்யர் எழுதியதற்குக் காரணம் புலப்படவில்லை.

118. எழுத்து 24, சொல் 71, பாயிரம் 2, மொத்தம் 97, க.ப. அறவாணன், *மு.கா.நூல்,* ப. 284.

119. நேமிநாதத்தின் எழுத்ததிகாரத்தில் ‘பூவின்மேல் வந்தருளும் புங்கவன்’ என்றும், சொல்லதிகாரத்தில் ‘தாதார் மலர்ப்பிண்டித் தத்துவன்’ என்றும் அருகதேவனுக்கு வணக்கம் கூறுவதன் மூலம் இவர் சமணர் என்பதை அறியலாம்.

120. மு.வை. அரவிந்தன், *மு.கா.நூல்,* ப. 720.

121. தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், *மு.கா.நூல்,* ப.159.

122. ‘. . . . . மேவும் முடிபு
எல்லாம் உணர எழுத்தின் இலக்கணத்தைச்
சொல்லால் உரைப்பன் தொகுத்து’ (*நேமிநாதம்,* எழுத்து 1)
‘விரித்துரைத்த நூல்களிலும் வேண்டுவன கொண்டு
தெரித்துரைப்பன் சொல்லின் திறம்’ (*நேமிநாதம்,* சொல். 1)

123. ‘இந்நூல் செய்தற்குக் காரணம் யாதோ எனின் விரிந்த நூல் உணர மேதினியோர்க்குச் சுருங்கச் செய்தான்’ (*நேமிநாதம்* - உரைப்பாயிரம்)

124. பதி. 76 பழைய உரை.

125. *SII* XIV 113; *ARE* 697 of 1905.

126. *SII* I 66; மு. இராகவையங்கார் (ப.ஆ.), *பெருந்தொகை* 1979; மயிலை சீனி வேங்கடசாமி (ப.ஆ.), *சாசனச் செய்யுள் மஞ்சரி*, ப.24.

127. *ARE* 109 of 1938;

மயிலை சீனி வேங்கடசாமி, *சமணமும் தமிழும்*, ப. 123.

128. *TAS* II 28.

129. P.B. Desai, *Jainism in South India*, pp. 159, 124.

130. *SII* VII 62; மயிலை சீனி வேங்கடசாமி (ப.ஆ.), *சாசனச் செய்யுள் மஞ்சரி*, ப. 28.

131. 'வளமலி களந்தை வச்சணந்தி முனிவரன் கொள்கையின் வழாக் குணவீர பண்டிதன்' - *நேமிநாதம்*, பாயிரஉரை.

132. 'கற்றவர் புகழும் களந்தையென் பெரும்பதி குற்றமில் வாய்மைக் குணவீர பண்டிதன்' - *வச்சணந்திமாலை* பாயிரஉரை.

133. மு. இராகவையங்கார் (ப.ஆ.), *பெருந்தொகை* 1531.

134. *மேலது* 1532.

135. மு. இராகவையங்கார் (ப.ஆ.), *மு.கா.நூல்*, 1533.

136. *மேலது* 1534.

137. *நேமிநாதம்* - பாயிரம்

138. க.ப.அறவாணன், *மு.கா.நூல்*, ப.276.

139. 17-2-90 களஆய்வில் கண்டது.

140. தொண்டைநாட்டுச் சினாலயங்கள் விரிவட்டவணை, தமிழக அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகம், எண் டி 3002, 3388.

141. ந.சி. கந்தையாபிள்ளை, *கால அகராதி*, படிக்காசுப்புலவர் காலம், ப.80.

142. மேற்கோள்: மு. அருணாசலம், *தமிழ் இலக்கிய வரலாறு 13ஆம் நூற்றாண்டு*, ப. 158.

143. *கொங்குமண்டல சதகங்கள்*, ஊர்த்தொகைப் பாடல், ப. 215.

144. களஆய்வில் நூலாசிரியர் நேரே கண்டவை. அக்கோயில் சிவன் கோயிலாகப் பின்னர் மாற்றப்பட்டு ஆதிநாதேசுவரர் - ஆதிநாத புராண லிங்கேசுவரர் என அழைக்கப்படுகிறது.

145. *பதி* 21 'நேர் உயர் நெடுவரை அயிரை'; 70 'அயிரை நெடு வரை' 79 - கடவுள் அயிரை.

146. *SII* XIV 107-119; *ARE* 691 - 703 of 1905.

147. *SII* XIV 117; *ARE* 701 of 1905.

148. *SII* XIV 109; *ARE* 693 of 1905.

149. *SII* XIV 117; *ARE* 701 of 1905.
150. *SII* XIV 22; *ARE* 705 of 1905; *Epigraphia Indica*, Vol. XXXII No 41 pp. 337-338.
151. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், *மு.கா.நூல்*, ப. 159; மு.வை. அரவிந்தன், *மு.கா.நூல்*, ப. 719.
152. தி.வை.சதாசிவப் பண்டாரத்தார், *பிற்காலச் சோழர் வரலாறு*, ப. 419. கி.பி. 907இல் பட்டத்துக்கு வந்த முதல் பராந்தகன் முதல் எல்லாச் சோழ அரசர்களும் திரிபுவனச் சக்ரவர்த்தி, திரிபுவன தேவன் என்ற பட்டம் பெற்றுள்ளனர். முதலாம் பராந்தகன் (907-953), உத்தமசோழன் (970-985), முதலாம் இராசராசன் (985-1014) ஆகியோரின் தேவிமார்கள் 'திரிபுவனமாதேவி' என்று பெயர் பெற்றிருந்தனர். சேரமன்னன் கோரவி கோதை, வீரபாண்டியன், குலசேகரபாண்டியன் போன்றோரும் மேலைச் சளுக்கியரும், கல்யாணி காலசூரி அரசர்களும் கூடத் திரிபுவனதேவன், திரிபுவனமல்லன் என்று பெயர் வைத்துக் கொண்டுள்ளனர். - செ. இராசு, *கொங்கு*, தொகுதி 2, ப. 175.
153. கா.ரா. கோவிந்தராச முதலியார், *நேமிநாதம்* குறிப்புரை, முன்னுரை, ப.4.
154. சோம.இளவரசு, *இலக்கண வரலாறு*, ப.123.
155. இரா. இளங்குமரன், *இலக்கண வரலாறு*, ப. 258.
156. க.ப. அறவாணன், *மு.கா.நூல்*, நூ.291.
157. ஐ, ஔ குறுக்கம்; புணர்ச்சி; திணைப்பாகுபாடு; வினை எச்சம்; விகாரம் பற்றிய நூற்பாக்கள் காண்க.
158. சோமஇளவரசு, *மு.கா.நூல்*, ப.123.
159. *திருத்தணிகையுலா*, கண்ணி 530.
160. மேற்கோள்: க.ப. அறவாணன், *மு.கா.நூல்*, ப. 292.
161. *மேலது*, ப. 293.
162. சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் கூறியுள்ள 'இந்திர காளியம்' என்னும் நூல் யாமளேந்திரரால் செய்யப்பட்ட இசைத் தமிழ் நூலாகும். அதனினின்று பாட்டியல் நூலான 'இந்திர காளி' வேறுபட்டது.
163. 'மதிகொண்ட முக்குடைக்கீழ் வாமன் மலர்த்தாள்
துதிகொண்டு நாளும் தொழுது - நுதிகொண்ட
பல்கதிர்வேல் உண்கண்ணாய் பாட்டியலைக் கட்டுரைப்பன்
தொல்லுலகின் மீதே தொகுத்து'
என்ற பாயிரப் பாடலால் இது புலப்படும்.
164. *ASSI* 1958-59. p. 41; *ARE* 10 of 1959; *SII* VII 441; *ARE* 227 of 1901.

165. *அருங்கலச்செப்பு* 27.

166. யாப்பு, அணிக்கு யாப்பருங்கலம், தண்டியலங்காரம் முதலிய நூல்கள் தனியே தோன்றின.

167. மு. அருணாசலம், *மு.கா.நூல்,* ப. 154.

168. க.ப. அறவாணன், *மு.கா.நூல்,* ப. 298.

169. தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், *பிற்காலச் சோழர் வரலாறு,* ப. 232.

170. *வீரசோழியம்,* பாயிரம் 1.

171. மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், இராமானுசக் கவிராயர், பிள்ளை லோகாச்சார்யஞ்சீயர், சிவக்கொழுந்து தேசிகர் ஆகியோர் நன்னூல் என்பது ஐந்திலக்கண நூல் என்றும், பொருள் யாப்பு அணி என்ற மற்ற அதிகாரங்கள் அழிந்தன என்றும் கூறுவர். இக் கருத்தை உ.வே. சாமிநாதய்யரும் கூறுகிறார். நன்னூல் சிறப்புப் பாயிரத்திலும் அரும்பொருள் ஐந்தையும் நன்னூல் கூறுவதாகக் கூறப்பட்டுள்ளது.

172. இதற்குப் பின்னூல், சிற்றதிகாரம் என்னும் பெயர்களும் காணப்படுகின்றன.

173. '. . . . முன்னோர் நூலின்
வழியே நன்னூல் பெயரின் வகுத்தனன்
பொன்மதில் சனகைச் சன்மதி முனியருள்
பன்னரும் சிறப்பில் பவணந்தி
என்னும் நாமத்து இருந்தவத் தோனே'
'கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருத்திய செங்கோல் சீய கங்கன்
மொழிந்தனனாக (*நன்னூல்,* சிறப்புப் பாயிரம்)

174. **Simon Casie chitty, *Tamil Plutarch,* p. 79.**

175. கார்மேகக் கவிஞர், *மு.கா.நூல்* 47.

176. *இலக்கணக் கொத்து,* எட்டாம் நூற்பா உரை.

177. *பிரயோக விவேக உரை* 12, 49.

178. ***ARE* 396 of 1955.**

179. ***ARE* 701 of 1905.**

180. ***ARE* 201 of 1902.**

181. ***ARE* 8 of 1895.**

182. ***ARE* 27 of 1894.**

183. ***ARE* 276 of 1916.**

184. ***ARE* 64 of 1910.**

185. ***ARE* 109 f 1894.**

186. *ARE* **238 of 1904.**

187. *ARE* **29 of 1962.**

188. *கொங்குதேச ராசாக்கள்,* ப. 1.

189. *ARE* **19 of 1890.**

190. *ARE* **24 of 1894.**

191. *ARE* **102 of 1894.**

192. *ARE* **62 of 1910.**

193. *ARE* **10 of 1959.**

194. *TAS* **II, p. 126.**

195. *ARE* **25 of 1894.**

196. *கொங்குதேசராசாக்கள்,* ப. 2; **ARE 19 of 1890.**

197. *மூவர் தேவாரம் அடங்கன்முறை* எண் 3216.

198. மு. அருணாசலம், *மு.கா.நூல்,* பக். 152–153.

199. *திருத்தணிகையுலா,* கண்ணிகள் 530, 537.

200. நன்னூல் உரையாசிரியர்கள்:

1. ஆண்டிப்புலவர்	9. சந்திரசேகரக் கவிராயர்
2. ஆறுமுக நாவலர்	10. சரவணப் பெருமாளய்யர்
3. இராமானுசக் கவிராயர்	11. சிவஞான முனிவர்
4. குமரசாமிப் புலவர்	12. பவானந்தம் பிள்ளை
5. கூழங்கைத் தம்பிரான்	13. மயிலைநாதர் (முதல் உரைகாரர்)
6. கோபாலகிருஷ்ணமாச்சாரியார்	14. முத்துத்தம்பிப் பிள்ளை
7. சங்கர நமச்சிவாயர்	15. விசாகப் பெருமாளய்யர்
8. சடகோபராமானுசாச்சாரியார்	16. வேதகிரி முதலியார்

ஆகியோரும் இந்நூற்றாண்டில் இன்னும் பலரும் நன்னூலுக்கு உரை எழுதியுள்ளார்.

201. மு. அருணாசலம், *மு.கா.நூல்,* பக். 151, 155, 156.

202. ‘முன்னோர் ஒழியப்
பின்னோர் பலரினுள்
நன்னூலார் தமக்கு
எந்நூலாரும் இணையோ
என்னும் துணிவே மன்னுக’ (சுவாமிநாத தேசிகர், *இலக்கணக் கொத்து,* சூ. 8 உரை)

‘பல்கலைக் குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான்’ (சிவஞான முனிவர், *விருத்தியுரை,* நூ. 134)

203. *SII* **V 380;** *ARE* **91 of 1894.**

204. *SII* V 386; *ARE* 96 of 1894.

205. *EI* IV p. 142.

206. மு. அருணாசலம், *மு.கா.நூல்,* ப. 157.

207. 'நிறையுயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
எழும்அணுத் திரள்உரம் கண்டம் உச்சி
மூக்குஉற்று இதழ்நாப் பல்அணத் தொழிலின்
வெவ்வேறு எழுத்தொலி யாய்வரல் பிறப்பே' - *நன்னூல்* 74.

208. 'மெய்ந்நா மூக்கு நாட்டம் செவிகளின்
ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமேல் உணர்தலின்
ஓரறிவு ஆதியா உயிர்ஐந்து ஆகும்' - *நன்னூல்* 444.

209. *மேருமந்திர புராணம்* வச்சிராயுதனனுத்தரம், 10,11.

210. *ARE* 195 of 1892.

211. *ARE* 60 of 1907.

212. *ARE* 10 of 1893.

213. *ARE* 124 of 1921.

214. *ARE* 432 of 1929.

215. *ARE* 303 of 1897.

216. *ARE* 116 of 1922.

217. *ARE* 589 of 1919.

218. *ARE* 88 of 1889.

219. *ARE* 551 of 1906.

220. *ARE* 563 of 1906.

221. *ARE* 562 of 1906.

222. தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், *மு.கா.நூல்,* ப. 416.

223. உ.வே. சாமிநாதய்யர், *நன்னூல் மயிலைநாதர் உரைப்பதிப்பு,* ப. 7.

224. க.ப. அறவாணன், *மு.கா.நூல்,* ப. 304.

225. மயிலைநாதர் சிறப்புப் பாயிர உரை, ப. 18.

226. உ.வே. சாமிநாதய்யர், *மு.கா.நூல்,* ப. 7.

227. மேற்கோள்: கார்மேகக் கவிஞர், *மு.கா.நூல்,* பக் 55-56.

228. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார், *மு.கா.நூல்,* ப. 122.

229. க.ப. அறவாணன், *மு.கா.நூல்,* ப. 308.

230. உ.வே. சாமிநாதய்யர், *மு.கா.நூல்,* சிறப்புப் பாயிர உரைப் பகுதி, ப. 19.

231. எஸ். வையாபுரிப்பிள்ளை, *தமிழ்ச் சுடர் மணிகள்,* ப. 185.
க.ப. அறவாணன், *மு.கா.நூல்,* ப. 306.
232. நூலாசிரியர் கள ஆய்வில் கண்டது (13-2-1992).
233. மேற்கோள்: க.ப. அறவாணன், *மு.கா.நூல்,* ப. 304.
234. விநயசேன பட்டாரகர், கனகசேன பட்டாரகர், மாதவசேன பட்டாரகர் என்ற பெயர்களைத் தருமபுரி, நாகார்ஜுனகொண்டாக் கல்வெட்டில் காணுகிறோம். அவர்கள் சமண சமய குரவர்களே. புலவர்கள் அல்லர்.
235, அரசினர் கீழ்த்திசைச்சுவடி நூலகம், *மக்கென்சி தமிழ் ஆவணம்* டி 3002, ஆர் 344.
236. நேரில் களஆய்வு செய்யப்பட்டுக் கண்டறியப்பட்டது (15-2-1992).
237. க.ப.அறவாணன், மு.கா.நூல், ப. 308.
238. **ARE 124 of 1921.**
239. **ARE 589 of 1919; 551 of 1906; 88 of 1889.**
240. *மல்லைக்கோவை,* முன்னுரை, ப. 7.
241. களஆய்வில் நேரில் கண்டது (30-6-1992).
242. கார்மேகக் கவிஞர், *கொங்கு மண்டல சதகம்* 46, 47.
243. *சுந்தரர் தேவாரம்* 7.47.2; ஊர்த்தொகைப் பதிகம்; குரக்குத்தளி - சர்க்கார் பெரியபாளையம்.
244. மு. வை. அரவிந்தன், *மு.கா.நூல்,* ப. 628.
245. *நன்னூல் மயிலைநாதர் உரை,* நூ. 110.
246. *மேலது,* நூ. 276.
247. மு.வை. அரவிந்தன், *மு.கா.நூல்.* ப. 628.
248. *நன்னூல் மயிலைநாதர் உரை,* நூ. 144, 176, 272, 275, 276.
249. *தமிழ்க் கருவூலம்,* உ.வே.சா. நூலகம், சென்னை, எண். ஜே 220.
250. மு.வை. அரவிந்தன், *மு.கா.நூல்,* ப. 628.
251. *மேலது,* ப. 628.
252. **ARE 217 of 1978.**
253. *பாண்டியர் செப்பேடு பத்து,* பக். 89, 105, 126.
254. மறந்தை, உறந்தை, மயிலை, கபாலபுரி, மூவேந்த சோழச் சதுர்வேத மங்கலம், பராந்தகபுரம் என்பன ஈரோட்டின் வேறு பெயர்கள். - *ஈரோட்டுத் தலபுராணம்,* ஏட்டுச்சுவடி (வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் தொகுப்பு).
255. *தமிழ்க் கருவூலம்,* உ.வே.சா. நூலகம், உ.வே.சா. அவர்கட்கு வந்த கடிதத் தொகுப்பு.

256. செ. இராசு, *கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள்,* பக். 31, 170, 187.

257. *சிலப்பதிகாரம்* 1:5:157 உரைப்பகுதி.

258. மேற்கோள்: மு.வை. அரவிந்தன், *மு.கா.நூல்,* ப. 494.

259. மு.வை. அரவிந்தன், *மு.கா.நூல்,* ப. 495.

260. சிலப்பதிகாரம் 1:10:36; 1:10:44; 1:13:14; 3:29:8.

261. *மேலது,* பதிகம் 3.

262. *மேலது,* 2:23:190.

263. *மேலது,* 3:24:8-1.

264. *மேலது,* 3:29:10.

265. *மேலது,* 3:25:148-149.

266. *மேலது,* 2:12:47.

267. மு.வை. அரவிந்தன், *மு.கா.நூல்,* பக். 496, 497.

268. *சிலப்பதிகாரம்* 5.84 அடியார்க்கு நல்லார் உரையில் காணும் மேற்கோள் பாடல்.

"நீண்டபலி பீடத்தில் அறுத்து வைத்த- நெறிக்குஞ்சித் தலையைத்தன் இனமென்று எண்ணி - ஆண்டலைப்புள் அருகணைந்து பார்க்குமாலோ - அனைதலுமச் சிரம்அச்சம் உறுத்து மாலோ"

(*கலிங்கத்துப்பரணி,* கோயில் பாடியது 16)

269. மு.வை. அரவிந்தன், *மு.கா.நூல்,* ப. 501;

தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், *மு.கா.நூல்,* ப. 160.

270. "விண்ணு லாமதி சூடி வேதமே
பண்ணு ளார்பர மாய பண்பினார்
கண்ணு ளார்கரு ஊருள் ஆனிலை
அண்ண லார்அடி யார்க்கு நல்லரே"
(திருஞானசம்பந்தர், *அடங்கன்முறை,* 1766 (2.28.3)

271. மு. அருணாசலம், *தமிழ் இலக்கிய வரலாறு 12ஆம் நூற்றாண்டு,* ப. 532.

272. 'கவினாட்டு தேசிகுல மாணிக்கத்து அவையப்பெருமாள் அடியார்க்கு நல்லான்'

'இராசேந்திர சோழபுரத்து இணங்கராமுடியுடையான் அடியார்க்கு நல்லான் செயபாலன்'

'அடியார்க்கு நல்லான் அங்கராயன்'

- *புதுக்கோட்டை மாநிலக் கல்வெட்டுகள்,* எண்கள் 780, 806, 809, 919, 1072,

273. கிருபானந்தவாரியார் (ப.ஆ.), *திருப்புகழ்* 320, ப. 216.
274. ஞா. தேவநேயப் பாவாணர், *செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி*, ப. 141.
275. *சிலப்பதிகாரம்* 1.10:81-82 வரை.
276. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், *மு.கா.நூல்*, ப.73.
277. *சிலப்பதிகாரம்*, அடைக்கலக் காதை 163-191.
278. மு.அருணாசலம், *மு.கா.நூல்*, ப. 536.
279. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, *செந்தமிழ்* தொகுதி 6, ப. 379.
280. *செங்குந்தர் பிரபந்தத் திரட்டு*, பக். 38, 39.
281. இரா. காசிராசன், *இலக்கியக் கொள்கை - 6*, ப. 60.
282. *பெருந்தொகை* 1557, 1558.
சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரை, உ.வே.சா. பதிப்பு (7ஆம் பதிப்பு), ப. 71.
283. *கொங்கு மண்டல சதகங்கள்*, ஊர்த்தொகைப் பாடல், ப. 232.
284. *பெருந்தொகை*, ப. 625,
285. கு. அருணாசலக்கவுண்டர், *பாம்பண்ணகவுண்டன் குறவஞ்சி*, முன்னுரை, ப. 13.
286. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், *மு.கா.நூல்*, ப. 160.
287. கார்மேகக் கவிஞர், *மு.கா.நூல்*, பாடல் 95.
288. *சிலப்பதிகாரம்* 2.12:47.
289. 'பூவிரியும் பொழிற்சோலைக் காவிரியைக் கடந்திட்டு அழகமைந்த வார்சிலையின் மழகொங்கம் அடிப்படுத்து'
- *வேள்விக்குடிச் செப்பேடு*, 79-81.
290. மயிலை சீனி வேங்கடசாமி, திருச்செங்கோடு கண்ணகி விழாப் பேருரை, மே 1963.
291. *சிலப்பதிகாரம்* 2:23:190; 3.24:8; 3.29:10.
292. கார்மேகக் கவிஞர், *மு.கா.நூல்*, பா. 61.
293. உ.வே. சாமிநாதய்யரே தம் பிற்காலக் குறிப்புக்களில் அடியார்க்கு நல்லார் கொங்கு நாட்டவர் என எழுதியுள்ளார். உ.வே. சா. நூலகம், *தமிழ்க் கருவூலம்*, ஜே. 220.
294. கார்மேகக் கவிஞர், *கொங்குமண்டல சதகம்*, திருச்செங்கோடு அ. முத்துசாமிக் கோனார் பதிப்பித்த சதக (1923) நூலிலிருந்து இவ்வரலாறு தொகுக்கப்பட்டது. பக். **XXVIII - XXX.**

295. கொங்கு நாட்டுக்கு இவர் எழுதிய இச்சதகம் இல்லாமல், வாலசுந்தரக் கவிராயர், கம்பநாத சுவாமிகள் எனும் வேறு இருவர் பாடிய கொங்குமண்டல சதகங்களும் உள்ளன.

296. திருச்செங்கோடு அ. முத்துசாமிக் கோனார் 1912ஆம் ஆண்டு பழைய கோட்டைப் பட்டக்காரர் அரண்மனையில் 40 செய்யுள்கள் அடங்கிய கொங்கு மண்டல சதக ஏட்டினைக் கண்டு அதனைப் பிற இடங்களிலும் தேடத் தொடங்கினார்.

காங்கேயம் பல்லவராயர், சங்கரண்டாம்பாளையம் வேணாடுடையார், சந்தேகவுண்டம்பாளையம் குமாரசாமிப் புலவர், சிலம்பகவுண்டன்வலசு வேல்மணிப் புலவர், பூந்துறை பத்மநாப அய்யர் (சமணர்) ஆகியோரிடம் பெற்ற 11 ஓலைச்சுவடிகளைக் கொண்டும் 1923ஆம் ஆண்டு கொங்கு மண்டல சதகத்தைப் பதிப்பித்தார்.

சங்க இலக்கியம் முதற்கொண்டு பிற்கால இலக்கியங்கள் வரை தக்க இலக்கிய மேற்கோள்கள் காட்டியும், ஆங்காங்குள்ள கல்வெட்டு, செப்பேடுகளையும், கொங்கு நாட்டுப் பெருமக்கள் பாடிய காணிப் பாடல்களையும், புராணங்களையும், சிறு பிரபந்தங்களையும் நன்கு பயன்படுத்தி மிக விரிவான முறையில் அவர் பதிப்பு அமைந்துள்ளது.

இவர் பதிப்பை உ.வே. சாமிநாதய்யர், திரு.வி.கலியாண சுந்தரனார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், மு.ரா. அருணாசலக் கவிராயர் ஆகியோர் பாராட்டியுள்ளனர்.

297. ஆத்திசூடியும், கொன்றைவேந்தனும் அவ்வையார் பாடியவை. வெற்றி வேற்கை அதிவீரராம பாண்டியன் பாடியது. அவ்வையாரைப் பின்பற்றிப் பலர் ஆத்திசூடி பாடியுள்ளனர். வெற்றிவேற்கையில் ஒருசில நீதிகள் இரண்டு, மூன்று அடிகளிலும் கூறப்படுகின்றன.

– *நீதிக்களஞ்சியம்* – மர்ரே எஸ். ராஜம் வெளியீடு, சென்னை, 1959.

298. *கல்வியொழுக்கம்*, முன்னுரை, ஔவை சு. துரைசாமி, ப. 3. யாழ்ப்பாணப் பதிப்பு (1968).

299. அச்சிட்ட நூலில் அந்நூல் கிடைத்த விவரம் எதுவும் இல்லை.

300. யாழ்ப்பாணம் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பட்டது. 20 பக்கங்களை உடையது.

301. மேற்கண்ட நூல் முன்னுரை அடிக்குறிப்பு, ப.7; வான்ருதீன் எனும் செருமானிய அறிஞர் செர்மணிமொழியில் மொழிபெயர்த்துள்ளார்.

302. *யாப்பருங்கலக்காரிகை*, உறுப்பியல் 5 மேற்கோள்; *இலக்கண விளக்கம்* 714 மேற்கோள்; மயிலை சீனி வேங்கடசாமி, *சமணமும் தமிழும்*, பக். 83, 100, 113, 167, 182.

303. *யாப்பருங்கலவிருத்தி* 95, மேற்கோள் பாடல்.

304. கார்மேகக் கவிஞர், *மு.கா.நூல்,* 47.

305. **Asim Kumar Chattarjee, *A Comprehensive History of Jainism*, p. 1.**

306. ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் உள்ள கல்வியொழுக்க ஓலைச்சுவடிகள்.

307. குரத்தி, குரத்தியார், ஆர்யாங்கனை, கந்தி, கந்தியார், பைம்மை, கன்னி, சாமி, பொருமாட்டி என்பன பிற பெயர்கள்.

- தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், *மு.கா.நூல்,* ப. 125; *சீவக சிந்தாமணி* 992, 1046.

308. *சிலப்பதிகாரம்* 3:29:8.

309. **SII XIV No 28; *Epigraphia Indica* XXXII, pp. 337 - 338.**

310. **SII IV 457; ARE 10 of 1892.**

311. கார்மேகக் கவிஞர், *மு.கா.நூல்,* 45.

312. காளவ்வை, குணமதி அவ்வை, மாவி அப்பை, சக்கி அப்பை, மாசி அப்பை **EC II 129, 539, 107 EC I 31.**

313. ***ARE* 597 of 1905; *EI* VII p. 108.**

314. செ. இராசு, கலைமகள் கலைக்கூடக் கையேடு, பக். 23-24.

315. தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை, 2241, 2242, 2243. (மூன்று ஏடுகள் உள்ளன.)

5

கொங்குச் சமணம் – சின்னங்களும் செய்திகளும்

கொங்கு நாட்டின் இயக்கி, இயக்கர் வழிபாடு

கொங்கு நாட்டில் சக்தி வழிபாடாகிய தாய்த் தெய்வ வழிபாடு பண்டைக்காலம் முதல் மிக அதிகமாக வேரூன்றி இருந்தது. சிற்றூர்கள் தோறும் கொங்கு நாட்டில் அம்மன் கோயில்களே அதிகமாக உள்ளன. கொங்குநாட்டு மக்கள் பெரும்பாலோருக்குச் சக்தி குடிகொண்டுள்ள பல அம்மன் கோயில்கள் குலதெய்வக் கோயில்களாகத் திகழ்கின்றன. கொங்குநாட்டு மக்கள் சிவன், திருமால் கோயில்களைவிடக் குலதெய்வக் கோயிலான அம்மன் கோயில்கட்கு இன்றும் முக்கியத்துவம் அளித்து வருகின்றனர்.

வைதிக சமயத்தின் இந்தத் தாக்கம் கொங்கு நாட்டில் பரவிய திகம்பர சமணரிடமும் காணப்பட்டது. அவர்கள் தீர்த்தங்கரர் வழிபாட்டைப் போல் இயக்கி வழிபாட்டுக்கும் மிக முக்கியத்துவம் அளித்தனர். இயக்கர் வழிபாட்டைக் காட்டிலும் இயக்கியர் வழிபாடே தமிழகத்திலும்[1] – குறிப்பாகக் கொங்கு நாட்டிலும் – அதிகமாக வளர்ந்து சிறந்திருந்தது.

எல்லா இயக்கிகளும் தமிழ்நாட்டுச் சமண சமயத்தில் தெய்வங்களாக வணங்கப்படுவதில்லை. சக்கரேசுவரி, சுவாலாமாலினி, கூசுமாண்டினி, பத்மாவதி, சித்தாயிகா ஆகிய ஐந்து இயக்கிகளே பெரும்பாலும் தெய்வமாக வணங்கப்படுகிறார்கள். இந்தியாவிலும் தமிழகத்திலும் வளர்ந்து வந்த இந்த வழக்கத்தைக்[2] கொங்கு நாட்டிலும் காணுகிறோம்.

சக்கரேசுவரி

சக்கரேசுவரி முதல் தீர்த்தங்கரர் ஆகிய ரிசபதேவரின் இயக்கி ஆவாள். நான்கு கரங்களுடன் மேலிரு கைகளில் சக்கரப் படையை

ஏந்தி விளங்கியதால் சக்கரேசுவரி அல்லது சக்கரதாரிணி எனப்பட்டாள். கீழிரண்டு கைகளில் இடப்புறம் வச்சிரப்படையும் வலப்புறம் வரத முத்திரையும் கொண்டு விளங்குவாள். இவளது வாகனம் கழுகு ஆகும். எட்டுக் கைகளுடனும், இருபது கைகளுடனும் சில இடங்களில் அமைக்கப் பட்டிருப்பாள்.[3]

கொங்கு நாட்டு விசயமங்கலத்தில் நுழைவாயில் கோபுரத்தின் கீழ்ப்பகுதி விதானத்திலும், வாத்திய மண்டபத்தில் உள்ள ரிசபதேவராகிய ஆதிநாத தீர்த்தங்கரர் சிற்பத்தின் இடப்புறத்திலும் சக்கரேசுவரி உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் மேற்கண்ட அமைப்புடன் நான்கு கைகளைப் பெற்று விளங்குகிறது.

சுவாலாமாலினி

சுவாலாமாலினி எட்டாவது தீர்த்தங்கரராகிய சந்திரப்பிரப தீர்த்தங்கரரின் இயக்கி ஆவாள். சுவாலாமாலினிக்குப் பிருகுடி என்ற பெயரும் உண்டு. இவள் எட்டுக் கைகளுடன் படைக்கப்படுவாள். சில இடங்களில் இரு கைகளுடன் நிறுவப்படுவதுமுண்டு. எட்டுக் கைகளில் சக்கரம், அம்பு, வில், பாசம், கேடயம், சூலம், வாள், மீன் முதலிய சின்னங்கள் இருப்பது வழக்கம். எருமை இவளது வாகனம். இவள் வெண்மை நிறம் உடையவள்.[4]

விசயமங்கலத்தில் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயிலின் வெளியில் உள்ள மானத்தம்பத்தின் வடபுறம் எட்டுக் கைகளுடன் சுவாலாமாலினி சிற்பம் உள்ளது. மேலே கூறிய படைக்கலங்களில் ஆறு படைக்கலங்கள் மட்டுமே கைகளில் உள்ளன. மற்ற இரண்டு கைகளும் அபயம், வரதம் ஆகிய நிலைகளில் உள்ளன.

மகாமண்டபத்தூண் ஒன்றிலும் மேற்கண்டவாறு சுவாலாமாலினி சிற்பம் உள்ளது. வாத்திய மண்டபத்தின் மேல்புறம் தனி அறையில் இரண்டு கைகளுடன் சுவாலாமாலினி உருவச்சிலை 1½ மீட்டர் உயரம் நின்றநிலையில் உள்ளது. ஒரு கையில் மலர் தாங்கியும், ஒரு கை தொங்கவிட்ட நிலையிலும் உள்ளது. இயக்கி சுவாலாமாலினியின் நெற்றிப்பொட்டில் தீர்த்தங்கரர் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

கூசுமாண்டினி (அம்பிகா)

கூசுமாண்டினி 22ஆம் தீர்த்தங்கரராகிய நேமிநாதரின் இயக்கி ஆவாள். இவளுக்கு அம்பிகா, அமரா, தர்மதேவி போன்ற வேறு

பெயர்களும் உண்டு. தென்னிந்தியாவின் பிற பகுதிகளிலும் தமிழ்நாட்டிலும், கொங்கு நாட்டுப் பகுதிகளிலும் இயக்கி வழிபாட்டில் கூசுமாண்டினி வழிபாடே பெரும்பான்மையாகவும் சிறப்புடனும் விளங்கிற்று.

இவள் பெரும்பாலும் இரண்டு கைகளுடனே படைக்கப்படுவாள். ஒருசில இடங்களில் நான்கு கைகளுடன் அமைப்பதும் உண்டு. இவளது வாகனம் சிம்மம். தோழிப் பெண்ணின் தலைமீது கை வைத்த நிலையில் சிற்பம் உருவாக்கப் பெற்றிருக்கும். ஆண் குழந்தை சுபங்கரனும் உடன் இருப்பான்.[5]

மற்ற இடங்களைக் காட்டிலும் விசயமங்கலத்தில் சக்தி வழிபாடு தொன்மைக் காலம் தொடங்கிச் சிறப்புடன் விளங்கியது. விசயமங்கலத்தின் ஒருபகுதியாகிய தென்னூரில் 'நங்கைநீலி' கோயில் 12ஆம் நூற்றாண்டிலேயே சிறப்புற்று விளங்கியது என்பதைக் கல்வெட்டுக் கூறுகிறது.[6]

விசயமங்கலத்தில் உள்ள விசயாபுரி அம்மன் கோயிலும் மிகவும் பழமையானதாகும். கொங்கு மண்டல சதகம் அக்கோயிலைப் பத்தினிக் கோட்டம் என்று குறிக்கிறது. பாண்டவருள் ஒருவனாகிய அர்ச்சுனன் தன் அஞ்ஞாதவாச காலத்தில் விசயமங்கலம் விசயாபுரி அம்மனிடம் தன் வில்லை அடைக்கலம் வைத்ததாகக் கொங்கு மண்டல சதகம் கூறுகிறது.[7] 'பத்தினிக் கோட்டத்தில் வெல் விசயன் வரிவில் அடைக்கலம் வைத்ததுவுங் கொங்கு மண்டலமே' என்பது அப்பாடல் பகுதியாகும்.

விசயமங்கலத்தில் அம்பிகா வழிபாடு மிகவும் சிறந்து விளங்கியமைக்கு மேற்கண்ட தாய்த் தெய்வ வழிபாட்டின் தாக்கமும் ஓரளவு காரணமாக இருக்கலாம்.

விசயமங்கலத்தில்

விசயமங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயிலில் ஆறு இடங்களில் அம்பிகா இயக்கி சிற்பங்கள் காணப்படுகின்றன.

1. நுழைவாயில் கோபுரத்தின் கீழ்விதானப்பகுதி
2. வாத்திய மண்டபத்தூண்
3. நிருத்த மண்டப ஸ்ரீபுராணச் சிற்பங்களின் இடையில் இரண்டாவது தூண்

4. மகாமண்டப மேற்குத் தூண்
5. மகாமண்டபத்தில் தலை உடைந்த சிற்பம்
6. அர்த்தமண்டபத்தில் தனிச்சிற்பம்

அரசண்ணாமலையிலிருந்து கொண்டு வரப்பட்ட அம்பிகா சிற்பம் மகாமண்டபத்தில் தனியாக வைக்கப்பட்டுள்ளது. அதன் கிரீடத்தின் நடுப் பகுதியில் தீர்த்தங்கரர் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

'நேமிநாதரை மவுலிமுடி வைத்த தாய்'

என்றும்,

'அதிசயாமலை அம்மன்'

என்றும் இந்த அம்பிகா சிறப்பிக்கப்பட்டுள்ளார்.[8] தலைப்பகுதி இல்லாத அம்பிகாவின் உருவம் ஒன்று மகாமண்டபத்தில் உள்ளது.

ஆறகளூரில்

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் ஆறகளூரில் உள்ள காமேசுவரர் கோயில் என்னும் சிவன் கோயிலில் இயக்கி அம்பிகாவின் செப்புத் திருமேனி ஒன்றுள்ளது. அவ்வுருவம் தமிழ்நாட்டுக் கலைமரபைப் பின்பற்றிச் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. கீழைச் சாளுக்கியர் கலைமரபை ஒட்டியும், கி.பி. 10ஆம் நூற்றாண்டில் கருநாடகம், ஆந்திரப் பகுதியில் நிலவிய கலைமரபைப் பின்பற்றியும் செய்யப்பட்ட செப்புத் திருமேனியாகத் தோன்றுகிறது.[9] இருப்பினும் ஆறகளூர் அம்பிகா சிலையில் சோழர் கலைத்தாக்கம் காணப்படுகிறது.

ஆந்திராவில் கீழைச்சாளுக்கியர் கலைமரபை அடியொற்றிச் செய்யப்பட்ட இதேபோன்று காட்சியளிக்கும் இயக்கி அம்பிகாவின் செப்புத் திருமேனி ஒன்று பாபட்லா என்னுமிடத்தில் கிடைத்துள்ளது. இச் சிற்பம் கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.[10]

ஆறகளூரில் இயக்கி அம்பிகாவின் உருவச்சிலை பீடம் ஒன்றில் நின்ற நிலையில் காணப்படுகிறது. அவளது வலக்கரத்தில் மூன்று கனிகள் உள்ள மாங்கனிக் கொத்து ஒன்று தொங்குகிறது. பாபட்லா அம்பிகாவின் வலக்கரத்திலும் இதேபோன்று மாங்கனிக் கொத்து உள்ளது. இருவரது தலையில் மேல்புறம் திருவாசியின் நடுவே அமர்ந்த நிலையில் நேமிநாத தீர்த்தங்கரரின் உருவம் காணப்படுகிறது.

வலப்புறத் திருவாசிக் காலின் முன்பாக அம்பிகாவின் வாகனமாகிய சிம்மத்தின்மீது அம்பிகா இயக்கியின் குழந்தை ஒன்று அமர்ந்துள்ளது. இடப் புறத்திருவாசிக்காலின் முன்பாக மற்றொரு குழந்தை காணப்படுகிறது.

தமிழ்நாட்டுக் கலைமரபைப் பின்பற்றிச் செய்யப்பட்ட அம்பிகாவின் உருவங்களிலெல்லாம் அவளது தோழிக்கு இன்றியமையாத இடம் கொடுக்கப் பெற்று அவளது உருவமும் அம்பிகாவின் உருவத்தோடு சேர்த்து அமைக்கப் பட்டிருக்கும். ஆறகளூர் அம்பிகாவின் உருவம் கீழைச் சாளுக்கியர் பாணியைப் பின்பற்றிச் செய்யப் பெற்றமையால் இயக்கியின் தோழி உருவம் இடம்பெறவில்லை.[11]

பத்மாவதி

இருபத்துமூன்றாவது தீர்த்தங்கரராகிய பார்சுவநாதரின் இயக்கி பத்மாவதி ஆவாள். இவள் பாம்பு முகமும் கோழி உடலும் கொண்ட குக்குட சர்ப்பத்தை ஊர்தியாக உடையவள். சிலசமயம் தாமரை மலரில் வீற்றிருக்கும் நிலையிலும் அமைக்கப்படுவாள். நான்கு கைகள் உண்டு. அவைகளில் அங்குசம், அட்சமாலை, தாமரை, வரதமுத்திரை ஆகியவை அமைப்பது வழக்கம். இவள் சிவப்பு வண்ணம் உடையவள்.[12]

தமிழ்நாட்டிலுள்ள பெரும்பான்மையான சமண சமயத் திருத்தலங்களில் பத்மாவதியின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

இவற்றில் பெரும்பாலும் பார்சுவநாதரின் இடப்புறம் நின்றநிலையில் அவரைப் போற்றுவது போன்று அமைக்கப்பட்டிருப்பாள். சில இடங்களில் தனித்த நிலையிலும் அமைக்கப்படுவதுண்டு.

நாக வழிபாட்டோடு தொடர்புடைய இவள் பார்சுவநாதரின் இயக்கனான தரணேந்திரனின் மனைவி ஆவாள். பார்சுவநாதர் கானகத்தில் தவம் செய்தபோது அவரது எதிரியாகிய சம்பரதேவன் என்பவன் அவரது தவத்தினைக் கலைக்கும் நோக்கத்துடன் கற்களையும், ஆயுதங்களையும் அவர் மீது பொழியச் செய்தான்.

பார்சுவநாதருக்கு ஏற்பட்ட இத்தீங்கினை அவரது இயக்கனான தரணேந்திரன் தனது ஆயிரம் முடியுள்ள அரவின் தலையால் பார்சுவநாதரின் திருமேனியை மறைத்துக் காத்தான்.

அவனது மனைவியாகிய பத்மாவதி அப்போது தரணேந்திரனின் அரவக் குடைக்கும் பார்சுவநாதருக்கும் தீங்கு நேராத வண்ணம் அரவக் குடைக்கு மேலே தன் வச்சிரக் குடையைக் கவிழ்த்துப் பிடித்தாள் என்று ஸ்ரீபுராணம் கூறுகிறது. அவளது இச்செயலை விளக்கும் வகையிலேயே பார்சுவ நாதருக்கு வச்சிரக் குடை பிடித்து அவரது இடப்புறம் நிற்பதாகத் தமிழ்நாட்டில் அவளது உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன.

ஐவர்மலையில்

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் அய்யம்பாளையத்தை அடுத்துள்ள ஐவர்மலையில் கி.பி. 870ஆம் ஆண்டு வரகுண பாண்டியனின் எட்டாம் ஆட்சியாண்டில் புதுப்பிக்கப்பெற்ற பத்மாவதியின் உருவம் ஒன்று கல்வெட்டுக் குறிப்புடன் காணப்படுகிறது.[13]

இங்குள்ள பார்சுவநாதருக்கும், பத்மாவதி இயக்கிக்கும் திருவமுது படைக்க அவிப்புறமாக ஐநூற்றைந்து காணம் கொழுமத்தைச் சேர்ந்த சாந்திவீரக் குரவடிகளால் அளிக்கப் பெற்றுள்ளது.

இதைக் குறிக்கும் கல்வெட்டுப் பகுதி பத்மாவதி இயக்கியை 'இயக்கி அவ்வை' என்று குறித்துள்ளது. சமண சமயப் பெண்பால் துறவிகளான ஆர்யாங்கனைகள் 'ஔவைமார்கள்' என அழைக்கப் பெற்றதாகச் சீவக சிந்தாமணி கூறுகிறது.[14] தமிழ் இலக்கிய உலகில் சில பெண்பால் தமிழ்ப் புலவர்கள் 'அவ்வையார்' என அழைக்கப்பட்டனர். கல்வெட்டுகளிலும் இரமாதேவி அவ்வையார் என்ற பெயர் வருகிறது. சிரவணபௌகொளா கல்வெட்டுகளில் அவ்வை என்ற சொல் 'அப்பை' என வந்துள்ளது.[15] விசயமங்கலத்திலும் புளிஅப்பை பெயர் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

எனவே பத்மாவதி இயக்கியை அழைக்கும் மரியாதைச் சொல்லாக 'அவ்வை' என்று அங்குப் பொறிக்கப்பட்டிருக்கலாம்.[16]

பூந்துறையில்

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம் பூந்துறையில் உள்ள பார்சுவநாத தீர்த்தங்கரர் கோயிலில் பத்மாவதி உருவம் அமர்ந்த நிலையில் தனிப்பட்ட சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. நான்கு கைகளுடன் பத்மாவதி உள்ளாள். இச்சிற்பம் கருவறைக்கு முன் உள்ள மண்டபத்தில் கிழக்கு நோக்கி உள்ளது.

பத்மாவதியின் கீழே பீடத்தில் பார்சுவநாதர் தவத்தைக் கலைக்க வந்த அசுரன் சம்பரதேவன் பத்மாவதியைக் கண்டு பயந்து நடுங்கும் தோற்றத்தில் உள்ளான். மறுபுறம் பத்மாவதி இயக்கியின் கணவன் தரணேந்திரன் மிடுக்கோடு நின்ற நிலையில் உள்ளான்.

பத்மாவதி தலையில் மேல்புறம் வானத்து அமரர்கள் காட்டப்பட்டுள்ளனர். வச்சிரக் குடை பிடித்துப் பார்சுவநாதரையும் தரணேந்திரனையும் காத்த பத்மாவதி செயல் கண்டு வியக்கும் நிலையில் அமரர்கள் காட்டப்பட்டுள்ளனர். சிறு கல்லில் இவ்வளவு காட்சிகளையும் கைதேர்ந்த சிற்பி நன்கு வடித்துள்ளான். பூந்துறை சமணக் குடும்பத்தில் பெண்கள் பத்மாவதி என்று பெயர் வைத்துக் கொள்வதுண்டு.

விசயமங்கலத்தில்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம் விசயமங்கலத்தில் நுழைவாயில் கோபுர விதானத்தின் கீழ்ப்பகுதியிலும், நிருத்த மண்டபத் தூண் ஒன்றிலும் பத்மாவதி இயக்கியின் உருவங்கள் அமைக்கப் பட்டுள்ளன. பத்மாவதி இயக்கியின் தலைக்கு மேல் ஐந்துதலை நாகம் காட்டப்பட்டுள்ளது.

சித்தாயிகா

இருபத்துநான்காம் தீர்த்தங்கரர் மகாவீரரின் இயக்கியாகிய சித்தாயிகா இரண்டு கைகளுடன் அமர்ந்த நிலையில் அமைக்கப்படுவாள். ஒரு கையில் சுவடி இருக்கும். மற்றொரு கை அபயமுத்திரை பெற்றும் இருக்கும். இவள் பொன் வண்ணம் உடையவள்.[17]

விசயமங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் நிருத்த மண்டபத்தூண் ஒன்றில் சித்தாயிகா உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

இயக்கி காசு

கொங்குச் சோழர் காலத்தில் கொங்கு நாட்டில் வழங்கிய ஒரு காசிற்கு 'ஸ்ரீயக்கி பழஞ்சலாகை' என்பது பெயர். 'சீயக்கி' என்றும் இயக்கி என்றும் பெயர் குறிக்கப்படும்.[18] கொங்கு நாட்டில் மட்டுமே இயக்கி காசு வழங்கி வந்துள்ளதால் சமண சமயத்தின் செல்வாக்கை அறியமுடிகிறது. கொங்குச் சோழர்கள் சமண சமயத்தை நன்கு மதித்தனர் என்பது இதன் மூலம் பெறப்படுகிறது.

இயக்கர் உருவங்கள்

தீர்த்தங்கரர் உருவங்களுடன் இணைந்து அமைக்கப்பட்டிருந்த இயக்கி உருவங்கள் தனிப்பட்ட உருவங்களாக வடிக்கப்பட்டு இயக்கி வழிபாடு பெருகியது போல இயக்கர் வழிபாடு அவ்வளவு அதிகமாகப் பரவவில்லை.

பிரம இயக்கன், காந்தர்வ இயக்கன், கோமுக இயக்கன் உருவங்கள் மட்டும் சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் திங்களூர் புட்பதந்த தீர்த்தங்கரர் கோயிலில் நின்றநிலையில் 1½ மீட்டர் உயரம் உள்ள பிரம இயக்கன் உருவம் அமைக்கப்பட்டுள்ளது.[19]

பிரம இயக்கன் சீதளநாத தீர்த்தங்கரரின் இயக்கன் ஆவான். எட்டுக் கைகளுடன் அமைக்கப்பட்ட உருவமாகும். இடப்புற நான்கு கைகளில் வில், கதாயுதம், கேடயம், வாள் இருக்கும். வலப்புற நான்கு கைகளில் அம்பு, கோடரி, வாள், வரதமுத்திரை காணப்படும்.[20] பிரம இயக்கன் உருவங்கள் விசயமங்கலத்தில் நிருத்த மண்டபத் தூண்கள் இரண்டில் காணப்படுகின்றன.

பிரம இயக்கனைச் சாத்தன் என்றும் அழைப்பர். எனவே சாத்தன் வடிவத்திலும் பிரம இயக்கன் உருவங்கள் அமைக்கப்படுவதும் உண்டு.

விசயமங்கலம் சந்திரப்பிர தீர்த்தங்கரர் கோயில் மானத் தம்பத்தின் கிழக்குப்புறமும், நிருத்த மண்டபத் தூண் ஒன்றிலும் காந்தர்வ இயக்கன் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. காந்தர்வ இயக்கன் 17ஆம் தீர்த்தங்கரர் குந்துநாத தீர்த்தங்கரரின் இயக்கன் ஆவான்.

வழக்கமாக எட்டுக் கைகளுடன் அமைக்கப்படும் காந்தர்வ இயக்கனுக்கு[21] விசயமங்கலத்தில் நான்கு கைகளே அமைக்கப்பட்டுள்ளன. மேலிரண்டு கைகளில் பாசமும், நாகமும் உள்ளன. கீழிரண்டு கைகளும் அபய முத்திரையுடன் காணப்படுகின்றன.

விசயமங்கலத்தில் உள்ள ரிசபதேவர் உருவத்தின் வலப்புறம் கோமுக இயக்கன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

விசயமங்கலம் கல்வெட்டொன்றில் இயக்கர்களை எழுந்தருளச் செய்து வழிபட்ட குறிப்பு கி.பி. 11ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்றில்

காணப்படுகிறது. அக்கல்வெட்டில் இயக்கர்கள் ‘தோழன்மார்’ எனக் குறிக்கப்படுகின்றனர்.[22]

சல்லேகனை

சமண சமயத்தின் மிகவும் முக்கியமான கொள்கைகளில் ஒன்று சல்லேகனை விரதம் ஆகும். சல்லேகனை என்பது ஒருவருக்குப் பொறுக்க முடியாத மனவேதனையைத் தருகிற இடையூறு, தீராத நோய், மிகுந்த மூப்பு ஆகியவை வந்தபோதும்,[23] பஞ்ச காலத்திலும்,[24] தமக்கு இறுதிக் காலம் வருவதை உணரும்போதும்[25] உண்ணாநோன்பிருந்து உயிர் விடுவதைக் குறிக்கும் விரதம் ஆகும்.

முகமலர்ந்து அகம் விரும்பிச் சாவை வரவழைத்துக் கொள்ளும் இவ்விரதத்தைத் ‘தற்கொலை’ என்று கூறுவதற்கில்லை. அவ்வாறு கூறும் குண்டலகேசி நூலை நீலகேசி மறுக்கிறது.[26] உடம்பாகிய சிறையிலிருந்து உயிர் விடுதலை பெற இவ்விரதம் உதவுகிறது. சல்லேகனை விரதமிருந்து உயிர் துறந்தவர்களே மீண்டும் பிறவாமை அடைகின்றனர் என்பது சமணர்கள் நம்பிக்கை.

காய்ந்த இலைபோல் உடலை வாடச் செய்வதன் மூலம் அருகப் பெருமானுக்கு எண்ணெயில்லா விளக்கேற்றுதலே சல்லேகனை என்று ஒரு சமண ஆசிரியர் கூறுகிறார்.[27] சரீரத் தியாகம் என்றும் இதனை அழைப்பர்.[28] நீலகேசி உரையாசிரியர் சமய திவாகர வாமன முனிவர் மேலுலக யாத்திரைக்குக் கட்டமுதாகப் பயன்படுவது சல்லேகனை விரதம் என்பார்.[29] சல்லேகனை நினைவாக நிசீதிகை என்னும் கல் நடுவது வழக்கம்.[30] கொங்கு நாட்டில் சமணரிடையே இச்சடங்கு நிகழ்ந்ததைச் சில சான்றுகள் மூலம் காணமுடிகிறது.

கொங்கு நாட்டில் சல்லேகனை

விசயமங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயிலில் சல்லேகனை விரதமிருந்து உயிர் நீத்தவர்கட்கு எடுத்த அரிய மூன்று நிசீதிகைக் கற்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று கல்வெட்டுக் குறிப்புடன் காணப்படுகிறது.

நிருத்த மண்டபத்தின் வடமேற்குப் பகுதியில் 2.2 மீட்டர் உயரமும், 35 செ.மீ. அகலமும் உடைய அழகாகச் செதுக்கப்பட்ட தூண்

ஒன்றுள்ளது. உச்சிப்பகுதி கூர்மையாகவும் அடிப்பகுதி சதுரமாகவும் உள்ளது. கிழக்குப் பகுதியில் மேல்புறம் சல்லேகனை விரதமிருந்து உயிர்நீத்த 'புளிஅப்பை' என்ற பெண்ணின் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது.[31] புளிஅப்பையின் உருவத்திற்கு மேல் தீர்த்தங்கரர் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. உருவத்தின்கீழ், கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழும் கிரந்தமும் கலந்த கல்வெட்டு ஒன்றுள்ளது. அக்கல்வெட்டு

1) ஸ்வஸ்திஸ்ரீ சாமுண்ட
2) ராஜன் தங்கை புளி
3) அப்பை நிசீதிகை
4) கல்

என நான்கு வரிகளைக் கொண்டுள்ளது.[32] வாத்திய மண்டபத்தின் கீழ்ப்புற வாயில் எதிரிலும், மடைப்பள்ளியிலும் இரு நிசீதிகைச் சிற்பத்தூண்கள் கல்வெட்டின்றிக் காணப்படுகின்றன.

சாமுண்டராயன்

பத்தாம் நூற்றாண்டில் மேலைக் கங்கர்களும், இராட்டிரகூடரும் உறவுகொண்டு ஒன்றுபட்டுச் செயல்பட்டனர். அவர்களின் கூட்டுப் படை யாராலும் வெல்ல முடியாத பெரும்படையாக விளங்கியது. அப்படைக்குத் தலைமை தாங்கிப் பல வெற்றிகளைக் கண்ட பெருவீரனாக விளங்கியவன் சாமுண்டராயன்.[33] கங்க மன்னனுக்கு அமைச்சனாகவும், தளபதியாகவும் விளங்கிய சாமுண்டராயன் சமண சமயத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டு சிரவண பௌகொளாவில் மிகவும் சிறப்புற்று விளங்கும் 19 மீட்டர் உயரம் உள்ள கோமடேசுவரர் திருஉருவத்தை நிறுவியவன்.[34] கோமடேசுவரர் முதல் தீர்த்தங்கரர் ரிசபதேவரின் (ஆதிநாதர்) இரண்டாவது மகனான பாகுபலி ஆவார். ஆதிநாதரின் மூத்த மகன் பரதன் என்பவன். கன்னடத்திலும், வடமொழியிலும், பிராகிருதத்திலும் பெரும்புலமை பெற்று விளங்கிய சாமுண்டராயன் 'சாமுண்டராய புராணம்' என்னும் நூலை இயற்றினான். 24 தீர்த்தங்கரர்களின் வரலாறு கூறும் ஆதிபுராணத்தைப் பாமர மக்களும் படிக்கும் நிலையில் எளிய உரைநடையில் இயற்றிக் கன்னட உரைநடைக்கு வழி வகுத்தவன் சாமுண்டராயனே.[35] கங்க மன்னர்கள் மூன்றாம் மாறசிம்மன், நான்காம் இராசமல்லன் ஆகியோர் காலத்தில் சாமுண்டராயன் அரசியல் தலைவனாக விளங்கினான் (கி.பி.

960-985).[36] அசிதசேனர், நேமிசந்திரர் ஆகிய சமண ஆசிரியர்களைக் குருவாகக் கொண்டு விளங்கினான்.[37] சாமுண்டராயன் பரம்பரை பரம்பரையாகக் கங்க அரசர்கட்குப் பணிபுரியும் பிரம்மசத்திரிய குலத்தில் பிறந்தவன்.[38]

புளிஅப்பை

அம்மை அல்லது அவ்வை என்பது போலக் கன்னடத்தில் பெண்களைக் குறிக்கும் சொல் அப்பை என்பது. கருநாடகத்தில் காளவ்வை, குணமதி அவ்வை, மாவி அப்பை, சக்கி அப்பை, மாசிகப்பை போன்ற பெண்கள் பெயர்களைக் கல்வெட்டுகளில் காணுகிறோம்.[39] விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களில் வாழும் தமிழ்ச் சமணர் குடும்பங்களின் பெண்டிர்களை, குற்றேவல்பணி புரியும் பிற சமயத்தவர். 'ஆவை' என அழைக்கும் வழக்கம் இன்றும் காணப்படுகிறது. அவ்வையே ஆவையாகி இருக்கக்கூடும்.

மிகப்பெரும் புகழ் படைத்த அமைச்சர்களும், தளபதிகளும் பிறந்த குடும்பத்தில் தோன்றிய சாமுண்டராயனின் தங்கை கங்க மன்னர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த கொங்கு நாட்டுக்கு நெடுந்தொலைவு பயணம் வந்து விசயமங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயிலில் சல்லேகனை விரதமிருந்து உயிர் துறந்தது சிறப்பு மிக்கதோர் செயலாகும். இதன் மூலம் கொங்கு நாட்டுச் சமணத் தலமான விசயமங்கலத்தின் பெருமை விளங்குகிறது. கங்கர்கள் காலத்தில் கொங்கு நாட்டுச் சமணம் பெற்றிருந்த சிறப்பு இதன் மூலம் பெறப்படுகிறது.

புளிஅப்பையின் மூத்த சகோதரர் சாமுண்டராயன் கி.பி. 960 முதல் 985வரை கங்கத் தளபதியாக விளங்கினான். அவன் தங்கை புளிஅப்பை விசயமங்கலத்தில் சல்லேகனை விரதமிருந்து உயிர் நீத்ததும் 10ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியாகலாம். புளிஅப்பை 'சாமுண்டராஜன் தங்கை' என்று கல்வெட்டுக் குறிப்பதால் சாமுண்டராயன் பெற்றிருந்த புகழ் புலப்படுகிறது.

சல்லேகனை விரதம் இருக்கும் முறை

சல்லேகனை விரதமிருந்து உயிர்விடக் கருதும் சமண சமயத்தார் முதலில் தங்கள் குருவிடம் சல்லேகனை விரதம் இருக்கும் முறையைக் கேட்டறிவர்.[40]

சல்லேகனை விரதம் மேற்கொள்வோர் முதலில் அதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுப்பர். அவ்விடம் தனியாகவும், மக்கள் நடமாடும் இடத்தை விட்டுத் தள்ளியும் இருக்க வேண்டும். பின் அவ்விடத்தைத் தூய்மை செய்து தருப்பை அல்லது காய்ந்த வைக்கோலை அதன்மீது பரப்புவர்.[41] தென்னை நார் உபயோகிப்பதும் உண்டு.

பின் அதன்மீது வடக்கு நோக்கி அமர்ந்தோ, நின்றோ, படுத்தோ விரதம் மேற்கொள்வர். முதலில் திரவ உணவு மட்டும் உட்கொள்ள வேண்டும். பின் தண்ணீர் மட்டும் உட்கொள்ள வேண்டும். பின் உயிர் பிரியும் வரை தண்ணீரும் உட்கொள்ளாமல் விரதம் மேற்கொள்ள வேண்டும். தொடக்கத்தில் புல்மீது நிற்கலாம். நடக்கலாம் எனக் கூறும் சல்லேகனை விதிகள் பின் கை கால்களை அசைக்காமல் விரதம் மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகின்றன.[42]

விரதம் இருக்கும்போது உடல் துன்பம் கருதி விரைவில் உயிர் பிரிய வேண்டும் என்று நினைக்கக்கூடாது. தீர்த்தங்கரர்களையும் பஞ்சபரமேட்டிகளையும் நினைவில் கொள்ள வேண்டும். சிலர் அறுபது நாட்கள் வரை விரதம் இருந்துள்ளனர்.[43]

சல்லேகனையைக் குறிக்கும் சொற்கள்

சல்லேகனை என்று பொதுச் சொல்லால் பிற்காலத்து வழங்கப் பெற்றாலும் இவ்விரதம் ஆராதனை, நிசீதி, பஞ்ச நமஸ்காரம், பண்டித மரணம், சன்யாசம், சமாதி என்ற சொற்களாலும் குறிக்கப்பட்டுள்ளது.[44]

சமண சமயத்தில் பெண்கள் நிலை

சமண சமயத்தில் பெண்பிறவி உயர்வாக மதிக்கப்படுவதில்லை. அதனால் பெண்களுக்கு வீடுபேறு கிடையாது என்பது சமணர்கள் கருத்து.[48] கடும் விரதங்களைப் பெண்களால் ஏற்றுச் செய்ய முடியாது என்பதே அதன் காரணமாகும்.

ஆனால் கல்வெட்டுகளில் கந்தி, கந்தியார், அவ்வை, அப்பை, அம்மை, கன்னி, குரத்தி, குரவி, ஆர்யாங்கனை போன்ற பெயர்களைப் பெற்ற பெண்பால் துறவிகளைக் காணுகின்றோம். அவர்கள் பலர் சல்லேகனை விரதமிருந்து உயிர் நீத்துள்ளனர்.[46] அதேபோல் கொங்கு நாட்டு விசயமங்கலத்திலும் பெண்பாலாரான புளிஅப்பை சல்லேகனை விரதமிருந்து உயிர் நீத்ததை அறிகிறோம்.

ஆண்கள் சல்லேகனை இருப்பது பிறப்பை அறுத்து வீடுபேறு பெறுதலை விரும்பி; ஆனால் சமண சமயப் பெண் துறவிகள் சல்லேகனை விரதம் இருப்பது பெண் பிறவியை ஒழித்து அடுத்த பிறவியில் ஆண்களாகப் பிறப்பதற்கேயாம்.[47] ஆணாகப் பிறந்தபின் இவ்விதம் விரதம் இருந்தே அவர்கள் வீடுபேறு அடைவர்.

எனவே விசயமங்கலத்தில் புளிஅப்பை சல்லேகனை விரதமிருந்து உயிர் நீத்தது விடுபேறு பெற அல்ல; அடுத்த பிறவியில் ஆணாகப் பிறப்பதற்கே என்பதை அறிகிறோம்.

வடக்கிருத்தலும் சல்லேகனையும்

தமிழ் இலக்கியங்களில் காணப்படும் வடக்கிருத்தல் என்னும் வழக்கம்[48] சல்லேகனையிலிருந்து வந்திருக்கலாம் என்பது சிலர் கருத்தாகும்.[49] சமணத் தீர்த்தங்கரர்கள் எல்லோரும் வடதிசையில் நிர்வாணகதி அடைந்ததாலும், சமணர் வடக்குத்திசையைப் புண்ணியத் திசையாகக் கருதுவதாலும் தமிழில் வடக்கிருத்தல் என்னும் பெயர் வந்தது என்பர்.[50]

அஞ்சினான் புகலிடம்

நால்வகைத் தானங்கள்

சிராவகர் அல்லது சாவகர் எனப்படும் சமண இல்லறத்தார்[51] ஆற்றவேண்டிய பல சமணக் கடமைகளில் நால்வகைத் தானங்களைச் செய்வது மிக முக்கியமாகக் கூறப்படுகிறது. அவை

அபய தானம் (அடைக்கல தானம்)
அன்ன தானம் (உணவு தானம்)
ஔசத தானம் (மருந்து தானம்)
சாத்திர தானம் (கல்வி தானம்)

எனப்படும்.[52]

அடைக்கல தானம்

இந் நால்வகைத் தானங்களில் அபய தானமே சிறந்தது என்றும், முக்கியமானது என்றும், முதன்மையானது என்றும் சமண சமய நூல்கள் கூறுகின்றன.[53]

அரசியல், பொருளாதார, சமூக நிகழ்ச்சிகளால் பிறரால் அச்சங்கொண்ட மக்கள் தம் உயிரையும், உடைமைகளையும், தம் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டி அடைக்கலம் என்று புகல் அடைந்தால் அவர்களுக்கு அபயமளித்துக் காப்பது சமண இல்லறத்தாரின் தலையாய கடமையாகும்.

இந்த அடைக்கலத் தானத்திற்குத் தொண்டை நாட்டில் தனி நிறுவனங்கள் சமணரால் ஏற்படுத்தப்பட்டிருந்தன.[54] அவை 'அஞ்சினான் புகலிடம்' எனப்பட்டன. அவை சமணக் கோயில்களை ஒட்டியும், சமணர் குடியிருப்பு ஊர்களின் ஒரு பகுதியாகவும், குடியிருப்பு ஊர் முழுவதிலுமோ அமைந்திருந்தன. சமண சமயத்தார் மட்டுமே இவ்வகைத் தானத்தைக் கைக்கொண்டொழுகினர்.

கொங்கு நாட்டில்

சமணம் சிறப்படைந்திருந்த கொங்கு நாட்டில் வாழ்ந்த சமண இல்லறத்தார்களும் தங்களின் தலையாய தானமாக அபய தானத்தை மேற்கொண்டு அதற்கான நிறுவனங்களை ஏற்படுத்தியிருந்தனர் என்பதைக் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன.

கொங்கு நாட்டில் தொண்டைநாடு போல அஞ்சினான் புகலிடத்தையும், அதே நோக்கத்தோடு 'அடைக்கலம்' 'ரக்ஷை' 'அபயம்' போன்ற தம் சமய நிறுவனங்களையும் சமணர்கள் ஏற்படுத்தியிருந்தனர்.

அஞ்சினான் புகலிடம்

கோயமுத்தூர் மாவட்டம், பல்லடம் வட்டத்தில் பட்டணம் என்ற ஊரில் நானாதேசி வணிகக் குழுவைச் சேர்ந்த ஆறு வணிகர்கள் பழுதடைந்திருந்த அஞ்சினான் புகலிடத்தைப் புதுப்பித்து அதைக் காக்கக் கொடையும் அளித்தனர்.[55] அவர்கள் அஞ்சினான் புகலிடத்தைப் புதுப்பித்து ஊர் ஸ்ரீநாதபட்டினம் எனப்பட்டது. 'ஜைனரட்சை' என்ற தொடர் அஞ்சினான் புகலிடத்தைக் குறிக்கும் கல்வெட்டில் வருவதால் இந்நிறுவனம் சமண சமயம் தொடர்பானது என்பதை அறிகிறோம்.

அடைக்கலம்

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், பழமங்கலம் என்னும் ஊர் 10 ஆம் நூற்றாண்டில் புகழ்மங்கலம் என்று பெயர் பெற்றிருந்தது.[56]

அவ்வூரில் நாநாதேசி வணிகர்கள் பெயரில் அடைக்கலம் ஒன்றைக் கிழங்கு நாட்டு நித்தவிநோதத்து இருந்து வாழும் வேளாளரில் வெண்டுவன் அதிருக்குறையான் என்பவன் ஏற்படுத்தினான்.[57]

கொங்கு நாட்டில் தனிச் சமணர் ஒருவரும், வணிகக் குழுவினரும், நாட்டாரும் சமணரின் அடைக்கல தானத்தின் பெருமையை உணர்ந்து மேற்கண்ட நிறுவனங்களை ஏற்படுத்திப் புகழ் அடைந்தனர்.[58]

பிற கோயிலாக்கப்பெற்ற சமணக் கோயில்கள்

தமிழ்நாட்டில் சமண சமயம் செல்வாக்குக் குன்றியபோது பல சமணக் கோயில்கள் பிற மதக் கோயில்களாக மாற்றம் பெற்றன.

பல சமணப் பாழிகளையும், பள்ளிகளையும் அழித்துச் சிவன் கோயிலாக மாற்றப்பட்ட செய்தி பெரியபுராணத்தில் வருகிறது.[59]

தொண்டை நாட்டில் கி.பி. 18, 19ஆம் நூற்றாண்டுகளில் பல சமணக் கோயில்கள் பிற மதக் கோயிலாக மாற்றம் பெற்றன. இதனை 'அடைமானம்', அன்னியன் குடியிருப்பு' என்று மக்கென்சியின் ஆவணங்கள் குறிக்கின்றன.[60]

இதேபோலக் கொங்கு நாட்டிலும் பல சமணக் கோயில்கள் மத மாற்றம் செய்யப்பட்டன. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார்

> "கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டத்தில் பல சமணக் கோயில்கள் சைவக் கோயிலாக மாற்றப் பட்டுவிட்டன. அவை அமணேசுவரர், அமணலிங்கேசுவரர், ஆதீசர் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன."

எனத் தம் நூலில் எழுதியுள்ளார்.[61]

ஆளியாறு

கோவை மாவட்டம் ஆளியாறு அணைக்கட்டின் எல்லையில் ஆதாளியம்மன் கோயில் உள்ளது. இதற்கெனக் கட்டுமானக் கோயில் தனியாக எதுவுமில்லை. தனிச்சிற்பம் மட்டுமே உள்ளது. சமணத் தீர்த்தங்கரர் உருவத்தின் முகத்தைச் சிதைத்து 'ஆதாளியம்மன்' என்று பெயரிட்டு வணங்குகின்றனர். சிலைக்கு முன்னர்ச் சில வேல்களையும்

நட்டுள்ளனர். உருவத்தின் மீது சிவப்புத்துணி பரிவட்டமாக அணிவிக்கப்பட்டுள்ளது. சிதைந்திருந்த முகம், மார்புப் பகுதியைச் சுதை மூலம் பெண் வடிவமாகப் பின்னர் மாற்றியுள்ளனர்.

அவ்வழியில் செல்லும் வாகனங்களுக்குரியவர்கள் வந்து வழிபடுகின்றனர். சிலர் பலியும் கொடுக்கின்றனர். இச்சிலையில் அருகில் சமண முனிவர் தங்கி வாழ்ந்த குகையில் சில கற்படுக்கைகள் உள்ளன.

களந்தை

கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் களந்தை தொன்மையான தோர் ஊர். பெரிய களந்தை, சிறிய களந்தை என இரு பகுதிகளாகப் பகுக்கப்பட்ட ஊர்.

களந்தை ஒரு காலத்தில் சமணத் தலமாக விளங்கியது. சமண முனிவர்களும், புலவர்களும் அங்கு வாழ்ந்தனர்.

அவ்வூரில் ஆதீசர் கோயில் என்ற பெயரில் சிவன் கோயில் ஒன்று உள்ளது. அக்கோயிலில் கிடைக்கும் சமணத் தடயங்களைக் கொண்டு அக் கோயில் முதல் சமண தீர்த்தங்கரர் ஆதீசர் அல்லது ஆதிநாதர்க்கு எடுக்கப்பெற்ற கோயிலாக இருக்க வேண்டும் என்று கோவை கிழார் கருதுகிறார்.[62]

அக்கோயில் சுவர்களில் சில தீர்த்தங்கரர் உருவங்கள் பொறிக்கப் பட்டுள்ளன. பிற்காலத்தில் இச்சமணக் கோயில் சைவக் கோயிலாக மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும். களஆய்வில் இம்மாற்றத்திற்கான தடயங்கள் கிடைத்தன.

சேலம்

சேலம் நகரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் அருகே 'தலைவெட்டி முனியப்பன் கோயில்' என்ற பெயரில் ஒரு கோயில் உள்ளது. இந்துக்கள் வணங்கி வருகின்றனர். அண்மைக்காலம் வரை இக்கோயிலில் பலியும் கொடுக்கப்பட்டு வந்தது.

சமண தீர்த்தங்கரர் சிலையின் தலை தனியாக உடைக்கப்பட்டுப் பின்னர்ச் சிலையுடன் ஒட்டவைக்கப்பட்டுள்ளது. சைவப் பூசாரி ஒருவர் பூசை செய்து வருகிறார்.

திரிமூர்த்திமலை

கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள திரிமூர்த்திமலையில் அமணேசுபரசுவாமி கோயில் உள்ளது. இப்போது அக் கோயில் சிவன் கோயிலாக இருந்தாலும் ஒரு காலத்தில் அது சமணக் கோயிலாக இருந்ததென்று அங்குள்ள கல்வெட்டால் அறிகிறோம். அவ்வட்டாரத்திற்கு 'அமண சமுத்திரஞ் சீமை' எனக் கல்வெட்டுக் குறிக்கிறது.[63] அருகில் உள்ள பாறையில் தீர்த்தங்கரர் உருவம் உள்ளது. அதனைத் திரிமூர்த்தி என இந்துக்கள் வணங்குகின்றனர்.

தேவணம்பாளையம்

கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் கப்பளாங்கரை தேவணம் பாளையத்தில் உள்ள அமணலிங்கேசுவரசுவாமி என்ற கோயில் ஒரு காலத்தில் சமணக் கோயிலாக விளங்கியுள்ளது. கொங்குச் சோழ மன்னன் விக்கிரம சோழனின் கல்வெட்டில் 'குறுநீலியில் ஜைனரட்சை' என்ற தொடர் அழிக்கப் பட்டுள்ளமை தெரிகிறது. சிவன் கோயிலில் கருவறையிலும் அம்மன் சன்னதியிலும் சிறு தீர்த்தங்கரர் உருவங்கள் இன்னும் உள்ளன. சிவாலய அமைப்பின்படி கோயில் அமையவில்லை.

பிற இடங்களில்

சேலம் மாவட்டப் பொட்டனேரியில் தீர்த்தங்கரர் 'குரும்பசாமி' என்ற பெயரில் இந்துக்களால் வணங்கப் பெறுகிறார்.

ஈரோட்டிலிருந்த சமண உருவம் 'மொட்டப் பிள்ளையார்' என அழைக்கப்பட்டது. .

ஈரோடு மாவட்டம் ஈரோடு வட்டம் திருவாச்சிச் சிவன்கோயில் அமணேசவரசுவாமி என அழைக்கப்படுவதாக அவ்வூர்ச் செப்பேடு தெரிவிக்கிறது.[64]

கொங்கு ஆவணங்களில் கழுவேற்றம்

கி.பி. 6,7ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர் ஆட்சிப் பகுதியான தொண்டை நாட்டிலும், அவர்கள் வென்ற சோழ நாட்டிலும், அடுத்திருந்த பாண்டிய நாட்டிலும் சமண சமயம் நன்கு வேரூன்றியிருந்தது.

பல்லவ மன்னன் மகேந்திரவர்மன், பாண்டிய மன்னன் கூன் பாண்டியன் முதலிய மன்னர்கள் சமண சமயத்தைத் தழுவிச் சமண

சமயம் தங்கள் நாட்டில் தழைத்தோங்கிப் பரவ எல்லாவிதமான உதவிகளையும் செய்தனர்.

சமண சமயத்தை எதிர்த்துத் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பக்தி இயக்கத்தின் மூலம் தங்கள் தீவிரப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர்.

இம் மூவர் முதலிகளில் திருஞானசம்பந்தர் சமண சமய எதிர்ப்பில் முன்னிற்பவர். சமய குரவரில் முதலாமவர். அவரே சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் முதல் மூன்றின் ஆசிரியருமாவார்.

திருஞானசம்பந்தர் தாம் பாடிய எல்லாப் பதிகங்களிலும் திருக்கடைக்காப்பாகிய பத்தாவது பாடல்கள்தோறும் சமணர்களைப் பழித்தும் இழித்தும் தவறாமல் பாடியிருப்பார். சில திருக்கடைக்காப்புப் பாடல்களில் சமணரோடு பௌத்தர்களையும் கண்டித்துப் பாடுவார்.

சமணர்களையும் பௌத்தர்களையும் அழிப்பதற்காக என்றே திருஞானசம்பந்தர் இவ்வுலகில் திருஅவதாரம் செய்தார் என்பர். திருஞானசம்பந்தரின் தகப்பனார் சிவபாத இருதயர் சமணரையும் பௌத்தர்களயும் அழிக்க ஒரு பிள்ளை வேண்டும் என நோன்பு நோற்றார் எனச் சேக்கிழார் பாடுகிறார்.

மேதினிமேல் சமண்கையர் சாக்கியர்தம் பொய்மிகுந்தே
ஆதிஅரு மறைவழக்கம் அருகிஅரன் அடியார்பால்
பூதிசா தனவிளக்கம் போற்றப்பெறாது ஒழியக்கண்டு
ஏதமில்சீர்ச் சிவபாத இருதயர்தாம் இடர்உழந்தார்

மனையறத்தில் இன்பமுறு மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே ஆடியசே வடிக்கமலம்
நினைவுறமுன் பரசமயம் நிராகரித்து நீறாக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றும் தவம்புரிந்தார்

என்பன சேக்கிழார் வாக்காகும்.[65]

திருஞானசம்பந்தர், பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியார், அமைச்சர் குலச்சிறையார் ஆகியோரின் அழைப்பை ஏற்றுப் பாண்டியநாட்டு மதுரை சென்றார். அங்குச் சமணருடன் சமயவாதமும் அனல்வாதமும் புனல்வாதமும் நடத்தினார். தோற்ற சமணர்கள் கழுவேறினர்.

இதனை நம்பியாண்டார்நம்பிகளின் திருஞானசம்பந்தர் திருவந்தாதி, மும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை ஆகிய நூல்களிலும், சேக்கிழாரின் பெரியபுராணத்திலும், வேம்பத்தூர் பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணத்திலும், பரஞ்சோதியாரின் திருவிளையாடல் புராணத்திலும், வீமநாதபண்டிதரின் கடம்பவனப் புராணத்திலும் விளக்கமாகக் காணுகிறோம்.

திருஞானசம்பந்தர் சீர்காழியில் உமாதேவியாரிடம் ஞானப்பால் உண்டவர் என்பது வரலாறு. யார் பால் உண்பர்? பெற்றெடுத்த பிள்ளையல்லவா பால் உண்ணும். அதிலும் இளையபிள்ளையாக இருத்தல் வேண்டும். எனவே உமாதேவியாரின் பாலுண்ட திருஞானசம்பந்தர் சிவபெருமானின் புதல்வர் என அழைக்கப்பட்டார்.

இதனை உட்கொண்ட தக்கயாகப்பரணி பாடிய ஒட்டக்கூத்தர் திருஞானசம்பந்தர் முருகப்பெருமாளின் அவதாரம் என்று கூறுகிறார்.[66]

'வருகதை தெய்வமகளென் மருமகள் வள்ளிவதுவை
மனமகிழ்பிள்ளை முருகன் மதுரையில் வெல்லுமினிய
தொருகதை சொல்லுதவள வொளிவிரி செவ்விமுளரி
யொளிதிகழ் அல்லிசுமமு மொருமனை வல்லிஎனவே

என்பது அப்பாடலாகும். இதில் காளிதேவி கலைமகளை நோக்கி 'என் மருமகள் வள்ளி வதுவை மனமகிழ் பிள்ளை முருகன் மதுரையில் வெல்லும் இனியதொரு கதை சொல்லு' என்று அக்கதையில் ஈடுபாடு கொண்டு கேட்கின்றாள் என அறியலாம். இத்தாழிசையின் உரையும் 'ஆளடையபிள்ளையார் (திருஞானசம்பந்தர்) முருகக்கடவுளென்றுணர்க' என உரைக்கும்.

கலைமகளும் இந்தக் கதை சமணர் 'கழுமிசை கொள்ளும் கதை' என்று கூறித் தொடங்குகின்றாள். முருகப்பெருமானுக்கும் திருஞான சம்பந்தருக்கும் வேறுபாடு இல்லை; திருஞானசம்பந்தர் முருகப்பெருமான் அவதாரமே என்பது இதன் மூலம் பெறப்படுகிறது.

மேற்கண்ட வரலாற்றை நன்கு உணர்ந்த கொங்கு நாட்டவர்கள் இன்னும் ஒருபடி மேலே சென்று திருஞானசம்பந்தர் செய்த அருட்செயல்களையெல்லாம் முருகப்பெருமான் மீது ஏற்றிக் கூறினர். கொங்குநாட்டு ஆவணங்களில் இதனைத் தெளிவாகக் காணுகிறோம்.

கொங்குநாட்டு ஆவணங்களான

பனிமலைக் காவலர் பட்டயம்
அல்லாள இளையான் செப்பேடு
அரையநாட்டுப் பட்டயம்
அலைவாய்மலைச் செப்பேடு
கபிலமலைச் செப்பேடு
பனங்காடர் நந்தவனப் பட்டயம்

ஆகியவைகளில் திருஞானசம்பந்தர் மதுரையில் சமணர்களைக் கழுவேற்றியவரலாற்றை முருகப்பெருமான்மீது ஏற்றிக் கூறுகின்றன.[67] முருகப்பெருமானே திருஞானசம்பந்தராகத் திருஅவதாரம் செய்தார்; முருகப்பெருமானுக்கும் திருஞானசம்பந்தருக்கும் வேறுபாடு இல்லை என்பது இந்த ஆவணங்களை எழுதிய பெருமக்கள் கருத்தாகும்.

இவைகளில் வரும் தொடர்கள்,

'துஷ்ட்டச் சமணரை வெட்டிக் கழுமிசை
வைத்த சுப்பிரமணியப் பிள்ளையார்'

'துஷ்ட்டச் சமணரை வெட்டிக் கழுமிசை
வைத்த சுப்பிரமண்ணிய சுவாமிகள்'

'துட்டச் சமணரைக் கழுமிசை வைத்த
சுப்பிமணி சுவாமிகள்'

'எண்ணாயிரம் சமணரைக் கழுவில்
ஏற்றிவைத்தோன்'

என்பனவாகும்.

பேரூர்ச் செப்பேட்டில்

'சீகாழியில் மூவாயிரம் சமணரை அக்கினியினாலே
அழியப் பண்ணினார்'

என்ற தொடர் காணப்படுகிறது.[68] சீர்காழி திருஞானசம்பந்தரின் திரு அவதாரத் தலமாகும்.

அனுமன்பள்ளிச் செப்பேட்டில் கைக்கோளர்கள் 'அமணகண்டந் தெரிந்த கைக்கோளர்'[69] என்றும் அலைவாய்மலைச் செப்பேட்டில் 'அமண கண்டந் தெரிந்தோர்'[70] என்றும் கூறப்படுகின்றனர்.

கபிலமலைச்செப்பேட்டில் முருகப்பெருமான் 'சமண குலைகாரன்' என்று குறிக்கப்பெறுகிறார்.[71]

எனவே கொங்கு நாட்டு மக்களுக்குச் சமணம் - சைவ சமயப் போராட்ட நிகழ்ச்சி நன்கு தெரிந்திருக்கிறது என்பதை அறிகிறோம். முருகப் பெருமானே திருஞானசம்பந்தப் பிள்ளையாராகத் திருஅவதாரம் செய்து சமணர்களை அழித்தார் என்று நம்பினர். அதனால்தான் தம் ஆவணங்களில் சமணரை அழித்த செய்தியைப் பல இடங்களில் முருகப்பெருமான் மேல் ஏற்றிக் கூறினர்.

சமய ஒருமைப்பாடு

தேவாரத்திலும், பிற சைவத் திருமுறைகளிலும், பிற சமய இலக்கியங்களிலும் சைவ-சமண சமயப் போராட்டத்தின் தாக்கமே பெரும்பாலும் இருப்பதைக் காணலாம்.

சிறுபான்மையாகச் சில இடங்களில் சமய ஒருமைப்பாடான செய்திகளும் இலக்கியங்களில் உள்ளன.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் சில இடங்களில் சமண சமயத்தையும் பௌத்த சமயத்தையும் சிவபெருமானோடு தொடர்புபடுத்திப் புகழ்ந்துள்ள இடங்கள் காணப்படுகின்றன. ஓரிடத்தில் சமண சமயத்தையும், பௌத்த சமணத்தையும் சிவபெருமான் உண்டாக்கினார் என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

"துணைநன்மலர் தூய்த்தொழும் தொண்டர்காள் சொலீர்
பணைமென்முலைப் பார்ப்பதி யோடுட னாகி
இணையில்லிரும் பூளையிடங் கொண்ட ஈசன்
அணைவில் சமண் சாக்கியம் ஆக்கிய வாறே" [72]

என்பது திருஞானசம்பந்தர் வாக்கு.

"போதியாரும் பிண்டியாரும் புகழ்அல சொன்னாலும்
நீதியாக் கொண்டங்கு அருளும் நிமலன்"[73]

"சாதிகீதர் வர்த்தமானர் சண்பை நகராரே"[74]

"ஆயாதன சமயம்பல அறியாத அந்நெறியின்
தாயானவன்"[75]

என்பன திருஞானசம்பந்தர் தேவாரப் பகுதிகளாகும்.

இதன் மூலம் சிவபெருமான் சமணர்கட்கு அருள் செய்கின்றான்; சிவபெருமான் சமணம் போன்ற பிற சமணத்தாருக்குத் தாய் போன்றவன்; சிவபெருமானின் பல்வேறு பெயர்களில் வர்த்தமானர் என்பதும் ஒன்று என்ற கருத்துக்களை அறிகின்றோம். வர்த்தமானர் என்பது 24ஆம் சமணத் தீர்த்தங்கரர் மகாவீரருக்குரிய பெயராகும்.

இவ்வாறான சமய ஒருமைப்பாட்டுக் கருத்துக்கள் சில கல்வெட்டுகள் மூலமும் வெளிப்படுகிறது.

சர்க்கார் பெரியபாளையம்

சுந்தரர் தேவாரத்தில் கொங்கில் குறும்பில் குரக்குத்தளி என வைப்புத் தலமாகப் பாடப்பட்ட பெருமைக்குரியது பெரியபாளையம். அவ்வூரில் சுக்ரீவேசுவரர் என்னும் சிவன் கோயில் உள்ளது. அக்கோயிலில் அர்த்த மண்டப வடபுறச்சுவரில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டில் சைவ-சமண சமய ஒற்றுமைக்கான தொடர் காணப்படுகிறது.[76]

> 'ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு எட்டாவது வீரசோழ வளநாட்டு முகுந்தனூருடைய குரக்குத்தளி யாளுடையநாயனார் கோயில் தானத்தாருக்கு இந் நாயனார்க்குப் பேரால் சமணசந்தியுள்ளிட்ட வேண்டும் வெஞ்சனாதிகட்கும் திருநாளுக்கும் திருப்பணிக்கும் வலிப்புறக்காநாட்டு அனாதி பாழ்பட்டுக் கிடந்த பெரும்புன்னைக்கரை இவ்வூர் திருநாமத்துக் காணியாகத் தந்தோம்'

என்பது அக்கல்வெட்டுப் பகுதியாகும்.

இக் கல்வெட்டில் சிவாலய நிலமான திருநாமத்துக்காணி பூமியிலிருந்து சமணக்கோயில் பூசைக்கும், விழாவுக்கும், திருப்பணிகட்கும் செலவாக்குக என்று கூறியிருப்பது அரிய நிகழ்ச்சியாகும். இதனால் முன்பு பெரியபாளையத்தில் சமணக் கோயில் இருந்திருக்க வேண்டும் என்பதை அறிகிறோம். இப்போது அங்குச் சமணக் கோயில் இல்லை.

மறவபாளையம்

தாராபுரம் வட்டம் சங்கரண்டாம்பாளையம் அருகே அமராவதி ஆற்றங்கரையில் உள்ள ஊர் மறவபாளையம். அங்குள்ள அப்பிரமேயசுவாமி என்னும் சிவன் கோயிலில் கருவறைப் பின்பக்கம் உள்ள கல்வெட்டில் சைவ சமண சமய ஒருமைப்பாட்டுக்குரிய தொடர் காணப்படுகிறது.

மதுரையுள்ளிட்ட சில ஊர்களில் சமணர்களும், சைவர்களும் வாதிட்டுத் தோற்ற சமணர்கள் கழுவேறினர் அல்லது கழுவேற்றப் பட்டுள்ளனர். மறவபாளையம் கல்வெட்டில் சமணருக்குத் தீங்கு செய்வது பாவம் என்ற கருத்துப்பட வெட்டப்பட்டுள்ளது.[77]

> 'மறு சென்மத்துக்கும் யேழெட்டுச் சமணரைக் கொன்ற பாவத்திலேயும், கெங்கைக் கரையிலே காரான்பசுவைக் கொன்ற பாவத்திலேயும் நிக்கக் கடவாராகவும். இப்படி சம்மதித்து தேவஸ்தானங்களுக்கும் பட்டயம் குடுத்தோம் தென்கரை நாட்டு நாட்டவரோம்'

என்பது அக்கல்வெட்டுப் பகுதியாகும்.

சேவூர்

கோவை மாவட்டம் அவிநாசி அருகில் உள்ளது சேவூர். அவ்வூருக்குச் செம்பியன்கிழானடி நல்லூர் என்ற வேறு பெயரும் உண்டு. அங்குள்ள வாலீசுவரம் என்னும் சிவாலயத்தில் கொங்கு நாட்டுத் தலைவர் ஒருவர் தல யாத்திரை சென்ற விவரம் ஆவணமாக எழுதப்பட்டுள்ளது.[78]

அவ் ஆவணத்தில் சைவ, வைணவ, சமணத் தலங்கள் வேறுபாடு இன்றி ஒன்றாகக் குறிக்கப்பட்டுள்ளது.

> 'சிவத்தலம் விட்டுணுத்தலம் குமாரசாமித்தலம் அமணீசுவரசாமி தலம் வணங்கிக் கொண்டு வருகையில்'

என்பது ஆவணத் தொடராகும்.

இவற்றின் மூலம் புறச்சமயம் என்று சைவர்களால் கருதப்படும் சமண சமயத்தின்மீது கொங்கு நாட்டு மக்கள் கொண்டிருந்த அளவற்ற அன்பை அறிகிறோம்.

சமண சமயத் தாக்கம்

கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழகமெங்கும் சமண சமயம் பரவியிருந்த காரணத்தால் தமிழ்மக்கள் வாழ்விலும் பழக்க வழக்கங்களிலும் அச்சமயக் கோட்பாடுகள் பல இரண்டறக் கலந்து விட்டன. சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள் ஆகியோரின் பக்தி இயக்கத்தின் காரணமாகச் சமண சமயத்திலிருந்து சைவ, வைணவம் புகுந்த சமணராலும் சில பழக்க வழக்கங்கள் தொடர்ந்து கைக்கொள்ளப்பட்டுக் காலப்போக்கில் பிறரால் ஏற்கப்பட்டன.

சைவ உணவு

பண்டைக்காலத் தமிழர் ஊன் உண்ணும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். முருகன், கொற்றவை முதலிய தெய்வங்களுக்கும் ஆடு, கோழி ஆகியவைகளைப் பலியிட்டு உண்டும் வந்தனர்.[79] சங்க கால இலக்கியங்களில் வேந்தரும் வேளிரும் இரவலர்கட்குச் சுவை மிகுந்த புலால் உணவு அளித்ததைப் பற்றிய பல குறிப்புகள் வருகின்றன.[80]

கொங்கு நாட்டில் குலதெய்வ வழிபாடும், குலதெய்வக் கோயில்களும் அதிகம். கிராமியக் குலதெய்வக் கோயில்களில் பலி கொடுக்கும் நிகழ்ச்சி அதிகமாக நடைபெறுகிறது. கருப்பண்ணனுக்கும், முனியப்பனுக்கும் பிற தெய்வங்கட்கும் கோழி, ஆடு, எருமைக்கிடாக்களைப் பலியிட்டு இரத்த அபிடேகம் செய்து வழிபடுவர். உற்றார் உறவினரை அழைத்து விசேடமாக வளர்த்த ஆடுகளையும், கோழிகளையும் வெட்டிப் பலியூட்டி விருந்திடுவர்.

ஆனால் இப்படிப்பட்ட கொங்கு நாட்டில் சைவ உணவுப் பழக்கமும் ஓரளவு கைக்கொள்ளப்படுகிறது. சிலர் வெள்ளி அல்லது சனிக்கிழமை புலால் உண்ணாவிரதம் கடைப்பிடிப்பர். அல்லது வாரத்தில் ஏதாவது ஒருநாளைப் 'பிடித்தல்' என்ற பெயரில் புலால் உண்ணாவிரதம் மேற்கொள்வர்.[81] கொங்கு நாட்டில் பெரும்பாலோர் புரட்டாசி மாதம் புலால் உண்ணமாட்டார்கள்.

கொங்கு வேளாளர்கள் பலரும் பல ஊர்களில் கிராமக் குல தெய்வக் கோயில்களை விட்டுப் 'பலி ஏற்காத' சிவபெருமான் கோயில்களைக் குலதெய்வக் கோயிலாகக் கைக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.[82]

பலி கொடுத்துப் புலால் உண்ணும் வழக்கத்தைக் கொண்ட கொங்கு மக்கள் கிராமியக் கோயில்களில் உயிர்ப்பலி இல்லாத 'பால் பொங்கல்' வைக்கும் பழக்கத்தைக் கைக்கொண்டனர். பல வீடுகளில் புலால் உணவு சமைக்கும் பாத்திரங்களை வீட்டுக்கு வெளியே தனியாக வைத்திருப்பார்கள். சைவ உணவு சமைக்கும் பாத்திரங்களுடன் அவற்றைக் கலக்க மாட்டார்கள்.[83]

இவ்வாறு படிப்படியாகக் கொங்கு நாட்டில் 'சைவம்' பரவியதற்குச் சமண சமயத்தின் தாக்கமே காரணமாக இருக்கலாம். பௌத்தர்கள் ஊன் உண்ணாமையை அதிகமாக வற்புறுத்தவில்லை. சமண சமயம் மட்டுமே கொல்லாமையை முதன்மைக் கொள்கையாகக் கொண்டு புலால் உண்டு வருவதைத் தடுத்து வந்தது. காய்கறி உணவாகிய சைவ உணவுக்கு 'ஆருகத உணவு' என்ற பெயர் வழங்கியிருக்கலாம். இலங்கைத் தமிழரிடையே சைவ உணவுக்கு 'ஆதர உணவு' என்று பெயர். அத்தொடர் ஆருகத உணவின் திரிபாக இருக்கலாம்.[84]

இரவில் நெருப்பு வழங்காமை

கொங்கு நாட்டில் கிராமப்புறங்களில் ஒரு வீட்டிலிருந்து நெருப்பு வாங்கி அடுத்த வீட்டார் அந்நெருப்பைச் சமையல் காரியங்களுக்குப் பயன்படுத்துவர். பகல் நேரத்தில் தாராளமாகப் பிறருக்கு நெருப்பை வழங்கும் கொங்கு மக்கள் இரவு நேரத்தில் மட்டும் பிறருக்கு நெருப்பு வழங்குவதில்லை.

இதற்குச் சமணருடைய 'இரவு உண்ணாமை' என்னும் பழக்கமே காரணமாக இருக்கலாம். இரவு சமைக்கக் கூடாது என்பதற்கு அறிகுறியே பிறருக்கு இரவு நேரத்தில் நெருப்பு வழங்காமைக்குக் காரணமாகலாம்.[85]

சம்மணம்

கால்களில் ஒன்றன்மீது ஒன்றைப் போட்டுக்கொண்ட யோகநிலையில் அமைந்திருப்பதைச் 'சம்மணம்' அல்லது 'சம்மணங்கால்' என்பர்.

சமணத் தீர்த்தங்கரர்களில் பெரும்பாலோரின் உருவச்சிலைகள் மேற்கூறிய அமைப்பிலேயே தியானநிலையில் உள்ளன. எனவே சமண இறை உருவங்களின் அமைப்பில் அமர்வதைச் 'சமணங்கால்' என்று

அழைத்த பெயரே இடை மெய்யொலி மிக்குச் சம்மணங்கால் என்றாகியிருக்க வேண்டும். எனவே சமணங்கால் என்ற பெயர் சமணத் தாக்கத்தால் உருவாகியிருக்கவேண்டும்.[86]

அம்மணம்

திகம்பர சமண சமயமே தமிழ்நாட்டில் பரவியிருந்தது. திகம்பர சமணர் தீர்த்தங்கரர்களின் உருவங்கள் ஆடையின்றி நிர்வாணமாக - அம்மணமாக இருக்கும். உயர்ந்த நிலையடைந்த திகம்பர சமண சமயத் துறவியர் சிலரும் நிர்வாணமாக இருந்தனர்.

எனவே நிர்வாணமாக எவர் இருந்தாலும் அவர்கள் அமணர் போல் இருப்பதால் அந்நிலை அமணம் > அம்மணம் எனப்பட்டது. மொழியியல் வல்லார் சகரமும் அகரமும் ஒன்றுக்கொன்று போலியாக வரும் என்பர்.[87] எனவே சமணம்> அமணம் ஆகிப் பின்அம்மணம் என்றாகியிருக்கலாம்.

பள்ளிக்கூடம்

சமணர்கள் நால்வகைத் தானத்தில் சாத்திர தானம் என்ற கல்வி அளிக்கும் தானத்தைச் சிறப்பாகச் செய்தனர். தங்களுடைய சமணப் பள்ளிகளின் ஒருபகுதியில் கூடம் அமைத்துச் சிறார்கட்கும், சீடர்களுக்கும் கல்வி போதித்து வந்தனர். அவை பள்ளிக்கூடங்கள் என அழைக்கப்பட்டிருக்க வேண்டும். பின்னாளில் எவர், எங்குக் கல்விச் சாலை அமைத்தாலும் அவைகளைப் 'பள்ளிக்கூடங்கள்'. என அழைக்கலாயினர்.[88]

சமணர் பஞ்சபரமேட்டிகள் என்னும் ஐம்பெருங்குரவர் வணக்கத்தில் சித்தர் வணக்கத்தைச் சிறப்பாகக் கொள்வர். பண்டைக் காலத்தில் சிறுவர், சிறுவர்கட்குக் கல்வி கற்பிக்கத் தொடங்கும்போது 'அரி நமோத்து சிந்தம்' என்று எழுதிக் கற்பிக்கத் தொடங்குவர். சிந்தம் என்பது சித்தம் என்பதன் திரிபாக இருக்கலாம்.

அமணீசுவரன்

கொங்கு நாட்டில் சில சமணக் கோயில்கள் சைவக் கோயிலாக மாற்றப்பட்டுள்ளன. அவை அமணீசுரவர், அமணலிங்கேசுவரர் கோயில்கள் என அழைக்கப்படுகின்றன. சிவாலயமாக மாற்றப்பட்ட

பின்னரும் அவை பழைய தொடர்பால் அமண-ஈசுவரன் கோயில்கள் என்றே அழைக்கப்படுகின்றன.

கொங்கு நாட்டு மக்கள் இன்னும் எஞ்சியுள்ள சமணப் பள்ளிகளைப் பிற சமயக் கோயிலாகவே கருதுவது இல்லை. அவைகளையும் 'அமணீசுவரன்' கோயில்கள் என்றே அழைக்கின்றனர்.[89] அம்மணமாக உள்ள ஈசுவரன் (சிவபெருமான்) கோயில் என்பது அவர்கள் கருத்து.

பெண்பாற் பெயர்கள்

கொங்கு நாட்டில் பெண்களுக்கு அரசாத்தாள், பாப்பாயி, அருக்காணி என்ற பெயர்கள் வைக்கப்படுகின்றன. இயக்கிகளை அரசாத்தாள் என மக்கள் அழைக்கின்றனர். பார்சுவநாதரின் இயக்கி பத்மாவதி பாம்போடு தொடர்புடைய பெயர். பாம்பாயி என்ற பெயரே பாப்பாயி என மாறியிருக்கலாம். அருகக்கன்னி என்ற தொடரே அருக்காணி என மாறியிருக்கலாம்.[90]

நாக வழிபாடு

பார்சுவநாதருக்குரிய சின்னம் பாம்பு. பார்சுவநாதர் இயக்கன் தரணேந்திரன் ஆயிரம் முடியுள்ள அரவின் தலையைக் கொண்டவன். பார்சுவநாதர் தலைக்குமேல் ஐந்து அல்லது ஏழு தலையுள்ள பாம்பு குடை பிடித்திருப்பதைப் போலக் காட்டப்படும். பவணந்தி என்ற பெயர் பவணம் - நந்தி எனப் பிரிக்கக்கூடிய பெயர்.[91] பவணம் என்றால் பாம்பு என்பது பொருள். நாகநந்தி என்று சில சமண முனிவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.[92]

எனவே நாக வழிபாடு சமண சமயம் அளித்த கொடையாக இருக்கலாம். கொங்கு நாட்டுச் சமணப் பள்ளிகளில் நாகர் சிற்பங்கள் இன்றும் உள்ளன.

சாத்தன் வழிபாடு

சமணப் பள்ளிகளில் சீதள தீர்த்தங்கரரின் இயக்கன் 'பிரம இயக்கன்' என்ற பெயரில் எழுந்தருளச் செய்து வணங்கப்படுகின்றான். சாத்தன், சாத்தனார் என்றும் பிரமஇயக்கன் அழைக்கப்படுகின்றான். சாத்தனார் வழிபாடும் சமண சமயத்திலிருந்து சைவ சமயம் ஏற்றுக்

கொண்டது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[93] ஐயனார், அரிகரபுத்திரன் என்றும் சாத்தன் அழைக்கப்படுவார். சாத்தன் வழிபாடு பௌத்த சமயத்திலும் உண்டு. பௌத்த ஐயனாருக்கு வாகனம் குதிரை. சமண ஐயனாருக்கு வாகனம் யானை. கொல்லிமலையில் சில சாத்தனார் உருவங்கள் யானை வாகனத்துடன் காணப்படுகின்றன.

சில ஒப்புமைகள்

தீபாவளிப் பண்டிகையை மகாவீரரின் பரிநிர்வாண நாள் என்றும், சிவராத்திரியை ரிசபதேவரின் பரிநிர்வாண நாள் என்றும் சமணர் கொண்டாடுவர். ரிசபதேவருக்கு இயக்கன் கோமுக இயக்கன் (நந்தி). சமணருள் நந்தி கணம் என்பது ஒரு பெரும் பிரிவாகும். சமணரின் சண்முக இயக்கனுக்கு ஆறுமுகங்கள், பன்னிரு கைகள். முருகனோடு ஒப்பிடத்தக்க இயக்கர். பிரம்மாவைப் போல் நான்கு முகம் கொண்ட இயக்கரும், மும்மூர்த்தி போல் மூன்று முகம் கொண்ட இயக்கர்களும் உள்ளனர். பெரியபுராணத்தில்[72] அடியாருள் தொகையடியார் ஒன்பதின்மரை நீக்கி அறுபத்து மூவர் தனியடியார் என்று கொள்வதைப் போலச் சமணரின் ஸ்ரீ புராணத்தில் உயர்வும் ஒப்பும் அற்ற அறுபத்துமூவர் வரலாறு கூறப்படுகின்றன.[94] அவர்கள் 'திரிசஷ்டி சலகா புருஷர்கள்' எனப்படுவர். சமண சமயத்தைப் பார்த்தே சைவர் இவ்வழக்கத்தைப் பின்பற்றியதாக மயிலை சீனி வேங்கடசாமி கருதுகிறார்.[95]

வடக்கிருத்தல்

தமிழ் இலக்கியத்துள் 'வடக்கிருத்தல்' பற்றிப் பரவலான குறிப்புகள் வருகின்றன.[96] வடக்கிருத்தல் என்னும் வழக்கம் சமணரின் சல்லேகனை விரதத்திலிருந்து வந்திருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.[97] சமணத் தீர்த்தங்கரர்கள் அனைவரும் வடதிசையில் நிர்வாணகதி அடைந்ததாலும், சமணர்கள் வடதிசையைப் புண்ணியத் திசையாகக் கருதுவதாலும் தமிழில் வடக்கிருத்தல் என்ற பெயர் வந்தது என்பர்.[98]

திருவடி தொழுதல்

சிரவணபௌகொளா உள்ளிட்ட பல சமணத் தலங்களில் சமணச் சான்றோர்கள், முனிவர்களின் திருவடி உருவங்களைப் பொறித்துத் தெய்வமாக வணங்கி வருகின்றனர். பத்திரபாகு, சந்திரகுப்தர் திருவடிகள் அங்குப் பொறிக்கப்பட்டுள்ளன. இன்று சைவத் தலங்களிலும் மலைகளிலும் திருவடிகளைச் சிற்பமாகப் பொறித்து வணங்கும் வழக்கம்

பல இடங்களில் பின்பற்றப்படுகிறது. இத்திருவடி வணக்கம் சமண சமயம் அளித்ததோர் கொடையாக இருக்கலாம்.

பேரூர்ச் சமணச் செப்பேடு

கொங்கு நாட்டில் பல செப்பேடுகள் கிடைத்திருக்கின்றன. அவற்றுள் காலத்தால் முற்பட்டது பேரூர்ச் செப்பேடு. தொன்மையான இச் செப்பேடு கொங்கு நாட்டில் கிடைத்த முதல் செப்பேடாகும்.[99]

இச் செப்பேடு ஐந்து ஏடுகளையுடையது. முதல் ஏட்டின் முதல் பக்கமும், ஐந்தாம் ஏட்டின் கடைசிப் பக்கமும் எழுத்துக்கள் பொறிக்கப்பெறவில்லை. பிற்காலத் தென்னகப் பிராமி எழுத்துக்களில் வடமொழியில் இச்செப்பேடு வெட்டப்பட்டுள்ளது. மேலைக் கங்க வம்சத்து மன்னன் இரண்டாம் மாதவ மகாதிராசா என்னும் சிம்மவர்ம மகாதிராசா[100] (கி.பி. 436-458) 18ஆம் ஆட்சியாண்டில் அளித்த செப்பேடாகும்.

பேரூரில் உள்ள சமணக் கோயில் ஒன்றிற்கு மேலைக் கங்க மன்னனான சிம்மவர்ம மகாதிராசா தன் பதினெட்டாம் ஆட்சியாண்டில் 'பாஞ்சடிக க்ஷேத்திரம்' என்னும் இடத்திலுள்ள நன்செய் நிலத்தையும் அதனைச் சார்ந்த பல நிலங்களையும் கொடையாகக் கொடுத்தார். அவர் கொடுத்த நிலம் 4 கண்டகம் விதை விதைக்கக் கூடிய அளவுள்ளதாகும். அந்நிலம் பேரூர் நகரத்திலுள்ள 'ரக்த தடாகம்' என்னும் ஏரியிலிருந்து நீர் பாயக்கூடிய நிலமாகும்.

அதே சமணப்பள்ளிக்குச் சிம்மவர்ம மகாதிராசாவின் மனைவி நந்தவ்வை[101] என்பவள் 500 கர்ஷ பணம்[102] கொடுத்து காகராலாதிபதி என்பாரிடம் உள்ள தோட்டத்தை வாங்கித் தேவபோகமாக அச் சமணப் பள்ளிக்குக் கொடுத்தாள். நந்தவ்வை சமண சாத்திரம் தெரிந்தவள் என்று கூறப்படுகிறது. மூல சங்கத்தைச் சேர்ந்த அக்கோயிலை நந்தவ்வை கட்டிய விவரமும் அச் செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.

சமணக் கல்வெட்டுகள்

பழங்காலத்துச் சமயம், சமூகம் தொடர்பான செய்திகளைப் பிற்காலத்தவர் அறிந்து கொள்ளக் கிடைக்கும் ஆவணங்களில் கல்வெட்டுகள் மிகவும் இன்றியமையாதனவாக விளங்குகின்றன.

மொழி வாரியாக

கொங்கு நாட்டில் சமண சமயம் தொடர்பாக 54 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவைகளை மொழி வாரியாகக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

தமிழ்மொழிக் கல்வெட்டு	52
வடமொழிக் கல்வெட்டு	1
கன்னடக் கல்வெட்டு	1

எழுத்து வாரியாக

தமிழ்க் கல்வெட்டுக்களை எழுத்து வாரியாகக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

தமிழி[103] எழுத்தக் கல்வெட்டுகள்	18
வட்டெழுத்துக் கல்வெட்டுகள் [104]	17
தமிழ் எழுத்துக் கல்வெட்டுகள்	17
நாகரி எழுத்துக் கல்வெட்டு	1
கன்னட எழுத்துக் கல்வெட்டு	1

தமிழ் எழுத்துக் கல்வெட்டுகள் பல கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டுள்ளன.

கிடைக்கும் இடங்கள்

இக் கல்வெட்டுகள் மலைக்குகைகளிலும், பாறைகளிலும், கோயில் சுவர், தூண், நிலைகால், கிணறு, பலிபீடம் ஆகிய இடங்களிலும், தனிக் கற்களிலும் கிடைக்கின்றன.

அரசர் வாரியாக

இக் கல்வெட்டுகளை அரச மரபு வாரியாகக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

சேரர்	3
சோழர்	3
பாண்டியர்	3
போசளர்	2

விசயநகர அரசர்	2
நாயக்கர் (கொங்கு)	2
கங்கர்	1

பிற கல்வெட்டுகளில் அரசர் பெயரோ, மரபோ எதுவும் எழுதப்படவில்லை.

கல்வெட்டுகள் கூறுவன

மலைக்குகைகளில் தவம் செய்யும் முனிவர்கட்கு அதிட்டானம், பாளி, கல் எனப்படும் இருப்பிடங்கள் அமைத்துக் கொடுத்தவர்களின் பெயர்களைச் சில கல்வெட்டுகள் குறிக்கின்றன. சில கல்வெட்டுகள் அங்குத் தங்கித் தவம் செய்து கொண்டு சீடர்கட்கும், பொது மக்களுக்கும் அறவுரை பகர்ந்த முனிவர்களின் பெயர்களைக் குறிக்கின்றன. அங்கு இசை எழுத்துக்களைப் பொறித்ததையும், சுனை அமைத்ததையும் இரு கல்வெட்டுகள் குறிக்கின்றன. சேர அரச குடும்பத்தில் இளவரசர் நியமிக்கப்பட்டபோது சமண சமய முனிவருக்குக் கொடைகள் அளிக்கப்பட்டுள்ளதை ஒரு கல்வெட்டு மூலம் அறிகின்றோம்.

சமணப் பள்ளிகளை அமைத்தல், புதுப்பித்தல், தீர்த்தங்கரர், முனிவர்கள், இயக்கர்களின் திருவுருவங்களை எழுந்தருளச் செய்தல், அவர்களுக்குக் கொடையாக ஊர்களையும் நிலங்களையும் அளித்தல், பொன்னும் பொருளும் அளித்துத் திருவமுது படைத்தல், விழாவெடுத்தல் போன்றவைகளைச் சில கல்வெட்டுகள் குறிக்கின்றன. பள்ளிகளில் திருவிளக்கு அமைத்ததையும் அவ்விளக்குகள் தொடர்ந்து எரிந்து ஒளியூட்டப் பொன்னும் எண்ணெயும் கொடுக்கப் பெற்றதையும் சில கல்வெட்டுகள் குறிக்கின்றன.

சல்லேகனை விரதமிருந்து உயிர் துறந்த ஆண் பெண் துறவிகட்கு நினைவுக் கற்கள் எடுக்கப்பட்டுள்ளன. பெருங்கதை மொழி பெயர்க்கப் பட்டதை ஒரு கல்வெட்டுக் குறிக்கிறது. சைவர்கட்கும் – சமணர்கட்கும் நிலக் கொடை தொடர்பாக நடைபெற்ற வழக்கொன்றினை ஒரு கல்வெட்டு சுவைபட விவரிக்கிறது.

இந்தக் கொடைகளையெல்லாம் அரசர்களும், அருளாளர்களும், முனிவர்களும், வணிகர்களும், பெண்களும், பொதுமக்களும் அளித்துள்ளனர் என்பதையும் அறிகிறோம். கங்கநாடு, பாண்டியநாடு, சோழநாடு, தொண்டைநாடு ஆகிய பகுதிகளிலிருந்து சமண அடியார்

பலர் கொங்குநாட்டுச் சமணக் கோயில்கட்கு வழிபட வந்துள்ளதையும், கொடைகள் பலவற்றை அளித்ததையும் சில கல்வெட்டுகள் கூறுகின்றன.

கல்வெட்டில் அரசர் அரசியர் பெயர்கள்

அரசர் பெயர்கள்

அரகரராய உடையார், இரவிகோதை, இளங்கடுங்கோ, எத்துலப்ப நாயக்கர், களப்பக்கோன், குலோத்துங்க சோழதேவர், கோ ஆதன் செல்லிரும்பொறை, கோநாட்டான் விக்கிரமசோழன், சிங்களாந்தகன், சிந்தரையன், சோமப்பத் தெண்ணாயக்கர், சோழன் சக்கிரவர்த்தி, சாமுண்டராயன், திரிபுவன சக்கரவர்த்தி, தெண்ணாயக்கர், பெருங் கடுங்கோ, பெருநற்கிள்ளி, வரகுணன், வீரபாண்டிய தேவர், வீரவல்லாள தேவர் முதலிய அரசர்கள் பெயர்கள் கொங்கு நாட்டுச் சமணக் கல்வெட்டுகளில் கிடைக்கின்றன. இவர்களில் சிலர் அரசர்கள் சார்பில் சில பகுதிகளை ஆட்சி புரிந்த குறுநிலத் தலைவர்களாக இருக்கலாம்.

அரசியர் பெயர்கள்

ஆண்டியம்மன், வானவன் மாதேவி முதலிய அரசியர்களும் சமண சமயத்திற்குக் கொடைகள் வழங்கியதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. சிந்தரையர் மகளார் நம்பிராட்டியார் என ஒருவர் குறிக்கப் பெறுகிறார்.

சமணச் சான்றோர் பெயர்கள்

கொங்கு நாட்டுச் சமணக் கல்வெட்டுகளில் அச்சணந்தி, அந்த வீர்ய தேவர், இந்திரசேனன், கமலநாத சிந்தாமணி தேவர், குணவீரக் குரவடிகள், சாந்திவீரக் குரவர், செங்காயபன், நம்பி நேமிநாதன், மல்லி சேனப் பெரியார், முனிவிலிடு முப்பிரான் போன்ற சமண சமயச் சான்றோர் பலர் பெயர்கள் காணப்படுகின்றன.

ஆடவர், பெண்டிர் பெயர்கள்

ஆடவர்

அத்தி, அறத்துளான் தேவன், கணித மாணிக்கச்செட்டி, காடன், கீரன் ஓரி, குடியன் மூவேந்தன், கொற்றந்தை ஈழவன், கொற்றன், சிலவர் பிள்ளை, திருவானைக்காவுடையான் சொக்கன், நீலஞ்செல்லன், நீலன், பண்டிதப் பெருமாள் கெங்கை ஆழ்வான், பிச்சப் பெருமாள், பிடந்தை,

பிட்டன், பெருங்கீரன், மணியன் வண்ணக்கன் தேவன் சாத்தன், வேநி ஆதன் முதலிய ஆடவர் பெயர்கள் சமண சமயக் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றன.

பெண்டிர்

அவ்வணந்திக் குரத்திகள், ஆரம்விச்சி வரதபாணி, கவிர்ச்சி, காவஞ்சாத்தி, செல்லப்பணத்தி, பட்டினிக் குரத்தியார், புளிஅப்பை, வடிக்க மணப்படாரி, வட்டம் வடுகி முதலியோர் சமண சமயம் சார்ந்த பெண்களாக அறியப்படுகின்றனர். இவர்களில் சிலர் சமண சமயப் பெண்பால் துறவியர் ஆவர்.

ஊர், நாட்டுப் பெயர்கள்

ஊர்ப் பெயர்கள்

அவிநாசி, ஆலத்தூர், கருஊர், கல்லூர், களந்தை, குவணச்சேரி, கொழுமம், செங்கற்பள்ளி, திருப்புக்கொளியூர், திருவரம்பம், தெண்ணாயக்கர் கோட்டை, நல்லிஊர், நாலூர்ப்பற்று, நால்கூர், பெருமடை, பெரும்பத்திஊர், யாற்றூர், வடபள்ளி, விசயமங்கலம் முதலிய ஊர்ப்பெயர்கள் சமணக் கல்வெட்டுகளில் கிடைக்கின்றன. இவை கொங்கு நாட்டு ஊர்கள். சோழ நாட்டுத் திருவானைக்கா, தொண்டை நாட்டு அறிகணிநல்லூர் போன்ற ஊர்களும் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றன.

நாட்டுப் பெயர்கள்

ஆறுநாடு, இருங்கோளநாடு, குறுப்புநாடு, கோட்டைசூழ்நாடு, புந்நாடு, பெரியநாடு, பேரூர்நாடு, வடகரைநாடு, வடபரிசாரநாடு, வீரசோழபுரநாடு, வெங்கரைநாடு முதலிய கொங்கு நாட்டுப் பகுதிகளில் சமண சமயம் பரவியிருந்த செய்தி கல்வெட்டுகள் மூலம் அறியப்பெறுகிறது. ஒரு கல்வெட்டில் பாண்டிய நாட்டுப் பகுதியான வெண்புநாடு குறிக்கப்படுகிறது.

மக்கென்சி ஆவணங்களில் சமணம்

தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும், வரலாற்றுச் செய்திகளையும் படி எடுத்துத் தொகுக்க முற்பட்ட முதல் ஐரோப்பிய அறிஞர் லெப்டினண்ட் கர்னல் காலின் மக்கென்சி ஆவார்.[105] *(Lieut. colonel Colin Mackanzie, C.B. 1753-1821)*.

அவர் தொகுத்த தமிழ் ஆவணங்களின் பெரும்பகுதி சென்னைப் பல்கலைக் கழக நூலக வளாகத்தில் உள்ள அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ளன.

மக்கென்சி ஆவணப் பாகுபாடு

மக்கென்சி ஆவணங்களில் 1379 தமிழ் ஆவணங்கள் பட்டியலிடப் பட்டுள்ளன. அவற்றுள் 75 ஆவணங்கள் சமண சமயம் சார்ந்தவை. பெரும்பாலும் அவை தொண்டை நாட்டுக்குரியவை. கொங்கு நாட்டுச் சமண ஆவணங்கள் மிகச்சில. பிற பகுதிச் சமண ஆவணங்கள் பெரும்பாலும் இல்லை எனலாம். சில ஆவணங்கள் சமண சமயத்திற்கு எதிரான நடவடிக்கைகளைக் கூறுபவை.

சமண சமயம் தொடர்பான மக்கென்சி ஆவணங்களைப் பின்வருமாறு பாகுபாடு செய்யலாம்.

- சமண ஆவங்கள்
  - கொங்குநாடு
    - சமண சமய ஆதரவானவை[106]
    - சமணசமண எதிர்ப்பானை[107]
  - தொண்டைநாடு
    - சமண சமய ஆதரவானவை
      - சமண சமயம் பற்றியவை
        - சமணத் தத்துவம் தொடர்பானவை[111]
        - சமண சமய ஆச் சாரியார் தொடர் பானவை[112]
        - சமண சமய இலக்கியம், புலவர்கள் தொடர் பானவை[113]
      - தொண்டைநாட்டுச் சமணப்பள்ளிகள் பற்றியவை[109]
      - மேல்சித்தாமூர் பற்றியவை[110]
    - சமண சமய எதிர்ப்பானவை[108]

கொங்குதேச ராசாக்கள்

கொங்குநாட்டில் ஆட்சிபரிந்த பிறநாட்டு அரசர்களின் வரலாறு கூறும் நூல் கொங்கதேச ராசாக்கள். இரட்டர், கங்கர், சோழர், போசளர், விசயநகர அரசர், மதுரை நாயக்கர், மைசூர் உடையார் ஆகியோரின் வரலாறு கூறுவது. இந்நூல் மிகச் சிறந்த வரலாற்று ஆதாரங்களைத் தருகிறது. மேனாட்டறிஞர்கள் பலர் இந்நூலைப் பாராட்டியுள்ளனர்.[114]

இந்நூல் பனை ஓலையில் இரண்டும், காகிதச் சுவடியாக இரண்டும் ஆக நான்கு படிகள் சென்னை தமிழக அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ளன.[115]

இரட்டர், கங்கர், போசளர் ஆட்சிக்காலத்தில் கொங்கு நாட்டுச் சமணம் பெற்ற பல சிறப்புக்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இரட்டர்களில் கோவிந்தராயன், சதுர்ப்புச கன்னர தேவச் சக்கரவர்த்தி, திருவிக்கிரமதேவ சக்கரவர்த்தி ஆகியோரும், கங்கர்களில் இராசமல்ல தேவராயனும், போசளரின் வல்லாளராயன், பெட்டத விட்ணுவர்த் தனராயன் ஆகியோரும் சமண சமயத்திற்குக் கொங்கு நாட்டில் அளித்த ஆதரவு விரிவாகக் கூறப்படுகிறது. அவர்களின் அமைச்சர்களும், தளபதிகளும் சமண சமயத்திற்குப் பெருங்கொடைகள் வழங்கியுள்ளனர்.

செயினிய சுவாமி, செயினிய தேவர் எனக் தீர்த்தங்கரர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். கொங்கணிவர்ம பசதி, குகாலயம் போன்ற சமணப் பள்ளிகள் குறிக்கப்பட்டுள்ளன. சமணர்கள் செயினியர் என அழைக்கப்பட்டனர். சமண சமயக் கருத்துக்கள் சாத்திரம், வேதம், ஞானம், சித்தாந்தம் எனப் புகழுடன் சுட்டிக் கூறப்பட்டுள்ளன.

அரசர்களுக்கும், மக்களுக்கும் சமண ஆச்சாரியார்கள் சமய உபதேசம் செய்துள்ளனர். அகோரசோம பகவந்தன், அரிஷ்டணன், கொங்கண குளீசுர பகவந்தன், சசிபூஷண சுசசந்திர சித்தாந்த தேவர், தெசசோம பகவந்தன், நாகநந்தி, பஞ்சநந்தி, பிரஞாபனாசாரி போன்ற சமண சமய ஆச்சாரியர்கள் உயர்ந்த நிலையில் இருந்துள்ளனர்.

சமணப் பள்ளிகளுக்குக் கொடை அளிக்கப்பட்ட நிலங்கள் ஆறு, குளம், ஏரிகளின் அருகே நன்செய் நிலங்களாக அளிக்கப்பட்டன. விதை நெல்லின் அளவாக நிலம் குறிக்கப்பட்டுள்ளது. கண்டகம், சலகை போன்ற அளவு முறைகள் கூறப்பட்டுள்ளன.

இரட்டர்களில் திரிவிக்கிரமதேவச் சக்கரவர்த்தி சமணத்திலிருந்து சைவ சமயத்துக்கும், பெட்டத விட்ணுவர்த்தனன் சமண சமயத்திலிருந்து வைணவ சமயத்திற்கும் மாறிய விவரங்கள் கூறப்பட்டுள்ளன. விட்ணு வர்த்தனன் மனைவி வைணவ சமயம் சார்ந்தவள். அவள் இராமானுசர் மூலம் தன் கணவனைச் சமணத்திலிருந்து வைணவ சமயத்தைப் பின்பற்றச் செய்தாள். இவ்வரலாறு கூன்பாண்டியனைச் சமணத்திலிருந்து சைவனாக மாற்றக் கூன்பாண்டியன் மனைவி மங்கையர்க்கரசி திருஞானசம்பந்தர் உதவியை நாடியதை நினைப்பூட்டுகிறது. வைணவ சமயத்திற்கு மதம் மாறிய பின்னரும் இவன் அனுமதியுடன் இவனது உயர் அதிகாரிகள் சமணக் கோயிலுக்குக் கொடை அளித்துள்ளனர்.

மேட்டுப்புத்தூரு செயினு தேவத்தானக் கைபீது

விசயமங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் தானிகர் கமலய்யர் மக்கென்சிக்கு அக்கோயில் பற்றி எழுதி அளித்த விவரங்களை இவ் ஆவணம் தெரிவிக்கிறது.

இக்கோயில் சந்திரநாதர் ஆதீசுவரர் என்றும் அழைக்கப்பட்ட விவரம் முதலில் கூறப்படுகிறது.[116] மதுரையில் ஆட்சிபுரிந்த சாமுண்டராயன் கி.பி. 678இல் திருப்பணி செய்த விவரம் பின்னர்க் கூறப்படுகிறது. [117]

முன்பு இக்கோயில் சத்தியமங்கலம் தாலூக்காவில் இருந்தபோது செங்கப்பள்ளியில் கொடை அளித்த விவரம் கூறி மைசூர் மன்னர் காலத்தில் சப்தியான விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திப்புசுல்தான், கிழக்கிந்தியக் கம்பெனியார் நாளில் செங்கப் பள்ளியில் 200 ஏக்கரும், விசயாபுரியில் 120 ஏக்கரும் மானியமாக இருந்த விவரம் இதன் மூலம் தெரிகிறது.

அடுத்துக் கோயிலின் நீளம் அகலம் (228' X 159') கூறப்பட்டு கருவறை (7½' X 7½'), அர்த்தமண்டபம் (8' X 8'), மகாமண்டபம் (14' X 14'), வாத்திய மண்டபம் (18' X 24'), நர்த்தன மண்டபம் (16' X 16') ஆகியவற்றின் அளவுகளும் கூறப்பட்டுள்ளன.

நர்த்தன மண்டபத்தின் நான்குபுறங்களிலும் உள்ள ஸ்ரீபுராணச் சிற்பங்கள் அடுத்து விளக்கப்படுகின்றன.

இந்தக் கைபீதின் இறுதியில் விசயமங்கலத்தின் அருகேயுள்ள அரசண்ணாமலையில் வீற்றிருந்தருள்புரியும் 22 ஆம் தீர்த்தங்கரர் நேமிநாதரின் இயக்கி கூசுமாண்டினி பற்றிய 14 சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தப் பாடல் ஒன்று உள்ளது.

அப்பாடலில் கூசுமாண்டினி (நேமிநாதரின் இயக்கி) நேமிநாதர் அடியிணையை மவுலிமுடி வைத்த தாய் என்றும், அதிசயாமலை அம்மன் என்றும் அழைக்கப்பெறுகிறார்.

திங்களூர்க் கல்வெட்டுகள்[118]

திங்களூரிலுள்ள ஒன்பதாவது தீர்த்தங்கரர் புட்பதந்த தீர்த்தங்கரர் கோயிலில் உள்ள மூன்று கல்வெட்டுகள் மக்கென்சி ஆவணத்தில் இடம் பெற்றுள்ளன.

மடைப்பள்ளி நிலையில் கொங்குச் சோழ மன்னன் கோநாட்டான் விக்கிரமசோழ தேவனின் நாற்பதாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு உள்ளது. அறத்துளான் முத்தன் பொன்னனான கணித மாணிக்கச் செட்டி[119] திங்களூரில் உள்ள சமணக் கோயில் முகமண்டபம் கட்டி வைத்து அம் மண்டபத்திற்குச் சிங்களாந்தகன் என்று பெயர் வைத்த விவரம் கூறப்பட்டுள்ளது.

பலிபீடத்திலுள்ள கல்வெட்டு அக்கோயிலில் வேதம் பாடுகின்ற பிச்சப்பெருமாள் மகன் முனிவிலிடு முப்பிரான் என்பவன் அப்பலிபீடத்தைக் கட்டிய செய்தியைக் கூறுகிறது.

அக்கோயிலில் உள்ள மற்றொரு கல்வெட்டு போசள மன்னன் வீர வல்லாள தேவன் காலத்தது. பூமேந்திரருக்கு (புட்பதந்த தீர்த்தங்கரர்) முக்காலப் பூசை நடைபெற்றதைக் குறிக்கிறது.[120]

விசயமங்கலம் கல்வெட்டுகள்

மக்கென்சியின் ஆவணங்களில் விசயமங்கலம் சந்திரப்பிர தீர்த்தங்கரர் கோயில் கல்வெட்டுகள் நான்கு உள்ளன. அவை தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் முதல் தொகுதியில் அச்சாகியுள்ளன.[121]

திருக்கார்த்திகையில் வேளிர், தேவர், ஆச்சாரியார், தோழன்மார் ஆகியவர்களை எழுந்தருள்வித்துக் கொடைகள் அளித்தமை பற்றியும்,

கொங்குச் சோழ மன்னன் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 1163) நிலம் அளித்தமை பற்றியும், கி.பி. 1412ஆம் ஆண்டு அரிகரராய உடையார் என்னும் விசயநகர மன்னர் காலத்தில் கோட்டை சூழ்ந்த ஆறு நாட்டார்கள் குறுப்பு நாட்டுச் செங்கற்பள்ளியில் நிலம் அளித்தமை பற்றியும் அக்கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன.

வெஞ்கமாங்கூடலூர் தேவஸ்தானக் கைபீது

வெஞ்சமாங்கூடலூர் என்பது கரூர் மாவட்டம் கரூர் வட்டத்தில் உள்ளதோர் பழமையானதோர் ஊர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பாடல் பெற்ற தலம். கொங்கேழு சிவத்தலங்களுள் இதுவுமொன்று.

மதுரையில் திருஞானசம்பந்தருடன் சமயவாதம், அனல்வாதம், புனல்வாதம் நடத்தித் தோல்வியுற்ற எண்ணாயிரம் சமணர்கள் கழுவேற்றப் படும்பொழுது மூன்று சமணர்கள் தப்பிக் கொங்கு நாட்டு வெஞ்சமாங் கூடலூர்க்கு வந்த விவரம் இதில் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறு வந்தவர்களில் வஞ்சன் என்பான் வெஞ்சமாங் கூடலூரில் ஆட்சி செய்தான். அவ்வூர்க்குப் பெயரே அவனால்தான் ஏற்பட்டது. வெஞ்சமாங் கூடலூரில் ஆட்சிபுரிந்த வஞ்சன் சைவர்களுக்குத் துன்பம் விளைவித்தான். அதனால் வஞ்சன்மீது சோழன் படையெடுத்து அவனை அழித்தான். இவ்விவரங்களைக் கூறுவதே மக்கென்சியின் 'வெஞ்சமாங் கூடலூர் தேவத்தானக் கைபீது' என்னும் ஆவணம்.[122]

> 'வஞ்சமா கூடலூர் என்னப்பட்ட ஊருக்குத் தாத்பரியம் என்னவென்றால் முற்காலத்திலே மதுரையிலே யெண்ணா யிரம் சமணரை யழி(ளி)க்கிறபோது மூணுபேர் சமணர்கள் தப்பி ஓடி வந்தார்கள். மூணு பேருக்குப் பேரு வஞ்சனென்று ஒருத்தன். குறோதனென்று ஒருத்தன். நீலனென்று ஒருத்தன். ஆக மூணுபேர் தப்பி ஓடி வந்தார்கள். . . எடச்சி விபூதி பூசிக் கொண்டு வந்தாள் எ(யெ)ன்று வஞ்சராசா அவளையும் பிடிச்சு மூக்கையும் முலையையும் அறுத்துப் போட்டான்'

என்பது அந்த ஆவணத்தில் ஒரு பகுதியாகும்.

கொங்கு நாட்டுக்குப் பாண்டிய நாட்டுச் சமணர்கள் வந்ததையும், ஆதிக்கம் செலுத்தியதையும் இந்த ஆவணம் குறிப்பிடுகிறது.

சல்லிப்பட்டி பாளய எரமநாயக்கன் வமிசாவளி

கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டத்தில் உள்ள சல்லிப்பட்டி எரமநாயக்கன் என்பானது வரலாற்றைக் கூறுவது இந்த ஆவணம்.

இவர்கள் தொட்டிய கம்பள சாதி எனப்படும் நாயக்கர் மரபைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வமிசத்தில் 9, 15, 18ஆம் பாளையக்காரராக விளங்கியவர்கள்.

அமணாண்டி நாயக்கன்

அமணலிங்க நாயக்கர்

என்று பெயர் பெற்று விளங்கினர்.[123]

பொள்ளாச்சி வட்டத்தில் சமணக் கோயில்கள் சிறப்புற்று விளங்கின என்பதையும் அவற்றுள் சில சைவக் கோயில்களாக மாற்றப்பட்டன என்பதையும் அறிகிறோம். அவை அமணேசுவரர், அமணலிங்கேசுவரர் கோயில்கள் என அழைக்கப்பட்டன. அக்கோயில்களின் பெயராலேயே இவர்கள் அமணாண்டி, அமணலிங்கம் என்று பெயர் பெற்றனர்.

சமண சமயம் சாராத சைவர்களும் சமண சமயத்தின் தாக்கத்தால் பெயர் வைத்திருப்பது இவ்வட்டாரத்தில் சமண சமயம் பெற்றிருந்த செல்வாக்கைக் காட்டுகிறது.

சோழன் பூர்வ பட்டயம்

சோழ மன்னர்கள் சேரன், பாண்டியன் துணையோடு கொங்கு நாட்டில் ஊர்கள்தோறும் செய்த ஆலயத் திருப்பணிகளை இந்த ஆவணம் விளக்கமாகக் கூறுகிறது.[124]

இந்த ஆவணச் செய்தியைச் சுருக்கமாகக் காணலாம்.

சாலிவாகனன் என்பவன் அயோத்தி வளநாட்டில் குயவர்பாடியில் பிறந்த வளர்ந்து புகழ்பெற்ற பேரரசன் ஆனான். அவன் விக்கிரமாதித்தனை வென்று அயோத்தி வளநாட்டை ஆண்டு வந்தான்.

சாலிவாகனன் சமண மதமும் சர்வேசுவர தீட்சையும் பெற்று அரசாண்டு வந்தான். சாலிவாகன ஆட்சியில் நீதி குன்றிக் குலங்கள்

தம் ஆச்சாரங் கெட்டுத் துரியோதனன், இராவணன், பத்மாசுரன் ஆட்சி போல நடந்து வந்தது.

சிவாலயம், விட்ணு ஆலயம், சுப்பிரமணியர் ஆலயம், மட ஆலயம், குரு ஆலயம் ஆகிய பஞ்சாலயங்களும் அழிவுற்றன. மக்கள் நலத்தின் பொருட்டு ஏற்படுத்தியிருந்த தண்ணீர்ப்பந்தல், அன்னசத்திரம், நந்தவனம், கோவில், குளம், தேர், தெருக்கள் அழிந்தன.

சாலிவாகனன் சமணமதம் சர்வேசுர தீட்சைக்கு உட்பட்ட பேர்களுக்கு நன்மையும், மற்றவர்களுக்குத் தீமையும் செய்தான். யோகிகள் சிவபெருமானிடம் முறையிட, சிவபெருமான் அக்கினிமழை பொழிந்தார். சாலிவாகனனும் அவனுடைய சமணமதம் சார்ந்தவர்களும் கல்வீடு கட்டியும், ஆற்றுக்குள் இறங்கியும் தப்பினர். சிவபெருமான் மீண்டும் மண்மாரி பெய்து கல்வீட்டில் உள்ளவர்களை அழித்தார். ஆற்றில் இறங்கிய ஒருசிலர் தப்பிப் பிழைத்தனர்.

இறுதியில் வீரசோழன் என்பவன் உலாச்சேரன், வச்சிராங்கதப் பாண்டியன் ஆகியோர் துணையால் சாலிவாகனனை அழித்தார். சமண மதமும் அழிந்தது.

அதனால் வீரசோழனுக்குக் கொலைப்பழியால் சட்டை நோய் கண்டது. கொங்கு நாட்டில் யாத்திரை செய்து ஆலயப் பிரதிட்டை செய்தால் சட்டை நோய் நீங்கும் என்று குறத்தி வடிவாய் வந்து காஞ்சிபுரம் காமாட்சியம்மன் தெரிவித்தாள்.

அதன்படி சோழ மன்னன் கொங்கு நாட்டில் 36 பெரிய சிவாலயங்களையும், 360 சிறிய சிவாலயங்களையும் கட்டினார். சட்டை நோய் நீங்கியது என்பது இவ் ஆவணத்தில் கூறப்பட்ட செய்தியாகும்.

இந்நூலின் இறுதியில் பிற சமயம் ஆறும், உள் சமயம் ஆறும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. 'சமணன், ஜயினம்' என்ற பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலின் பல இடங்களில் சைவ வைணவ மதத்திற்கும் அவற்றின் உள்பிரிவுகட்கும் சமண சமயம் எதிரானதுபோல் கூறப்பட்டுள்ளன.

சமணர்களில் இன்றைய நிலை

அருகிவரும் சமணர்கள்

கொங்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில் பரவலாகப் பெருந் தொகையினராக வாழ்ந்து, பல்வேறு குகைத்தளங்களை ஏற்படுத்திக் கோயில்களைக் கட்டிச் சமணப் பணிகளுடன் சமுதாயப் பணிகளையும் தமிழ்ப் பணிகளையும் செய்து சிறப்புடனும் செழிப்புடனும் இருந்த பழைய சமணர்கள் இன்று மிகமிக அருகிக் காணப்படுகின்றனர்.

கொங்கு நாட்டில் ஈரோடு மாவட்டம் ஈரோடு வட்டம் பூந்துறையிலும், பெருந்துறை வட்டம் விசயமங்கலத்திலும் மட்டுமே பூர்வீக திகம்பர சமணர்கள் வாழ்ந்து வருகின்றனர். கொங்கு நாட்டில் ஏறக்குறைய 50 இடங்களில் சமண சமயச் சின்னங்கள் இன்று கண்டறியப்பட்டுள்ளன.[125] அங்கெல்லாம் சமணர்கள் வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் கொங்கு நாட்டில் மேற்கண்ட இரு இடங்களைத் தவிர வேறு எங்கும் பழைய திகம்பர சமணர்கள் இன்று இல்லை. பெருந்தொகையினரான சமணர்கள் இவ்வாறு காலப்போக்கில் எண்ணிக்கையில் அருகிய நிலை அடைந்தமை வியப்புக்குரியதாக உள்ளது. இதற்குரிய காரணங்கள்தாம் என்ன? (விசயமங்கலம், பூந்துறை சமணக் குடும்பத்தார் கால்வழி பின்பகுதியில் அளிக்கப்பட்டுள்ளது.)

அரசியல் ஆதரவு இல்லை

கி.பி. 15ஆம் நூற்றாண்டிற்குப் பின் கொங்கு நாட்டில் ஆட்சி புரிந்து அதிகாரம் செலுத்திய விசயநகர அரசர்கள், மதுரை நாயக்கர்கள், மைசூர் உடையார்கள் போன்ற அரசர்களும் அவர்தம் அலுவல் அதிகாரிகளும் பெரும்பாலும் சைவ-வைணவம் ஆகிய வைதிக சமயங்கட்கு மட்டுமே ஆதரவாக இருந்தனர். இதனை அவர்கள் கல்வெட்டுகளும், செப்பேடுகளும், பிற ஆவணங்களும் தெளிவாக விளக்குகின்றன.

சைவ-வைணவக் கோயில்களே அவர்களின் கொடைகளைப் பெரும்பாலும் பெற்றன. திருநாளும், திருவிழாக்களும் திருப்பணிகளும் இந்த வைதிக சமயக் கோயில்கட்கே நடைபெற்றன.

சமணக் கோயில்களைக் கவனிப்பாரில்லை. சமண சமய மக்களும், குருமார்களும் ஆதரவு இல்லாமலிருந்தனர். சமண சமயக் கோயில்கட்கு

விடப்பட்டிருந்த கொடை நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அக்கோயில்கள் வருமானத்தை இழந்தன. கோயில்களின் மானிய நிலங்கள் தனியார் ஆக்கிரமிப்புக்கு உள்ளாயின. அவர்கள் மானிய நிலங்களிலிருந்து வரும் வருவாயில் ஒரு சிறு பகுதியைக்கூடத் தொடர்புடைய சமணக் கோயிலுக்கு அளிப்பதில்லை. அரசினர் வருடந்தோறும் இக்கோயில்கட்கு அளித்துவந்த 'தஸ்தகீர் மானியம்' சிறு தொகையே. அதுவும் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. அறநிலையத்துறையிடமிருந்து அவற்றைப் பெறும் வழியும் சமணக் குடும்பத்திற்குத் தெரியவில்லை. சிலர் முயன்றும் பயனேதுமில்லை. சமண சமயக் கோயில்களை நம்பியிருந்த அர்ச்சகர்களும் மக்கள் வருவார் இன்மையால் வருவாய் இழந்து வாழ வழியற்றவர் ஆயினர்.

அவர்கள் தாம் வாழவேண்டி ஆதரிப்பார் உள்ள இடங்களுக்கும், வருவாய் வரும் பிற இடங்களுக்கும் குடிபெயர்ந்து செல்லத் தயாராயினர். அவ்வாறே பலர் சென்றனர்.

புதிய வழிபாட்டுப் பெருக்கம்

கொங்கு நாட்டுக் கிராமங்கள்தோறும் பற்பல குலதெய்வக் கோயில்களான குடிபாட்டுக் கோயில்கள் புதிது புதிதாகத் தோன்றின. அக் கோயில்களில் கோழி, ஆடுகளைப் பலிகொடுத்துத் திருநாளும், திருவிழாவும் கொண்டாடி உற்றாரும் உறவினரும் கூடிக் கலந்து மக்கள் மகிழ்ந்தனர்.

வைதிக சமய குருமார்களும், பூசாரிகளும் வேண்டியவற்றை வேண்டியவாறே அளிக்கவல்லது தங்கள் குலதெய்வக் கோயில்களே என்று பிரச்சாரம் செய்தனர். சாதாரணப் பொது மக்களைக் கவரும் நிகழ்ச்சிகளும், கவர்ச்சியான சடங்குகளும் பெருகின. வைதிகக் கோயில்களில் குறிப்பாகக் கிராமிய அம்மன் கோயில்களின் மூலம் எழுந்த வைதிக சமயப் பெருவெள்ளத்தில் சமண சமயம் அடித்துக் கொண்டு செல்லப்பட்டது.

சமய மாற்றம்

ஆதரவிழந்த சமணர்கள் தம் சமயத்தை விட்டுத் தாம் வாழும் இடத்துக்கு ஏற்றபடிச் சைவராகவோ, அல்லது வைணவராகவோ

ஆங்காங்கே பெருவாரியாக இருந்த மதப்பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டு தம் சமய வழக்கத்தை மறந்திருக்க வேண்டும்.

கொங்கு நாட்டு வேளாளர் பிரிவினரிடையே 'மொட்டை வேளாளர்' என்ற ஒரு பிரிவு குறிக்கப்பட்டுள்ளது. சமண சமய குருமார்கள் உலோச்சு என்னும் பழக்கத்தைக் கைக்கொண்டு தம் கூந்தலைக் களைந்து மொட்டையாக வாழ்வர். மொட்டையான சமணர்கள் வைதிக சமயம் சார்ந்தமையால் அவர்கள் மொட்டை வேளாளர் என அழைக்கப் பெற்றிருக்கலாம். கொங்கு ஆவணங்களில் 'சயினிய வேளாளர்' என்போர் குறிக்கப்படுகின்றனர். அவர்களும் முன்பு சமணராக இருந்திருக்கலாம்.

குடியேற்றம்

கொங்குச் சமணர்கள் சிலர் தமிழ்நாட்டின் பிற பகுதிகளுக்கும், கேரளா, கருநாடகப் பகுதிகளுக்கும் குடிபெயர்ந்து சென்று அங்குள்ள சமணக் கோயிலைச் சார்ந்து வாழலாயினர்.

இதனைப் பற்றி முழுத்தகவல்கள் கிடைப்பது மிகவும் அரிதாக உள்ளது. குடியேற்றத்தைக் குறிக்கும் எந்த ஆவணங்களும் இதுவரை கிடைக்கவில்லை. இன்றும் பூந்துறையிலும், விசயமங்கலத்திலும் வாழும் எஞ்சிய சமணக் குடும்பத்தார் தம் நினைவிலிருந்து ஓரளவு தகவல் தருகின்றனர். ஆதரவற்ற நிலையில் பிழைப்பை நாடி அவர்கள் பல்வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து சென்றுவிட்டனர்.

இராமநாதபுரம் மாவட்ட அனுமந்தக்குடி, பரமக்குடி போன்ற பகுதிகட்கும், கேரள மாநிலத்தில் பாலக்காடு உள்ளிட்ட பல பகுதிகட்கும், மலபார்ப் பகுதியில் வைநாடு பகுதிகட்கும், கருநாடக மாநிலத்தில் சாம்ராஜ்நகர், மைசூர், மாண்டியா, பெங்களூர், லட்சுமிபுரம் போன்ற பகுதிகட்கும் கொங்கு நாட்டுச் சமணர்கள் குடியேறியதாகக் கூறுகின்றனர்.

கேரள மாநிலத்து மலபார்ப் பகுதியில் வைநாடு போன்ற இடங்களில் பல சமண மடங்களும், கோயில்களும் உள்ளன. அங்கு இன்றும் சமணர் பலர் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் ஒருசிலர்

பதும கவுண்டர்

பதுமராஜ் கவுண்டர்

ஜினச்சந்திரக் கவுண்டர்

பத்மபிரபக் கவுண்டர்

அனந்தய்ய கவுண்டர்

என்பன போன்ற பெயர்களை வைத்துக் கொண்டுள்ளனர். அவர்கள் தங்கள் பூர்வீகம் கோயம்புத்தூர் மாவட்ட விசயமங்கலம் என்றும், அண்மைக்காலம் வரை நாங்கள் விசயமங்கலம் சென்று வந்ததாகவும் இப்போது வைநாட்டுப் பகுதியில் சமணக் கோயில்கள் இருப்பதால் விசயமங்கலம் செல்லுவதை விட்டு விட்டதாகவும் கூறுகின்றனர்.

மைசூர் மாநிலம் சாம்ராஜ்நகர் அருகில் உள்ள கெல்லிசூர் சந்திரப் பிரப தீர்த்தங்கரர் கோயில் சமண அர்ச்சகர் வீரய்யர் தங்கள் குடும்பத்துக்கும் கொங்கு நாட்டுச் சமணர்கட்கும் தொடர்பு உண்டு என்று கூறுகிறார்.

பாலக்காட்டில் புகைவண்டி நிலையம் அருகிலுள்ள ஆதிநாதர் கோயில் அர்ச்சகர் சாந்தி கேசவன் தாங்கள் தமிழ்நாட்டிலிருந்து வந்ததாகக் கூறுகின்றார்.

இராமநாதபுரம் மாவட்டம் அனுமந்தக்குடியில் குடியேறிய கொங்கு நாட்டுப் பூந்துறைச் சமணர் விசுவநாதய்யர் இன்றும் அங்கு வாழ்ந்து வருகிறார்.

இன்றையநிலை

பூந்துறையிலும், விசயமங்கலத்திலும் இரண்டு சமணக் குடும்பங்கள் கோயிலை அடுத்துள்ள இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். தங்களைக் கன்னடிய சைன பிராமணர் என்று அவர்கள் சொல்லிக் கொள்கின்றனர்.

பூந்துறை பார்சுவநாதர் கோயிலுக்கு ஈரோடு, கோயமுத்தூர், திருப்பூர்ப் பகுதிகளில் அண்மையில் குடியேறியுள்ள சுவேதாம்பர சமணர்கள் எப்பொழுதாவது ஒருமுறை வந்து செல்லுகின்றனர். ஈரோடு சுவேதாம்பர சமணர்கள் பூந்துறையில் தினப்பூசைக்கும் ஏற்பாடு செய்துள்ளனர். ஈரோட்டில் அவர்கள் சுவேதாம்பர சமணக்கோயிலும் கட்டியுள்ளனர். அதேபோல் கோவையிலும் சுவேதாம்பர சமணக் கோயில் உள்ளது.

விசயமங்கலம், பூந்துறை ஆகிய இடங்களில் உள்ள இரண்டு கோயில்கட்கும் வழக்கமாக வழிபடுவோர் வருவாரின்மையால் அர்ச்சகர்கட்குப் பெரிய அளவில் வருமானம் எதுவுமில்லை. பார்வையாளர்கள் எப்பொழுதாவது சிலர் வந்து செல்லுகின்றனர்.

பரன்சேர்பள்ளியில் சைவ சமயப் பண்டாரம் எப்பொழுதாவது தீர்த்தங்கரருக்கும் பூசை செய்து வருகிறார். பிற கோயில்கள் பூசை செய்வாரும், வழிபடுவாரும், பாதுகாப்பாரும் இன்றி அழிந்து வருகிறது. சீனாபுரத்தில் சிறு திருப்பணி செய்து சிலர் வந்து வழிபட்டுச் செல்கின்றனர்.

ஒருகாலத்தில் அறவோர்களான சமணர்கள் கொங்கு நாட்டில் வாழ்ந்து அறஉபதேசம் செய்து, மக்களை ஒழுக்க நெறியில் புகுத்தி, சமணக் கோயில்களைக் கட்டி, சமண சமயத்தைப் பரப்பியதோடு தமிழ் மொழிக்கும் அளப்பரிய பெருந்தொண்டு புரிந்த விவரம் இன்றைய கொங்கு நாட்டு மக்களுக்குத் தெரியாது. அவர்கள் விட்டுச் சென்ற சமணச் சின்னங்கள் பற்றியும் கொங்கு நாட்டு மக்களுக்கு அதிகம் தெரியாது. அவைகள் திறந்தவெளி அருங்காட்சியகம் போலக் கொங்கு நாடெங்கும் பரந்து கிடக்கின்றன. அவைகளைப் பாதுகாப்பார் யாரும் இல்லை. மைய மாநிலத் தொல்பொருள் துறையினர் அவைகளைக் காக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும். சமணச் சின்னங்களில் அருகில் உள்ள பொது மக்களும், பள்ளிகளும், கல்லூரிகளும் அவற்றைக் காக்கும் முயற்சியை மேற்கொள்ளலாம். அப்பணி கொங்கு நாட்டு மக்கள் சமணர்கட்குச் செய்யும் தலையாய நன்றிக்கடனாகும்.

குறிப்புகள்

1. ஏ. ஏகாம்பரநாதன், *கல்வெட்டில் சமணம்*, ப.100.
2. வெ. வேதாசலம், *இயக்கி வழிபாடு*, ப. 46.
3. **R.S. Gupta, *Iconography of the Hindus, Buddhists and Jains*, p. 176.**
4. *Ibid.*, p. 181; ஏ. ஏகாம்பரநாதன், *மு.கா.நூல்*, ப. 69.
5. **R.S. Gupta, *op.cit.*, p. 182.**
6. ***SITI* I 262.**
7. இதற்கு விசயாபுரி அம்மன் கோயில் கிழக்குச் சுவரில் சிற்பச்சான்று உண்டு.
8. மார்க்சீய காந்தி (ப.ஆ.), *பாளையப்பட்டுக்களின் வம்சாவளி III*. ப. 56.

9. **R. Poongundran, Jain Bronzes from Aragalur, *South Indian Studies*, Vol. II, pp. 190-191.**
10. **S. Gopalakrishnamoorthy, *Jain Vestiges in Andra*, p. 79 Fig. No 581.**
11. வெ. வேதாசலம், *மு.கா. நூல்,* ப. 70.
12. **R.S. Gupta, *op.cit.*, p. 182.**
13. ***ARE* 705 of 1905; *SII* XIV 22; *EI* XXXII pp. 337 - 338.**
14. 'மணியியல் சீப்பிடச் சிவக்கும் வாணுதல்
    அணியிருங் கூந்தலை ஔவை மார்கள்தாம்
    பணிவிலர் பறித்தனர் பரமன் சொன்னநூல்
    துணிபொருள் சிந்தியாத் துறத்தல் மேயினார்' (*சிந்தாமணி* 2637)
15. ***EC* II p. 114, 424, 428, 434.**
16. சோழ வரலாற்றில் 'குந்தவை' என்ற பெயருடைய பெண்கள் சிலர் குறிக்கப்படுகின்றனர். அப்பெயரும் குந்தவ்வை என்ற பெயரின் திரிபாகலாம்.
17. ஏ. ஏகாம்பரநாதன், *கல்வெட்டில் சமணம்,* ப. 73.
18. ***ARE* 549 of 1905; *SITI* I 275; *SITI* III p II p 1428.**
19. சி.எம்.இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாடும் சமணமும்,* ப. 93.
20. ஏ. ஏகாம்பரநாதன், *மு.கா.நூல்,* ப. 64.
21. ஏ. ஏகாம்பரநாதன், *மு.கா.நூல்,* ப. 67.
22. ***ARE* 599 of 1905; *SITI* I 275.**
23. *அருங்கலச் செப்பு* 145.
24. மயிலை சீனி வேங்கடசாமி, *சமணமும் தமிழும்,* ப. 180.
25. ***Epigraphia Carnatica II*, Introduction, p. LXXIV.**
26. *நீலகேசி,* மொக்கலவாதச் சருக்கம் 55.
27. சம்மந்த பத்திரர், *இரத்தின கரண்டக சிராவக சாரம்,* **V 122,** ப. 58.
28. அ. சக்கரவர்த்தி நயினார், *நீலகேசி,* அடிக்குறிப்பு, ப. 122.
29. *நீலகேசி,* மொக்கலவாதச் சருக்கம் 55 உரை.
30. **S. Settar, *Memorial Stones*, p. 283.**
31. மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுத்துறையினர் 'புள்அப்பை' என்று படித்துள்ளனர் (**ARE 597 of 1905**) ராம் பூஷன் பிரசாத் சிங் எழுதிய 'இடைக்காலக் கருநாடகத்தில் சமணம்' என்னும் ஆங்கில நூலிலும் (ப.66) 'புள்ளப்பை' என்று குறிக்கப்பட்டுள்ளது.
32. ***ARE* 597 of 1905; *EI* VII, p. 108.**

விசயமங்கலம் திகம்பர சமணக் குடும்பம் - கால்வழி



*கோயில் பூசை செய்கிறார்

பூந்துறை திகம்பர சமணக் குடும்பம் - கால்வழி



*கோயில் பூசை செய்கிறார்

33. M.V. Krishna Rao, *The Gangas of Talakad*, pp. 111-114.

34. G.S. Dikshit, Camundaraya-A Great Jaina Minister of Karnataka, *Gommateshvara Commamoration Volume*, pp. 46-48.

35. Ram Bhushan Prasad Singh, *Jainism in Early Medieval Karnataka*, p. 10.

36. M.V. Krishna Rao, *op. cit.*, pp. 99. 109.

37. G.S. Dikshit, *op.cit.*, p. 48.

38. சாமுண்டராயன் கால்வழி: கோவிந்தமய்யா

மகாபலய்யா

சாமுண்டராயன் புளிஅப்பை நாகவர்மன்

39. *EC* II 129, 5-39, 107, *EC* I, cg-31.

40. Ram Bhushan Prasad Singh, *op.cit.*, p. 63.

41. S. Settar, *Inviting Death*, pp. 125-127.

42. Ram Bhushan Prasad Singh, *op.cit.*, pp. 61-62.

43. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்*, ப. 180.

44. S. Settar, *op.cit.*, pp. 95-96.

45. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்*, பக். 185–187. இளம்பூரணரும் பெண்களுக்கு வீடுபேறு இல்லை என்ற கருத்தைக் கூறுகிறார் (*தொல்.எழுத்து.* முதற்சூத்திர உரை).

46. EC II 23, 113, 129, 9, 203, 539; மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்*, ப. 193; தமிழ் நிகண்டுகளில் கௌந்தி எனக் குறிக்கப்படுபவரும், சிலப்பதிகாரத்தில் வரும் கௌந்தியடிகளும் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறும் கந்தியாரே ஆகலாம். சிலப்பதிகாரத்தில் கௌந்தியடிகள் சல்லேகனை விரதமிருந்து உயிர் நீத்தமை 'உண்ணா நோன்போடு உயிர்பதிப் பெயர்தல்' என்று குறிக்கப்படுகிறது.

47. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்*, ப. 187.

48. *புறம்.* 65, 66, 191, 214, 218, 219, 221, 223, 236; *சிலப்பதிகாரம்* 3:27:83; *சிறுபஞ்ச* 71; *அருங்கலச்செப்பு* 145–160; தமிழகத்தில் வடக்கிருந்தவர்கள் பெருஞ்சேரலாதன் (*புறம்.* 65, 66); கோப்பெருஞ்சோழன் (*புறம்.* 191); பிசிராந்தையார் (*புறம்.* 214); பொத்தியார் (*புறம்.* 223); கவுந்தியடிகள் (*சிலப்பதிகாரம்* 3:27:83).

49. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்*, பக். 180–184.

50. க.ப. அறவாணன், *மு.கா.நூல்*, ப. 33.

51. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்,* ப.28.

52. மேலது, ப. 41.

53. **Ram Bhushan Prasad Singh, *op.cit.*, p. 85.**

54. தென்னார்க்காடு மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், ஜம்பையில் உள்ள கண்டராதித்தப் பெரும்பள்ளியிலும் (***ARE*** **448 of 1938**), வடஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம், தெள்ளாற்றிலும் (***ARE*** **22 of 1935**), இம் மாவட்டத்தைச் சார்ந்த வாலாசா பேட்டை வட்டம், கீழ்மின்னலிலும் (***ARE*** **35 of 1934**), போளூர் வட்டம், வடமகாதேவி மங்கலத்திலும் (***ARE*** **62 of 1934**) 'அஞ்சினான் புகலிடங்கள்' இருந்துள்ளன.

55. ***ARE*** **210 of 1909.**

56. *கல்வெட்டு ஓர் அறிமுகம்,* தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, எண் **XVII.**

57. செ. இராசு, *கலைமகள் கலைக்கூடம்,* ப. 189; இப்போது இந்த அடைக்கலத்தைக் குறிக்கும் கல்வெட்டு உள்ள கல் ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் உள்ளது.

58. ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், பூந்துறையைச் சார்ந்த வாரணவாசி என்பவர் சத்திமங்கலம் என்னும் ஊரில் முடவர் காப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்தினார். அதை ஏற்படுத்த அவருக்குத் தூண்டுகோலாக அமைந்தது சமணரின் அஞ்சினான் புகலிடமாக இருக்கலாம்.
   – செ. இராசு, *கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள்,* எண் 62 மொடவாண்டி பட்டயம், பக். 257-263.

59. *பெரியபுராணம்,* தண்டியடிகள் நாயனார் புராணம் 24, 25.

60. *மக்கென்சி ஆவணங்கள்,* அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை, டி 3002; ஆர் 344.

61. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *கொங்குநாடும் சமணமும்,* ப. 100.

62. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், *மு.கா.நூல்,* ப. 106.

63. ***ARE*** **186 of 1927.**

64. செ. இராசு, *கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள்,* ப. 17. சமணம்-அமணம் என்றும் அழைக்கப்படும். பெரும்பாலும் கொங்குநாட்டுத் திகம்பர சமணச் சிற்பங்கள் நிர்வாணமாக இருப்பதால் இப்பகுதி மக்கள் எல்லாச் சமணக் கோயில்களையும் பொதுவாக 'அம்மணீசுவரர்' என்றே அழைக்கின்றனர்.

65. *பெரியபுராணம்,* திருஞானசம்பந்தர் புராணம் 18-19.

66. *தக்கயாகப்பரணி* 169.

67. செ. இராசு, *கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள்,* பக். 107, 152, 176, 200, 312,

68. செ. இராசு, *மு.கா.நூல்,* ப. 157.
69. *மேலது,* ப. 200.
70. *மேலது,* ப. 205.
71. *மேலது,* ப. 313.
72. *தேவாரம்,* அடங்கன்முறை 1860.
73. *மேலது* 720.
74. *மேலது*
75. *மேலது* 112.
76. ***SITI* I 261; *ARE* 305 of 1908.**
77. ***SITI* I 322.**
78. சேவூர் சிவன் கோயில் அர்ச்சகரிடம் உள்ள கையெழுத்துப்பிரதி.
79. மயிலை சீனிவேங்கடசாமி, *சமணமும் தமிழும்,* ப. 77.
80. *புறம்.* 235:6; *பெரும்.* 115, 132, 472.
81. பிடித்தல் - கடைப்பிடித்தல்; கைக்கொள்ளுதல்.
82. காடையூர், பூந்துறை முதலிய ஊர்களில் முறையே காடையீசுவரர் முழுக்காது குலத்தாருக்கும், புட்பவனேசுவரர் காடை குலத்தாருக்கும் குலதெய்வமாகும்.
83. அவைகளைப் 'பெரால் சட்டி' என்றழைப்பர்.
84. சக்கரவர்த்தி நயினார், *ஸ்ரீபுராணம்,* முன்னுரை, ப. **xxxii.**
85. நீதிபதி இரா. வெங்கோட்டுவேலன் அவர்கள் நேரில் கூறிய கருத்து.
86. தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் அவ்வை நடராசன் அவர்கள் நேரில் கூறிய கருத்து.
87. சகசிரம் (ஸஹஸ்ரம்) என்ற சொல் ஆயிரம் ஆயிற்று என்பர். அதியமான் - சதியபுத்ரர் என அழைக்கப்பட்டார்.
88. மயிலை சீனி வேங்கடசாமி, *சமணமும் தமிழும்,* ப. 97.
89. செ. இராச, *மு.கா.நூல்,* ப.17.
90. ஆண்களும் அரசப்பன், பாம்பணன் என்று பெயர் வைத்துக்கொள்கின்றனர்.
91. மூவர் தேவாரம் அடங்கன்முறை, 3216; ***SII* V 380, *ARE* 91 of 1894; *SII* V 386, 96 of 1894; *EI* IV, p. 142.**
92. *கொங்குதேச ராசாக்கள்,* ப.2, ***ARE* 19 of 1890; *ARE* 10 of 1895; *EI* IV, p. 156, F.N. 6; P.B. Desai, *op.cit.*, p. 40.**
93. புலவர் வெ. இரா. துரைசாமி, 'கொல்லிமலை', *மலைவாழ் மக்கள் கருத்தரங்கு,* நாமக்கல், 1987.

94. தீர்த்தங்கரர் 24, சக்கரவர்த்திகள் 12, பலதேவர் 9, வாசுதேவர் 9, பிரதி வாசுதேவர் 9 ஆக மொத்தம் 63 பேர்.

95. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்,* ப. 94.

96. *புறம்.* 65, 66, 191, 214, 218, 219, 221, 223, 236; *சிறுபஞ்ச,* 71; *அருங்கலச்செப்பு* 145-160; *சிலப்பதிகாரம்,* நீர்ப்படைக்காதை 3:27:83.

97. மயிலை சீனி வேங்கடசாமி, *மு.கா.நூல்,* பக். 180-184.

98. க.ப. அறவாணன், *மு.கா.நூல்,* ப. 33.

99. இப்போது வரலாற்றுச் சிறப்புமிக்க இச்செப்பேடு 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் ஆசிரியர் குழுவில் ஒருவரான ஹாரிமில்லர் என்பார் வசம் உள்ளது. சென்னை, ஐராவதம் மகாதேவன் அவர்கள் மூலம் பெற்ற மைப்படியைக் கொண்டு முனைவர் கே.வி. ரமேஷ் தாம் பதிப்பித்த '*Inscriptions of the Western Gangas*' என்னும் நூலில் இச்செப்பேட்டை வெளியிட்டுள்ளார் (No 155, pp. 479-482).

100. கொங்கணிவர்ம தர்ம மகாதிராசா
|
மாதவ மகாதிராசா
|
கிருஷ்ணவர்ம மகாதிராசா

- சிம்மவர்ம மகாதிராசா* (கி.பி. 436-458) (மாதவ மகாதிராசாII)
- விஷ்ணு கோபன்
  - மாதவ மகாதிராசாIII
    - அவனிதன்
      - துர்விநீதன் (பிருகத்கதா எழுதியவர்)

*செப்பேடு அளித்தவர்

101. கருநாடக, ஆந்திர மாநிலப் பகுதிகளில் பெண்கள் அவ்வை என்று பெயர் வைத்துக் கொள்வது முன்பு வழக்கமாக இருந்துள்ளது. குணமதி அவ்வை, காளவ்வை, ஆளவ்வை, அக்கவ்வை, பம்மவ்வை, கந்தவ்வை போன்ற பெயர்களை அங்குக் காணுகின்றோம். (*EC* pp. 77; 168, 465, 473, 594)

(அரிஞ்சய சோழன் (கி.பி. 956-957) மனைவி வீமன் குந்தவ்வை என்பவள் கீழைச்சாளுக்கிய மன்னன் இரண்டாம் வீமன் மகளாகும் (தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், *பிற்காலச் சோழர் வரலாறு,* ப.68). பிற்காலத்தில் சோழர்குலப் பெண்களும் குந்தவ்வை எனப் பெயர் பெற்றனர். தமிழில் குந்தவ்வை - குந்தவை என வழங்கப்பெற்றது.

102. தமிழ்க் கல்வெட்டுக்களில் 'கருங்காசு' என அழைக்கப்படும் காசாக இருக்கலாம்.

103. தமிழி என்பதைப் பிராமி, தென்பிராமி என்றும் அழைப்பர்.

104. வட்டெழுத்துக் கல்வெட்டுக்களின் மொழி தமிழாகவே உள்ளது.

105. ஸ்காத்லாண்டு நாட்டில் லூவி என்னும் தீவில் கி.பி. 1753ஆம் ஆண்டுப் பிறந்த மக்கென்சி 1782இல் கிழக்கிந்தியக் கம்பெனியின் சென்னை நிருவாகத்தில் ஒரு பொறியாளராக நியமனம் பெற்றுச் சென்னை வந்தார். பணியின் பொருட்டுக் கிருஷ்ணா முதல் கன்னியாகுமரி வரை போக வேண்டிய வாய்ப்புக் கிடைத்தபோது ஏடுகள் தேடினார். கல்வெட்டுகள், செப்பேடுகளைப் படி எடுத்தார். அதற்கெனச் சம்பளம் கொடுத்துப் பல உதவியாளர்களை நியமித்தார்.

1818இல் இந்தியாவின் சர்வேயர் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றுக் கல்கத்தா சென்றார். தாம் சேகரித்த வரலாற்று ஆவணங்களைக் கல்கத்தாவுக்கு எடுத்துக்கொண்டு சென்றார். எல்லாவற்றிற்கும் பட்டியல் தொகுத்து வெளியிட விரும்பினார். அவர்தம் விருப்பம் நிறைவேறாமலே 1821இல் காலமானார்.

அந்நாளைய கவர்னர் ஜெனரல் ஹேஸ்டிங்ஸ் பிரபு கிழக்கிந்தியக் கம்பெனியாரின் அனுமதி பெற்று 10000 பவுன் கொடுத்து அவற்றை விலைக்கு வாங்கினார். அவற்றிற்குப் பட்டியல் தயாரிக்கும் பொறுப்பை வங்காளத்து ஏசியாடிக் சொசைட்டியார் வில்சனிடம் ஒப்படைத்தனர்.

தென்னிந்திய மொழியிலும் எழுத்திலும் உள்ளவை 1828இல் சென்னைக்கு அனுப்பப்பட்டன. 1858இல் சென்னை அரசினர் ஆணைக்கிணங்க ரெவரண்ட் வில்லியம் டெய்லர் ஒரு பட்டியல் தயாரித்தார். பி.பி. பிரௌன் தன் 'லோகல் ரெகார்ட்சில்' பலவற்றின் சுருக்கத்தை வெளியிட்டார். கல்வெட்டுகளில் ஒருபகுதியைத் தி.நா. சுப்பிரமணியம் வெளியிட்டார். தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை நான்கு தொகுதிகள் பாளையப்பட்டுக்களின் வமிசாவளி என்ற பெயரில் வெளியிட்டது.

இருப்பினும் மக்கென்சியின் வரலாற்றுச் சிறப்புமிக்க பல ஆவணங்கள் இன்னும் முழுமையாக ஆய்வு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

106. *கொங்கதேச ராசாக்கள்* டி 2726, 2741, 3158, 3159; *மேட்டுப்புத்தூர் சைன தேவஸ்தானக் கைபீது* டி 2890, 3317, ஆர் 1635; *திங்களூர்க் கல்வெட்டுக்கள்* டி 3302.

107. *சோழன் பூர்வபட்டயம்* டி 2981, 3283, ஆர் 1503; *வெஞ்சமாங் கூடலூர் தேவஸ்தான வரலாறு* டி 2844, 3580.

108. *சைன சம்ஹார சரித்திரம்* டி 3078; *சைனமத யுகப்பிரளயக் கைபீது* டி 3441.

109. *திராவிட தேசத்து சைன ஆலயங்கள் அட்டவணை* டி 3002; *சைன ஊர்களின் ஜாபிதா* டி 2746, ஆர் 344.
110. *சித்தாமூர்க் கோயில் மடங்களின் நித்தியப்படி தருமங்கள்* டி 3150.
111. *சைன கண உற்பத்தி வரலாறு* டி 3052.
112. *சைன முனீசுவரர் சந்ததியும் அவர் கிரந்த ஜாபிதாவும்* டி 2792.
113. *சைன புத்தகங்கள் ஜாபிதா* டி 3417.
114. **'Kongu Desa Rasakkal - One of the best in the whole Mackenzie Collection, being free from fable and supports by Date' - R.V. Teylor (1835)**

'The utility of the Kongu Desa Rasakkal is even greater than the inscriptions' - Lowis Rice (1879).

Dowsan - Published in *Journal of the Royal Asiatic Society,* Vol. VII, 1846.

- Published in *Madras Journal of Literature and Science,* Vol. XIV, 1847.

- கோவைகிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் 1950இல் அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம் மூலம் பதிப்பித்தார். பேரூர் சாந்தலிங்கர் திருமடத்தார் மறுபதிப்பை வெளியிட்டுள்ளனர். அந்நூலுக்குச் சரியான ஆராய்ச்சிப் பதிப்பு இன்னும் வெளியாகவில்லை.

115. அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம் டி. 2726, 2741, 3158, 3159.
116. முதல் தீர்த்தங்கரரே ஆதிநாதர், ஆதீசுபரர் என்றழைக்கப்படுகிறார்.
117. சாமுண்டராயன் தலைக்காட்டு மேலைக் கங்கர் தளபதி. காலம் 10ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியாகும். செவிவழிச் செய்தியாகக் கேள்விப்பட்ட செய்தியைப் பிற்காலத்தியோர் ஆவணமாக எழுதிவைக்கும்போது இத்தவறு நேர்ந்திருக்க வாய்ப்புண்டு.
118. அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், டி 3302 **IV 94; *SITI* I 256, 257, 258.**
119. மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினர் இப்பெயரை அறத்துளான் தேவன் பேரன் னானா கணித மாணிக்கச் செட்டி என்று படித்துள்ளனர்.
120. 1905ஆம் ஆண்டு இக்கோயில் கல்வெட்டுகளைப் படி எடுத்த மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினர் ஒரு கல்வெட்டை மட்டுமே படி எடுத்துள்ளனர். இரண்டு கல்வெட்டுகள் மக்கென்சி எடுத்த படிகள் மூலமே நமக்குத் தெரியவருகிறது.
121. ***SITI* I 1272, 1273, 1274, 1275.**

122. அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், டி 2844, 3580.

123. அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், டி 3130; க. குழந்தை வேலன், *பாளையப்பட்டுக்களின் வம்சாவளி* I, பக். 115-119.

124. அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் சோழன் பூர்வ பட்டயத்தின் ஓலைச்சுவடியும், காகிதச் சுவடிகளும் உள்ளன. அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், டி 2981, டி 3283, ஆர் 1503. 1950ஆம் ஆண்டு சோழன் பூர்வ பட்டயம் தனி நூலாக வெளிவந்துள்ளது. பதிப்பாசிரியர் கோவைகிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார்.

125. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியாரிடம் (1922) கொங்கு நாட்டுச் சமணர்கள் கொங்கு நாட்டில் 72 சமணக் கோயில்கள் இருந்ததாகக் கூறியுள்ளனர்.

- *கொங்குநாடும் சமணமும்*, ப. 73.

தீர்த்தங்கரர்கள்

பின்னிணைப்பு

கொங்கு நாட்டுச் சமணக் கல்வெட்டுகள்

தமிழ்க் கல்வெட்டுகள்

1. சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், அம்மன்கோயில்பட்டி[1]

பரம்பன் கோகூர்கிழார் மகன் வியக்கன்

கோபன் கணதேவன் தொட்ட சுனை

2. திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டம், அய்யர்மலை[2]

பனைதுறை வேஸன் அதிட்அணம்

3. ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், அறச்சலூர் மலை[3]

அ) எழுத்தும் புணருத்தான் மணிய

வண்ணக்கன் தேவன் சாத்தன்

ஆ)

த	தை	தா	தை	த
தை	தா	தே	தா	தை
தா	தே	தை	தே	தா
தை	தா	தே	தா	தை
த	தை	தா	தை	த

இ)

கை	த	தை	த	கை
த	தை	த	தை	த
தை	த	கை	த	தை
த	கை	த	கை	த
கை	த	தை	த	கை

4. கரூர் மாவட்டம், கரூர் வட்டம், ஆறுநாட்டர் மலை

அ) 1) மூதா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
2) கோ ஆதன் செல்லிரும்பொறை மகன்
3) பெருங்கடுங்கோன் மகன் இளங்
4) கடுங்கோ இளங்கோ ஆக அறுத்த கல்[4]

ஆ) 1) மூதா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
2) கோ ஆதன் செல்லிரும்புறை மகன் பெருங்
3) கடுங்கோன் மகன் கடுங்கோன் இளங்கடுங்
4) கோ இளங்கோ ஆக அறுபித கல்[5]

இ) நல்லிய் ஊர் ஆ பிடந்தை மகள்[6]

ஈ) 1) நல்லி கீரன் கொற்றி அதிடானம்
2) நல்லிய் ஊர் ஆ பிடந்தை மகள்
3) கீரன்கொற்றி அதிடானம்[7]

உ) 1) யாற்றூர் செங்காயபன்
2) தாவன் ஊர்ப் பின்அன் குற்றன்[8]
3) ன் அறுபித கல்[8]

ஊ) . . . . அதிட்டான்னம்[9]

எ) 1) எண்ணை வாண்ணிக
. . வேநி ஆதன் அதிட்டானம்[10]

ஏ) . . . அதிட்டானம்[11]

ஒ) 1) பொன் . . .
2) கன் . . .
3) மகன் . . .
4) னவா . . .[12]

ஓ) 1) கொற்றந்தை ஈளவன்
2) மூன்று[13]

ஔ) 1) கரு ஊர் பொன் வாணிகன்

2) நத்தி அதிட்டானம்[14]

ஃ) . . .ணாகன் மகன் பெருங்கீரன்[15]

5. ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஈரெட்டிமலை 'துறகையுள் ளாரு கல்[16]

வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள்

6. கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், ஆலத்தூர், யாளிக்கல்

1) ஸ்வஸ்திஸ்ரீ சிந்தரையன் மகளார் நம்

2) பிராட்டியார் வானவன் மாதே

3) வியார் சிற்றாச்சர் வடிக்கமணவா

4) ட்டி. . . ந்து தவப்பட்டு ஆலத்தூர

5) டிகள் பள்ளி ஆளாநின்ற காலத்து வீரசங்

6) காதப் பெரும்பள்ளி என்று பெருமாநடிக

7) ள் நாமத்திலே உள்ளோசஞுயுஞ் செயிவித்து பு

8) துக்குவித்தார்[17]

6. அ) முன் மண்டப நிலைக் கல்வெட்டு

1) ஸ்வஸ்தி ஸ்ரீ கோநாட்டானேன் வீ

2) ரசோழப் பெருமானடிகளுக்கத் திரு

3) வெழுத்திட்டுச் செல்லாநின்ற யாண்டு முப்

4) பத்தேழாவது ஆனித்திங்கள் முதல். . .

5) ஆலத்தூர் வீரசங்காதப் பெரும்பள்ளியில்

6) இவ்வருகதேவர். . . . . வயிற்று

7) நிலன் . . . நாலெல்லை ஆக கை..

8) . . . .

9) வழி ஏழெச்சம் ஒழியாமல் அறுவான்.

7. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஐவர்மலை (அய்யம்பாளையம்)

அ) குகைத்தளத்தின் மேல் உள்ள கல்வெட்டு

1) சகரயாண்டு எழுநூற்றுத் தொண்ணூற்றிரண்டு
2) போந்தன வரகுணற்கு யாண்டு எட்டு குணவீரக் கு
3) ரவடிகள் மாணாக்கர் காழத்து சாந்திவீரக்
4) குரவர் திருவயிரை பாரீஸ்வ படாரரையு மியக்
5) கி அவ்வைகளையும் புதுக்கி இரண்டுக்கு முட்
6) டாவவியு மோரடிகளுக்கு சோறாக அமைத்தன
7) பொன் ஐந்நூற்றைந்து காணம்[18]

ஆ) இரண்டாம் உருவத்தின் கீழ் உள்ள கல்வெட்டு
1) ஸ்ரீ வடபள்ளிஆ
2) ரம்விச்சி வர
3) தபாணி செயல்[19]

இ) நான்காம் உருவத்தின் கீழ் உள்ள கல்வெட்டு
1) ஸ்ரீ அச்சணந்
2) தி செயல்[20]

ஈ) ஆறாவது உருவத்தின் கீழ் உள்ள கல்வெட்டு
1) ருத்த மாணாக்கர்
2) . . . ச் செயல்[21]

உ) ஏழாவது உருவத்தின் கீழ் உள்ள கல்வெட்டு
1) ஸ்ரீ இந்திரசேனன்
2) செயல்[22]

ஊ) எட்டாம் உருவத்தின் கீழ் உள்ள கல்வெட்டு
1) ஸ்ரீ வெண்புணாட்டு நா
2) ல்கூர் குடியன்
3) மூவேந்தன் செயல்[23]

எ) ஒன்பதாம் உருவத்தின் கீழ் உள்ள கல்வெட்டு
1) திருவரம்பத்தில் பாத
2) மூலத்தான் ஆரி செய்த
3) செயல்[24]

ஏ) பத்தாம் உருவத்தின் கீழ் உள்ள கல்வெட்டு

1) ஸ்ரீ வீரசங்கத்துப் பெருமடை

2) மல்லிசேனப் பெரியான்

3) செயல்[25]

ஐ) பதினோராம் உருவத்தின் கீழ் உள்ள கல்வெட்டு

1) கெழவத்து வெண்பு. . .

2) கவிரிச்சி நாகன் செ

3) யல்[26]

ஓ) இயற்கைக் குகைக்கு மேல் உள்ள கல்வெட்டு

1) ஸ்ரீகாடன். .

2) டக . . [27]

ஔ) அதே இடம்

1) . . . . . எழுநூற்றுத் . . . .

2) . . . . . ற்கு யாண்டெ . . .

3) . . . . காழுமத்து சா. . .

4) . . . . ஸ்வர படாரற் . . .

5) . . . . த்திரண்டா . . .

6) . . . . வைத்தபொ . . . [28]

ஃ) அதே இடம்

1) ஸ்ரீபெரும்பத்தி

2) ஊர் பட்டினிக் குர

3) த்தியார் மாணாக்கியா

4) ர் அவ்வணந்திக்

5) குரத்தியார் செய்

6) வித்த தேவர்[29]

க) அதே இடம்

1) குவணச்சேரித் தட்டாரச் சா

2) விகித்தி வட்டம்வடு

3) கி ஸ்ரீ அயிரைமலை தேவ

4) ர்க் கவிப்புற மட்டி

5) ன பொன்னிரு கழஞ்சு 30

கா) அதே இடம்

1) . . . னுக்குச் செல்லாநி . . . ருந் . . .

2) . . . நலூர் வாழுந் திணை . . . . உந்திரு . . . .

3) . . . ருவயிரைக்கு இரண்டு கலம் பெய்தான்

4) . . . . விக்கும் ஓரடிகளுக்கும் 31

8. திண்டுக்கல் மாவட்டம் பழனிவட்டம் தேவத்தூர்

. . . துங்க பல்லவரையர் பள்ளி[32]

9. ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், நல்லூர் பெருவழியின் மேற்புறம் உள்ள மேடைக்கல்வெட்டு.

1) ஸ்வஸ்தஸ்ரீ . . . . . . இரவிகோதைக்கி

2) விவ. . . . . வுஆன

3) அன . . . . தேவகி

4) ழமை பர . . . . ன்னதில

5) பநாளிற் . . . . . ரதகோ

6) லார்நாட்டு . . . சார்திப்

7) படர்ந்து . . . . . சமணப

8) ள்ளிக்கு . . . . உள்ப்பட்டா

9) லி தெவ்வெ . . . . மைலாஞ்சி

10) ளிழன் . . டவர . . . புந்நாட

11) த நல்லோள உ கோலா ரவி

12) கோதையாலேய் பெய்யப்பட்

13) ட வலான் அத்திகோசமும்

14) . . . .பேதைப . . . கோழந் . . . த

15) . . . . தமை [33]

10) கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், ஆலத்தூர்

அ) சமணப்பள்ளி கருவறை நிலைகாலில் உள்ள கல்வெட்டு

1) னேன் கல்ல	7) யையும் ம
2) லூர் வண்ணா	8) கள் செல்லப
3) ன் நீலஞ்	9) ணத்திை
4) செல்லன்	10) யும் சாத்தி
5) மணவாட்டி	11) நாட்டுவித்த
6) காவஞ் சாத்தி	12) கன்நிலை[34]

ஆ) மேற்குச் சுவர்

1) ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தேவர்க்கு . . . .
2) மேல் செல்லாநின்ற ஆங் . . . .
3) இரஸ ஸம்வத்சரத்து ஆடி மாதம் உ தியதி தெ
4) ண்ணாயக்கர் கோட்டைக்கு தெற்கு ஆ
5) றுநாட்டு நாட்டுவரோம் வடப
6) ரிசாரநாட்டு ஆலத்தூர் அமண
7) தேவர் அணிஆதழகிய நாயநார்க்கும்
8) திருப்புக்கொளியூர் அவிநாசி ஆளுடையார்
9) க்கும் தன்மசாதனம் பண்ணி குடுத்தபரி
10) சாவது இந்த ஆலத்தூர் முழுதும் அலி
11) நாசி ஆளுடையார்க்கு திரிபுவந சக்
12) ரவத்தி குடுத்தான் என்றும் அணி
13) ஆதழர்க்கு சேரமான் சகரவத்தி குடுத்தா
14) ன் என்றும் ரண்டு கோயில் தானத்தாரும்
15) . . . . . . இவ்விரு சாதனமும் சோமப்ப
16) தெண்ணாயக்கர் உடையார் முன்பும்
17) நாட்டார் முன்பும் முரைப்பாடு இரண்டு சா
18) தனமும் காட்டுகையில் இரண்டு சா
19) தனமு பாத்த அளவில் இரண்டும் பூ

20) ர்வசாதனம் ஆனபடிஆலே இரண்
21) டு கோயிலுக்கும் பொதுவாக்கி இந்த ஊ
22) ர் தெக்கில் தெருவும் இறை இறுப்பு கீழை கு
23) . . . கடில்லூர். . தேவற்கும் இம்மருவாதியில் பிற
24) வும் . . . . . சாதனம் . . . . . .
25) குடுத்தன இதுவே சாதனமா
26) கடவதாகவும் இது சாதனம் செயிது குடுத்தோம் [35]
27) ஆறுநாட்டு நாட்டவரோம் அமணதே
28) வர் அணி ஆதழகிய நாயனார் இந்த தருமம் விலக்கினவன்
29) எச்சமறுவான் ஜிநதம்ம ரகைஷ

ஆ) மண்டபத் தென்சுவர்

1) ஸ்வஸ்திஸ்ரீ
2) இந்த மண்
3) டபம் சமை
4) ப்பித்தோம்
5) வடபரிசார
6) நாட்டு ஆல
7) த்தூரில்
8) ஸ்ரீஜிந தம்ம
9) த்துள்ளா
10) ர் அகஸ்திய
11) கோத்ரத்து
12) வீரசங்கா
13) தப்பெரும்
14) பள்ளி ஆழ்
15) வார் கமல
16) நாத் சிந்தா
17) மணிதே
18) வர் அத்த
19) வீர்ய தேவ
20) ர் குடங்கெ
21) ாண்டு கோ
22) இல் புகு
23) வார் நால
24) ாவதில் தே
25) வாதிதேவ
26) ரும் நம்
27) பி நேமிந
28) ாதனும்டே
29) வத
30) காஸ்ரீ
31) ஜிநதம்
32) மரகைஷ[36]

11. ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம் திங்களூர் புஷ்பதந்த தீர்த்தங்கரர் கோயில் மடைப்பள்ளி நிலைகால்

1) ஸ்வஸ்திஸ்ரீ	12) ணிக்கச் செட்
2) கோநாட்டான் வி	13) டி சந்திரவச
3) க்கிரம சோழ	14) தியில் முக
4) தேவற்கு செ	15) மண்டகம்
5) ல்லாநின்ற	16) எடுப்பித்தே
6) யாண்டு நா	17) ன் சகரயா
7) ற்பதாவது	18) ண்டு 967
8) அறத்துளா	19) சிங்களாந்தகன்
9) ன் முத்தன்	20) என்பது முக
10) பொன்னநா	21) மண்டகம்[37]
11) ன கணித மா	

ஆ) பலிபிடம்

1) காத்தார் புள்ளை	4) ள் மகன் முனிவிலி
2) வேதம்	5) டு முப்பி
3) பாடுகிற பிச்சப்பெருமா	6) ரான் உபயம் உ[38]

இ) கோயில்

1) ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தேவற்கு பிருத்வி
2) ராச்சியம் பண்ணியருளாநின்ற பிலவங்க
3) வருஷத்து தை மாதம் முதல் தங்களுக்கு
4) திரிகால சந்திக்கு பேரும் பண்ணி நாயனார்
5) பூமேந்திரருக்குத் தந்த அறிகணிநல்லூர் . . .[39]

12. கோயமுத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம் திருமூர்த்திமலை பாறையில் உள்ள கல்வெட்டு

1) பரிதாபி வருடம் கார்த்திகை மாதம் 1தி இம்முப் பட்டத்துக் கணக்காண்ட எத்துலப்ப

2) னாயக்கரவர்கள் நாளையில் போட்ட கல்வெட்டு அமணேசுர சுவாமியுட

3) பூமி அமணசமுத்திரஞ் சீர்மையில் யாதாமொருத்தன் துரைத்தனத்துக்கு வந்தா

4) லும் அவருட பெண்பிள்ளை கலியாணஞ்செய்தால் அந்தப்பிள்ளைக்கு

5) நால் பொன்னுக்குள்ளாக கடமை போதவும் மாடுகள் சீதனங்குடுக்கவும் யிந்த தலத்துக்

6) கு முறையாருக்குப் பிள்ளை குடுத்துத் தலத்திலேயும் யிருந்தால் நாலுபேர் துரைமக்கள் வைத்

7) த மானியம் விட்டு நடப்பிக்கவும். இதுக்கு மிகை யாதாமொருவன் பிள்ளைப் பிரியத்துக்கு எத்தாயு

8) டமை போட்டாலுங் கோபாதமத்தனை பூமி சீதனங் குடுத்தாலு மவன் கங்கைக்கரையிலே

9) காராம்பசுவை கொண்ண தோஷத்திலே போவான். அதிகாரத்தில்ச் சிறிது திரவியமெச்சாக

10) ச் சம்பாதிச்ச பாகத்திலேயுங்கூட அ. . செய்து தானதர்மஞ் செய்து தீர்க்கமா

11) ய் நடந்துகொண்டவனுக்குக் காசியில் தீர்த்தமாடின பலன் உண்டு. யி. . . ப்படி மே

12) னி கண்டிருந்து மீதி நடப்பிவிக்க இராமே. . த்தமனுக்கு[40]

13. கோயமுத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம் தொம்பர்மலைக் கல்வெட்டு

1) உ அமணேசுறசா

2) மி சகாயம்

3) உ விறோதிகிரிது வருடம் மா

4) சி மாதம் 26தி சோமவார

5) மு துவாதெசியும் பூச

6) நட்செத்திரமும் சோப

7) நாம யோகமும் பாலவ

8) ரகரணமும் பெற்ற

9) தினத்தில் சல்லியார்

10) குல தெய்வமாகிய

11) தொம்பரமலை இம்

12) முடிப்பட்ட மலையாண்

13) டி யெத்துலப்ப நாயக்க

14) ரவர்கள் பெண்ஞ்சா

15) தி ஆண்டியம்மனவர்

16) கள் உபையம் உ[41]

14. ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், பூந்துறை, பார்சுவநாதர் கோயில் கிழக்குச் சுவர்க் கல்வெட்டு

1) ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுபரன் பாஷை

2) க்கு தப்புவராயர் கண்டன் விபாடன் கொங்க சக்கிர

3) வத்தி கஜவேட்டைராயர் சபாபதிகொ. . .

4) ராயயுடையாற்குச் செல்லாநின்ற சகார்த்தம்

5) 1423 . . .

15. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மின்னாம்பள்ளிக் கல்வெட்டு

1) ஸ்வஸ்திஸ்ரீ

2) பெருநற்கிள்ளிச் சோழற்

3) கியாண்டு ஒன்பது

4) மின்னப்பள்ளித் தேவர்

5) க்கு ஊரார் கொடுத்த பொ

6) ன் கழஞ்சு களப்பக் கோ

7) ன் குழி விளக்கெண்ணைக்

8) கு களந்தை நீலன்[42]

9) . . . .

16. ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம், விசயமங்கலம்

அ) சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் கிழக்குச் சுவர்க் கல்வெட்டு

1) ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் ஹரிராய விபாடன் பாஷைக்குத் தப்புவராயர் க

2) ண்டநாடு சது சமுத்திராதிபதி ஸ்ரீ வீர தேவராய உடையார் குமாரன் ஸ்ரீ வீர ஹரிஹரராய உடை

3) யாற்குச் செல்லாநின்ற நந்தன சம்வத்சரத்து ஐப்பசி மாசம் இருபத்தைஞ்சாந் தியதி சகாப்தம் 1334

4) ஸ்வர்க்கலோகம் ஆகக் கோட்டைசூழ்ந்த நாட்டில் வடபரிசாரநாடு வெங்கரைநாடு நாலுற்பற்றும்

5) பேரூர்நாடு குறுப்புநாடும் வீரசோழபுரநாடும் ஆக யிந்த நாட்டு நாட்டவரோம் குறுப்புநாட்டு விசைய

6) மங்கலத்து நாயநார் அணியாதழகியார்க்கு சாதநம் பண்ணிக்குடுத்த பரிசாவது இந்த நாயி

7) னார்க்குப் பூஜை புனஸ்காரத்தக்கும் அழிவுதொறுசைக்கு மாகக் குறப்புநாட்டுச் செங்கற்பள்ளி

8) ஊர்க் கொளமும் தென்பாற்கெல்லை. . பாற்கெல்லை. . நங்கற்கு மேற்பாற்கெல்லை பள்ளம் வடபாற்கெல்லை அமணப்பள்ளிக்குச் சாதனம் பண்

9) ணிப் பள்ளிச்சந்தமாகக் குடுத்து இவர் ஊரில் நஞ்சைபுஞ்சை நாற்பாற்கெல்லை தோட்டந் தொ

10) . . . . புற்று எப்பேற்பட்டவை உட்பட சாதனம்பண்ணிக் குடுத்தோம் ஆறுநாட்டு நாட்டவரோம் நாயி

11) . . . . யார்க் . . . தன்ம நினைக்குமவற் கெங்கைக் கரையில் குராற்பசு

12) பிராமணரையும் கொன்ற பாவத்திலேயும் ஏழெச்சமறக்கடவார்களாகவும் இந்தப் பள்ளிச் சந்த

13) . . . கோயி . . . . இரக்ஷிக்கக் கடவாராகவும்.[43]

ஆ) வாத்தியமண்டப நிசீதிகைத் தூண்

1) ஸ்வஸ்திஸ்ரீ சாமுண்ட
2) ராஜன் தங்கை புளி
3) அப்பை நிசீதிகை
4) கல்[44]

இ) வாத்திய மண்டபத்தூண்

1) ஸ்வஸ்திஸ்ரீ கோவிரா
2) ஜகேசரி பன்மராகிய திரி
3) புவனச் சக்கரவத்திகள்
4) ஸ்ரீ குலோத்துங்க சே
5) சாழ தேவற்கு இயாண்
6) டு பதிநமூன்றாவதிெ
7) நதிர் சகரையாண்டு
8) ஆயிரத்தெண்பத்த
9) ஞ்சில்விசையமங்க
10) லத்தில் வீரசங்காத
11) ப் பெரும்பள்ளியுடை
12) ய தேவர்க்கு அமுதுபடி
13) த்கு நாம் விட்ட நிலங்
14) குறுப்பு நாட்டில் நிறை
15) . . . . கீழ் சிறகில்
16) . . . நந்தப் பெறுத. . .
17) . . . விட்ட நிலமா
18) கி வருகிற நிலம்
19) மூன்று பொழி கா
20) லால் முக்கல நெ
21) ல் விதை தேவத
22) ானமாக விட்டோ
23) ந் தேவ காலால்
24) நாநாழி அரிசி அமு
25) துபடி செலுத்தி
26) வருவதாக விசை
27) யமங்கலத்திற்
28) பள்ளியுடையா
29) ர்களுக்கு இட்டோம்
30) இருங்கோள நா
31) டு காவலில் இந்
32) நிலங் குடுத்தே
33) ாம் சந்திராதித்
34) தருள்ளளவும் ந
35) ந்தமர் மாற்ற
36) ப் பெறார்[45]

ஈ) நிருத்த மண்டபக் கிழக்கு வாயில் நிலை வலப்புறம்

1) . . . கார்த்
2) திகை திங்கள்
3) வேளிரையும்
17) காணியுடைய ஸ்ரீவ
18) த்ச கோத்திரத்திலே சில
19) வர்பிள்ளை பெரிய

4) தேவராசாரியபை
5) ரயும் தோழன்மா
6) ரையும் எழுந்த
7) ருள்வித்து விஷு
8) அயன சங்கராந்தி
9) திருக்கார்த்திகைக்கு
10) அமுதுபடிக்கு
11) இறுக்கும் கலம்
12) அறுநாழியும் திரு
13) கார்த்திகைக்கு பன்
14) னிரு நாழியும் கறியமுது
15) திருவிளக்கு இரண்
16) டுக்கும் இக்கோயிற்
20) நாட்டிற் பண்டித
21) ப்பெருமாள் கெங்
22) கை ஆழ்வான் உள்ளிட்
23) டாற்கும் நான் கு
24) டுத்த உபயம் ஆனைஅ
25) ச்சு ஸ்ரீயக்கி பழஞ்ச
26) லாகை அச்சு இரண்
27) டும் குடுத்தேன் இது
28) குடங்கொடு கோயி
29) ல் புகுவார் சந்திராதி
30) த்தவரை செலுத்து
31) வதாக இது ஸ்ரீ
32) ஜைன ரட்சை 46

உ) இடப்புற நிலையில் உள்ள கல்வெட்டு

1) யாண்டு நாற்பத்
2) தாறாவது சக
3) ரையாண்டு
4) ஆயிரத்தெ
5) ாருனூற்றெந்
6) பத்தொன்ப
7) தில் குறுப்பு
8) நாட்டு விசை
9) யன்மங்கல
10) த்து வெள்ளா
11) ளன் படைத்
12) தலைகளில்
13) திருவானைக்
14) காவுடையா
15) ந் சொக்கநே
16) ந் திருநிலை
17) கால் செய்வி
18) த்தேந்[47]

ஊ) கோயில் பீமதீர்த்தக் கிணறு

1) ஸ்வஸ்திவீர
2) பாண்டிய தே
3) வர்க்கு யாண்டு
4) 27 ஆவது சக
5) ரையாண்டு
6) 1210 முன்
7) வடகரை நா
8) ட்டில் வெள்ளாளன்

எ) கிணறு

1) விசய மங்கல
2) த்து வீரசங்
3) காதப்பெரும்பள்ளி
4) உடையார் கோயில்

வடமொழிக் கல்வெட்டு

17. ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் சந்திரப்பிர தீர்த்தங்கரர் கோயில் வாத்தியமண்டபத்தில் உள்ள கல்

ஸ்ரீ பிர்கத்கதா லாவண்ய ரத் பிரதாபஹ:
(பெருங்கதையின் அழகிலும் பெருமையிலும்
மூழ்கியிருக்கிறது)

கன்னடக் கல்வெட்டு

18. கோயிலில் கிழக்குப் பிராகாரம் அதிட்டானத்தில் உள்ள கல்வெட்டு

1) நந்தன வருடம் மாசி மாதம்
2) சுக்லபட்சப் பிரதமை

மக்கென்சி ஆவணங்கள்

மேட்டுப்புத்தூரு செயினு தேவஸ்தானம் கைபீது[48]

மூலபாடம்

கோயம்முத்தூரு சில்லா பெருந்தொரெ தாலூகா விசயமங்கலம் முட்டா மவுசே மேட்டுப்புத்தூரு செயினுமதம் பஷ்திகோயில் தேவஸ்தானம் ஸ்தானிக கமலய்யன் யெளுதி குடுத்த கையிபியது.

யென்னமென்றால் பூற்வத்தில் சந்திறனாத சுவாமிக்கு ஆதி ஈசுவறரென்றும் பேருண்டு. கலியுகத்துக்கு பூற்வத்திலே உண்டானகோயில். கலியுக சகாப்த்தம் அறனூறு வருஷத்தில் மதுரை சமுஸ்தான பதியில் பிறபுத்துவம் பண்ணப்பட்ட சாமுண்டறாயன் யெங்குறவற் சீறாணோ உத்தாரம்ப் பண்ணிவிச்சாற்.

இந்த கோவிலுக்கு ஆகெதி சத்தியமங்கலம் தாலூகாவுக்கு முன் இந்த தேவஷ்தானம் சேர்ந்து இருந்ததுனாலே மேல்படி தாலூகாவுக்குச் சேர்ந்த செங்கப்பள்ளி கிராம கற்த்தற் துரைத்தனத்துவரைக்கும் சிறிதுனாள் வரைக்கும் சறுவம்மானியமாயிகிறது. னாள்வரைக்கும் மானியமாயி நடந்து வந்தது.

அதுக்குமேல் மயிசூறு சமஸ்தானத்திலே கற்த்தற் துரைத்தனத்தில் சாவடி தேவஸ்தானங்கள் சப்த்தியாகிர முண்ணுக்கு மேல்படி தேவஸ்தானத்துக்கு நடந்துவந்த செங்கப்பள்ளி கிராம சப்த்தியாயிப் போச்சுது. அதுக்குமேல் டீபு சுலுதான் துரைத்தனத்து பறியந்திறம் செங்கல்ப்பள்ளியில் அன்ம்பது வள்ள பூமியும் மேல்படி பெறுந்தொரெ தாலுகாவுக்குச் சேந்த விசயபுரி கிறாமத்துலே முப்பது வள்ளபூமியும் நடந்து வந்தது. அதுக்குமேல் கும்பினியார் துரைத்தனத்தில் சித்தார்த்தி வறுஷத்துலே மேலே யெளுதிய யென்ம்பது வள்ளமும் மானியம் நடந்தது.

இந்த கோவிலுக்கு பிறாகாரம் கிளக்கு மேற்க்கு 228 அடி தென்வடல் 159 அடி. இதுக்குள்ளாக இருக்கப்பட்ட மண்டபம் கெற்ப்பகிரகம் சதுறசதுறம் 7½ சதுறத்துக்கு சதுரம் அடி 8. அர்ஸ்த மண்டபம். இனிமேல் மகா மண்டபம் சதுறத்துக்கு சதுரம் அடி 14. நற்த்தன மண்டபம் அடி 16. வாத்திய மண்டபம் கிளக்கு மேற்கு அடி அகலம் 18. தெக்கு வடக்கு நீளம் அடி 24.

இப்படியாப்பட்ட மண்டபத்தில் ஒசறம் னாலுப் பக்கத்திலேயும் அடிக்கியிருக்கப்பட்ட சிலா விக்கிரகங்கள் நாபி மகாறாசா 1. மருதேவி அம்மன் 1. சாமரேந்திறர் 2. அது வேதித்து இருக்கப்பட்ட மண்டபம் 1. தேவேந்திரம் ஆனெ 2. றாமசுவாமி லட்சுமண பெருமாள் 2. பஞ்சபாண்டவகள் 5. தொரெபதி 1. பெருமாள் விஷ்ணு றுத்திரற் மூர்த்திகள் 3. உதய சந்திரகிரி பற்வத சுறூபம் 1. அசோக விருட்சம் போலேயும் 1ப் பண்ணி வைத்து அவடத்துலே தற்ம்ம தேவத அம்மன் 1. சிங்க வாகனத்திமேல் 1. குளந்தை 2. அபிநந்த நாச்சாறு 1. சறசுவதி அம்மன் 1. இப்படிப்பட்ட விக்கிறகங்கள் 147 கோவில் கோபுறத்துமேல் அனேதங்கள் விக்கிறகங்கள் இருக்குறது.

அதிசயாமலை விருத்தம்

வட்டமா மதிபரவு சென்னிமேல் படியில்வாள்
வித்திருந்த பெருமாணல்ல
வினைகடிந்த முதல்நேமீ சுரர்மல ரடியிணையில்
மவுலிமுடி வைத்ததாயே
திட்டமா யிவர்ரவற்கள் கேட்டபொன் கணக்கெலாம்
சீட்டெளுதி முன்னைவைத்துநற்
செம்பொற் கபாடந் திருத்தா ளிறுக்கவேமறு
தினமும்அப் படிவைக்கவே
இஷ்ட்டமா கியமண முடிந்தபின் யாவையும்கூடக்
கொடுபூசை செயிதிருந்தி
டந்தண்ணில் வைத்திப்பால் அவற வர்க்காக
நேகவருள் செய்யவிலையோ
அஷ்ட்டமாயி சித்திதரு கருநொச்சி யும்புவியில்
ஆருமறி யாதசுனையும்
அளவிலா மகிமையும் மங்கையம் பதியில்வாழ்
அதிசயா மலையம்மனே.

இந்த மலைமேலே இருக்கிற கோவிலுக்கு சுவாமிக்கு பூசையில்லை.

கொங்கதேச இராசாக்கள்

இரட்டர்

கோவிந்தராயன், பட்டம்5, சகை 4

கொங்கதேசத்திலே ஸ்கந்தர்புரத்திலே கோவிந்தராயன் பட்டம் கட்டிக்கொண்டு அவன் தகப்பன் கலவல்லவராயனைக் காட்டிலும் அதிகமாகக் கீர்த்தியை அடைந்து சத்துரு இராசாக்களிடத்திலே யுத்தத்துக்குப் போனால் அவர்களை செயம்பண்ணி அவர்கள் சகலமானபேர் கையிலேயும் கப்பம் வாங்கிக் கொண்டு அநேக தருமம் செய்து இராச்சியம் இரக்ஷித்தான். அப்போ சாசனம் சாலிவாகன சகை வருஷம் 4. சுபானு வருஷம் - 17 வைகாச சுத்த பூர்ணயிலே யிந்த கோவிந்தராயன் அரிஷ்டண்ணனென்ற செயினியனுக்குப் பூமி சாசனம் பண்ணிக் கொடுத்தான். அந்தப் பூமி குலங்க கிராமத்திலே சேர்ந்திருக்கிற பொம்ம கொம்மமென்கிற கிராமத்திலே ஏழு கண்டகம் விரைக்கிற பூமி வயல் கொங்கணி வருமம் பஸ்தி செயினிய தேவார்ச்சனை கோவிலுக்குக் கொடுத்த தருமசாசனம். அந்தக் கோவில் பூசை பண்ணுகுற அரிஷ்டண்ணனுடைய குருவினுடைய பேர் பிரஞாபனாசாரி. அவன் ஸ்ரீ காரே விருக்ஷ மூலத்திலே வாசம் பண்ணுகிறவன். அந்த நாளிலே இருந்த செயினியருடைய பெயர் பஞ்சநந்தி செக்கப்பன் செயதேவன்.[49]

சதுர்ப்புச கன்னரதேவ சக்கரவருத்தி, பட்டம் 6

சூரிய வம்சத்திலே ரெட்டி குலத்திலே உண்டாயிருக்கிற அவனுக்கு நாலு கை. அவன் கொங்க தேசத்திலே ஸ்கந்தபுரத்திலே பட்டங் கட்டிக்கொண்டு யுத்தத்துக்கப் போக வேணுமென்றால் சந்தோஷத்துடனே பதினெட்டு வாத்தியத்துடனே போய் செயம் பண்ணுகுறவன். வீணாகானம் தெரிந்தவன். கோதண்டம் முதலான நாகாதிமந்திரம் தெரிந்தவன். . . .க்களுடைய பிருது அடைந்து இராச்சியம் வெகு நீதியுடனே இரஷித்தான். இப்படி மூன்று பேர் அந்த செயினிய சாஸ்திரம் தெரிந்தவர்கள் அவர்கள் குரு நாகநந்தி யென்கிறவன். அவர்களுடைய வேதஞானம் நன்றாய்த் தெரிந்தவன். அந்த மதத்திலே யிருக்கிற இராசாக்களுக்கு அவர்கள் மதத்தினுடைய ஞான சாஸ்திரம் சொல்லுகிறவன். அப்போது அவன் மிகவும் கிழவன்.[50]

திருவிக்கிரமதேவ சக்கிரவர்த்தி, பட்டம் 7 சகை 100

அவன் மகன் ஸ்கந்தபுரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு இராட்சிய பரிபாலனம் பண்ணினான். அப்போ அவனுக்கு சங்கரதேவர் தோன்றி செயினிய மதத்தைவிட்டு சிவனுடைய மதத்திலே வரும்படி கட்டளையிட அவனுக்கு ஞானமுண்டாய் தெக்ஷிண தேசம் செயம் பண்ணுகிறதுக்குப் போகையிலே பூதானம் முதலானதும் தருமம் பண்ணி சோள பாண்டிய கேரள மலையாளம் முதலான தேசம் செயம் பண்ணி வந்தான்.[51]

கங்கர்

இராசமல்ல தேவராயன், பட்டம் 28

விகாரி வருஷம் 303 ஆனி மாசத்திலே குருவாரத்திலே பூர்ணமியிலே புனர்வசு நக்ஷத்திரத்திலே 7 விஷ்ணு குகாலயமென்கிற செயின்னிய தேவர் நவகனும பெலிபூசை முதலான தருமத்துக்குக் கொங்கண குளீசுவர பகவந்தனுடைய சிஷியன் அவன் சிஷியன் தேசோமபகவந்தன் அவன் சிஷியன் அகோர சோம பகவந்தன் அவன் சிஷியன் சசிபூஷண மகாமுனி அவனுக்குத் தலைக்காடு நாடு வடகரை நாடு, வீரஅள்ளியென்கிற கிராமம் சர்வமானியமாய் தருமம் பண்ணிக் கொடுத்தான்.[52]

எது வம்சம் ஒயிசள ராசாக்கள்

வல்லாளராயன், பட்டம் 36, சகை 1015

வல்லாளராயன் ராசபுரத்திலே யிருந்து கொங்கதேசம் இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு தனக்கு தம்பி பெட்டதேவன், உதயாதித்ய தேவன் இந்த இரண்டு பேர்களுடனே கூட வெகு சேனைகள் சேர்த்துக் கொண்டு தன்னுடைய மகன் பெட்டதனுடனேயும் தலைகாட்டுக்கு வந்து கொங்கு பாளையக்காரரை செயித்து அந்த தலைக்காட்டிலே பட்டம் கட்டிக் கொண்டு அவ்விடத்திலே நின்றும் நொளம்பபாடி கெங்கைவாடி பனவசை, ஆனைகல்லு செயம்பண்ணி சயின மதத்திலே யிருந்துகொண்டு அந்த சாஸ்திரம் விசாரித்துக் கொண்டு இருந்தான்.[53]

பெட்ட விஷ்ணுவர்த்தனராயன் பட்டம் 37, சகை 1020

பெட்ட விஷ்ணு வர்த்தனராயன் தலைக்காட்டிலே பட்டாபிஷேகம்

பண்ணிக்கொண்டு அவன் மந்திரி மாதவனாயக்கனுடனே கூடிக்கொண்டு சிறிது சேனைகள் சேர்மானம் பண்ணிக்கொண்டு சசபுரம் வாசந்திகாதேவி வரப்பிரசாதத்தினாலே துளுவதேசம் சக்கரகூடம் முச்சங்கி கோளாள நிலாவளதுர்க்கம் இராயராயோத்தமபுரி தென்யக்கூர் கொத்தவாடி கொங்கு இது முதலான தேசங்கள் செயித்து மேற்கு மலையாளம் குடகு மட்டுக்கும், வடக்கு சாதிமலை தெற்கு கொங்கு கிழக்கு ஆலாம்பாடி இது மத்தியத்திலே யிருக்கிற தேசங்களை இரக்ஷித்துக் கொண்டு குருவினிடத்திலே வெகு பக்தியுடனே இராட்சியம் இரக்ஷித்துக் கொண்டு அல்சூர் காந்தபுரத்திலே தனக்கு அரண்மனை கட்டுவித்து தலைக்காடு இராச்சியம் இரக்ஷிக்கிற காலத்திலே சோழராசா யுத்தத்துக்க வந்தவன் சண்டைப்பண்ணி செயித்து கேரள தேசத்து இராசாவுடனே வெகு யுத்தம் பண்ணி அவன் சேனைகளில் வெகு சனங்களைக் கொன்று போட்டு வடக்கே மாளவ தேச மட்டுக்கும் செயம்பண்ணி வெகு திரவியம் வாங்கிக் கொண்டு பாக்கியத்திலே தேவ ராசாவுக்க சமானமாய் ரூபத்திலே மன்மதனைப் போலே சரணாகதமாய் வந்த பேர்களை இரக்ஷித்துக் கொண்டு கவீசுவரனை இரக்ஷிக்கிறவன் மதத்திலேயிருக்கிற செயினிய சாத்திரம் விசாரித்து அவர்களை இரக்ஷித்துக் கொண்டு செங்கண்ணிய சளுவதேவர் கொங்கவாடி நொளம்பவாடி செனங்களை துஷ்ட நிக்கிரகம் இஷ்ட பரிபாலனம் பண்ணி தன்செனம் வெகுசனங்களை இரக்ஷித்து அதற்கு மேல் அவனுடைய ஸ்திரீ ஸ்ரீரங்கத்துக்குப் போய் வைஷ்ணவ மதம் சேர்ந்து கொண்டு அந்த சாஸ்திரம் நன்றாய் விசாரித்து இது மெய்யான சாஸ்திரமென்று மனத்திலே பத்தியாய் தேவ பிராமணாளிடத்திலே வெகு பத்தியடைந்து வெகு தானதருமம் கன்னிகாதானம் உபனயனதானம் பண்ணி வெகு சந்தோஷத்துடனே வந்து தன்னுடைய புருஷன் பெட்டராயனுக்கு வியாசராலே சொன்ன தரும சாஸ்திரம் விசாரிக்கச் சொல்லியும் தேவ பிராமண்ணாளை இரக்ஷிக்கக் கொண்டு வருவாள். அது கேட்டு பெட்ட ராயன் பேசாமலிருப்பான். அதன்பிறகு இராமனுசாசாரி யென்கிறவர் சோழ தேசத்திலேயிருந்து இவ்விடத்துக்கு வந்து பெட்டராயனுடைய ஸ்திரீ விஷ்ணு மதத்திலேயிருக்கிறபடியினாலே தான் வந்த சமாசாரம் அவளுக்குச் சொல்லியனுப்புவித்தார். அவளுஞ் சந்தோஷப்பட்டு தன்னுடைய புருஷனோடு சொல்லி அவரைத் தன்னுடைய அரமனைக்கு அழைப்பித்துப் பேசினவிடத்திலே அந்த ராசா செயினிய சாஸ்திரம் மெய்யாயிருக்குதென்று சொன்னபடியினாலே செயினிய சாஸ்தி. . . . 54

சகம் 1039

அதன் பிறகு விஷ்ணுவர்த்தனராயன் தளவாய் கெங்கைதெண்டதனாயக்கன் தங்கள் ராசாவினுடைய உத்தாரத்தின்படி தங்கள் குருக்கள் சுசந்திரசித்தாந்த தேவருக்குக் கொடுத்த பூமி வயணம் - சகை வருஷம் 1039 விளம்பி வருஷம் பால்குண சுத்த பஞ்சமி சோமவாரத்திலே தங்கள் பௌகுளம் சுவாமி பூசைக்கு பௌகுளகிராம சமக்கிற தருமதானம் பண்ணிக் கொடுத்தான். பூமிதானம் சகை வருஷம் 1033 நந்தன வருஷம் மார்க்கசீர சுத்த அஷ்டமி சோமவாரத்திலே விஷ்ணுவர்த்தனராயருடைய சேனாநாயகராயிருக்கிற பண்டநாயகன் கெங்கை மயிதசூரண் தெண்டநாயகன் இவர்கள் செயினிய சுவாமிக்கு தங்கள் எசமானனான பெட்டராயனைக் கேட்டுக் கொண்டு மைசூர் சீமை பெவளஅள்ளி முன்னேயிருக்குற ஏரி, கீழே வயல் இருபது சலகை விரைக்கிற பூமி, ஏரிக்கு வடபுறத்திலே கரும்பூமி கம்பம் 402, அந்த ஏரிக்கு மேற்கு தோட்டம் குழி 20 இந்தப்படி தருமம் பண்ணிக் கொடுத்தான்.

சகை 1053

விஷ்ணுவர்த்தனராயன் செயினிய தேவர் பூசை நைவேத்தியத்துக்கு மைசூர் ஏரி கீழேயிருக்கிற நஞ்சை வயல் பூமி அஞ்சு கண்டகம் விரைக்கிற பூமி மைசூர் செயினிய ஸ்வாமிக்கு விட்டது. சகை வருஷம் 1053 பரிதாபி வருஷம் பால்குண பகுள பாட்டிமை மங்கள வாரத்திலே பண்ணின தர்மம்.

சகை 1054

விஷ்ணுவர்த்தன ராயன் பௌகொளா செயினிய ஸ்வாமி தர்மத்துக்கு பௌகெரை உபகிராமத்துடனே கூட தருமம் பண்ணின வயணம் சகை வருஷம் 1054 ப்ரமாதி வருஷம் ஆச்வச சுத்த தசமி 10 புதவாரம் பூரட்டாதி நக்ஷத்திரம் 205 இந்த நாளிலே தனக்குக் குருவாயிருக்கிற முதலாசாரிக்குக் கொடுத்த தருமம்.[55]

வல்லாளராயன் பட்டம் 39, சகை 1004

வல்லாளராயன் மந்திரி சந்திமௌலி என்கிறவன் தன்னுடைய எசமானன் உத்தாரத்தின்படி பௌகுளம் சின்னேசுர சுவாமிக்கு பொம்மன அள்ளி யென்கிற கிராமம் தாராபூர்வமாய் தருமம் பண்ணிக் கொடுத்தது.

சகை வருஷம் 1004 சோபகிருது வருஷம் புஷ்ய சுத்த தசமி பானுவாரத்திலே உத்தராயண புண்ணிய காலத்திலே தருமம் பண்ணிக் கொடுத்தான். [56]

குறிப்புகள்

1. கடத்தூர், புது.போ. வேங்கடராமன் அளித்த படி.
2. *கொங்கு* 1974 மே இதழ், ப. 196.
3. ***ARE* 280, 281, 282 of 1962.**
4. ***ARE* 349 of 1928.**
5. ***ARE* 297 of 1964.**
6. ***ARE* 346 of 1928.**
7. ***ARE* 296 of 1928.**
8. ***ARE* 342 of 1925.**
9. ***ARE* 342 of 1928.**
10. ***ARE* 345 of 1928.**
11. ***ARE* 341 of 1928.**
12. ***ARE* 345 of 1928.**
13. ***ARE* 344 of 1928.**
14. ***ARE* 343 of 1928.**
15. ***ARE* 347 of 1928.**
16. *கல்வெட்டு*, இதழ், 20, 1984.
17. ***ARE* 218 of 1978.**
18. ***ARE* 705 of 1905; *S.I.I.* XIV No.22.**
19. ***ARE* 691 of 1905; *S.I.I.* XIV 107.**
20. ***ARE* 692 of 1905; *S.I.I.* XIV 108.**
21. ***ARE* 693 of 1905; *S.I.I.* XIV 109.**
22. ***ARE* 694 of 1905; *S.I.I.* XIV 110.**
23. ***ARE* 695 of 1905; *S.I.I.* XIV 111.**
24. ***ARE* 696 of 1905; *S.I.I.* XIV 112.**
25. ***ARE* 697 of 1905; *S.I.I.* XIV 113.**
26. ***ARE* 698 of 1905; *S.I.I.* XIV 114.**
27. ***ARE* 699 of 1905; *S.I.I.* XIV 115.**
28. ***ARE* 700 of 1905; *S.I.I.* XIV 116.**

29. *ARE* 701 of 1905; *S.I.I.* XIV 117.
30. *ARE* 702 of 1905; *S.I.I.* XIV 118.
31. *ARE* 703 of 1905; *S.I.I.* XIV 119.
32. *ARE* 59 of 1932.
33. *The Hindu* 27-2-1983.
34. *ARE* 215 of 1978.
35. *ARE* 216 of 1978.
36. *ARE* 217 of 1978.
37. *ARE* 614 of 1905; *S.I.T.I.* 1256; *E.I.* Vol. 30, p.249.
38. *S.I.T.I.* Vol.I 257
39. *S.I.T.I.* Vol. I. 258.
40. *ARE* 186 of 1927.
41. *ARE* 187 of 1927.
42. இந்தக் கல் தற்போது ஈரோடு கலைமகள் கல்விநிலைய அருங்காட்சியகத்தில் உள்ளது.
43. *ARE* 596 of 1905; *S.I.T.I.* I 272.
44. *ARE* 597 of 1905; *E.I.* Vol VII p. 108.
45. *ARE* 598 of 1905; *S.I.T.I.* I 274.
46. *ARE* 599 of 1905; *S.I.T.I.* I 275.
47. *ARE* 600 of 1905.
48. D 2890, 3317, 3529, R1635; *பாளையப்பட்டுக்களின் வம்சாவளி - தொகுதி III*, பக். 54-56.
49. *கொங்கதேச ராசாக்கள்,* பக். 1-2.
50. *மேலது,* ப. 2.
51. *மேலது* ப. 2.
52. *கொங்கதேச ராசாக்கள்,* ப.9.
53. *மேலது,* ப.14.
54. *கொங்கதேச ராசாக்கள்,* ப.17.
55. *கொங்கதேச ராசாக்கள்,* ப. 18.
56. *மேலது,* ப. 23.



அறச்சலூர் மலைக் குகை



புகலூர் - ஆறுநாட்டார் மலை

சக்காலியூர்க் கரடு (கரூர் அருகே)

அர்த்தநாரிபாளையம் கரடு (திருச்செங்கோடு - வேலூர் வழி)

அர்த்தநாரிபாளையம் கரடு (கல் படுக்கைகள்)



வைகைநல்லூர் குண்டாங்கல் பாறை (குளித்தலை அருகே)



வைகைநல்லூர் குண்டாங்கல் பாறை தீர்த்தங்கரர்

ஆழியாறு குகை (உடுமலை அருகில்)

செந்நாக்குன்று குகை (நாமக்கல் மோகனூர் அருகில்)



விசயமங்கலம் - சமணக்கோயில் கோபுரம்
(திருப்பணிக்கு பின்)



விசயமங்கலம் - சமணக்கோயில் விமானம் (புதுப்பிக்கப்பட்ட பின்)



விசயமங்கலம் - சமணக்கோயில் விமானம் (புதுப்பிக்கும் முன்)

விசயமங்கலம் - ரிஷப தீர்த்தங்கரர் கோயில் (குறைப்பணி)

வெள்ளோடு கோயில் - திருப்பணிக்கு முன்



வெள்ளோடு கோயில் - திருப்பணிக்கு பின்



சீனாபுரம் - ரிஷப தீர்த்தங்கரர் கோயில்



பூந்துறை - பார்சுவநாதர் கோயில் (புதுப்பிக்கும் முன்)



பூந்துறை - பார்சுவநாதர் கோயில் (புதுப்பிக்கப்பட்ட பின்)



திங்களூர் புஷ்பதந்த தீர்த்தங்கரர் கோயில்

விசயமங்கலம் - ரிஷப தீர்த்தங்கரர் (ஆதி நாதர்)



பூந்துறை - பார்சுவநாதர்



ஐவர்மலை தீர்த்தங்கரர் (பழனி வட்டம்)



ஐவர்மலை தீர்த்தங்கரர்கள்

சீனாபுரம் - ரிஷப தீர்த்தங்கரர் (ஆதி நாதர்)

கோயில்பாளையம் தீர்த்தங்கரர்
(சர்க்கார் சாமக்குளம்)

ஆலத்தூர் தீர்த்தங்கரர்
(அவினாசி வட்டம்)

திங்களூர்
புஷ்பதந்த தீர்த்தங்கரர்

விசயமங்கலம்
சந்திரப்பிரப தீர்த்தங்கரர்



பரன்சேர்பள்ளி தீர்த்தங்கரர்
(கராங்கயம் வட்டம்)

அதியமான்கோட்டை தீர்த்தங்கரர்
(பார்சுவநாதர்)



பொங்கலூர் தீர்த்தங்கரர்
(பல்லடம் வட்டம்)

பொட்டனேரி தீர்த்தங்கரர்
(மேட்டூர் அருகில்)

விசயமங்கலம்
நேமிநாத தீர்த்தங்கரர்

பருத்திப்பள்ளி சுபார்சுவநாத தீர்த்தங்கரர்
(நாமக்கல் மாவட்டம்)



பருத்திப்பள்ளி
பார்சுவநாத தீர்த்தங்கரர்

கொல்லிமலை திண்ணனூர் நாடு
வாசலூர்ப்பட்டி தீர்த்தங்கரர்

கொல்லிமலை - சேலூர்நாடு
வெருகனூர் தீர்த்தங்கரர்

கொல்லிமலை - வாழவந்திநாடு
கரையங்காடு தீர்த்தங்கரர்



கொல்லிமலை - வாழவந்திநாடு
நெடுவலம் தீர்த்தங்கரர்



கொல்லிமலை தீர்த்தங்கரர்
வலப்பூர் நாடு - அறப்பள்ளீசுவரர்
கோயில் அருகில்

ஆழியாறு
சிதைந்த நிலையில் தீர்த்தங்கரர்

ஆழியாறு பெண் உருவாக
மாற்றப்பட்ட தீர்த்தங்கரர்
(ஆதாழியம்மன்)



அரசண்ணாமலை
இயக்கி கூஷ்மாண்டினி
(அம்பிகா)



விசயமங்கலம்
இயக்கி சுவாலாமாலினி



ஆறகளூர்
இயக்கி கூஷ்மாண்டினி
(அம்பிகா)



திங்களூர்
பிரம இயக்கன்

கொங்குவேளிர் - விசயமங்கலம்



விசயமங்கலம் பவணந்திமுனிவரும் சீயகங்கனும்

விசயமங்கலம் சீயகங்கனும்
கொங்குவேளிரின் அடிமைப் பெண்ணும்



புளி அப்பை - நிசீதிகைக்கல்
விசயமங்கலம்

விசயமங்கலம்
நிசீதிகைக் கல்



ஆறகளூர்
தீர்த்தங்கரர்



தேவண்ணகவுண்டன் கிடையூர் தீர்த்தங்கரர்
(சங்ககிரி வட்டம்)

தேவண்ண கவுண்டன் கிடையூர்
(சங்ககிரி வட்டம்)

தேவண்ண கவுண்டன் கிடையூர்
(சங்ககிரி வட்டம்)



அறச்சலூர்க் கல்வெட்டு (எழுத்தும் புணருத்தரன் மணிய வண்ணக்கன் தேவன் சாத்தன்)



புகலூர்க் கல்வெட்டு (ணாகன் மகன் பெருங்கிரன்)



பருத்திப் பள்ளி
எல்லை முக்குடைக்கல்



கொள்ளேகால்
பார்சுவநாத தீர்த்தங்கரர்

திருச்செங்கோடு மலை

பிள்ளை திண்ணிக் கரடு

திருச்செங்கோடு - கல்படுக்கைகள்



திருச்செங்கோடு - கல்படுக்கைகள்

விசயமங்கலம்
தூண் சிற்பம்

விசயமங்கலம்
தூண் சிற்பம்

விசயமங்கலம்
தூண் சிற்பம்



விசயமங்கலம்
தூண் சிற்பம்

விசயமங்கலம் தூண் சிற்பம்

விசயமங்கலம் புலவர்கள்



வெள்ளோடு ரிஷப தீர்த்தங்கரர்
மலர் அலங்காரத்துடன்



பாலக்காடு
சமணக்கோயில்



திருவடி



ஸ்ரீ புராணக் காட்சி

ஸ்ரீ புராணக் காட்சி

ஸ்ரீ புராணக் காட்சி


JAINA BASTI, VIJAYAMANGALAM
DIST. PERIYAR, TAMILNADU
SCALE OF 1 0 1 2 METRES
LATER ADDITIONS (CUT STONE)
SIDE ELEVATION
GANGA PHASE
(BRICK & PLASTERED)